நிவேதா ஜெயாநந்தனின்

# ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...



# ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்

நிவேதா ஜெயாநந்தன்

அருண் பதிப்பகம்

எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email : arun_pathippagam@yahoo.in

நூல் குறிப்பு

- நூல் தலைப்பு — ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்
- ஆசிரியர் — நிவேதா ஜெயாநந்தன்
- மொழி — தமிழ்
- முதற் பதிப்பு — ஜனவரி, 2015
- உரிமை — ஆசிரியருக்கு
- தாளின் தன்மை — 11.6 K.g. வெள்ளைத் தாள்
- நூலின் அளவு — 1 × 8 கிரவுன்
- அச்சு எழுத்து — 11 புள்ளிகள்
- மொத்தப் பக்கங்கள் — 348
- பைண்டிங் — சாதா அட்டை

**விலை: ரூ. 160.00**

வெளியிடுவோர் **அருண் பதிப்பகம்**
எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல் : 9043558732

அச்சிட்டோர்: மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

# ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| உயிர் கொண்ட ரோஜாவே! | 220.00 |
| நின்றன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்! | 240.00 |
| எந்தன் கண்ணோடு கலந்து விடு...! | 160.00 |
| கண்ணம்மா என் காதலி! | 200.00 |
| மழைச் சாரலோ என் நெஞ்சிலே... | 150.00 |

# ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்

## 1

### *I'm Possible*

மார்கழிப் பனிக் காலத்துல, பௌர்ணமி ராத்திரியில, சிலுசிலுன்னு தழுவிப் போகிற காற்றோட வீரியத்தைத் தாங்க முடியாமப் பரபரன்னு கையைத் தேச்சுக்கிட்டு மொட்டை மாடியில நின்று நிமிர்ந்து முழு நிலவைப் பார்க்கும்போது... அந்த நிலவொளி முழுக்க நம்ம தேகத்துல படியும் பாருங்க... 'பால் நிலவில் குளித்தது போல்'னு ஏன் பாட்டு எழுதுறாங்கன்னு அப்போதான் புரியும். உடல் முழுக்க அந்த ஒளி பட்டதும் ஒரு சிலிர்ப்பு தோணு தில்லை? ஆனா... நிலவைப் பார்க்கும்போது மட்டும் ஏன்

இனம் புரியாத நிம்மதியும், பரவசமும் மனசுல தோணுது?

ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...

"வதைக்காதே, வதைக்காதே...

ஏழை மாணவனை வதைக்காதே!

ரத்து செய், ரத்து செய்...

கட்டண உயர்வை ரத்து செய்!

ஏ... பனைமரத்துல வவ்வாலா...

ஸ்டூடெண்ட்டுக்கே சவாலா!

போராடுவோம், போராடுவோம்...

இறுதி வரை போராடுவோம்!"

அந்தச் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த பள்ளிச் சிறுமியிலிருந்து தொடங்கி, டி.வி.எஸ். 50இல் 'பே' எனத் தன் பொக்கை வாயைத் திறந்து கொண்டு வேடிக்கை பார்த்தபடி பயணம் செய்து கொண்டிருந்த முதியவர் வரை அனைவரும் அந்த மாணவக் கூட்டத்தின் நாராசமான காட்டுக் கத்தலில் முற்றிலும் எரிச்சலுற் றிருந்தனர்.

'கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி 'ஸ்ரீ சக்தி இன்ஸ்டிடியூட்' மாணவர்கள் போராட்டம்' என்று எழுதப் பட்டிருந்த பதாகையைத் தாங்கியபடி இரு மாணவர்கள் முன்னால் நடந்து கொண்டிருக்க, அவர்களைத் தொடர்ந்து



பின்னால் வந்து கொண்டிருந்த 50 மாணவர்கள், தங்கள் கைகளிலிருந்த காகிதத்தில் எழுதப்பட்டிருந்த வாசகங் களை ஆவேசமாய் உச்சரித்துக் கொண்டிருந்தனர்.

"டேய்... டேய்... இங்கே வாடா. கேமிராவை இங்கே கொண்டு வாடா. முழுக் கூட்டத்தையும் கவர் பண்ணு. காலேஜ் பெயர் என்னடா?"

"ஸ்ரீ சக்தி இன்ஸ்டிடியூட்."

"ஓ...! அந்த பிரின்சிபால் ஸ்ரீநிவாசன் போன வாரம் புது பங்களா வாங்குனான்டா. இந்தக் காசுதான் போல. ஆமாம், டேய் எந்த டிபார்ட்மெண்ட் ஸ்டூடன்ட்ஸ்? டீடெயில்ஸ ஏதும் விசாரிச்சியா? சரி, விடு. அப்படியே கேமிராவோட வா. இரண்டு பேரைப் பிடிச்சுப் பேட்டி எடுத் திடலாம்."

"பாஸ்... பேனருக்கு முன்னாடி ரொம்பத் தீவிரமா ஒரு பொண்ணு கத்திட்டு வருது பாருங்க. அதுதான் கூட்டத் தலைவி போல. அதை நிறுத்தி விவரம் கேட்டுட்டா நம்ம வேலை முடிஞ்சிடும்."

"சரி, சரி. சீக்கிரம் வா."

மைக்கும் கேமிராவுமாகத் தொலைக்காட்சி நிருபர்கள் இருவர், அன்றைய செய்திக்கு ருசி சேர்க்க எண்ணிக் கூட்டத்தை நெருங்கினர்.

"வதைக்காதே, வதைக்காதே... ஏழை மாணவனை வதைக்காதே!" வீராவேசமாய் வலது கையைத் தூக்கி, இறக்கிப் பெருங் குரலெடுத்துக் கத்திக் கொண்டிருந்த

பெண்ணை நெருங்கினர் இருவரும். அவளது கண்களைத் தவிர அவள் முகத்தில் வேறு எதையும் காண முடியவில்லை. தடிமனான பச்சைத் துணியால் முகமூடியிட்டிருந்தாள்.

மைக், கேமிராவைக் கண்டதும் மிரண்டு போன அவள் கண்கள், பீதியை வெளிப்படையாகவே காட்ட, கேமிரா வைத்திருந்தவன் சிரித்தபடி, "பயப்படாதேம்மா... உன் பெயர் வெளிவராமல் பார்த்துக்கிறோம். எதுக்காக இந்தப் போராட்டம்னு மட்டும் ஒரு நாலு வரி கேமிரா முன்னாடி பேசு. அதை வெச்சி இன்னிக்குப் பொழைப்பை ஓட்டிருவோம்," என்றான்.

"மச்சி... மீடியாடா! டேய்... மக்கள் தொலைக் காட்சிடா."

"மாமு... நாம ஃபேமஸ் ஆயிட்டோம்டா."

"முகத்தை மூடித் தொலைடா, விளக்கெண்ணெய். உங்கப்பனுக்குத் தெரிஞ்சா மூக்கு, வாய் எதுவுமே இல்லாம ஆக்கிடுவான்."

நக்கலும் கூச்சலுமாய் மாணவர்களுக்கிடையே நிமிடத்தில் பரபரப்புத் தோன்ற, அவளைப் போன்று முகமூடி அணிந்திருந்த இரண்டு ஆண்களும், பெண்களும் தடதடவென எங்கிருந்தோ முன்னால் வந்தனர்.

"ஏய்... கேமிரா டி.ஆர்.ஜே-வைப் பின்னாடி இழு."

"சார்... உங்களுக்குப் பேட்டி எடுக்கணும், அவ்ளோ தானே? என்ன விவரமா இருந்தாலும் நாங்க சொல்



றோம். எங்க கிட்டே கேளுங்க..." என்றபடி நான்கு மாணவர்களும் அந்த ஜான்சி ராணியை ஓரங்கட்டி விட்டு முன்னால் வந்தனர்.

"ஏன்... அந்த மேடம் எதுவும் பேச மாட்டாங்களா? கத்தின வேகத்தைப் பார்த்து விஜயசாந்தின்னு நினைச்சேன். டம்மி பீஸ்தானா? மேடம் வோகல்லதான் பெஸ்ட் போல..." என்று கேமிரா மேன் நக்கல் அடிக்க,

"சார்... பேட்டி எடுக்கணும்னா எங்க கிட்டே விவரத்தைக் கேளுங்க. இல்லாட்டி வழியை விடுங்க. நாங்க இன்னும் பதினைஞ்சு நிமிஷத்துல காலேஜ் கேம்பஸை ரீச் பண்ணணும்," என்று நான்கு மாணவர்களில் ஒருவன் சத்தமிட,

"ஏய்... ஏய்... ஏய்..." என்றபடி மாணவர்கள் அனைவரும் கூட்டமாய்க் கூச்சலிட்டனர்.

"டேய்... தகர டப்பா... வாயை மூடிட்டுச் சும்மா இருக்க மாட்டியா?" என்று திட்டிய மைக் பார்ட்டி மாணவர்களிடம் திரும்பி, "நீங்க எந்த டிபார்ட்மெண்ட் ஸ்டூடன்ட்ஸ்? எத்தனை சதவீதம் கட்டண உயர்வைக் கல்லூரி நிர்வாகம் கொண்டு வந்திருக்கு?" என்று தன் கேள்விகளைக் குவிக்கத் தொடங்க, அந்த நால்வரின் பின்னே மறைந்திருந்த பச்சை முகமூடிப் பெண் அமைதியாகக் கூட்டத்துக்குள் கலந்து விட்டாள்.

பேட்டி முடிந்து கூட்டம் நகரத் தொடங்க, அதுவரை தன்னை மறைத்துக் கொண்டிருந்த அந்தப் பெண், கூட்டத்தை விலக்கி முன்னால் வந்து நின்று,

“ஹே ஸ்டூடன்ட்ஸ் கையில காப்பு... வைக்கப் போறோம் ஆப்பு...” என்று உற்சாகமாய்ச் சத்தமிட, அவளது உற்சாகத்தைத் தங்களுடையதாக ஏற்றுக் கொண்ட மாணவர்கள் அனைவரும், அவள் கூறிய வாசகத்தைத் தொடர்ந்து படித்தபடி முன்னேறினர்.

பேண்ட் பாக்கெட்டில் விர் விர்ரென்று வைப் ரேஷன் மோடில் அதிர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்த தன் அலைபேசியை எரிச்சலுடன் கையில் எடுத்தான் ஹரி கிருஷ்ணன். ‘அத்தை... காலிங்...’ என்று அதில் ஒளிர்ந்த பெயரைக் கண்டவனின் முகத்தில் கோபம் கொப்புளித்தது.

பட்டனை அழுத்திக் காதில் வைத்து, “ஹலோ... அத்தை! அவ கிடைச்சதும் நானே போன் பண்ணு வேனே... நீங்க ஏன் இத்தனை முறை கால் பண்ணி என்னை டென்ஷன் பண்ணுறீங்க?” என்று சீற ஆரம்பித்தவன், பின் எதிர்முனை என்ன கூறியதோ,

“அத்தை... அத்தை... இதுக்காகவெல்லாம் அழுவாங்களா? அந்தக் கேடி இப்படி அநியாயம் பண்றது முதல் முறையா என்ன? எப்படியும் கண்டு பிடிச்சிடுவேன் அத்தை. பயப்படாம இருங்க. ஓ.கே.வா?” என்று விட்டுப் பேசியைக் கட் செய்ய முயன்றான். பின் என்ன நினைத்தானோ, மீண்டும் காதில் வைத்து, “ஹலோ... ஹலோ... ஹேய், அமுல் டின்... அழுமூஞ்சியோட போனை வெச்சா எப்படி? ஸ்மைல் ப்ளீஸ்...” என்று சிரித்தபடி வினவினான்.



எதிர்முனை பதிலளித்ததும் சிரிப்புடன், “பை அத்தை...” என்று அழைப்பைத் துண்டித்தவனின் முகம் மீண்டும் மாற, பரபரவென அலைபேசியில், ‘ரம்யா...’ என்று பதியப்பட்டிருந்த எண்ணிற்கு அந்த நாளில் நூறாவது முறையாக அழைப்பு விடுத்தான்.

‘நீங்கள் அழைக்கும் நபரின் எண்ணானது ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது’ என்று அழகிய குரலொன்று பொறுமையாய்ப் பதில் கூற, கோப மிகுதியில் அருகே நின்றிருந்த வண்டியை ஓங்கி மிதித்தான் ஹரி. வண்டியின் நுனிப் பாகம் பெருவிரலைத் தாக்கி விட, வலியில் நொண்டியபடி விரல்களை இறுகப் பற்றினான்.

அவன் நின்றிருந்த இடத்திலிருந்து நான்கடி தொலைவிலிருந்த பெட்டிக் கடையொன்றில் மாங்கோ ஜூஸ் குடித்துக் கொண்டிருந்த சக்தி, நண்பனின் செயலைக் கண்டு வேகமாய் ஓடி வந்தான்.

“டேய்... டேய்...” என்று பதறியபடி, வேகமாய் அவனைத் தள்ளிவிட்டு, வண்டியைக் கட்டிக் கொண்டு, “டேய்... டேய்... வண்டி என்னோடதுடா. இதோ, அங்கே நிக்குது பாரு, ராயல் என்ஃபீல்ட். அதுதான் உன் வண்டி. போய் அதை மிதி. கோபம் வந்தாக்கூட, இதை யெல்லாம் நல்லா ஞாபகம் வெச்சுக்கோங்கடா, சாமிகளா...” என்றவனை முறைத்துப் பார்த்த ஹரி,

“டேய்... நீ உன் வேலையை முடிச்சிட்டியா, இல்லையா? கிளம்பலாம், வாடா. ஆறு மணிக்கு பங்ஷன் தொடங்குதுடா. அதுக்குள்ள அந்த ராட்சசியை

நான் கண்டுபிடிக்கணும். நான் மட்டும் தனியாப் போனா... தாத்தா என்னைக் கொன்னுடுவார்டா. அப்புறம் இன்னும் ஒரு வாரத்துக்கு நான் அவுட்-ஹவுஸ்லதான் படுக் கணும்..." என்று புலம்பியபடியே தன் வண்டியை நோக்கி நடந்தான்.

"ஆனா மச்சி... இது என்னடா சின்னப் புள்ளைத்தனமா இருக்கு? பேரண்ட்ஸைக் கூப்பிட்டு வராட்டி கிளாஸை விட்டு வெளியே நிற்க வைப்பாங்களே, ஸ்கூல்ல? அந்த மாதிரியே இருக்குதுடா நீ சொல்றது?" என்றவன், நண்பனைத் தொடர்ந்து வந்து, தானும் அவன் வண்டியில் ஏறினான்.

"இன்னிக்கு என்ன பண்ணினாலும் அவளைப் பிடிக்க முடியாது மச்சி. நான்கு மணிக்கு ஆர்.ஏ. புரத்துல அவளுக்கு 'ஷோ' இருக்கு. அதை முடிச்சப்புறம்தான் நம்ம கண்ணுலயே படுவா..." என்று கூறிக் கொண்டி ருக்கையிலேயே, "வதைக்காதே... வதைக்காதே..." என்கிற பெருஞ் சத்தம் கேட்டுக் குரல் வந்த திசையைத் திரும்பி நோக்கினர் இருவரும்.

"ஹ்ம்ம்... போராட்டக் களமா? என்ன காலேஜ்டா இது? ஸ்ரீ சக்தி இன்ஸ்டிடியூட்... மச்சி, நம்ம இன்ஸ்டி டியூட்தான்டா. எந்த டிபார்ட்மெண்ட் ஸ்டூடண்ட்ஸ் இதுங் கல்லாம்? இந்தப் பொண்ணுங்க முகத்தைப் பார்த்தா, சத்தியமா நம்ம டிபார்ட்மெண்ட் இல்லைன்னு தெரியுது மச்சி. எல்லாம் செம ஃபிகரா இருக்குதுங்க. நம்ம டிபார்ட்மெண்ட்ல எல்லாம் அட்டு பீஸுகளாச்சே!" என்று



விடாமல் ஒலித்துக் கொண்டிருந்த நண்பனின் குரலை அலட்சியம் செய்த ஹரி, கூட்டத்தை முந்திக் கொண்டு கடந்து செல்ல முயற்சித்தான்.

"டேய், டேய்... இருடா. நம்ம இன்ஸ்டிடியூட் பொண்ணுங்க போராட்டம் பண்ணிட்டிருக்காங்க. கண்டுக்காம கடந்து போக ட்ரை பண்றே? இர்ரெஸ் பான்சிபிள் இடியட். அந்தக் கடைசி வரிசை மஞ்சள் சுடிதார் போகிற வரைக்கும் இருந்து பார்த்துட்டுத்தான் போறோம்," என்ற சக்தி, பொறுமையாய் ஒவ்வொரு பெண்ணையும் ரசித்துப் பார்க்கத் தொடங்கி விட்டான்.

"உன்னை யெல்லாம் ஒண்ணும் பண்ண முடி யாது," என்று திட்டிய ஹரி, கூட்டத்தை நோக்கி விட்டுக் கண்கள் மலர, "மச்சி, நிஜமாவே இதுக எல்லாம் சூப்பர் பீஸ்தான்டா. நம்ம கிளாஸ் ரத்திகாவை விட..." என்று ஆரம்பித்தவனின் பார்வை, நடையில் துள்ளலும், ஆட்டமுமாய் அந்தக் கூட்டத்தையே வழி நடத்திக் கொண்டு முன்னால் சென்று கொண்டிருந்த நீல டி-ஷர்ட் பெண்ணின் மீது படிந்தது.

அந்த நேரம் பார்த்து அவளருகே நின்றிருந்த பெண், தண்ணீர்ப் பாட்டிலைக் கையில் கொடுக்க, முகமூடியை நீக்கி விட்டுப் பாட்டிலைத் திறந்து தண்ணீரை வாயில் கொட்டிக் கொண்டாள் அவள்.

'லெவிஸ் ஜீன்ஸ், க்ளோபல் டி-ஷர்ட், ரீபோக் ஷூ...! அவளேதான்!'

"டேய் சக்தி..." - ஹரி.

"மச்சி..." - சக்தி.

"டேய்... ரம்யாடா..." என்று இருவரும் ஒரே நேரத்தில் கூக்குரலிட்டனர்.

"செத்தாடா இவ இன்னைக்கு," என்ற ஹரி, வண்டியிலிருந்து குதித்துக் கூட்டத்தை நோக்கி ஓட, அவன் திடீரென்று இறங்கி விட்டதில் தடுமாறிய சக்தி, "டேய், இருடா... நானும் வரேன்," என்றபடி, வண்டியை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான்.

தண்ணீரைப் பருகி முடித்தவள், பாட்டிலை மூடி, அருகே இருந்த பெண்ணிடம் நீட்டி, "தேங்க்ஸ்டி ஜாங்கிரி. ஹரி மாதிரியே எனக்கு எது எப்போ தேவைன்னு சரியாத் தெரிஞ்சு வெச்சிருக்கிறடி நீ. ஆனால், பாவம் ஹரி, இப்போ என்னை எங்கெல்லாம் தேடிட்டு இருக்கானோ! அவன் கண்ணுல படாம எப்படியாவது காலேஜிலிருந்து ஆர்.ஏ.புரம் போகணும்டி. கிளாஸஸ் எப்படியும் இன்னிக்குப் பங்க்தானே?" என்று பேசிக் கொண்டே திரும்பியவள், தன்னை நோக்கி ஓடி வந்த ஹரியைக் கண்டு, கண்களைப் பெரிதாய் விரித்தாள்.

"அய்யோ, கண்டு பிடிச்சிட்டான்... கண்டு பிடிச்சிட் டான். ப்ரியா, காப்பாத்துடி!" என்று பதறியவளிடம்,

"என்ன? என்னாச்சு? யாரு உன்னைக் கண்டு பிடிச்சா? ஹரி இங்கே இருக்காரா?" என்று வினவிய ப்ரியா, சுற்று முற்றும் பார்வையை ஓட்ட, சாலையைக்



கடந்து மூச்சு வாங்க, இருவரின் முன்பும் வந்து நின்றான், ஹரிகிருஷ்ணன்.

அவனைக் கண்டதும் தடுமாறிய ப்ரியா, வேகமாய் முகமூடியைக் கழட்டி விட்டுத் தலை முடியைக் கோதிக் கொண்டாள். ரம்யாவை மட்டுமே கண்டபடி ஓடி வந்த ஹரியும், அவளருகே நின்றிருந்த ப்ரியாவைக் கண்டு, ஒரு நிமிடம் நின்று, பார்வையை அவசரமாகத் திருப்பிப் பின் குனிந்து கழுத்தைத் தேய்த்தபடி நிமிர்ந்து, மீண்டும் அவளை நோக்கினான்.

இருவரது மௌன நாடகத்தைக் கண்ட ரம்யா, நக்கலுடன் உதட்டை வளைத்துச் சிரித்தபடி நழுவ எத்தனித்தாள்.

மெல்லத் திரும்பிப் பூனை நடையுடன் அவள் ஒரு அடி எடுத்து வைக்கையில், சட்டென அவள் கையை இறுகப் பற்றினான் ஹரி.

தன் மீது மட்டுமே பார்வையைப் பதித்திருந்தவன், திடீரென ரம்யாவின் கையைப் பற்றியதும் திடுக்கிட்ட ப்ரியா, கலக்கத்துடன் இருவரையும் நோக்கினாள்.

அடக்கி வைத்திருந்த மூச்சைப் பொறுமையாய் வெளியிட்ட ரம்யா, தன் கழுத்தைச் சுற்றியிருந்த துணியை வெடுக்கென உருவினாள். தன் கையைப் பற்றியபடி பின்னால் நின்றிருந்தவனிடமிருந்து விடுபட முயற்சிக்காமல், அமைதியாய் அவள் நின்றதைக் கண்டு ஆச்சரியமா யிருந்தது ப்ரியாவுக்கு.

"இப்போ என் கூட இவளால வீட்டுக்கு வர முடியுமா? முடியாதான்னு கேளு, ப்ரியா." – ஹரி.

"முடியாதுன்னு சொல்லிடு, ப்ரியா." – ரம்யா.

"ஏன்... ஏன்... ஏன் வர முடியாதாம்?"

"ஈவினிங் எனக்கு 'ஷோ' இருக்கிறது தெரிஞ்சும் வா, வான்னா எப்படி வர முடியும்?"

"பல்லைத் தட்டிடுவேன்."

"முடிஞ்சா முயற்சி பண்ணு."

பொறுமையிழந்து அவளை வேகமாய்த் தன் பக்கம் திருப்பியவன், "ஷோ... ஹ்ம்... ஷோ ரொம்ப முக்கியமாடி? இவ பெரிய ப்ரிட்னி ஸ்பியர்ஸ்! டாலர்ஸ்ல ஸ்டேஜ் ஷோ பண்ணுறா... ரம்யா... இப்போ நான் உன்னைக் கூட்டிட்டுப் போகாட்டி, தாத்தா என்னைக் கொன்னுடுவார். புரிஞ்சுக்கோடி. நீ பண்ணுற தப்புக்கு ஒவ்வொரு முறையும் நான் ஏன்டி தண்டனை அனுபவிக்கணும்? ஒரு வாரமா அவுட்-ஹவுஸ்ல கொசுக்கடியில படுத்தும் உனக்குப் புத்தி வரலையா? சொன்னாக் கேளுடி. என் கூட வீட்டுக்கு வா. அத்தை வேற நூறு தடவை கால் பண்ணிட்டாங்க," என்றான்.

"ஹரி... ஹரி... ப்ளீஸ்டா. இந்த ஒரு தடவை மட்டும் என்னை விட்டுடா. ஃபோர் டூ ஃபைவ்... ஒன் ஹவர்தான் ஷோ. பங்ஷன் ஆரம்பிக்கிறதுக்குள்ள நான் வீட்டுக்கு வந்துடுவேன். ப்ளீஸ்... ப்ளீஸ்... என் பட்டுல்ல..." என்று அவன் நாடியைப் பிடித்துக் கொஞ்சியவளின் கையை இறுகப் பற்றிக் கொண்டு,



"ஒவ்வொரு தடவையும் நீ இதே டயலாக்கைத்தான் சொல்லுற. சாரி, ஹனி... இன்னிக்கு நான் என் பெட்ரூம்ல நிம்மதியாகத் தூங்கணும்னு ஆசைப்படறேன். கிளம்பு," என்றவன், அவளை இழுத்துக் கொண்டு முன்னால் நடந்தான்.

"சாரி ப்ரியா... இவ இல்லாததால உன் போராட்டம் எதுவும் பாதிக்கப்படாதுன்னு நம்புறேன்..." என்று போகிற போக்கில் சொல்லிக் கொண்டே நடந்தவனிடம்,

"ஹரி... கையை விடு. நான் போகணும். நடு ரோட்டுல பிரச்சினை பண்ணாதே. கையை விடு, இடியட்," என்று பல்லைக் கடித்தவளைக் கண்டு கொள்ளாமல் நடந்தான் அவன்.

"நான் ப்ராமிஸ் பண்றேன்டா. ஷோ முடிஞ்சதும் நேரா வீட்டுக்குத்தான் வருவேன். எனக்கு மட்டும் தாத்தா மேல பயம் இருக்காதா? நான் சொல்றதைக் கேளுடா," என்று விடாமல் புலம்பியவளை எரிச்சலுடன் நிறுத்தியவன்,

"மொட்டை வெயில்ல காலையிலிருந்து சாப்பிடாமக் கூட உன்னைத் தேடிட்டு இருக்கேன். என்னை வெறியேத்தாம அமைதியா வா," என்று கூறிவிட்டு மேலே நடந்தான்.

'கத்துறியா... மவனே, இப்போ நீ தொலைஞ்சடா...' என்று மனசுக்குள் கறுவிக் கொண்டு, தன் கரத்தைப் பற்றியிருந்த அவன் கையைத் தூக்கி, நறுக்கெனக் கடித்து வைத்தாள்.

வலி தாங்க முடியாமல், "ஆஆஆ...." என்று கத்தியவன், வெடுக்கெனக் கையை உதற, அந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு, நிமிடத்தில் சிட்டாகப் பறந்தாள் அவள்.

"ஏய்... ஏய்... நில்லுடி!" என்று கத்தியவன், "ஆ....." என்று முனகியபடியே அவளைத் தொடர்ந்து ஓடினான்.

எதிரே வந்த வாகனம் ஒன்றின் மீது மோதி விடாதிருக்க, அவள் பின்னால் ஒதுங்கிய வேளை, அவளைத் தொடர்ந்து ஓடி வந்த ஹரி, வேகமாய் அவளைத் தன் பக்கம் இழுத்தான்.

"ராட்சசி, ராட்சசி... நீ மனுஷியே இல்லைடி. உன்னை..." என்றவன், அருகே சென்று கொண்டிருந்த ஆட்டோவைக் கை காட்டி நிறுத்தி, அவளை உள்ளே தள்ளித் தானும் ஏறினான்.

ஓடியதில் வியர்த்துப் போயிருந்த இருவரும், மூச்சு வாங்க ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டனர்.

"கையை விடுடா."

"முடியாதுடி."

"ஓடற ஆட்டோவில் இருந்து குதிக்கிறதுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்லை. கையை விட்டுத் தொலைடா."

"ஓ...! அப்படி ஒரு ஐடியா வேற இருக்கா உனக்கு...?" என்றவன், அருகே அமர்ந்திருந்தவளைச் சட்டெனத் தூக்கித் தன் மடியில் அமர வைத்து இறுக்கிக் கட்டிக் கொண்டான்.



அவன் செய்கையை ரியர் வியூ மிரரில் கண்டு விட்ட ஆட்டோ டிரைவர், 'அடப் பாவிங்களா... பட்டப் பகல்ல ஆட்டோவுக்குள்ள என்ன காரியம்டா பண்றீங்க?' என்று எண்ணிக் கொண்டு, "சார், சார்... இது அந்த மாதிரியான ஆட்டோ இல்லை சார். நான் டீசென்ட்டா தொழில் நடத்திட்டு இருக்கேன். உங்க லீலையெல்லாம் நீங்க வேற எங்கேயாச்சும் வெச்சுக்கோங்க," என்று திட்டினார்.

"லீலையா...?" என்று ஒரு சேர வினவிய இருவரும், சட்டெனத் திரும்பி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, "ச்சேச்சே... இந்த மூஞ்சியோடயா? உவ்வே..." என்றனர்.

"அண்ணா... எங்களை மைண்ட் பண்ணாம ஓட்டுங்க, ப்ளீஸ். இவளை மட்டும் நான் விட்டேன்னா, இப்படியே ஓடிடுவா. இவளைக் கூப்பிடாம வீட்டுக்குப் போனா, என் தாத்தா வாசல்லேயே என்னைப் பொலி போட்டுடுவார்," என்று மீண்டும் புலம்பத் தொடங்க,

"டேய் லூசு... அவர் உன் குடும்ப ஹிஸ்டரியெல்லாம் கேட்டாரா? கையை விடுடா. சத்தியமா நான் ஓட மாட்டேன்," என்று ரம்யா, அவனிடமிருந்து திமிறினாள்.

விடாமல் கேள்வி கேட்டு டார்ச்சர் அளித்த ஆட்டோக்காரரையும், தன்னிடமிருந்து விடுபடப் போராடிக்

கொண்டிருந்த ரம்யாவையும் சமாளிக்க முடியாமல் திணறிப் போன ஹரி, வெளியே எட்டிப் பார்த்தான்.

'அமாத்யர் ஹோட்டல்ஸ் & ரெஸ்டாரண்ட்ஸ்' என்ற கட்டடத்தைக் கண்டு, "அண்ணா... அண்ணா... அந்த ஹோட்டல் கிட்ட நிப்பாட்டுங்க," என்றான்.

"அண்ணா நகர் போகணும்னு சொன்னீங்க தம்பி..."

"அவ்ளோ தூரம் உங்க இரண்டு பேரையும் நான் எப்படிச் சமாளிக்கிறது?" என்றவன், வண்டியை விட்டிறங்கி, அந்த ஹோட்டல் வாசலில் நின்றிருந்த காவலாளியிடம், "காளி அண்ணா... இந்த ஆட்டோக்காரர் கிட்ட நூறு ரூபாய் கொடுத்திடுங்க..." என்று கூறிவிட்டு, ரம்யாவைத் தரதரவென இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

அதுவரை திமிறியவள், ஹோட்டலுக்குள் நுழைந்ததும் அடங்கி, "இங்கே எதுக்குடா என்னைக் கூட்டிட்டு வந்தே?" என்று அடிக் குரலில் கர்ஜித்தாள்.

பற்றியிருந்த அவள் கையை விடுவித்து, நெற்றி வியர்வையைத் துடைத்தபடி, அவள் பக்கம் திரும்பியவன், "இனி நானே விட்டாலும் உன்னால் ஓட முடியாது," எனக் கூறி விட்டு, எதிரே வந்து கொண்டிருந்த நபரிடம் சென்று,

"மேனேஜர் அங்கிள்... மாமா இருக்காரா? நான் அவரைப் பார்க்கணும்," என்றான்.



"அப்பா...! டேய் ஹரி... அப்பா கிட்ட மட்டும் வேண்டாம். ஹரி, சொன்னாக் கேளுடா. துரோகி." - ரம்யா.

"சார் வெளியே போயிருக்கார் தம்பி. நீங்க ரூம்ல வெயிட் பண்றீங்களா? அரை மணி நேரத்தில் வந்திடுவார்," என்று அவர் முடித்ததும், "யாஹூ..." என்றாள் ரம்யா.

அவளை முறைத்து விட்டுத் திரும்பியவன், "சரி அங்கிள். நாங்க ரூம்ல வெயிட் பண்றோம். தேங்க்ஸ்..." எனக் கூறிவிட்டு, அவளை அழைத்துக் கொண்டு, அந்தப் பெரிய வரவேற்பறையைக் கடந்து, வலதுபுறமிருந்த அறைக்குச் சென்றான் ஹரி.

'அரை மணி நேரமா? நான் அஞ்சே நிமிஷத்துல தப்பிக்க வழி கண்டு பிடிச்சிடுவேன்டா என் மாங்கா மடையா!' என்று சிரித்துக் கொண்டவளின் விழிகள், துருதுருவென ஹோட்டல் வரவேற்பறையை மேய்ந்தன.

ஓரக் கண்ணால் அவளை நோக்கியவனின் கண்கள், அவள் மன நிலையை யூகித்து விட, அவனும் விரைவாய் யோசித்தான்.

அறைக்குள் நுழைந்ததும் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தவன், ஒரு புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு, பொறுமையாய் வாசிக்கத் தொடங்கினான்.

'ப்ளடி ராஸ்கல்... இருக்கிற எல்லா ஆப்ஷனையும் லாக் பண்ணிட்டானே...! என்ன பண்ணலாம்?'

பரபரவென நகத்தைக் கடித்துத் துப்பிய ரம்யா, நிமிர்ந்து அவனை முறைத்தாள்.

“ஹரி... ரூஃப் டாப்ல நியூ செட்-அப் ஏதோ கொண்டு வந்திருக்கிறதா அப்பா சொன்னாரே... நாம அதைப் போய்ப் பார்ப்போமா?”

“நான் போன வாரமே பார்த்துட்டேன்.”

“ஆனால், நான் இன்னும் பார்க்கலையே!”

“நீ பார்க்கணும்னு இப்போ எந்த அவசியமும் இல்லை.”

“ஏன், ஏன்? பொண்ணுங்க ஹோட்டல் பிசினஸைப் பற்றித் தெரிஞ்சுக்கக் கூடாதா? நான் ஒரு ஹோட்டல் மேனேஜ்மெண்ட் ஸ்டூடண்ட்ங்கிறதை மறந்துடாதே. ச்சே! சரியான மேல் சாவனிஸ்ட்டுடா நீ.”

“தேங்க்ஸ்.”

அடுத்த ஐந்து நிமிடம் சத்தமின்றி அமைதியாகக் கழிந்தது.

பொறுமையின்றிச் சட்டென இருக்கையை விட்டு எழுந்தவள், அவனருகே சென்று நின்றாள்.

“என்ன புக் படிக்கிறே ஹரி?” - அவனிடமிருந்து புத்தகத்தைப் பிடுங்கிப் பெயரை நோக்கினாள்.

“ப்ச்... புக்கைக் கொடுடி.”

“ஹோட்டல் அட்மினிஸ்ட்ரேஷன்! ஹ்ம்ம்... எம்.பி.ஏ. ஸ்டூடண்டுக்கு வேற என்ன டேஸ்ட் இருந்துடப் போகுது?



இங்கே குமுதம், ஆனந்த விகடனெல்லலாம் இருக்குமே! எங்கேடா?” என்றவள், அங்கிருந்த புத்தக ஷெல்ஃபின் அருகே சென்றாள்.

புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தவளின் பார்வை, பக்கத்திலிருந்த மேஜையின் கீழே கிடந்த நைலான் கயிற்றின் மீது விழுந்தது.

‘ரோப்... கயிறு... வாவ்...!’ போன முறை ஹோட்டல் விழா ஒன்றில் கலந்து கொள்ள மாட்டேனென்று ஆர்ப்பாட்டம் செய்த போது, இந்தக் கயிறை வைத்துத்தான் கட்டி வைத்தார் அவள் அப்பா.

மெல்லத் திரும்பி ஹரியை நோக்கினாள். அவன் மும்முரமாகப் புத்தகத்தில் ஈடுபட்டிருந்தான். ‘டேய் ஹரி... நல்லவங்களை எப்பவும் கடவுள் கைவிட மாட்டார்டா...!’ எனக் கூறியபடி, வேகமாய்க் குனிந்து அவள் கயிற்றைப் பற்றும் வேளை... அமர்ந்திருந்த இடத்திலிருந்து ஒரே குதியாய்க் குதித்து வந்து, அவள் கையைப் பற்றி யிருந்தான் ஹரி.

“இங்கே என்ன ஸ்டண்ட் ஷோவாடா நடக்குது? ஆக்ஷன் கிங் மாதிரி பறந்து வர்றே?”

“கயிறைக் கீழே போட்டுட்டு, ஒழுங்கா எழுந்து போய் உட்காரு.”

“ஹரி... இன்னிக்கு நீ உன் லிமிட்டைத் தாண்டிட்டேடா!”

“உன் விஷயத்துல நான் எப்பவும் அன்லிமிட்டெட் தான்.”

"என் பொறுமையைச் சோதிச்சதுக்கு உனக்கு நிச்சயம் தண்டனை இருக்குடா," என்றவள், கை முட்டியால் அவன் விலாவில் ஓங்கி ஒரு குத்து விட்டாள்.

"அம்மாஆஆஆ..." என்று அலறி, அவன் எழ முயல்கையில், அவன் கால் முட்டியின் பின்புறத்தை உதைத்து, அவனைக் கீழே சாய்த்தாள். குடுகுடுவென ஓடிச் சென்று, கீழே கிடந்த கயிற்றை எடுத்து, அவன் கால்களைச் சேர்த்துக் கட்டினாள்.

விலாவைப் பிடித்துக் கொண்டு, "வேண்டாம்டி, ரம்யா. சொன்னால் கேளுடி. அத்தை அழுவாங்கடி. ப்ளீஸ்..." என்று கெஞ்சியவனைக் கண்டு கொள்ளாமல், "கராத்தே கிளாஸைக் கட் அடிச்சிட்டு ப்ரியா பின்னாடி சுத்துனதுக்குக் கடவுள் உனக்குத் தண்டனை கொடுத் திட்டார் ஹரி," என்றவள், தன் கழுத்திலிருந்த ஸ்டோ லினால் அவன் கைகளையும் கட்டினாள்.

"ப்ச்... ப்ச்... என் அருமை மாமன் மகனே... கை, காலில் பட்ட அடிக்கெல்லாம் ஷோ முடிஞ்சு வந்து மருந்து போடுறேன். சரியா? டாட்டா... ஸீ யூ..." என்றவள், விநாடிக்குள் கதவைத் திறந்து, விரைந்து ஓடி விட்டாள், "நில்லுடி, போகாதே! ரம்யா... ராட்சசி..." என்று கத்தியவனின் குரலைப் பொருட்படுத்தாமல்.

ஹரியின் கெட்ட நேரமோ என்னவோ, அரை மணி நேரத்தில் வருவதாக இருந்த ரம்யாவின் தந்தை ஜெகநாதன், அன்று இரண்டு மணி நேரம் கழித்துத்தான் ஹோட்டலுக்குத் திரும்பியிருந்தார்.



"யாராவது இருக்கீங்களாஆஆ..." என்று ஹரி கத்திய கத்தல்கள் அனைத்தும் சவுண்ட் ப்ரூஃப் செய்யப் பட்டிருந்த அறைக் கதவின் வழியாக வெளியே செல்ல முடியாமல், உள்ளேயே முடங்கிப் போய் விட்டன.

"ஹரி தம்பி உள்ளே தூங்கிட்டிருக்காங்கன்னு ரம்யா மேடம் சொன்னாங்க சார்," என்று மேனேஜர் கூறும்போதே, ஜெகநாதனுக்குச் சந்தேகம்தான். 'என்ன செய்து வைத்திருக்கிறாள் இந்தப் பெண்?' என்று திட்டிக் கொண்டே வேகமாகக் கதவைத் திறந்தவர்... கண்டது, எதிர்பார்த்த கோலம்தான்.

அவரைக் கண்டதும் எழுந்து அமர முயற்சித்த ஹரி, "வந்துட்டீங்களா மாமா?" என்று விசாரித்தான்.

அவரைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த ஹரியின் தந்தை ராமமூர்த்தி, மகனைக் கண்டு, "ஏன்டா... வெட்கமாயில்லை உனக்கு? அவ உன்னை அடிச்சிக் கை, காலைக் கட்டி வெச்சிட்டுப் போகிற அளவுக்கு நீ பலமில்லாம இருக்கியா? உன்னை யெல்லாம் இப்படியே கிடன்னு விட்டுட்டுப் போனாத்தான் புத்தி வரும்," என்று காய்ச்சத் தொடங்கினார்.

கயிற்றை அவிழ்த்ததும் கோபமாய் எழுந்து நின்ற ஹரி, "என்னவோ நான் தப்பு பண்ணின மாதிரி என்னைத் திட்டுறீங்க?" என்று காட்டமாய் வினவ,

"எதிர்த்து எதிர்த்து வேற பேசுறியா? ராஸ்கல்... டேய், டேய்..." என்று அவன் தலையில் அடித்தவர்,

"வெளியே போ... வெளியே போடா. பாப்பாவைக் கூப்பிடாம வீட்டுக்குள் வந்தே... உன்னைக் கொன்னு போட்டுடுவேன். போ... போடா," என்று சத்தமிட்டார்.

தலையைத் தடவிக் கொண்டே, "அப்பாஆஆ..." என்று பல்லைக் கடித்தவனிடம்,

"ராமமூர்த்தி... அவனை விடு. ஹரி, நீ அவளைத் தேடிப் போகாதே. ராத்திரி அவ வீட்டுக்கு வந்ததும் நான் பேசிக்கிறேன்..." என்றார் ஜெகநாதன்.

'போறியா என்ன?' என்கிற ரீதியில் தந்தை கண்களி லேயே மிரட்டுவதை உணர்ந்த ஹரி,

"நான் கிளம்புறேன் மாமா..." என்று எரிச்சலுடன் வெளியேறினான்.

"டேய்... டேய்... சாப்பிட்டியாடா? சாப்பிட்டுட்டுப் போ!" என்று அவன் பின்னேயே ஓடிச் சென்றார், ஜெக நாதன்.

அவர்கள் இருவரும் சென்றதும், சிரிப்புடன் தன் அலைபேசியிலிருந்த ரம்யாவின் மெசேஜை எடுத்துப் பார்த்தார் ராமமூர்த்தி.

'டண்டடைன்! ஒரு முக்கியச் செய்தி! தங்கள் மகன் ஹரிகிருஷ்ணன், கை கால் கட்டப்பட்ட நிலையில் நம் ஹோட்டல் ஆபீஸ் அறையில் கவலைக்கிடமாகக் கிடக் கிறான் என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னைக்கு எனக்கு ஷோ இருக்கு மாமா. முடிஞ்சதும் நேராக வீட்டுக்குத்தான். காட் பிராமிஸ்!'



பி.கு.: என்னைக் கராத்தே க்ளாஸ் அனுப்பினதுக்கு ரொம்ப நன்றி மாமா. இன்னைக்கும் ஹரி என் கிட்டே தோத்துட்டான்.

கலகலவெனச் சிரித்துக் கொண்டவர், "நாட்டி கேர்ள்," என்றார்.

மணி 3.30. கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்ட ஹரி, சக்திக்குப் போன் செய்தான். "மாப்ள... என் வண்டி எங்கடா?"

"ம்ம்... காக்கா தூக்கிட்டுப் போயிடுச்சு."

"ஓ...! கருப்பா... குள்ளமா... குண்டா... பன்னிக் குட்டி மாதிரியே இருக்குமே... அந்தக் காக்காவா?"

"டேய்... ஆறடி உயர இளைஞனைப் பார்த்துக் குள்ளம்ன்ற? உங்க கிட்ட பிடிச்சதே உங்க உயரம் தான்னு ரித்திகா எத்தனை தடவை சொல்லியிருக்கா, தெரியுமா? பைக் எங்க இருக்குன்னு சொல்ல முடியாது, போடா."

"சரி சரி. நீ அழகன்தான். ஒத்துக்கிறேன். பேசியே நேரத்தைக் கடத்தாதேடா. ரம்யா எஸ்கேப் ஆயிட்டா மாப்ள. ஆர்.ஏ.புரத்துல ஷோ எங்கே நடக்குதுன்னு தெரியும்தானே உனக்கு? நான் எங்க ஹோட்டல் கிட்டே நிற்கிறேன், சீக்கிரம் வாடா."

அடுத்த பதினைந்து நிமிடத்தில் நண்பனுடன் ஆர்.ஏ.புரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான், ஹரிகிருஷ்ணன்.

2

*Live your life like a poem*

90-களில் பள்ளி சென்ற சிறுமிகளுக்குப் புரியும், 'ஹீரோ' பேனாக்களின் மோகம். இரண்டு வகையான நிறங்களைக் கொண்டிருந்த அந்தப் பேனாக்களில், என்னோட ஈர்ப்பை முழுதும் கவர்ந்தது மெரூன் நிற பாட்டமும், கோல்டன் நிற மூடியும் கொண்ட பேனாதான். அப்போ அந்தப் பேனாவோட மதிப்பு 30 ரூபாய். என்னைப் பொறுத்தவரை ரொம்பவே காஸ்ட்லி!

என் வீட்ல என் பெரியப்பா மட்டும்தான் அந்தப் பேனா வெச்சிருந்தார். ஒவ்வொரு முறையும் அவர் அந்தப் பேனாவில் எழுதும் போதும், என் கண் முழுக்க அது மேலேதான் இருக்கும். அது இங்க்கை உரியும் விதம், அது கொடுக்கிற ஒல்லியான எழுத்து வடிவம்... ஏனோ ஒரு ஆசை. எத்தனையோ முறை புது ஹீரோ பேனா கேட்டு, அம்மா கிட்டேயும், பெரியப்பா வெச்சிருந்த பேனாவைக் கேட்டுப் பெரியம்மா கிட்டேயும் திட்டு வாங்கியிருக்கேன். ஆனால், கிடைக்கவே இல்லை. கடைசியா நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கும்போது, அந்தப் பேனா என் கைக்கு வந்தது.

பழைய பேனாதான் என்றாலும், அது என் கைக்குக் கிடைச்சப்போ, அந்த வயசுல எனக்குள்ள தோன்றின சந்தோஷம், வரையறுக்க முடியாதது. அப்போ ஆரம்பிச்சுக் கல்லூரி முடிக்கிற வரைக்கும் நான் உபயோகித்தது ஹீரோ பேனாக்களை மட்டும் தான்!

ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...



லீலா பேலஸ், ஆர்ஏ.புரம்.

வண்டியை நிறுத்தி விட்டு இறங்கிய இருவரும், உள்ளே நுழைந்தனர். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே நடந்த ஹரி, "ஷோ எங்கேடா நடக்குது?" என்று வினவ, "அக்கடச் சூடு," என்று கை காட்டினான் சக்தி.

சிவப்புப் பலகை ஒன்றில், 'க்ரேஸி ஃபெல்லோஸ்' என்ற வெள்ளை எழுத்துகள் ஒரு அம்புக் குறியுடன் எழுதப்பட்டிருந்தன. அம்புக் குறி காட்டிய திசையில் இருவரும் நுழைந்தனர்.

50, 60 பேர் குழுமியிருந்த அந்தப் பெரிய அரங்கம், காண்பவர் அனைவரும் 'ப்பாஆஆ' என்று சொல்லுமளவிற்கு, முழுக்க முழுக்க சிவப்பு நிறத்தாலேயே அலங்கரிக்கப் பட்டிருந்தது. சிவப்பு நிறப் பலூன், கம்பளம், மேஜை விரிப்பு... அனைத்தும் சிவப்பில் தகதகத்தது.

ஏதோ பார்ட்டி போலும்! கூடியிருந்த மனிதர்கள் கூடச் சிவப்பு நிறத்தில்தான் உடையணிந்திருந்தனர். "ஏன்டா எல்லாம் வாம்பயர்ஸ் மாதிரி இருக்காங்க?" என்று சக்தி, ஹரியின் காதில் முணுமுணுத்தான்.

"ஹாரிபிள் கலர் காம்போடா. ஆனால், வேணும்னு பண்ண மாதிரிதான் இருக்கு," என்ற ஹரி, அரங்கத்தின் அலங்காரத்தை உற்றுக் கவனிக்கத் தொடங்கினான்.

"டேய்... உன் நிர்வாக மூளையை ஓரங்கட்டி வெச்சிட்டு, உன் அத்தை மக ரத்தினத்தைப் பாரு

முதல்ல," என்று சக்தி காதைக் கடித்ததும், நிமிர்ந்தவனின் கண்களில், அரங்கத்தின் வலது பக்கமிருந்த மேடையின் மீது இசைக் கருவிகளை ஒழுங்கு படுத்தியவாறு பரபரப்புடன் இருந்த ரம்யா தெரிந்தாள்.

மதுவும், குளிர் பானமும், இதர உணவுகளும் வந்து சென்ற வண்ணமிருக்க, சிறிது நேரத்தில், சிவப்பு நிறத்தில் நீள ஃப்ராக் அணிந்திருந்த பெண்ணொருத்தி, மேடை முன்னால் வந்து, ஏதோ கூறினாள். அரங்கம் முழுதும் கரகோஷம் ஒலிக்கத் தொடங்கியதும், ரம்யா மற்றும் குழுவினர், மைக்கின் முன்னே வந்து நின்றனர்.

திரும்பித் தன் குழுவினரை ஒரு முறை நோக்கிய ரம்யா, பெரு விரலை உயர்த்திக் காட்டிக் கண்ணடித்து, "ரெடி... 1, 2, 3, 4..." என்றாள்.

"That, that dude looks like a ladyieeeee...

That, that dude looks like a ladyieeeee..."

அவள் விரல்கள், கிட்டாரின் கம்பிகளை அசாத்தியமாய் மீட்டத் தொடங்க, அதிலிருந்து புறப்பட்ட ஒலி சீறிப்பாய்ந்து மைக்கின் வழியாக அரங்கம் முழுதும் ஓட்டமெடுத்தது.

கைகளால் காதுகள் இரண்டையும் இறுக்கமாய் மூடிக் கொண்ட ஹரிக்கு, கிட்டார் ஒலி நாராசமாய் இருந்தது. உற்சாகமாய்க் கை தட்டிக் கொண்டிருந்த சக்தி, நண்பனைக் கண்டு கலகலவென நகைத்தான். "எம்.எஸ்.வி., இளையராஜா கேட்கிறவனுக்கு, ராக் மியூஸிக் சாவு மேளம் மாதிரிதான்டா இருக்கும்,"



என்றவன், தொடர்ந்து அரங்கத்தைச் சுற்றிக் காட்டி, "அங்கே பாரு... எப்படி என்ஜாய் பண்றானுங்கன்னு..." என்றான்.

"Ooh, what a funky lady

Ooh, she likes it, likes it, likes it, likes that

Ooh, she was a lady!"

கோரஸ் குரல் தொடர்ந்து ஒலிக்க, கைகளை விலக்கி, ரம்யாவைப் பார்த்தான். இதற்கு முன்பு ஒரு முறை கூட, அவளை மேடையில் கண்டதில்லை அவன். இதுதான் முதல் முறை.

தொடையை இறுக்கிப் பிடித்திருந்த ஜீன்ஸ் அணிந்திருந்தாள். அது ஆங்காங்கு கிழிந்து வேறு போயிருந்தது. சிவப்பும், கருப்பும் கலந்த சட்டை. அதன் மீது தொளதொளவென கோட் ஒன்று அணிந்திருந்தாள். கைகளில் கருப்பு நிறத்தில் பட்டையாய் ஒரு பிரேஸ்லெட்.

சுருட்டை சுருட்டையாய் இருந்த முடி, தோள்வரை மட்டுமே நீண்டிருந்தது. அடர் புருவத்தின் கீழ்ப் பட்டை யாய் மை தீட்டப்பட்டிருந்த விழிகளில், உற்சாகம் நிரம்பி வழிந்தது.

கூர் மூக்கைத் தொடர்ந்து, சிவப்புச் சாயம் பூசப் பட்டிருந்த இதழ்களின் வடிவம் அழகாய் இருந்தது.

பெருமூச்சுடன் அவளை நோக்கிய ஹரி, நண்பனிடம் திரும்பி, "தமிழ் நாட்டோட முதல் பத்துப் பணக்காரர்கள் வரிசையில் இருக்கிற குடும்பத்தைச்

சேர்ந்த பொண்ணு இவள்னு சொன்னா, யாராவது நம்புவாங்களாடா? கிழிஞ்ச பேண்ட், ரோட்ல விற்கிற ஊசி, பாசி மணி யெல்லாம் மாட்டிக்கிட்டு, மாடர்ன் குறத்தி மாதிரி... இப்படி இருக்காளேடா...!" என்றான்.

"அவ முகத்திலே எவ்வளவு கர்வம், உற்சாகம், பாரேன்! என்ன அசாத்தியமா கிட்டாரைப் பிடிச்சிருக்கா! என்ன ஸ்டைல், பாரேன்டா! சின்ன வயசுல நாங்க ரெண்டு பேரும் மியூஸிக் க்ளாஸ் சேர்ந்தப்போ, நான் முதல்ல தொட்ட இன்ஸ்ட்ரூமெண்ட் கீ-போர்ட். ஆனா... அவ நேரா கிட்டார் கிட்டத்தான் போனா. 'பையன், அவனே அடக்கமா இருக்கான்... உனக்கு என்ன கிட்டார்?'னு அவளை என் குடும்பமே திட்டினாங்க. அவ எதையுமே கண்டுக்கவே இல்லை, இப்போ வரைக்கும்..." என்றான்.

"சரி சரி. ஹிஸ்டரி போதும். பெர்ஃபாமன்ஸ் முடிஞ்சிடுச்சு... அவளைப் பிடி, போ!" என்று சக்தி விரட்டியதும், மேடையை விட்டிறங்கியவளின் பின்னே விரைவாக ஓடினான் ஹரி.

"ஆர். ஜே... என்ன, கிளம்பறியா நீ?"

"ஆமாடா. வீட்ல இம்பார்டண்ட் பங்ஷன். நான் அவசரமாப் போகணும். பீட்டர்... டேய் பீட்டர்! என் கிட்டாரை நீ எடுத்துட்டுப் போயிடு."

"ஏய்... ஏய்... பேமெண்ட் யார் வாங்குறது?"

"அதெல்லாம் எஸ்.கே. பார்த்துப்பான். பை... பை..." என்று ஓடியவள், மீண்டும் திரும்பி வந்து, "ராக்கிங்



கொடுத்த க்ரேஸி ஃபெல்லோஸ்க்கு ஓ போடுங்க... ஓஹோஓஓஓஓ! ஹிப்பிப்... ஹுரேஏஏ... க்ரேஸி ஃபெல்லோஸ்... ஹுரேஏஏஏ..." என்று கூட்டமாய்க் கத்திய ஐவரும், மாறி மாறி ஹை-பைவ் கொடுத்துக் கொண்டனர்.

"பை கைஸ்... லவ் யூ..." என்று இரு கைகளிலும் முத்தமிட்டு நீட்டியவள், கை ஆட்டி விட்டுத் தோள் பையை இட வலமாக மாட்டிக் கொண்டு ஓடினாள்.

'ஆட்டோ வருமா, என்னன்னு தெரியலையே! ஹரிக்கு இப்போ போன் பண்றதா, வேண்டாமா...?' என்று புலம்பியபடியே ஓடிக் கொண்டிருந்தவள், சாலையோரத்தில் தன் வண்டியின் மீது சாய்ந்து, கை கட்டியபடி நின்றிருந்த ஹரியைக் கண்டு தடுமாறி, ஒரு விநாடி நின்று, பின் முகம் மலரச் சிரித்தபடி, வேகமாய் அருகே ஓடினாள்.

அவள் புன்னகை முகத்தைக் கண்டவனின் இதழ்கள், தன்னையறியாமல் முறுவலிக்கத் தொடங்க, எழுந்து முன்னே வந்தவன், "ஹரி..." என்று தாவித் தன்னைக் கட்டிக் கொண்டவளைத் தூக்கிச் சுற்றினான்.

"ஹா... ஹா... நானே உனக்குப் போன் பண்ண நினைச்சேன். எப்போடா வந்தே? ஷோ இங்கேதான்னு உனக்கு எப்படித் தெரியும்? சக்தி சொன்னானா? மாமாதான் உன்னை ரூமிலிருந்து ரெஸ்க்யூ பண்ணினாரா?" என்று விடாமல் கேள்விகளைத் தொடுத்தவளின் வாயைத் தன் கையால் மூடி,

"உன் ஷோ ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே நான் வந்துட்டேன். மிச்சத்தை யெல்லாம் வழியில் பேசிக்க லாம். ஆறு மணிக்கு முன்னே வீட்டுக்குப் போகணும். வண்டியில் ஏறு," என்றான்.

"என்ன... என்ன...? ஷோ ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே வந்துட்டியா? அப்போ... என் பெர்ஃபார் மன்ஸ் பார்த்தியா? ஹ்ம்... நிஜமா? நிஜமாப் பார்த்தியா?" என்று ஆச்சரியமாய்க் கேட்டபடி, முன்னே வந்து வண்டியில் ஏறி அமர்ந்தவனின் முகத்தை நோக்கினாள்.

"ம்ம்... பார்த்தேன்... பார்த்தேன்..."

"அப்போ, கோபப்படாம இருக்கே? எப்படிடா?"

"ப்ச்..." - அலட்சியமாய்த் தோளைக் குலுக்கினான் அவன்.

"இப்படின்னா... இப்படின்னா என்னடா அர்த்தம்? பேண்ட் ஏன் கிழிஞ்சிருக்கு, சட்டை ஏன் டைட்டா இருக் குன்னு ஓராயிரம் கேள்வி கேட்பே? இப்போ அமைதியா இருக்கே! லெக்சரை லேட்டா வெச்சுக்கலாம்னு முடிவு பண்ணிட்டியா, என்ன?" ஆக்ஸிலேட்டரை முறுக்கிக் கொண்டிருந்தவன், நிறுத்தி விட்டுக் கையைக் கட்டிக் கொண்டு, "இப்போ உனக்கு என்ன தெரியணும்?" என்றான், அமைதியாக.

பின் முடியை லேசாய்ச் சொறிந்தவள், "இ... இல்லை... ப... பர்ஃபார்மன்ஸ் பார்த்தேன்னு சொன் னியே... அதுதான்..." என்று இழுத்தபடி, தலையை மேலும் கீழுமாய்... பின் வலமும் இடமுமாய் அசைத்து, 'பிடித்ததா? பிடிக்கவில்லையா?' என்பதைச் செய்கையில் வினவினாள்.



அவளுடனே சேர்ந்து தலையை மேலும் கீழும், இடமும் வலமுமாய் அசைத்தவன், கலகலவெனச் சிரித்து, அவள் தலையைப் பற்றி இழுத்து, உச்சியில் முத்தமிட்டு, "சூப்பர்ர்ர் ராக்கிங் பெர்ஃபார்மன்ஸ்டி," என்றான்.

"வாவ்வ்வ்வ...!" என்று துள்ளிக் குதித்தவள், கையைக் காலைத் தூக்கி ஆடத் துவங்க, மேலும் சிரித்தான் ஹரி.

வீட்டிற்குச் செல்லும் வழி முழுவதும், "நிஜமா? நிஜமாவே என் பெர்ஃபார்மன்ஸ் உனக்குப் பிடிச் சிருந்ததா? என்னால் நம்பவே முடியலைடா. நீ பிடிச் சிருக்குன்னு சொன்னது எனக்கு எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா? என் பட்டூடூ..." என்று கொஞ்சிக் கொண்டே வந்து சேர்ந்தாள்.

வண்டியை நிறுத்தி, வீட்டின் பின் வாசலில் இறங்கிய இருவரின் முகத்திலும் புன்னகை மறைந்து, பீதி நிறைந்தது.

"ஹரி... வீடு முழுக்கக் கூட்டமா இருக்கும் போல வேடா. சத்தமெல்லாம் பயங்கரமா இருக்கே!"

"நீயும் நானும் மட்டும்தான் லேட்டுன்னு நினைக் கிறேன். சரி, சரி. நான் குனியுறேன். என்முதுகுல ஏறி, நீ தோட்டத்துல குதிச்சிடு."

"அப்போ நீ?"

"நானும்தான்டி குதிக்கப் போறேன், குள்ளச்சி. வாயை மூடிட்டு ஏறித் தொலை. ஏய், ஏய்... இரு, இரு... இந்தக் கிழிஞ்ச பேண்ட்டோடயா வரப் போறே? ஆர் யூ ஷ்யூர்?"

"அய்யோ... நல்ல வேளை, ஞாபகப்படுத்தினே... இருடா," என்றவள், தன் தோள் பையிலிருந்த ஸ்கர்ட் ஒன்றை எடுத்துப் பேண்ட்டின் மீது வேகமாய் அணிந்து கொண்டாள். சுருள் முடியைப் பேண்டுக்குள் அடக்கியவள், டிஷ்யூ ஒன்றை எடுத்து, லிப்ஸ்டிக்கைத் துடைத்தாள்.

"லிப்ஸ்டிக், பேய் மாதிரி கலர் இல்ல?"

"உனக்கே தெரிஞ்சா சரி. ஏய்... வாய் முழுக்க ஈஷி வைக்கிறடி. என் கிட்டே கொடு," என்றவன், அவள் கையிலிருந்த டிஷ்யூவைப் பிடுங்கி, வேக வேகமாக அவள் வாயைத் துடைத்தான். அடுத்த இரண்டு நிமிடத்தில் இருவரும் சுவரேறி வீட்டுத் தோட்டத்தில் குதித்தனர்.

"நலல வேளை, யாரும் பார்க்கலை. ஹேய்... நீ கிச்சன் வழியாப் போ, நான் ஸ்டோர் ரூம் வழியாப் போறேன். அப்பா, மாமா யாரும் பார்த்தா... அரை மணி நேரத்துக்கு முன்னாடியே காலேஜிலிருந்து வந்துட்டதாச் சொல்லு..." என்று மெல்லிய குரலில் முணுமுணுத்த ஹரி, ஸ்டோர் ரூம் வாசலுக்கு ஓடி விட்டான்.

கிச்சன் ஜன்னலைத் திறந்து ஏறிக் குதித்தவள், "சாவித்திரி அத்தை... டன்டடைன்..." என்று கத்த,



"அய்யோ ஆண்டவா..." என்று பதறித் திரும்பிய சாவித்திரி, "என்னடி... இன்னிக்கும் ஜன்னல் வழியாகத் தான் குதிக்கிறியா? எப்போடி திருந்தப் போறே? ஏன்டி கண்ணுல மையை இப்படித் தீட்டி வெச்சிருக்கே?" என்று குற்றப் பத்திரிகை வாசித்தார்.

"மை ஓவர்தான் இல்ல...? நான் ரூமுக்குப் போய் முகம் கழுவிக்கிறேன்..." என்று அங்கிருந்து நழுவி, மாடியறைக்குச் செல்ல எத்தனித்தாள். சரியாக அந்த நேரம் பார்த்து, அவளது இரண்டு மாமன்மார், தந்தை, தாத்தா என அந்த வீட்டின் பெரிய தலைகள் அனைவரும் ஒரு சேர மாடியிலிருந்து இறங்கினர்.

நெஞ்சம் வெடித்து விடுமளவிற்குப் பயம் தொற்றிக் கொள்ள, முன் வைத்த காலைப் பின் வைத்து, மீண்டும் கிச்சனுக்குள் நுழையப் பார்த்தவளைக் கண்டு கொண்ட ஜெகநாதன், "ரம்யா, நில்லு..." என்று குரல் கொடுத்தார்.

'மாட்டினடி, ரம்யா...!' என்றெண்ணியபடியே மெல்லத் திரும்பித் தலை குனிந்தபடி நின்றாள்.

தடதடவெனப் படிகளில் இறங்கி, மகளின் அருகே வந்து நின்றவர், "என்ன...? இன்னிக்கும் அந்தக் கூத்தடிக்கிற வேலையைப் பார்த்துட்டுத்தான் வர்றியா?"

"இ... இல்லப்பா... வ... வந்து... அது மியூஸிக் ஷோ. கூத்து இல்லை..."

"ஆமாமாம். கழைக் கூத்தாடி மாதிரி, கிழிஞ்ச டிரெஸ் போட்டுக்கிட்டு, வலிப்பு வந்த மாதிரி நீ அந்தக்

கண்ராவியை மீட்டுறதை நான்தான் பார்த்தேனே...! அது கூத்துதான்."

களுக்கெனச் சிரிப்புச் சத்தம் கேட்டு, அனைவரும் ஸ்டோர் ரூம் வாசலை நோக்கினர். "ஹரி... டேய் படவா... ஸ்டோர் ரூம் வாசல்ல உனக்கு என்னடா வேலை? வெளியே வாடா!" என்று ராமமூர்த்தி சத்தமிட்டபடியே இறங்கி வர, மெல்லத் திரையை விலக்கிக் கொண்டு வெளிப்பட்டான் ஹரி.

"காலா காலத்துல பிள்ளையைக் கூட்டிட்டு வீடு வந்து சேருடான்னா... எங்கேடா ஆட்டம் போட்டுட்டு வர்றே?" என்றவரிடம்,

"பிள்ளையா? யார் பிள்ளை? இதோ அங்கே நிக்குதே... அதுவா? அப்பா... அவ ஒண்ணும் லாலி பாப் வாங்கிக் கொடுத்தா பின்னாடி வர்ற பாப்பா இல்லை. உங்களை, என்னை யெல்லாம் தூக்கிச் சாப்பிடுற கேடி," என்றான் ஹரி.

"வாடைய மூடிட்டு அழுத்தமா நிற்கிறதைப் பாரு. மதியம் ஹோட்டல்ல ஏன் அவன் கை காலைக் கட்டிப் போட்டுட்டு ஓடிப் போனே? இரண்டு மணி நேரம் பிள்ளை என்ன பாடு பட்டிருப்பான்? பெண் பிள்ளை மாதிரியா நடந்துக்கிறே நீ?" - ஜெகநாதன்.

"பாப்பாவை ஏன் மாப்பிள்ளை திட்டுறீங்க? கராத்தே கத்துக்க க்ளாஸுக்கு அனுப்பினா, ஏமாத்திட்டு ஊர் சுத்தப் போனவனுக்கு, இதெல்லாம் வேணும்தான்." - ராமமூர்த்தி.



"வாயைத் திறந்து பதில் சொல்றாளா பாரு."

"நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லப் போறியா இல்லையாடா?"

இருவரையும் கண்ட அமாத்யர், பொறுமையற்று, "இரண்டு பேரும் உங்க நாடகத்தை நிறுத்துறீங்களா?" என்று கர்ஜித்தபடி படியிலிறங்கி வந்தார்.

"உன் பையனை அவன் காப்பாத்த நினைக்கிறான், அவன் பொண்ணை நீ காப்பாத்த நினைக்கிற? இதை வேடிக்கை பார்க்கிற நான், என் குடும்பம் ரொம்ப ஒற்றுமையா இருக்குன்னு நினைச்சுச் சந்தோஷப் பட்டுக்கணுமா? ம்...?" என்றவரைக் கண்டு, இரண்டு தந்தைமாரும் தலை குனிந்து கொள்ள, அவர் மேலும் தொடர்ந்தார்.

"இரண்டு பேரும் உங்க பசங்களைச் செல்லம் கொடுத்துக் கெடுக்கிறீங்கன்ற விவரம் உங்களுக்கு என்னைக்குப் புரியப் போகுது? இது சாதாரணக் குடும்பம் இல்லை. இவங்க இரண்டு பேரும் சாதாரணப் பிள்ளைகளில்லை. எதிர்காலத்துல 2000, 3000 பேருக்கு வேலை கொடுக்கிற முதலாளி ஸ்தானத்துல உட்காரப் போகிறவங்க.

"இந்தக் குடும்பத்துக்குண்டான ஒழுக்கம், பாரம் பரியம், கலாச்சாரம் எல்லாத்தையும், பிடிக்கலைன் னாலும் கடைப்பிடிக்கத்தான் வேணும். இன்னைக்கு நீங்க அனுபவிக்கிற ஆடம்பரம், நீங்க சம்பாதிச்சதோ, நான் சம்பாதிச்சதோ இல்லை. பரம்பரை, பரம்பரையாக இந்தக்

குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருத்தரும் உரம் போட்டு வளர்த்த சொத்து," என்றவர், திரும்பி, ஆளுக்கொரு மூலையில் நின்றிருந்த இருவரையும் நோக்கி, "இரண்டு பேரும் இங்கே வாங்க," என்றார்.

"எங்கிருந்து வர்றீங்க இரண்டு பேரும்?"

"காலேஜிலிருந்து..." - ஹரி.

"ப்ரியா வீட்டிலிருந்து..." - ரம்யா.

ரம்யாவை அழுத்தமாக முறைத்த ஹரியைக் கண்டபடி, "இரண்டு பேரும் சேர்ந்து வந்ததா தோட்டக் காரன் சொன்னானே?" என்று மேலும் குடைந்தார் தாத்தா.

"அ... அது... ஹரி காலேஜில்தான் இருந்தான், தாத்தா. நா... நான்... என் டிபார்ட்மெண்ட் ஸ்டிரைக். அதனால் ப்ரியா வீட்டுக்குப் போயிருந்தேன். ஹரி என்னை அங்கிருந்து பிக்-அப் பண்ணி, கூ... கூப்பிட்டு வந்தான்."

'ஹப்பாடா... சமாளிச்சிட்டா!' - ஹரியின் மனச் சாட்சி.

"ஏன் சுவர் ஏறிக் குதிச்சீங்க?"

"அ... அது வந்து தாத்தா... காலேஜில் எனக்கொரு அசைன்மெண்ட் இருந்தது. முடிச்சிட்டு வர நேரமாகி விட்டது. லேட்டா வந்தா நீங்க திட்டுவீங்கன்னு பயந்து, சு... சுவர் ஏறிக் குதிச்சோம்," என்ற ஹரி, ரம்யாவைக் கண்டு, 'அய்யோ, இவளை விட்டுட்டோமே...!' என்று



எண்ணி, "ர... ரம்யா... எனக்காக வெயிட் பண்ணிட்டு இருந்தா. அதான் அவளும் லேட்," என்றான்.

"ம்ம்... காலேஜில் பிசியா இருந்தவனுக்கும், பிரெண்ட் வீட்டிலிருந்த ரம்யாவுக்கும் நம்ம ஹோட்டல்ல என்ன வேலை? மதியம் உங்களை ஹோட்டல்ல பார்த்ததா உங்க அப்பாவும், மாமாவும் சொல்றாங்களே?"

'லாக் பண்ணிட்டார்.' - ரம்யாவின் மனச்சாட்சி.

என்ன கூறுவதென்று புரியாமல், இருவரும் அமைதியாய் நின்று விட, அவர் மேலும் தொடர்ந்தார்.

"ஒரு பொய்யை மறைக்க எத்தனை பொய்! ம்ம்...? உண்மையைச் சொல்லி, வரப் போகிற விளைவு களைச் சமாளிக்கத் தெரியாமல்தான் இத்தனை வருஷம் வளர்ந்திருக்கீங்களா? சின்னப் பிள்ளைகளா நீங்க இரண்டு பேரும்? நீங்க எங்கே போறீங்க, என்ன பண்றீங்க, யார் யார் கூடப் பழகுறீங்கங்கிற அத்தனை விவரமும் துல்லியமா இருக்கு என் கிட்டே. அதனால, உங்களை யாரும் கவனிக்கலைங்கிற நினைப்பு வேண்டாம்," என்றவர், "பெரியவனே..." என்று, அந்த வீட்டின் முதல் மகனை அழைத்தார்.

"இரண்டு பேரையும் இன்னும் ஒரு வாரத்துக்கு அவுட் ஹவுஸிலேயே இருக்க வை. வீட்டிலிருந்து சாப்பாடு எதுவும் அவங்களுக்குப் போகக் கூடாது. இரண்டு பேரோட கிரெடிட், டெபிட் கார்டு எல்லாத்தையும், நான் சொல்றவரை ப்ளாக் பண்ணி வை. அப்புறம், முக்கியமா உன் தம்பி, மாப்பிள்ளை கையிலிருந்தும்,

இந்த வீட்டுப் பொம்பளைங்க கையிலிருந்தும் இவங்க இரண்டு பேருக்கும் காசு எதுவும் போகாமப் பார்த் துக்கோ," என்றார்.

இறுகிய முகத்துடன் நின்றிருந்த இருவரையும் ஒரு நொடி நோக்கி விட்டுத் திரும்பி நடந்தவர், நின்று, "ரம்யா..." என்றழைத்தார். நின்ற இடத்திலிருந்து அசை யாமல், தலையை மட்டும் திருப்பி அவரை நோக்கிய வளிடம்,

"இன்னொரு முறை ஊர் முன்னாடி மேடை ஏறிக் கூத்தடிக்கிறதா இருந்தா, நீ இந்த வீட்டில் இருக்க வேண்டிய அவசியமில்லை," என்றார்.

முகம் கன்றித் தலை குனிந்த ரம்யா, இடது கால் பெருவிரலை அழுத்தமாய்த் தரையில் ஊன்றினாள்.

"இந்த வருஷத்துல இரண்டு தடவைதான் நீ காலேஜ் பக்கம் தலை காட்டினதாக எனக்குச் சேதி வந்திருக்கே ஹரி... படிப்பு முக்கியமில்லைன்னு நினைச்சா, நீயும் இந்த வீட்டை விட்டு வெளியே போயிட லாம்," என்றவரின் வார்த்தைக்குச் சலனமே யின்றித் தரையைப் பார்த்த வண்ணம் அமைதியாய் நின்றிருந் தான் ஹரி.

அத்தோடு முடித்துக் கொண்டு அவர் நகர்ந்ததும், ஆண்கள் மூவரும் வேகமாய்ப் பிள்ளைகளின் அருகே வந்தனர்.

"என்னடா ஹரி இது? ஏன்டா தாத்தா கண்ணுல படுறீங்க?"



"அவருக்கு இரண்டு கண்ணு இருந்தால் பரவா யில்லைப்பா. வீடு முழுக்க, ஏன், உலகம் முழுக்கக் கண் இருக்கும் போல..." – எரிச்சலாய் முணுமுணுத்தான் ஹரி.

"இந்தக் கழுதை கிட்ட நான் ஓராயிரம் தடவை சொல்லிட்டேன், மியூஸிக் ஷோவெல்லாம் ஒத்து வரா துன்னு. எங்க கேட்கிறா? பொண்ணா, லட்சணமா, அடக்க ஒடுக்கமா என்னைக்காவது நடந்திருக்கியா?" – ஜெகநாதன்.

"சுடுகாட்டுல இருக்கும், அடக்க ஒடுக்கமான பொண்ணு! இது என் வாழ்க்கைப்பா. எனக்குப் பிடிச்ச மாதிரி வாழ, எனக்கு உரிமையில்லையா?"

"கத்தாதேடி ராட்சசி. வெளியே போனவர் திரும்பி வந்துடப் போறார்." – ஹரி.

"நீ வாயை மூடுடா. பேசாதே. உண்மையைச் சொல்லித் திட்டு வாங்கியிருந்தா கூடப் பரவாயில்லை. பெரிசா பொய் சொல்லிச் சமாளிக்கப் போறவன் மாதிரி, தேவையில்லாம வாயை விட்டுட்டான், இடியட்." – ரம்யா.

"நான்... நான் வாயை மூடணுமா? ஏன்டி... தப்புப் பண்ணினது நீ. உன்னால லேட்டா வந்து நான் திட்டு வாங்கிட்டு இருக்கேன். நீ என்னைக் குறை சொல்லு வியா? அது என்ன டாடி... இவளைப் பத்தின பொறுப்பு அத்தனையும் இந்த வீட்டிலேயே எனக்கு மட்டும்தான்கிற மாதிரி எல்லாரும் நடந்துக்கிறீங்க?

"நான் என்ன இவளுக்கு வாட்ச்-டாக்கா? இவ என்ன பண்ணுறா, எங்கே போறா, வர்றான்னு கண்காணிச்சுக்கிட்டே திரியணுமா? என் வாழ்க்கையில 24 வருஷத்தை இவ பின்னாடி ஓடியே வீணாக்கி யிருக்கேன். இனி, இந்த ராட்சசி என்ன ஆனாலும், யாரும் என் கிட்டே ஒரு வார்த்தை கேட்காதீங்க... சொல் லிட்டேன்." - கோபமாய்க் கூறி விட்டு, விறுவிறுவெனப் படியேறி விட்டான் அவன்.

"அவன் கிடக்கிறான், விடு பாப்பா..." என்று அருகே வந்த ராமமூர்த்தியைத் தவிர்த்து விட்டுத் தானும் அறைக்கு ஓடினாள் ரம்யா.

அடுத்த அரை மணி நேரத்தில், எதுவுமே நடவாதது போல், டீக்காக டிரெஸ் செய்து கொண்டு விழாவிற்குத் தயாராகி விட்டனர் இருவரும். அன்று அந்த வீட்டின் முதல் மகன் கிருஷ்ணமூர்த்தியின் முப்பதாவது திருமண நாள். விழாவைப் பெரிதாகக் கொண்டாட எண்ணி, வீட்டளவில் உற்றார், உறவினரை அழைத்து ஏற்பாடு செய்திருந்தார், அமாத்யர்.

"**வா**வ்...நம்ம ஹரிகிருஷ்ணனா இது? போன வருஷம் வரைக்கும் ஈர்க்குச்சிக்கு பேண்ட் போட்ட மாதிரி இருந்தே! இப்போ ஆளு அர்னால்ட் ரேஞ்சுக்கு சூப்பரா ஆயிட்டியே!" என்று வினவிய உறவுக்காரப் பெண்மணி ஒருத்தியிடம், 32 பற்களையும் காட்டிச் சிரித்த ஹரி,

"பின்னே...! ஒரு வருஷ உழைப்பு ஆன்ட்டி. விடாம ஜிம் போறேன். நீங்க இன்னொரு நாள் வீட்டுக்கு வாங்க. என் ஆர்ம்ஸ், சிக்ஸ் பேக்ஸ் எல்லாம் தனியாக் காட்டுறேன்," என்று கண்ணடித்தான்.



"ஹா... ஹா... அது சரி, உன்னை ஒட்டிக் கிட்டே திரிவாளே, உன் அத்தை மக ஒருத்தி. எங்கே அவளைக் காணோம்?" என்று வம்பளந்த ஆன்ட்டியிடம்,

"அவ என்னை ஒட்டிக்கலை ஆன்ட்டி. நான்தான் அவளை ஒட்டிக்கிட்டே திரியுறேன். ரெடி ஆயிட்டிருக்கா... இப்போ வருவா," என்றவன், சிரிப்புடன் மேலே நடந்தான்.

வேடிக்கை பார்த்தபடி முன்னே நடந்தவனை நிறுத்திய ரம்யாவின் அன்னை லட்சுமி, "ஹரி... ரம்யா வந்துட்டாளாடா? தாத்தா கிட்டே செம டோஸாம்... உங்க மாமா சொன்னார். ரொம்பத் திட்டிட்டாராடா?" எனக் கவலையாய் விசாரித்தார்.

அவரது இரண்டு கன்னத்தையும் பற்றிக் கிள்ளிய ஹரி, "அமுல் டின்... ஏன் அதுக்குள்ள முகம் வாடுது? நாங்கெல்லாம் அரை டவுசர் போட்ட காலத்துல இருந்து, உங்கப்பா கிட்டத் திட்டு வாங்கிட்டு இருக்கோம்! இதுக் கெல்லாம் அசருவோமா? கவலைப்படாம இரு அத்தை," என்றான்.

முகம் மலர்ந்து சிரித்தவர், "பெரியம்மா இன்னைக்கு ரசகுல்லா செய்தாங்க. நான் உனக்காக ஃப்ரிட்ஜில் எடுத்து வெச்சிருக்கேன். நைட் இரண்டு பேரும் எடுத்துச் சாப்பிடலாம்," என்றார்.

கண்களை உருட்டி, "ம்ம்..." எனத் தலையாட்டியவன், உடனே சோர்ந்து, "இன்னும் ஒரு வாரத்துக்கு அவுட்-ஹவுஸ்தான் அத்தை. நோ சாப்பாடு! இந்தத் தடவை டெபிட், கிரெடிட் கார்டெல்லாம் கூட கட்!" என்றான்.

"அத்தை ஏதாவது வழி பண்றேன். நீ போ. உன் பெரியப்பா கூப்பிடுறார் பார்..." என்று அனுப்பினார், லட்சுமி.

தானும் தயாராகித் தோட்டத்திற்கு வந்த ரம்யா, சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த ஹரியிடம் வந்தாள். தூரத்திலேயே அவளைக் கண்டு விட்டவன், எரிச்சலுடன், "என் பக்கத்தில் வராதேடி. தொல்லை தராம அப்படியே போயிடு," என்றான்.

"ம்ம்... நான் பிறவி யெடுத்ததே உன்னைத் தொல்லை பண்ணத்தான்," என்றவள், அவனருகே நெருங்கி, அவனது கோட்டின் காலரைப் பற்றி நேராக்கி, "ப்ளாக் வித் ரெட் டை ஒண்ணு வாங்கிக் கொடுத்தேனே... அதைக் கட்டியிருக்கலாமில்ல? இந்த டிரெஸ்ஸுக்கு மேட்சிங்கா இருந்திருக்கும்," என்றாள்.

"கேவலமா யிருந்திருக்கும்! அந்தக் கண்ராவி டையை நீ வாங்கிக் கொடுத்தப்பவே, பிடிக்கலைன்னு நம்ம ஜிம்மி கழுத்துல கட்டி விட்டேனே! நீ பார்க் கலை...?" என்றவனைக் கோபமாக முறைத்து, "நாயே... நாயே..." என்று அவன் தலையில் குட்ட வந்தவளின் கையைச் சிரிப்புடன் பற்றியவனின் பார்வை வட்டத்தில் அவனது குடும்பம் மொத்தமும் விழுந்தது.



இருவரையும் நோக்கும் அவர்களது பார்வையில் வித்தியாசத்தை உணர்ந்தவன், "ரம்யா... அப்படியே திரும்பி மாமா, பெரியப்பா, தாத்தாவைப் பாரேன். அவங்க நம்மை வித்தியாசமாப் பார்க்கிற மாதிரி இருக்குல்ல...?" என்றான்.

திரும்பி அவர்களை நோக்கிய ரம்யா, "ம்ம்... என் அப்பா என்னை முறைச்சுப் பார்க்கிறார். பெரிய மாமா, 'தயவு செஞ்சு தாத்தா கண்ணுல பட்டு வெறியேத்தாம, அந்தப் பக்கம் போங்களேன்டா...'ங்கிற மாதிரி பார்க் கிறார். தாத்தா வழக்கம் போல ரோபோ பார்வைதான். இதுல என்னடா வித்தியாசத்தைக் கண்டே?" என்றாள்.

"ம்ம்... வித்தியாசமா எதுவுமில்லாம இருந்தால் சரிதான். சரி, சாப்பிடலாமா? எனக்குப் பசி வயித்தைக் கிள்ளுது. இனி ஒரு வாரத்துக்கு வீட்டுச் சாப்பாடும் கிடைக்காது," என்று புலம்பியவன், அவளைத் தள்ளிக் கொண்டு சாப்பாடு போடுமிடத்திற்கு நடந்தான்.

இரவு பத்து மணிக்கு மேல் விழா நிறைவு பெற்றதும், வீட்டிற்குள் நுழையப் பார்த்த இருவரையும் வாசலிலேயே தடுத்து நிறுத்தினார், கிருஷ்ணமூர்த்தி.

"பசங்களா... உங்களுக்கு இங்கே நோ என்ட்ரி. உங்க தாத்தாவைப் பகைச்சுக்க வேண்டாம். இரண்டு பேரும் நேராக அவுட் – ஹவுஸுக்குப் போங்க."

"மாமா... இதெல்லாம் டூமச். நான் இன்னும் டிரெஸ் கூட மாத்தலை," என்று பொங்கிய ரம்யாவிடம், "எல்லாம்

பாண்டி வந்து கொடுப்பான். இடத்தைக் காலி பண்ணுங்க முதல்ல..." என்று அவர் சென்று விட்டார்.

"இதெல்லாம் அநியாயம், அக்கிரமம்! நான் உள்ளே போவேன்டா. அப்படி என்னை அனுமதிக்காட்டி, சொத்தைப் பிரிச்சுக் கொடுங்கன்னு தாத்தா மேல கேஸ் போடுவேன். என்ன நடக்குதுன்னு பார்ப்போம், வாடா ஹரி," என்று, அணிந்திருந்த பாவாடையைத் தூக்கிக் கொண்டு, அடுத்த அடி எடுத்து வைக்க முயன்றவள், ஹரி அசையாமல் நிற்பதைக் கண்டு, அவனைத் திரும்பி நோக்கினாள்.

கையைக் கட்டிக் கொண்டு ஸ்டைலாக நின்றவன், "ம்ம்... கோ அஹெட்," என்று வாசல் புறமாகக் கண்களைக் காட்டினான்.

"வ... வந்து... ஹரி, பாரேன்... இந்தக் கால் ஒரு அடி கூட நகர மாட்டேன்னு அடம் பிடிக்குதுடா. ஏன்டா?"

"ம்ம்... அப்படியே டைரக்ஷனைத் திருப்பி, அவுட்-ஹவுஸ் பக்கம் பார்த்து நில்லு. கால் தன்னால நகரும்," என்று அவள் தோளைப் பற்றித் திருப்பி விட்டான்.

"அட... ஆமாம்டா ஹரி. இப்போ மூவ் ஆயிடுச்சு பாரேன்..." என்று இமைகளைக் கொட்டியவளின் கழுத்தைப் பற்றியவன், கலகலவெனச் சிரித்து, "பயந்தாங் கொள்ளி... உனக்கெல்லாம் எதுக்கு வீரவசனம்!" என்று வளவளத்தபடியே அவுட் - ஹவுஸை நோக்கி நடந்தான்.



அந்த நீள அறையில் போடப்பட்டிருந்த இரு தனிப் படுக்கைகளின் மீதும் தொப்பென விழுந்தனர் இருவரும்.

"ஹய்யோ பெரியப்பா... இங்க ஒரு ஏசி போடச் சொல்லுங்களேன், ப்ளீஸ்..." என்று கத்திய ஹரியிடம், "அதுக்கு முன்னாடி தாத்தா உன்னைப் போட்டுடுவார், பரவாயில்லையா?" என்றாள் ரம்யா.

"ஏன்டி... நீ ஏன் தாத்தா முன்னாடி ஒரு ஸ்பெஷல் பெர்ஃபார்மன்ஸ் பண்ணக் கூடாது? உன் ஸ்டைல், ஆட்டிடியூடில் மயங்கித் தாத்தா இந்த அவுட் ஹவுஸையே உன் பெயருக்கு எழுதி வைத்தாலும் வைப்பார்."

"என்னடா, நக்கலா?" தலையணையைத் தூக்கி அவன் மீது எறிந்தாள் ரம்யா.

அவள் தூக்கி யெறிந்த தலையணையைத் தலைக்கு வைத்துக் கொண்டவன், "குட் நைட்-டி!" என்று கண்களை மூடிக் கொண்டான்.

"அதுக்குள்ள தூங்குறான், இடியட்..." என்று முனகியவள், தன் மொபைலைக் கையில் எடுத்துக் கொண்டாள். நள்ளிரவு நெருங்கியதும், ஜன்னல் வழியாக வெளியே பார்த்தவள், திரும்பி ஹரியை நோக்கினாள்.

"ஹரி... ஹரி... தூங்கிட்டியாடா?"

"ம்ம்... என்னடி?"

"இன்னிக்கு ஃபுல் மூன் டே டா!"

மறுபுறம் திரும்பிப் படுத்தவன், "அதுக்கு...?" என்றான்.

"மொட்டை மாடிக்குப் போகலாமா?" என்று அவள் வினவியதும், எழுந்து அமர்ந்தவன், திரும்பி அவளை நோக்க, புருவத்தைத்தூக்கி, "ம்ம்...?" என்றாள்.

அடுத்த நொடி இருவரும் ஒரு சேர விரலால் சொடுக்கிட்டு, "ஐஸ் க்ரீம் சாப்பிடலாமா?" என்றனர்.

படுக்கையிலிருந்து துள்ளி எழுந்த ரம்யா, "ஐஸ்க்ரீமுக்கு எங்கேடா போறது? வீட்டுக்குள்ளேயும் போக முடியாதே!" என்று புலம்ப, "பெரியப்பா முன்னாடியே பிரிட்ஜை நிரப்பியிருப்பார்," என்ற ஹரி, வேகமாய்ச் சென்று ப்ரிட்ஜைத் திறந்து நோக்கினான்.

இருவருக்கும் பிடித்தமான உணவுகளனைத்தும் பிரிட்ஜ் முழுதும் நிறைந்திருக்க, இருவரும் மகிழ்ச்சியில், "ஊஊஊஊ..." என்று கத்தியபடி, பட்டர் ஸ்காட்ச் டப் ஒன்றை எடுத்துக் கொண்டு மாடியேறினர்.

மார்கழிப் பனிக் காற்று, இருவரது உடலிலும் சிலிர்ப்பை ஏற்படுத்திச் செல்ல, போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, பாய் விரித்து அமர்ந்து, ஆர்வமாய் ஐஸ்க்ரீம் டப்பாவைப் பிரித்து உண்ணத் தொடங்கினர்.

"குளிர் காலத்துல, நிலா வெளிச்சத்துல உட்கார்ந்து ஐஸ்க்ரீம் சாப்பிடுற சுகமே தனி! என்னடா ஹரி?"

"ம்ம்... கடைசியா எப்போ சாப்பிட்டோம்? போன மாசம் எக்ஸாம் கட் பண்ணினப்போ அவுட்-ஹவுஸ் வந்தோமே... அப்போ சாப்பிட்டது. இனிமே அடிக்கடி தப்புப் பண்ணி, அவுட்-ஹவுஸ் வந்து, இப்படி ஐஸ்க்ரீம் சாப்பிடணும்டி."



"அடப்பாவி! ஐஸ்க்ரீமுக்காகத் தாத்தா கிட்ட திட்டு வாங்க ஆசைப்படுறியா?"

"ரம்யா... இந்த மாதிரி ஐஸ்க்ரீம் சாப்பிட உனக்கு விருப்பம் இல்லாட்டி, நீ இப்பவே இந்த வீட்டை விட்டு வெளியே போகலாம்."

தாத்தாவின் குரலில் பேசிக் காட்டியவனைக் கண்டு, அடக்க மாட்டாமல் சிரித்தாள் ரம்யா. குளிர் காற்று ஒன்று சட்டென உரசிச் செல்ல, லேசாய் நடுங்கியவள், "ஷ்ஷ்..." என்றபடி போர்வையை இழுத்துக் கொள்ள, "ம்ம்... இங்கே வா..." வாயிலடைத்த ஐஸ் க்ரீமுடன் அவளைத் தன்னருகே அழைத்தான் ஹரி.

ஸ்பூனை நக்கியபடியே அருகே வந்தவளைத் தோள் வளைவில் இழுத்து அணைத்துக் கொண்டவன், தன் போர்வையையும் சேர்த்துப் போர்த்தி, "இப்போ...?" என்று வினவ, "குளிரவில்லை," என்று தலையாட்டியவள், ஐஸ்க்ரீமை ருசிக்கத் தொடங்கினாள்.

வலது புறம் அவளைப் பற்றியிருந்த படியால், இடது கையால் உண்டு கொண்டிருந்தவனிடமிருந்து ஸ்பூனைப் பறித்து, "இரு, இரு... நான் கொடுக்கிறேன்," என்றவள், அவனுக்கும் சேர்த்து ஊட்டினாள்.

"ஏன்டி... ப்ரியா என்னைப் பத்தி எப்போதாவது பேசுவாளா?"

"ஓ...! பேசுவாளே!"

"எப்போ...? எப்போ...?"

"எங்க டிபார்ட்மெண்ட் ஜென்ட்ஸ் டாய்லெட் கழுவ வர்ற வைரமணி, உன்னை மாதிரி இருக்கிறதா அடிக்கடி சொல்லுவா!"

"ஏய்... ஏய்... நீயே அள்ளி விடாதேடி. உண்மையைச் சொல்லு."

"உண்மைதான்டா. டாய்லெட் கழுவற ஜென்டில்மேன் கூடக் கம்பேர் பண்ற அளவுக்கு நீ அவ்வளவு பெரிய ஆள் இல்லைன்னு நான் சொல்றதை, அவ எங்க நம்புறா!"

"ஏய்... அப்படின்னா, நான் அதை விடக் கேவலமானவன்னு சொல்றியா? இன்னிக்கு உன் கழுத்தை நெரிக்காம விட மாட்டேன்டி."

"ஆ...! வலிக்குது. வலிக்குது, விடுடா."

பனியும், பௌர்ணமியும் இருப்பிடத்தை ரம்மியமாக்கியது போதாதென்று, உற்சாகமும் மகிழ்ச்சியும் தெறித்த இருவரது சிரிப்புச் சத்தம், அந்த மாடி முழுவதையும் சொர்க்கமாக்கியது. இளமை எப்போதும் அழகுதான்.

## 3

## *Life is a Fantasy*

கற்பனை அற்புதமானது. சுகமான எண்ணங்களை மட்டுமே கொண்டிருக்கும் ஒரு கனவு உலகம். நிஜத்திற்கு அப்பாற்பட்டது. நடப்பும், உண்மையும் எதுவா இருந்தா என்ன? வாழ்க்கை



எனக்குச் சொல்லித் தரப் போகும் பாடம் என்னவாயிருந்தாலும் என்ன? எனக்கு அதைப் பற்றின கவலை துளி கூட இல்லை. எனக்கு என் உலகத்துக்குள்ளே என்னை மறைச்சுக்கிறது பிடிச்சிருக்கு. எனக்கு மட்டுமே தெரிந்த, என்னால் மட்டுமே அனுபவிக்க முடிந்த சுகம், சந்தோஷம், சோகம் அத்தனையையும் என் உலகம் எனக்குத் தருது. வெளி உலகத் தணல் வாழ்க்கை வேண்டாம். அது தரும் சூட்டுக் காயமும் வேண்டாம். காதையும், கண்ணையும் அடைச்சுக்கிட்டு, நான் என் உலகத்துக்குள்ளேயே புதைஞ்சு போயிடறேனே...!

ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...

**நு**ங்கம்பாக்கத்திலிருந்த அந்த டொமினோஸ் பீட்சா, வாரக் கடைசி நாட்களுக்கே உண்டான பரபரப்புடன் விறுவிறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. அடுத்த தலைமுறையின் தலையாய தீனியாக இந்த பீட்சாக்கள் மாறி விட்டிருந்த படியால், கூட்டத்திற்கும், விற்பனைக்கும் அங்கு குறையேயில்லை. காதல் ஜோடிகள் கார்னர் சீட்டைப் பிடித்துக் கொண்டு, கண்களால் உரையாடியபடி ஒரு புறம் அமர்ந்திருக்க, குழந்தைகள் கேட்கும் பீட்சாவின் பெயரை உச்சரிக்க முடியாமல், திக்கித் திணறிக் கொண்டிருந்தனர் பெற்றோர்கள்.

ஆர்டர் கொடுப்பதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களிடம் மன்னிப்புக் கேட்டபடி தன் பில்லிங் மெஷினில் வேக வேகமாய்ப் பேப்பரை மாற்றிக் கொண்டிருந்தாள் ரம்யா. மெஷின் வேலை செய்யத்

தொடங்கியதும், வரிசையில் நின்றிருந்தவரிடம் திரும்பி, "வெல்கம் டு டொமினோஸ் சார்... வாட் உட் யூ லைக் டு ஆர்டர்?" என்றாள்.

"பசங்களா, டேய்... இரண்டு பேருக்கும் என்ன வேணும்னு சொல்லுங்க," என்று அந்த மனிதர், இரு சிறுவர்களை அழைக்க... முன்னே வந்த இருவரும்,

"ஐ வான்ட் மெக்ஸிகன் க்ரீன் வேவ்."

"ஐ வான்ட் சீஸ் அண்ட் பார்பெக்யூ சிக்கன்," - என்றனர்.

அருகே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்களின் தந்தை, "ஹ்ம்ம்... உங்களுக்கெல்லாம் பப்ளிமாஸ்ன்னா என்னன்னு தெரியுமாடா?" என்றார்.

"பப்ளிமாஸ...? ஹா... ஹா... ஹா... ஃபன்னி நேம் டாடி," என்று சிரித்தனர் இருவரும்.

"நான் படிக்கிற காலத்துல, என் ஸ்கூல் வாசல்ல அதைத்தான் விற்பாங்க. 50 பைசா கொடுத்து நான் வாங்கிச் சாப்பிட்ட ஸ்நாக்ஸ் அது..." என்றவரைக் கண்டு சிரித்த ரம்யா,

"என்ன பண்றது சார்...? காலம் மாறிப் போச்சு. அதோடு சேர்ந்து நாமளும் மாறிக்க வேண்டியதுதான். கேஷா, கார்டா சார்?" என்றாள்.

அவர் பணத்தை நீட்டியதும், பில்லைக் கையில் கொடுத்தவள், இடது பக்கத்தில் பீட்சா செய்து கொண்டிருந்த பெண்களிடம் திரும்பி, "ஒன் மெக்ஸிகன் வேவ் அண்ட் பார்பெக்யூ சிக்கன்..." என்று சத்தமிட, அந்தப் பெண்கள் மூவரும் ஒரு சேர, "யெஸ் ரம்ஸ்..." என்றனர்.



அடுக்களையிலிருந்து ஒருவன் பார்சல் ஒன்றை நீட்டி, "ரம்ஸ்... டோக்கன் நம்பர் 64 டேக் அவே..." என்று கூற, அதை வாங்கியவள், பில்லைப் பார்த்து, "டோக்கன் நம்பர் 64, ஆனந்த்ராஜ்." என்று சத்தமிட்டாள்.

"ஒன் வெஜ் சிங்கிள் அண்ட் 2 நான் வெஜ் டபிள்ஸ்... பில் சரி பார்த்துக்கோங்க சார்," என்றவள், "நெக்ஸ்ட்... நெக்ஸ்ட்... மேடம் கொஞ்சம் முன்னாடி வாங்க. சார், நீங்க கொஞ்சம் ஒதுங்கி நின்னுக்கோங்க," என்றபடி தீவிரமாய் வேலையில் இறங்கியிருந்தாள்.

"மச்சி, மச்சி... உனக்குப் பீட்சாதானே வேணும்? அடுத்த தெருவுல பீட்சா ஹட் இருக்கு... அங்கே போகலாம். டொமினோஸ் வேண்டாம்டா. சொன்னாக் கேளுங்கடா." - நண்பர்களிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான் ஹரி கிருஷ்ணன்.

தன் நண்பர்களுடன் நுங்கம்பாக்கம் ஸ்கை வாக்கில் விண்டோ ஷாப்பிங் செய்தபடி, போகிற வருகிற பெண்களை சைட் அடித்துக் கொண்டிருந்த ஹரியை, பீட்சா சாப்பிட அழைத்து வந்திருந்தனர் நண்பர்கள். ரம்யா அங்கே பார்ட்-டைம் வேலை பார்ப்பதை அறிந்திருந்தபடியால், உள்ளே செல்லத் தயங்கியவனை, இழுத்துச் சென்றிருந்தனர்.

"மச்சி... எனக்கொரு ஜெஸ்ட்டி சிக்கன் சொல்லுடா."

"அது என்னடா கீமா தோ ப்யாசா? பேரு நல்லா யிருக்கு... எனக்கு அதுதான் மாப்ள வேணும். ஹரி, உனக்குடா?"

கேள்வி கேட்ட நண்பனுக்குப் பதில் கூறாமல், எட்டி... பில் கௌண்டரில் மும்முரமாய் வேலையிலிருந்த ரம்யாவை நோக்கினான் ஹரி. அவன் பார்வையைத் தொடர்ந்து தானும் நோக்கிய சக்தி, "ஓ...! நீ வர மாட்டேன்னு சொன்னதுக்கு இதுதான் காரணமா?" என்றான்.

"மச்சி... எத்தனை தடவை அவ உன்னை அழ விட்டிருக்கா? நான் இன்னைக்கு அவளை அழ விடுறேன்டா." - சிவா.

"இவன், அவளை அழ விடப் போறானாம்? டேய், அவ கராத்தே, ஜுடோவுல ப்ளாக் பெல்ட்டாம். நீ பேண்ட் பெல்ட் கூடப் போடாத பன்னாட. நீ அவளை அழ விடப் போறியா? முதல்ல ஜிப் போட்டிருக்கியான்னு பாருடா, பரதேசி." - சக்தி.

தங்கள் முறை வந்ததும், முன்னே வந்த மூவரையும் கண்ட ரம்யா, "ஏன்... ஊர்ல வேற பீட்சா கடையே இல்லையா?" என்றாள்.

"ஏன், இந்த பீட்சா கடைக்கு என்ன குறை வந்தது? கஸ்டமரை வெளியே துரத்தப் பார்க்கிறேன்னு உன் மேனேஜர் கிட்ட கம்ப்ளெயின்ட் பண்ணட்டுமா?" என்று வம்பு செய்தான் சக்தி.



"சரிங்க, கஸ்டமர். பேச்சை வளர்க்காம, ஆர்டரைச் சொல்லுங்க."

"ஒரு ஜெஸ்ட்டி சிக்கன், ஒரு கீமா தோ ப்யாசா, அப்புறம் ஹரி... டேய் உனக்கு?"

"ரெகுலரா? மீடியமா? லார்ஜா?" - ரம்யா.

"ஹ்ம்... மீடியம்தான்." - சக்தி.

"ஜெஸ்ட்டி சிக்கனுக்கு டாப்பிங் என்ன வேணும்?"

"உன் கிட்ட என்ன இருக்கு?" - சிவா.

"ஜெஸ்ட்டி சிக்கன் சாசேஜ், பார்பெக்யூ சிக்கன், காப்ஸிகம் அண்ட் ரெட் பாப்ரிகா."

"என்னா கா?"

"பாப்ரிகா." - கோபத்தில் பற்களைக் கடித்தாள், ரம்யா.

"நீங்க சொன்னது எங்களுக்குச் சரியாப் புரியலை. முதல் இரண்டு காம்பினேஷன் ஏதோ சொன்னீங்களே! அதையே போட்டுக் கொடுத்திடுங்க." - சிவா.

"ஹரி... உனக்கு என்ன வேணும்னு சொல்லவே இல்லை நீ." - சக்தி.

"அவன் வெஜ் பீட்சாதான் சாப்பிடுவான். அவனுக்கு ஒரு ஃபார்ம் ஹௌஸ் பில் போட்டாச்சு." - கடகடவெனக் கம்ப்யூட்டர் கீபோர்டைத் தட்டியபடி பதிலளித்தாள் ரம்யா.

"ஓஹோஓஓஓஓ..." என்று புருவத்தை உயர்த்திய இருவரும், ஹரியின் தோளை இடித்தனர். இதற்கும்

எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதைப் போல், அவளருகே பில் போட்டுக் கொண்டிருந்த பெண்ணைத் தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான், ஹரி.

"பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்க. நான் கூப்பிடுறேன்," என்றவள், "நெக்ஸ்ட்..." என்று விட, தலையாட்டியபடி மூவரும் சென்றமர்ந்தனர்.

அதன் பின், "பீட்சாவுல இருந்து ஊசிப் போன வாடை வருதே! மாவு பழசா? முக்குக் கடை முனியாண்டி தான் உங்களுக்கு மாவு சப்ளை பண்றாரா? சிவப்பா ஒரு மசாலாவை அந்தப் பொண்ணு மாவு மேல தடவுதே... அது என்ன ஆச்சி மிளகாய்ப் பொடியா? சாஸ் பாக்கெட் நிறையத் தந்தா உங்க பாஸ் சம்பளத்தைக் கட் பண்ணிடுவாரா?" என்றெல்லாம் கேள்வி கேட்டு, அவளை வெறுப்பேற்றி, உண்டு முடித்தனர் மூவரும்.

கிளம்புகையில், மீண்டும் அவளருகே வந்த சிவா, "மேடம்... ஒரு சாஸ் பாக்கெட் தர முடியுமா?" என்று வினவ,

கோபமாய் முறைத்தவள், "டேய்..." என்று பாய்வ தற்குள், அவனை இழுத்துக் கொண்டு வெளியேறினான், ஹரி.

"எப்படியோ உன் அத்தை மக புண்ணியத்துல, எனக்கு 5 சாஸ் பாக்கெட் ஃப்ரீயா கிடைச்சிருச்சிடா."

"அல்பம்... அல்பம்..." என்று ஹரி திட்டிக் கொண் டிருக்கையிலேயே, அவனது அலைபேசி ஒலித்தது.



"ஹலோ..." என்றவனிடம், "தம்பி, நான் வேளச்சேரி பேபி நகர்ல இருந்து பேசுறேன். 5 தண்ணீர் கேன் கேட்டிருந்தேனே... வீட்ல விசேஷம் தம்பி. நான் நேத்துல இருந்து அந்தப் பையன் பழனியைக் கூப்பிடறேன். அவன் போன் எடுக்கவே இல்லை. கொஞ்சம் சீக்கிரம் வந்து போட முடியுமா?" என்று ஒரு பெண்மணி வினவ,

"அப்படியா? நான் இப்பவே பழனிக்குப் போன் பண்றேன் மேடம். இன்னும் அரை மணி நேரத்துல வந்துடுவான்," என்று பதிலளித்தவன், உடனே பழனிக்கு அழைத்தான்.

"டேய் பழனி... பேபி நகர்ல 5 தண்ணீர் கேன் கேட்டு நேத்துல இருந்து போன் பண்றாங்களாம். நாயே, எங்கேடா ஊர் சுத்திட்டிருக்க?"

"அண்ணா... வீக்-எண்ட்லெல்லாம் சர்வீஸ் இல்லன்னு தெரிஞ்சும் போனைப் போடுறவங்களை என்ன செய்யச் சொல்றீங்க? ஞாயிற்றுக் கிழமை லீவுன்னு சொல்லித்தானே என்னை வேலைக்குச் சேர்த்தீங்க?"

"அதெல்லாம் சரிடா. அவசரம்னு போன் பண்றவங்களைக் கண்டுக்காம எப்படிடா விடுறது? கஸ்டமர் திருப்திதானேடா பிசினஸுக்கு ரொம்பவும் முக்கியம்."

"ஆமா, பெரிய பிசினெஸ்? அண்ணா, நான் என் கேர்ள் பிரெண்ட் கூட முட்டுக்காடு வந்திருக்கேன். இப்போ

நீங்க மட்டுமில்ல, கடவுளே வந்து சொன்னாலும், என்னால் சர்வீசுக்கு வர முடியாது."

"அடிங்க நாயே! உனக்கு இந்த மாசம் சம்பளமே கிடையாதுடா."

"முதல்ல போன மாச சம்பளப் பாக்கியை செட்டில் பண்ணுங்க. அப்புறம் பேசுவோம் இந்த மாசச் சம்பளத்தைப் பத்தி..." என்றவன், போனைக் கட் செய்து விட, "டேய், டேய், டேய்..." என்ற ஹரி, "இவனை நம்பித் தொழில் பண்றேன் பாரு... என்னைச் சொல்லணும்," என்று விட்டு, நண்பர்களிடம் திரும்பி, "டேய்... நான் வாட்டர் டெலிவரிக்குப் போகணும். அப்புறமா போன் பண்றேன்..." என்றவன், வண்டியை எடுத்துக் கொண்டு பறந்தான்.

**அ**மாத்யர், தன் பிள்ளைகளுக்கு அடிக்கடி கூறும் ஒரே வாக்கியம், "முதலாளி என்பவன், ஏ.சி. அறையில் அமர்ந்து கொண்டு, தனக்குக் கீழிருப்பவனை ஏய்க்கும் கையாலாகாதவனாக இருக்கக் கூடாது. தன் ஊழியனின் உழைப்பைப் புரிந்து வைத்திருக்கும் பெர்ஃபெக்ட் தலைவனாக இருக்க வேண்டும்," என்பதுதான்.

ஹரியின் அப்பா, பெரியப்பா, ரம்யாவின் அப்பா என, அனைவரும் அவரவர் தொழிலில், கடைநிலை ஊழியராகப் பணியாற்றியவர்கள்தான். அதைத்தான் இப்போது ரம்யாவும், ஹரியும் கூடக் கடைப்பிடிக்கின்றனர்.

அமாத்யர் குடும்பத்தின் பிரதானத் தொழில் ஹோட்டல்ஸ் & ரெஸ்டாரண்ட்ஸ். தமிழகம் முழுவதும்



இருந்த கிளைகளை, அவரது குடும்பத்தாரே நிர்வகித்து வந்தனர். இரண்டு மகன்கள் (கிருஷ்ணமூர்த்தி, ராம மூர்த்தி) மற்றும் மகளின் கணவர் (ஜெகநாதன்), மூத்தவரின் மகன் ஷ்யாம் என, அனைவரையும் தன் பிசினஸில் ஈடுபடுத்தியிருந்தார்.

அவரது குடும்பத்தைப் பொறுத்தவரை, மூத்த தலைமுறையிலிருந்து தொடங்கி, ஷ்யாமின் இரண்டு வயது மகன் அஷ்வத் வரை அனைவருக்கும் சட்டதிட்டங்கள் உண்டு. குடும்பத்தின் பாரம்பரியத்தைக் குலைக்காமல், பிள்ளைகள் ஒழுக்கமான முறையில் வளர வேண்டும் என்பதில் மிகத் தெளிவாய் இருந்தார். தாத்தா என்றாலே குலை நடுங்குமளவிற்கு அவரது தண்டனைகள் அனைத்தும் பிள்ளைகளை நிறையவே பயமுறுத்தி வைத்திருந்தன.

மூத்தவன் ஷ்யாமைப் போலல்லாது ஹரியும், ரம்யாவும் சேட்டைக்காரப் பிள்ளைகளாக வளர்ந்திருந் தனர். அடிக்கடி தப்பு செய்து, அவரது பி.பி.யை எகிற வைக்கும் இரண்டு அகராதிகளுக்கும், குடும்பத் தொழிலில் ஈடுபாடு அதிகம் என்பதுதான் அந்த வீட்டுப் பெரியவர்களின் ஒரே ஆறுதல்.

"**ஹ**ரி... இன்னிக்கு நேரா காலேஜுக்குத்தான்டா போகணும். தாத்தா அன்னிக்குத் திட்டியது ஞாபகம் இருக்குதானே? பொறுப்பா நடந்துக்கோடா. இன்னும் ரம்யா கூடச் சண்டை போட்டுக்கிட்டு, ஊர் சுத்திக்கிட்டு இருக்க, நீ ஒண்ணும் சின்னப் பையன் கிடையாது. கல்யாண வயசு வந்துடுச்சு உனக்கு. புரியுதா?" எனத்

தட்டில் சாம்பார் ஊற்றியபடி அன்னை வைஜெயந்தி கூறிய அறிவுரைகளை எரிச்சலுடன் கேட்டுக் கொண் டிருந்த ஹரி, அவரது கடைசி வாக்கியத்தில் புன்னகை மலர,

"வாவ்! நிஜமாவா மம்மி? எப்போ எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கப் போறே? அய்யோ... நான் இன்னும் ப்ரியா கிட்டே ப்ரபோஸ் பண்ணவே இல்லையே!" என்றான்.

"கலடயாணம்னு சொன்னதும் வாயை எப்படிப் பொளக்கிறான் பார். ப்ரியா உன்னை ரிஜெக்ட் பண்ண ணும்னு நான் வாழ்த்துறேன்டா, தடியா!" என்றபடியே வந்த ரம்யா, தட்டிலிருந்த அவன் கையை விலக்கி, அவன் மடியில் அமர்ந்து, இட்லியை உள்ளே தள்ளத் தொடங்கினாள்.

முகம் சுழித்தபடி அவளை நோக்கியவன், அன்னையிடம், "இவ ஏன்மா இப்படி இருக்கா? என்னை நிம்மதியாச் சாப்பிடக் கூட விட மாட்டாளா?" என்று வினவ, அவன் கூறியதைக் கண்டு கொள்ளாத வைஜெயந்தி, ரம்யாவின் அருகே சென்று, அவள் தலையை நீவி, "ஒரு வாரம் வீட்டுச் சாப்பாடு சாப்பிடாம என் கண்ணு மெலிஞ்சு போயிட்டாளே!" என்றார்.

"ம்ம்... ஆமாமா... இதோ பார், இந்த டி-ஷர்ட் கை எவ்ளோ லூசா இருக்குன்னு. இன்னொரு இட்லி வை அத்தை. இன்னும் கொஞ்சம் ரெட் சட்னி..." எனக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டாள். நாம் அமைதியாக உட்கார்ந்தால் எதுவும் நடக்காது என்றெண்ணிய ஹரி, அவள் பிய்த்துக்



கொண்டிருந்த இட்லியைப் பறித்து உண்ணத் தொடங்கி னான்.

அதன்பின் கல்லூரிக்குக் கிளம்பியவளிடம், "ஏய்... என் பைக்கை சர்வீஸுக்குக் கொடுத்திருக்கேன். என்னை யும் கூப்பிட்டுப் போடி," என்றவன், அவளுடனேயே ஸ்கூட்டியில் ஏறிக் கொண்டான். ஸ்ரீ சக்தி இன்ஸ்டி டியூட்டில் ரம்யா கேட்டரிங் & ஹோட்டல் மேனேஜ் மெண்ட்டும், ஹரி எம்.பி.ஏ. கடைசி வருடமும் படித்து வந்தனர்.

வகுப்புக்குள் நுழைந்தவளை எதிர்கொண்ட ப்ரியா, "ரம்யா... இன்னிக்கு நமக்கு அமெரிக்கன் எத்னிக் குஸீன் பத்தி லெக்சர் கொடுக்க, பார்க் ஹோட்டல் செஃப் 3 பேர் வர்றாங்களாம்டி. அவங்களை இம்ப்ரெஸ் பண்றதுக்காக ஒரு ஐந்து ரெஸிபி செய்யச் சொல்லியிருக்கார் ஹெட் மார்கஸ். நாங்க நாலு பேரும் டிசைட் பண்ணிட்டோம். நீ என்ன பண்றதா இருக்கே?" என்று வினவினாள்.

"ஓ... ம்ம்... நான் இட்டாலியன் டிஷ் ஏதாவது யோசிக்கிறேன். முதல்ல யூனிஃபார்ம் மாத்திட்டு வர்றேன். 2 மினிட்ஸ்டி..." என்றவள், ரெஸ்ட் ரூமுக்கு ஓடினாள்.

அடுத்த பதினைந்து நிமிடத்தில் வெள்ளைச் சட்டை, கருப்பு பேண்ட், நீளமான வெள்ளை கேப், ஏப்ரன் அணிந்து கொண்டு கிச்சனுக்குள் பிரவேசித்தாள் ரம்யா.

சிரிப்புடன் உள்ளே நடந்தவளுக்குச் சுற்றிலுமிருந்த மனிதர்கள் எவரும் கண்ணில் படவில்லை. சமையலறை

அவளுக்கே உண்டான தனி உலகம்! அவளே கண்டு பிடித்த... கற்றுக் கொண்ட சந்தோஷம். வாழ்நாள் முழுக்க அவளை யாரேனும் இந்த அறைக்குள் சிறைப்படுத்தி வைத்தால் கூட, அவள் கவலையே பட மாட்டாள்.

சமையலின் மீது அவளுக்கு இத்தனை பெரிய ஈடுபாடு இருப்பதை, அவள் கண்டு பிடித்தது, ஒன்பதாம் வகுப்பில்தான்! ஒரு முறை ஊட்டி ஃபார்ம் ஹவுஸில் அவளது அன்னை காய்ச்சல் வந்து படுத்து விட்டபோது, என்ன செய்வதென்று புரியாமல், அத்தைமாரிடம் போனில் கேட்டு, அவள் செய்த கஞ்சியும், பருப்புத் துவையலும்தான் அவளது சமையலின் அடிப்படை.

அதன் பின்பு, ஏனோ அந்த அறை வித்தியாசமான முறையில் அவளைக் கவர்ந்து விட்டது. அன்னை படுக் கையில் இருந்த நான்கு நாட்களையும் கிச்சனிலேயே கழித்தாள்.

விதவிதமான காய்கறிகளில், புதுப் புது விதமான பதார்த்தங்களைச் சமைக்கையில், முற்றிலுமாக வேறு உலகத்திற்கே சென்று விடுவதாக உணர்ந்தாள் அவள். 'படைப்பவனெல்லாம் கடவுள்தான் என்றால், நானும் கூடக் கடவுள்தான். என் கை வண்ணத்தில் இத்தனை ருசியான உணவுகளை உண்டாக்கி விட்டேனே!' என்று கர்வம் கொள்வாள்.

ஹரி கூடப் பல முறை அவளைக் கேலி செய்திருக்கிறான். "நீ உருப்படியாப் பண்ணுகிற ஒரே காரியம் சமையல் மட்டும்தான்டி..." என்று. ஒவ்வொரு



முறையும் அவளுடைய ரெசிபியை ருசி பார்க்கும் முதல் ஆள் ஹரிதான் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. சமையலில் அவளுக்கு இருக்கும் ஈடுபாடும், அர்ப்பணிப்பும் ஹரிக்கு எப்போதும் ஆச்சரியம் தான். அதனால் கேலி செய்யாமல், அவள் கூறுவதை யும், செய்வதையும் பொறுமையாய் உடனிருந்து கவனிப் பான்.

"ரம்யா... டி ரம்யா... என்ன டிஷ் செய்வதாக இருக்கிறே?" என்று ப்ரியா உலுக்கியதும், கனவிலிருந்து வெளிவந்தவள், "வெனெடோ சிக்கன்," என்றாள்.

"வாவ்...! சூப்பர்டி..." என்ற ப்ரியா, "கைஸ்... நமக்கு இன்னும் 30 நிமிஷம்தான் இருக்கு. அதுக்குள்ள சமையலை முடிக்கணும். ஓ.கே.வா? லெட்ஸ் ஸ்டார்ட்," என்று நகர்ந்து விட்டாள்.

ப்ரிட்ஜிலிருந்து சிக்கனை எடுத்து வந்து, சின்னச் சின்னப் பீஸ்களாக நறுக்கிக் கொண்டவள், வெங்காயம், தக்காளி என அந்தப் பதார்த்தத்திற்குத் தேவையான அத்தனையையும் நறுக்கி வைத்தாள்.

அடுப்பை இறக்கி வைத்தபடியே, "ப்ரீ... அந்த ஓர்கானோ, செலரியை பாஸ் பண்ணு. பீட்டர், வைட் வைன் எங்க இருக்குன்னு எனக்குக் கொஞ்சம் சொல்றியா, ப்ளீஸ்...?" என்றவள், அடுத்த பதினைந்து நிமிடமும் பம்பரமாய்ச் சுழன்று, சமையலை முடித்தாள்.

சொன்னபடி முப்பது நிமிடத்தில் சமையலை முடித்திருந்த ஐவரும், ருசி பார்த்து, சமைத்ததை

அழகுபடுத்திப் பாத்திரத்தில் எடுத்து வைக்கையில், "ப்ரியா... உங்க எல்லாரையும் லெக்சர் ஹாலுக்கு வரச் சொன்னார், மார்கஸ்..." என்று ஒருத்தி குரல் கொடுக்க, ஐவரும் கிளம்பினர்.

மாணவர்கள் அனைவரும் கூடியிருந்த ஹாலின் மேடையில் லெக்சர் அளிக்க வந்த செஃப்கள் மூன்று பேர் அமர்ந்திருந்தனர். டிபார்ட்மெண்ட் ஹெட், தனது முன்னுரையை முடித்து, வந்திருந்தோரை அறிமுகம் செய்து வைத்தார்.

"செஃப் ஜான், செஃப் ஷண்முகம், செஃப் சதிஷ்." அவர் கடைசிப் பெயரை உச்சரிக்கையில் எழுந்து நின்று, "ஹாய்..." என்றவனைக் கண்டு, பெண்கள் அனைவரும் "ஊஊஊ...." என்றனர்.

"ஏய்... ஆளு செமையா இருக்கான்டி. சதிஷ்! வாவ்...! பெயருக்கு ஏத்த மாதிரி சூப்பர் ஃபிகர்டி. நம்ம வழிசல் வந்தனா இன்னிக்குக் க்ளாஸ்க்கு வராதது நல்லதாப் போச்சு. இல்லாட்டி அவ விடற ஜொள்ளுல நாம எல்லாம் இந்நேரம் மிதந்துட்டு இருந்திருப்போம்." - தோழி ஒருத்தி காதில் முணுமுணுக்க, உதட்டை மடித்துச் சிரிப்பை அடக்கினாள், ரம்யா.

"ஆள் சூப்பர்தான்... இல்லடி ப்ரீ...?" என்று வினவிய ரம்யாவிடம், "ப்ச்..." என்றாள் ப்ரியா.

"உனக்கு ஹரியைத் தவிர வேறு யாருமே ஸ்மார்ட் கிடையாது. அப்படித்தானே!" என்றவளை முறைத்தாள் அவள்.



அதன்பின், சமைத்த ஐவரையும் ஹெட் முன்னால் அழைக்க, அனைவரும் எழுந்து சென்றனர். செஃப்கள் மூவரும் ஒவ்வொன்றாகச் சுவைத்து, தங்களது கருத்துகளைக் கூற, சதிஷிடமிருந்து மட்டும் எந்தப் பதிலுமில்லை. கடைசியாக ரம்யாவின் ரெசிபியைச் சுவைத்தவன், புருவத்தை உயர்த்தி, உதட்டை வளைத்து மெச்சும் பாவனையை வெளிப்படுத்தினான்.

"இந்த டிஷ் பெயர் என்ன?" - சதிஷ்.

"வெனெடோ சிக்கன்னு ஒரு இட்டாலியன் டிஷ்." - ரம்யா.

"இதுக்கு ஏன் வெனெடோன்னு பெயர் வந்ததுன்னு தெரியுமா?"

"ஹ்ம்ம்... இந்த டிஷ்ஷோட ஆரிஜின் வெனிஸ்ன்ற தால வெனெடோ சிக்கன்னு..."

"ஹ்ம்ம்... ரொம்ப நல்லாயிருக்கு," என்றான் அவன்.

தோழிகள் அனைவரும் அவளை ஒரு மாதிரியாகப் பார்க்க, "ஏய்... என்னடி இப்படிப் பார்க்கிறீங்க? இவனை நான் முன்னே பின்னே பார்த்ததேயில்லை..." என்பது போல, மறுபார்வை பார்த்தாள் அவள்.

அதன்பின் லெக்சர் தொடங்கி விட, அனைவரும் சென்று இருக்கையில் அமர்ந்தனர். தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்ட செஃப்கள் மூவரில், சதிஷ் முதலில் மேடை ஏறினான். டேபிள் மீதிருந்த மார்க்கரை எடுத்துப்

போர்டில் 'cuisine' என்று எழுதினான். பின் மாணவர்களின் புறம் திரும்பி,

"குஸீன்ங்கிற வார்த்தைக்கு யாராவது அர்த்தம் சொல்ல முடியுமா?" என்றான்.

"ஒரு நிமிஷம் சார்... கூகுள்ல பார்த்துச் சொல்றோம்..." - சேட்டைக்கார மாணவன் ஒருவன் துடுக்காய்ப் பதில் சொல்ல, வெள்ளைப் பற்கள் தெரியப் பளிச்செனச் சிரித்தான் அவன்.

"நானும் கூட வரும்போது இந்த வார்த்தைக்குக் கூகுள் கிட்ட அர்த்தம் கேட்டுத்தான் வந்தேன். அதனால் நீங்களும் பார்க்கலாம். தப்பில்லை," என்று கண்ணடித் தவன், தொடர்ந்து,

"சமையலை, வெறும் சமையலாக மட்டும் பார்க்காமல், அதை ஒரு கலையாகப் பார்க்கிறவன்தான் செஃப் என்பவன். ஒரு செஃப்போட வேலை சமைக் கிறதோட முடிஞ்சிடறது இல்லை. சமைச்சதை அலங் கரிக்கிறது, செர்வ் பண்றதுல இருந்து தொடங்கி, சாப்பிடறவன் முகத்தில் சிரிப்பைப் பார்க்கிறவரை நம் மோட பொறுப்பு முடியறதில்லைன்னு நான் ஸ்ட்ராங்கா நம்புறேன். Serving food to others is a service to humanity-ன்னு சொல்வாங்க. அதனால நம்முடைய தொழிலுக்கும் கடமை, கண்ணியம், நேர்மையெல்லாம் இருக்கிறதாக நான் நினைக்கிறேன்.

"ஒவ்வொரு நாட்டோட ஐடென்டிடியும் அந்த நாட்டோட கலாசாரத்தில்தான் இருக்கு. அடிப்படையில்



கலாசாரம்ங்கிறது ஒரு நாட்டுக்குக் கண்களைப் போன்றது. நாம் அணிகிற உடை, நாகரிகம், பேச்சு, ஆட்டம், பாட்டு, கூத்துன்னு அத்தனையையும் உள்ளடக் கியதுதான் இந்தக் கலாசாரம். அப்பேர்ப்பட்ட கலாசா ரத்தை வெளிப்படுத்துகிற உணவு வகைகளைத் தான் குஸீன்னு சொல்றோம். தமிழ் நாட்டோட கலாசார உணவாக நீங்க எதைச் சொல்வீங்க?"

"இட்லி, தோசை, பூரி, பொங்கல்."

"சாம்பார், ரசம், தயிர்."

"எக்ஸாக்ட்லி. நம்ம ஊர்க் கல்யாணத்துல, வாழை இலையில் வைக்கிற எல்லாமே கலாசார உணவுகள்தான். தமிழ் நாட்டுக்குள்ளேயே ஊருக்கு ஊர் இந்த உணவு மாறுபடும். செட்டிநாடு, கொங்கு நாடு, நெல்லை, மதுரைன்னு ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு விதமான சாப்பாடு."

சிரிப்பு மாறாமல், நகைச்சுவையுடன் தன் பேச்சைத் தொடர்ந்தவனை, அந்த ஹாலில் அமர்ந்திருந்த மாணவ, மாணவிகள் அனைவரும் 'பே'வென நோக்கினர். அவன் அணிந்திருந்த சீருடை, கையில் மார்க்கரை வைத்துக் கொண்டு அவன் ஸ்டைலாகப் பேசிய விதம், அத்தனையும் ரம்யாவை மொத்தமாகக் கவர்ந்தது.

"கொட்டாவி விடாம வாயை மூடிட்டு உட்காருடா பரதேசி. எனக்கும் தூக்கம் வருது," என்று சிடுசிடுத்த ஹரியிடம், திரும்பி, "உனக்குத் தூக்கம் வந்தா நீயும் கொட்டாவி விடு. அதுக்கு ஏன்டா என்னைத் திட்டுற?" என்று சக்தி கூறிக் கொண்டிருக்கையிலேயே,

"க்ளாஸ் இன்ட்ரெஸ்டிங்கா இல்லைன்னு நினைச்சா, நீங்க தாராளமா வெளியே போகலாம். நொய் நொய்ன்னு நீங்க பேசுறது அடுத்த மாணவர்களையும் டிஸ்டர்ப் பண்ணுது," என்று லெக்சரர் திட்டவும், வாயை மூடி அமர்ந்தனர் இருவரும்.

கல்லூரி முடிந்ததும் வெளியே வந்த ஹரி, "டேய், மெக்கானிக் ஷெட் போகணும். என்னை ட்ராப் பண்ணிடு," என்று சக்தியின் வண்டியில் ஏறி அமர்ந்தான்.

வண்டியை உதைத்துக் கிளப்பியபடியே, "மச்சி, உன் ஆள் வருது..." என்று சக்தி கூற, "எங்கேடா?" என்று நிமிர்ந்த ஹரி, எதிரே தன் தோழியுடன் நடந்து வந்த ப்ரியாவைக் கண்டு அழகாய் முறுவலித்தான். அவன் தன்னைக் கண்டு விட்டதை உணர்ந்து கொண்டவளுக்கு முகம் சிவக்க, லேசாய்த் தலை குனிந்து, காதோர முடியை ஒதுக்கினாள் அவள்.

வண்டியிலிருந்து இறங்காமல், முறுவலித்தபடி, அவளையே நோக்கிக் கொண்டிருந்தவனின் அருகே வந்தவள், "ஹாய்..." என்று கூற, லேசாய்த் தலை யசைத்தவன், "என்ன, நீ மட்டும் வர்ற? எங்க என் வீட்டுக் கேடியைக் காணோம்?" என்றான்.

"அவ ப்ரொஃபஸரைப் பார்க்கப் போயிருக்கா."

"ஓ...! நீ இன்னும் வீட்டுக்குக் கிளம்பலையா?"

"ரம்யா வந்ததும் கிளம்பணும்."

"ம்... வேற..."



"வேற..." என்று அவள் இழுக்கையில், "ம்க்கும்..." என்று தொண்டையைக் கனைத்தான் சக்தி.

'மூதேவி! முக்கியமான நேரத்துல என்ட்ரி கொடுக் கிறான், பாரு!' மனதுக்குள் நண்பனை அவன் சபித்துக் கொண்டிருக்கையில், "அப்போ நான் கிளம்பறேன்..." என்றாள் அவள்.

சோகமாய்த் தலையை மட்டும் ஆட்டியவனைக் கண்டு சிரித்தபடி திரும்பியவளை, "ப்ரியா..." என்று நிறுத்தியவன், அவள் முன்பு தன் வலது கையை நீட்டி னான்.

புரியாமல் அவனை நோக்கியவளிடம், "அட்வான்ஸ் ஹேப்பி பர்த்டே," என்றான்.

அதை எதிர்பார்க்காதவள் போன்று, விழிகளைப் பெரிதாய் விரித்தவள், அவனிடம் கை குலுக்கி, "எ... எப்படித் தெரியும்?" என்றாள்.

"ப்ச்... தெரியும்," என்று தோளைக் குலுக்கினான், ஹரி.

"நான் எதிர்பார்க்கலை... உங்களுக்கு நினை விருக்கும்னு."

"ம்ம்... மறக்கக் கூடாதுன்னு மனசுல பதிச்சு வெச்சிருக்கிற தேதிகள்ல இதுவும் ஒண்ணு. அதனால நல்லாவே ஞாபகம் இருக்கு."

"தே... தேங்க்ஸ்..."

"யூ ஆர் வெல்கம். அப்போ நாளைக்குப் பார்ட்டி உண்டுதானே?"

"நிச்சயம். உங்களுக்கு என்ன வேணும்?"

"இ... இப்படிக் கேட்டா... நா... நான் என்ன பதில் சொல்லட்டும்?" - வெட்கமாய் முணுமுணுத்தவளைத் தலை சரித்து நோக்கிச் சிரித்தான் அவன்.

அவன் சிஃரிப்புச் சத்தம் ஏதோ செய்ய, "நா... நான் கிளம்புறேனே..." என்று தன் கையை அவன் கையில் இருந்து விடுவித்துக் கொள்ள முயன்றாள். தன் கையை அழுத்தி, அவளது முயற்சியைத் தடுத்தவன், "உனக்கு என்ன கிஃப்ட் வேணும்னு நீ சொல்லவேயில்லையே..." என்றான்.

"எனக்கு என்ன வேணும்னு உங்களுக்குத் தெரியும்னு நான் நம்பிட்டு இருக்கேன்," என்றாள் அவள்.

சிரிப்புடன் தலை குனிந்தவன், "தெரியும்தான். நீ கேட்கிறதைக் கொடுக்க எனக்குக் கொஞ்சம் நாள் ஆகுமே! அதுவரைக்கும் காத்திருப்பியா?" என்றான்.

லேசாய்த் தலையசைத்துத் தன் சம்மதத்தைத் தெரிவித்தவள், பட்டென அவன் கையிலிருந்து தன் கையை உருவிக் கொண்டு ஓடி விட, நண்பனை உலுக்கி, "ஊஊஊ..." என்று கத்தினான், ஹரி.

"என்னடா... பேச்சுவாக்குல சைலண்ட்டா ப்ரபோஸ் பண்ணிட்ட...?" என்று கேலி செய்தபடி, வண்டியை ஸ்டார்ட் செய்த சக்தி, வழி நெடுக ப்ரியாவைப் பற்றியே



வளவளத்துக் கொண்டு வந்தவனின் வாயை மூட முடியாமல் திணறிப் போனான்.

சிக்னலில் வண்டியை நிறுத்தியவன், ஹெல் மெட்டைத் திறந்து, "டேய்... என்னால முடியலடா. கொஞ்ச நேரம் வாயை மூடிட்டு வாயேன்..." என்று எரிச்சலுடன் கூற,

"போடா டேய்... உனக்குக் காதலோட அருமை இப்போ புரியாது," என்று சுற்று முற்றும் பார்த்த ஹரி, அந்தச் சாலையின் இடது பக்கக் கடைசியில் இருந்த கட்டடத்தைக் கண்டு, "சக்தி, வண்டியை லெஃப்ட்ல திருப்புடா," என்று கூவினான்.

"ஏ... என்னாச்சு?" என்று வண்டியைத் திருப்பிய சக்தியிடம், "அந்த... அந்தக் கட்டடத்துக்கிட்ட நிப்பாட்டு," என்றவன், அவன் நிறுத்தியதும், வண்டியை விட்டு இறங்கினான்.

கையிலிருந்த புத்தகத்தை வண்டியில் வைத்தபடி, கட்டடத்தை நிமிர்ந்து நோக்கியவனது முகத்தில் அப்படியொரு பெருமிதம்! இடது கையால் கட்டடத்தைச் சுட்டிக் காட்டியபடி, வலது கையை நெஞ்சத்தில் வைத்தவன், "சக்தி... எ... என்னோட ஹோட்டல் இது!" என்றான்.

"உன்னோட ஹோட்டலா? இ... இதுவா?" என்று முகம் சுழித்த சக்தி, தானும் வண்டியை விட்டு இறங் கினான்.

“டேய்... உன் தாத்தா ஸ்டேட் முழுக்க ஹோட்டல் கட்டி வெச்சிருக்கார். நீ இதைக் காட்டி, உன் ஹோட்டல்ங்கிற? அப்போ உனக்குச் சொத்துல பங்கு கிடையாதா? டேய்... உன் தாத்தா மேல கேஸ் போடு முதல்ல...” என்று திட்டிய சக்தி, “இது எந்தக் காலத்து ஹோட்டல்...?” என்றபடியே உள்ளே நுழைந்தான்.

“வாங்க தம்பி...” என்று வரவேற்ற பெரிய மனிதரிடம், “எப்படி இருக்கீங்க நம்பி சார்? ஹோட்டல் எப்படிப் போயிட்டிருக்கு?” என்று விசாரித்தான், ஹரி.

“தொழில் பரவாயில்லாமத்தான் இருக்கு தம்பி. பெரிய பெரிய ஹோட்டலைக் கட்டித் தொழிலை விஸ்தரிக்கிற உங்க தாத்தா, இதை மொத்தமா மறந் துட்டார். இங்கிருந்துதான் அவர் பரம்பரையே வளர்ந்த துங்கிறதை ஞாபகம் வெச்சிருந்தா... இந்த ஹோட்டல் இந்த நிலைமையில இருக்குமா?” என்று தன் ஆதங் கத்தைக் கொட்டினார், நம்பி.

சிரித்தபடி ஹோட்டலைச் சுற்று முற்றும் நோக்கிய ஹரி, “ஹ்ம்ம்... கவலைப்படாம இருங்க. இன்னும் கொஞ்ச நாள்தான். நான் இந்த ஹோட்டல் பொறுப்பை எடுத்துக்கிட்டப்புறம் ஹோட்டல் எந்த ரேஞ்சுக்கு மாறுதுன்னு மட்டும் பாருங்க...” என்றான்.

“நிஜமாத்தான் சொல்றீங்களா, தம்பி?”

“டேய், ஹரி... என்ன விளையாடுறியா நீ?”

நண்பனின் தலையில் கொட்டியவன், “உனக்கு இதெல்லாம் புரியாது மச்சி. நம்பி சார் கொடுக்கிற



காபி, வடை யெல்லாம் நல்லா யிருக்கும். போய்க் கொட்டிக்கோ...” என்று கூறி விட்டு, ஹோட்டலின் வரவேற்பறைக்குச் சென்றான்.

போர்டு மாட்டப்பட்டிருக்கும் அந்த ஹோட்டலின் பெரிய வாயிலின் உள் நுழைந்ததும், இரண்டு பக்கமும் நான்கு மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. அதற்குக் கீழிருந்த தொட்டிகளில் விதவிதமான செடிகள் வேறு கேட்பாரற்றுத் தன் போக்கில் வளர்ந்து கிடந்தன.

காட்டுக்குள் நுழைவது போன்றிருந்த அந்த வாயிலில் ஓடி விளையாடிய இரண்டு வயது ரம்யாவும், ஐந்து வயது ஹரியும் அவன் கண்களுக்குத் தெரிந் தார்கள்.

அதோ... அந்த முதல் மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி இருவரும் ஆடினர். முன்பெல்லாம் வாரக் கடைசி நாட்களில் இருவரையும் அங்கு அழைத்து வந்து விடுவார் அமாத்யர். நம்பியுடன் அவர் தீவிரப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருக்கையில், ரம்யா, ஹரியின் பொழுதுபோக்கு மரத்தில் ஆடுவதுதான்.

வலது புறமிருந்த ஹோட்டலின் பிரதான வாயிலைக் கடந்து இடையிலிருந்த சந்து வழியாகப் பின்புறமிருந்த கார் பார்க்கிங்கில்தான் இருவரும் ஒளிந்து விளையாடுவர்.

ஹரியைப் பொறுத்தவரை இது சாதாரண ஹோட்டல் அல்ல. அவனது பால்ய நினைவுகளைத் தாங்கிக் கொண்டு நிற்கும் பொக்கிஷம்.

அது மட்டுமல்ல. ஒரு நாள் அந்த வேப்ப மரத்தின் கீழ் நின்று கொண்டு, தாத்தா ஏக்கத்துடன் ஹோட்டல் கட்டடத்தை நிமிர்ந்து பார்ப்பதைக் கண்ட அவன், தாத்தாவின் முகம் வாடியிருப்பதைப் பார்த்து, என்னவோ ஏதோ என்று அருகே சென்றான்.

என்ன கேட்பதென்று புரியாமல், மெல்ல அவரது ஆள்காட்டி விரலைப் பற்றியவனிடம், அந்த ஹோட்டலின் வரலாறைப் பற்றி நிறையப் பேசினார் தாத்தா. அதில் ஒன்றுகூட அவனுக்கு நினைவில்லை என்றாலும், அவர் பேச்சின் பின்னே இழையோடிய சோகத்தை மட்டும் அவனால் இப்போதும் உணர முடிந்தது.

அன்று அவர் தன் பேச்சை முடிக்கையில்... "கவலைப்படாதீங்க, தாத்தா. நான் பெரியவனானதும் இந்த ஹோட்டலுக்குப் பெயிண்ட் பூசி, நம்ம புது ஹோட்டல் மாதிரி அழகாக்கி, நானே நல்லபடியாப் பார்த்துக்கிறேன்..." என்றான்.

பேரனின் தலையை வருடி, "நிஜமா?" என்று வினவிய தாத்தா, லேசாய் முறுவலித்து, அவன் உச்சியில் முத்தமிட்டார். அவனுக்குத் தெரிந்து அவனுடைய தாத்தா முகத்தில் சிரிப்பைக் கண்டது அந்த நொடிதான்.

அதன் பின்பு அவனுக்குச் சோறு ஊட்டும் போதும், பள்ளிக்கு அனுப்பும் போதும்... "நீ சாப்பிட்டாத்தான் தாத்தா உனக்கு ஹோட்டல் தருவார். நீ ஸ்கூலுக்குப் போனால்தான் தாத்தா உனக்கு ஹோட்டல் தருவார்..." என்று சொல்லிச் சொல்லி வளர்த்து, அந்த ஹோட்டலை



அவனுக்குச் சொந்தமான ஒன்றாகவே மாற்றி விட்டனர், அவனது குடும்பத்தினர்.

கடைசியில் ஹரியின் ஏக்கம், பாசம், லட்சியம் அனைத்தும் அந்த ஹோட்டல், ஹோட்டல், ஹோட்டல் மட்டுமே என்றாகிப் போனது.

நினைவுகளிலிருந்து மீண்டு ஹோட்டலின் முகப்பைத் திரும்பிப் பார்த்தவன் கண்களை மூடித் தான் கற்பனை செய்து வைத்திருந்த தோற்றத்தை நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

"ஹரி, என்னடா தூங்குறியா?" என்றபடி, தோளில் அடித்த சக்தியிடம்,

"மாப்ள, ஏன்டா இன்னிக்கு நீ முக்கியமான நேரத்துலல்லாம் ராங்கா என்ட்ரி கொடுக்கிற?" என்று திட்டினான்.

"ஹரி, நிஜமாவே நீ இந்த ஹோட்டலை நிர்வகிக்கத்தான் எம்.பி.ஏ. படிக்கிறியாடா?"

"ஏன்? இந்த ஹோட்டலுக்கு என்ன குறை?"

"இது ஹோட்டலே இல்லை. அதுதான் குறை."

"டேய், நான் பொறுப்பேற்றதும் எல்லாத்தையும் சேஞ்ச் பண்ணிடுவேன்டா. இந்த ஹோட்டல் என் ட்ரீம்டா. இன்னும் இரண்டே மாசம்தான். என் படிப்பு முடிஞ்சதும், தாத்தா எனக்கு அஃபிஷியல் பர்மிஷன் கொடுத்திடுவார். ப்ளஸ், ஹோட்டலையும் என் பேர்ல மாத்திடுவார். அப்புறம் நானே ராஜா... நானே மந்திரி..."

"ஹ்ம்ம்... தமிழ்நாடு ஸ்டேட் முழுக்க எத்தனை ஹோட்டல்ஸ், எத்தனை ரெஸ்டாரண்ட்ஸ் இருக்கு, உன் தாத்தா, அப்பா பேர்ல. போயும் போயும் இது மேல நீ இவ்ளோ ஆசை வைச்சிருக்க! நீ படிச்ச முட்டாள்டா....!" என்று வைத சக்தியிடம்,

"போடா... போடா. ஹோட்டல் என் கைக்குக் கிடைச்சதும் நான் பண்ணப் போகிற முதல் வேலை ப்ரியா கிட்ட ப்ரபோஸ் பண்ணுறதுதான்..." என்றான், கனவில் மிதந்தபடியே.

"ம்க்கும்... இதைக் காட்டி எனக்கு ஹார்ட் அட்டாக் வர வைச்சது போதாதுன்னு அவளுக்கும் வேற காட்டப் போறியா? கொடுமைடா. ஏறித் தொலை!" என்றவனிடம்,

"நான் பொறுப்பேற்றதும், முதல்ல போர்டை மாத்தணும்டா..." என்றபடியே வண்டியில் ஏறினான் ஹரி.

ஒவ்வொருவருடைய கற்பனை உலகும் விசித்திர மானதுதான் போலும்.

## 4 *It's Okay, It's just Love!*

ஆசை, ஆசையா மனசுல தோணுற முதல் க்ரஷ் ஏன் சுலபமா க்ரஷ்ஷாகிடுது (நசுக்கப்படுது)?

நான் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும்போது தான் அவனைப் பார்த்தேன். என் ஸ்கூல் வாட்டர்



டேங்க்குக்கு எதிர்ல... சுற்றிலும் செடி, கொடிகளோட இருக்கிற அந்த ஒற்றை வகுப்பறையை நாங்க 'வசந்த மாளிகை'ன்னு சொல்லுவோம்.

அந்த வகுப்பிலிருந்த உயரமான மாணவர்கல்ல அவனும் ஒருத்தன். நாலு புத்தகத்தை அசாத்தியமா கையில் பிடிச்சிக்கிட்டு அவன் வகுப்புக்குள்ளே நடந்து போறதைப் பார்க்கிறதுக்காகவே நானும், என் தோழியும் அடிக்கடி வாட்டர் டேங்குக்குப் போவோம். போதாததற்கு அவன் என் தோழியோட பக்கத்து வீட்டுக்காரன் வேறு. சொல்லவா வேணும்?

நான் எப்பவும் என் தோழி வீட்டிலதான் டேரா! ஒரு முறை கூடப் பேச முயற்சிக்காம கண்ணுலயே நான் வளர்த்திட்டிருந்த காதல் பத்தாம் வகுப்பில் முடிவுக்கு வந்தது.

அன்னிக்குத் திடீர்னு என் வீட்டுக்கு வருகை தந்த தோழி, என் ரூம் கதவைச் சாத்திட்டுப் பக்கத்துல வந்து... அவனோட பெயரைச் சொல்லி, "அவன் எனக்கு ப்ரபோஸ் பண்ணான்டி... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை!"ன்னு குதிச்சா.

எனக்கு ஒரு நிமிஷம் உலகமே நின்னு போயிடுச்சு. அவன் என்னைப் பார்க்கிறதா நினைச்சு நான் அவனைப் பார்த்துக்கிட்டு இருந்த இரண்டு வருஷமும், அவன் என் தோழியைப் பார்த்துட்டு இருந்திருக் கிறான்ங்கிறது அன்னிக்குத்தான் தெரிய வந்தது.

இதுக்காக இரண்டு நாள் விடாம அழுததை நினைச்சுப் பார்த்தா... இப்போ சிரிப்பு வருது.

ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...

**"ஹ**லோ, ஹரி. அப்பா உனக்கு ஃபோன் பண்ணினாராடா? எனக்கு இரண்டு மிஸ்ட் கால் வந்திருக்கு, அப்பா நம்பரிலிருந்து. நான் திரும்பக் கூப்பிட்டப்போ அவர் எடுக்கலை. என்னாச்சுடா?"

"எனக்கும் ஃபோன் பண்ணினார்டி. உடனே வீட்டுக்கு வரச் சொல்றார். விஷயம் என்னன்னு போய்த்தான் கேட்கணும். நீ எங்க இருக்கே?"

"நான் கிட்டார் பிராக்டிஸ் முடிச்சிட்டு வீட்டுக்குப் போயிட்டிருக்கேன்டா..."

"அடங்கவே மாட்ட. ஏன்டி உனக்குக் கொஞ்சம் கூடப் பயமே யில்லையா?"

"நான் என்ன கள்ளக் கடத்தலா பண்றேன், பயப் படுறதுக்கு! நீ எங்கடா இருக்கே?"

"நானும் வீட்டுக்குத்தான் வந்துட்டிருக்கேன்."

"சரி, சரி. பைக்கை ஸ்பீடா ஓட்டாதே. சீக்கிரம் வந்து சேரு, பை..." என்று கட் செய்தாள் ரம்யா.

சிரிப்புடன் அலைபேசியை நிறுத்திய ஹரி வேண்டுமென்றே வண்டியின் வேகத்தை அதிகப்படுத்தி னான்.

ஒன்றாக வீட்டுக்குள் நுழைந்த இருவரையம் கண்ட ஜெகநாதன் முகத்தில் வித்தியாசமான முறுவலைக் கண்ட



ஹரி மீண்டும் குழம்பினான். இப்போதெல்லாம் இருவ ரையும் சேர்ந்து காணும் போதெல்லாம் வீட்டினர் அனை வரும் வித்தியாசமாகப் புன்னகைத்துக் கொள்கின்றனர். ஏன்?

தொப்பென சோபாவில் விழுந்த இருவரிடமும், "லீ ராயல் மெரிடியன்ல ஃபுட் கேம்பைன் போட்டிருக்கான். தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னணி ஹோட்டல்களிலிருந்து நிறைய செஃப்ஸ், மேனேஜர்ஸ் எல்லாம் கலந்துக் கிறாங்க. நம்ம ஹோட்டலிலிருந்து கூட ஐந்து பேர் போறாங்க. நீங்க இரண்டு பேரும் இதுல கலந்துக் கணும்னு உங்க தாத்தா ஆசைப்படுறார். நீங்க என்ன சொல்றீங்க?" என்றார் ஜெகநாதன்.

"மாமா, விளையாடுறீங்களா? எனக்கு எக்ஸாம்ஸ் வருது. நான் படிக்கணும்."

"அய்யோ டாடி, ஹரி படிக்கப் போறானாம். நான் இப்பவே நாலாவது மாடியிலிருந்து குதிக்கப் போறேன்..." என்று எழுந்தாள் ரம்யா.

அவள் தோளை இடித்துத் தலையில் குட்டு வைத்தவனிடம், "நீ படிக்கிறன்னு சொன்னா... அஷ்வத் கூட நம்ப மாட்டான்டா ஹரி. இது உங்க தாத்தா உத்தரவு. அவாய்ட் பண்ணினா என்ன நடக்கும்னு உங்களுக்கே தெரியும்..." என்ற ஜெகநாதன் தொடர்ந்து,

"தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹோட்டல் வியாபாரிகள் எல்லாரும் கலந்துக்கிற கேம்பைன்டா. உங்களை மாதிரி ஆளுங்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. நிறையக்

கத்துக்கலாம். எதிராளியோட பலம், பலவீனம், கஸ்டமரை அவன் அணுகுற முறைன்னு அத்தனையும் நீங்க தெரிஞ்சுக்கலாம். போய்த் தான் பாருங்களேன்...” என்றார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் மெரிடியன் வாசலில் இறங்கிய இருவரையும் சிரிப்புடன் வரவேற்றான், ஷ்யாம்.

“அஷூ குட்டி...” என்று தன் மகனை ஹரியிட மிருந்து வாங்கிக் கொண்டவன், “ஹா ஹா... இவனை ஏன்டா கூப்பிட்டு வந்திருக்கீங்க?” என்று வினவ...

“நாங்க இரண்டு பேரும் சண்டை போடாம இருக்கணும்ங்கிறதுக்காக இவனை எங்க கூட அனுப்பி வைச்சுட்டார் அப்பா...” என்றாள் ரம்யா.

சிரித்துக் கொண்டே, “சரி, வாங்க...” என்றவனிடம்,

“டேய் அண்ணா... உள்ளே ஏதாவது நல்ல ஃபிகர் இருக்குமாடா?” என்று விசாரித்தான் ஹரி.

யோசிப்பது போல் நடித்த ஷ்யாம், “இதோ... அந்தப் பக்கமா விளக்குமாறைத் தூக்கிட்டு ஒரு பொண்ணு நடந்து போச்சு. பேரு முனியம்மாவாம். பார்க்க டக்கரா இருக்கு. வேணும்னா ட்ரை பண்றியா?” என்றான்.

அவனை முறைத்து முகத்தைத் திருப்பிக் கொண்ட ஹரியைக் கண்டு, ஷ்யாமும், ரம்யாவும் ஹை-ஃபைவ் கொடுத்துக் கொண்டனர்.



“எத்தனை நாளைக்குடா அண்ணா, இந்தக் கேம்பைன்?”

“ஒரு வாரத்துக்கு.”

“ஒரு வாரத்துக்குமா எங்களைத் தாத்தா அட்டெண்ட் பண்ணச் சொல்லியிருக்கார்?”

“ஹ்ம்ம்... அப்படித்தான்னு நினைக்கிறேன்.”

“இந்தக் கொரில்லாவை வேணும்னா ஒரு வாரத்துக்குக் கூப்பிட்டுப் போ. என்னால வர முடியாது.”

“எதுவாயிருந்தாலும் தாத்தா கிட்ட பேசிக்கோ.”

“நீ ஏன்டா அண்ணா, ஏகத்துக்கும் நல்லவனா இருக்கே?”

“கொஞ்ச நேரம் வாயை மூடிட்டு சும்மா இரேன்டா, ஹரி. அவர் என்ன பேசுறார்னு எனக்குக் கேட்கவே மாட்டேங்குது...” என்று மேடையில் பேசிக் கொண்டிருந் தவரைச் சுட்டிக் காட்டினாள் ரம்யா.

“நீ ரொம்ப சின்சியரா கவனிக்கிறன்னு நான் நம்பணுமாக்கும்?” - ஸ்டைலாகத் தோளைக் குலுக்கி னான் ஹரி.

ஆரோக்கிய உணவைப் பற்றியும், அதன் பயன் பாட்டைப் பற்றியும் பக்கம் பக்கமாகப் பேசியவர்களைக் கண்டு, அடுத்த சில நிமிடங்களிலேயே, “செம மொக் கையா இருக்கு. நான் ஜூட் விடுறேன்,” என்ற ஹரி எஸ்கேப் ஆகிவிட, ஷ்யாமும், ரம்யாவும் பொறுமையாக அமர்ந்திருந்தனர்.

கடைசியில் அனைவரையும் உணவு உண்ண அழைக்கையில், "ஹப்பா... ஒரு நல்ல காரியம் பண்றானுக..." என்று புலம்பியபடி எழுந்தாள் ரம்யா.

"இன்னிக்குத்தான்டி இப்படி இருக்கு... அடுத்தடுத்த நாள் இண்ட்ரெஸ்டிங்கா இருக்கும்..." என்ற ஷ்யாமிடம்,

"அப்பா சாமி... நீயே வந்து அனுபவி. தாத்தா என்ன தண்டனை கொடுத்தாலும் பரவாயில்லை. என் னால இதை டாலரேட் பண்ணவே முடியாது..." என்று கும்பிடு போட்டாள், ரம்யா.

பஃபே முறையிலிருந்த உணவுக் கூடத்தில் தங்களுக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு வந்தவள்... அருகே இருந்த மேஜையில் அஷ்வத்தை அமர வைத்து அவனுக்கு ஊட்டினாள்.

"சித்தி, இது இன்னும் கொஞ்சம் வேணும்..." என்று அவன் பேபி கார்ன் ஃப்ரையைக் கை காட்டவும், "இருடா. நான் போய் எடுத்து வர்றேன். எங்கேயும் ஓடக் கூடாது. சரியா?" என்று கூறி விட்டு, உணவின் அருகே சென்றாள்.

பொறுமையாய்த் தட்டில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தவள், அருகே யாரோ கரண்டிக்காகக் காத்திருப்பதை உணர்ந்து, "சாரி..." என்றபடியே நிமிர்ந்து நோக்க... "இட்ஸ் ஓ.கே." என்று புன்னகைத்தான் சதிஷ்.

செஃப் சதிஷ்! இவன் எப்படி இங்கே? - ஆச்சரி யத்தில் விழிகளை விரித்தவளின் கைகள் தன்னாலேயே



உயர்ந்து விட, தன்னையே மனதுக்குள் சபித்தபடி, "ஹாய்!" என்றாள்.

ஒரு நொடி புருவம் சுருக்கி, யார் என்று யோசித்தவன் மறுநொடி, "ஓ! வெனெடோ சிக்கன்..." என்றான்.

கண்களைச் சுருக்கி அவனை முறைத்தவள், "அது நான் சமைத்த டிஷ் பெயர். என் பெயர் ரம்யா!" என்றாள்.

"ஷ்ஷ்ஷ்..." என்றபடி உதட்டைக் கடித்தவன், "சாரி, உங்க பெயர் ஞாபகம் இல்லை. எப்படியோ உங்க சமையலை வைச்சு நான் உங்களை ஐடெண்டிஃபை பண்றது உங்களுக்குப் பெருமைதானே! நீங்க சமைத்த வெனெடோ சிக்கன் நிஜமாவே வெனிஸ்ல சாப்பிட்ட மாதிரிதான் இருந்தது..." என்றான்.

லேசாய்ச் சிரித்து, "தேங்க்ஸ்..." என்றவளிடம், "நீங்க எப்படி இங்கே?" என்று விசாரித்தான்.

"எங்க ஹோட்டலை ரெப்ரசண்ட் பண்ணி என் கஸின் வந்திருக்கான். நான் அவன் கூட வந்திருக்கேன்."

"உங்க ஹோட்டல்?"

"ஹ்ம்ம்... அமாத்யர் ஹோட்டல்ஸ் & ரெஸ்டா ரண்ட்ஸ் தெரியுமா! அது எங்க ஃபேமிலி ஹோட்டல்."

"வாவ்... ரொம்பப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணா இருக்கீங்க... ஆனாலும் கொஞ்சம் கூடப் பந்தா இல்லாமப் பேசுறீங்க!"

"ஹோட்டல்ஸ் என் தாத்தாவோடது. என்னோடது இல்லை."

"ஹ்ம்ம்..." எனத் தலையாட்டிச் சிரித்தவன், "இண்ட்ரெஸ்ட்டிங்..." என்றான்.

அதற்குள் அஷ்வத் அழைக்கவும், அருகே ஓடியவளைத் தொடர்ந்து தானும் நடந்தான், சதிஷ்.

"பை சான்ஸ், இது உங்களோட குழந்தையா?"

"ஹய்யோ... எனக்கு இன்னும் கல்யாணமே ஆகல. இவன் என் கஸினோட பையன்."

"ஓ! அப்போ நான் உன்னை வா, போன்னு கூப்பிட லாம் போல. பார்க்க ரொம்பச் சின்னப் பொண்ணா இருக்க..."

"....." - உதட்டைக் கடித்தபடி மௌனமானாள்.

"கேம்பைன் எப்படி இருக்கு?" - என்றான் சதிஷ்.

"ரொம்ப போரிங்கா இருக்கு. இன்னும் ஒரு வாரத்துக்கு அட்டெண்ட் பண்ணியே ஆகணும்னு தாத்தா ஆர்டர் போட்டுட்டார். என்ன பண்ணித் தப்பிக்கலாம்னு யோசிச்சிட்டு இருக்கேன்."

"நோ... நோ. இன்னிக்கு இன்ட்ரொடக்ஷன்ங்கிற தால போரிங்கா தெரியுது. மத்தபடி நாளையிலிருந்து ரொம்பவே இண்ட்ரெஸ்ட்டிங்கா போகும். ஒவ்வொரு ஹோட்டல்ஸும் தினம் ஒவ்வொரு தீம்ல ஃபுட் பிரசண்ட் பண்ணுவாங்க. கேம்ஸ், டான்ஸ்-னு என்டர்டெயின்மெண்ட்



ஃபேக்டர்ஸும் நிறைய இருக்கு. மிஸ் பண்ணிடாதே. உனக்கு இது ஒரு நல்ல எக்ஸ்பீரியன்ஸா இருக்கும்..."

"ஹ்ம்ம்... நீ... நீங்களும் ஒரு வாரத்துக்கும் வருவீங்களா?"

"ம்... ஆமா. என் ஹோட்டல் ரெப்ரசண்ட் பண்ணி நாங்க ஐந்து பேர் வந்திருக்கிறோம்."

"ஓ... நீங்க எத்தனை வருஷமா செஃப்-ஆ இருக்கீங்க?"

"நாலு வருஷமா..."

"உங்க ஃபேமிலி உங்களை சப்போர்ட் பண்ணு றாங்களா?"

"இல்லவே இல்லை. டெக்ஸ்டைல்ஸ்தான் என் ஃபேமிலி பிசினஸ். ஸ்ரீ மீனாட்சி டெக்ஸ்டைல்ஸ் கேள்விப்பட்டிருக்கியா? அடிக்கடி விளம்பரத்துலலாம் கூட வருமே...?"

"சினேகா ஆட் தானே? பார்த்திருக்கேன். அது உங்க கடைதானா?"

"ஹ்ம்ம்... அதேதான்."

"அவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்... எப்படி? எப்படி உங்களை இந்த வேலைக்கு அனுமதிச் சாங்க?"

"நீ ஒரு பதில் சொன்னியே... பிசினஸ் என் தாத்தா வோடது. என்னோடது இல்லைன்னு... அதைச் சொல்லித் தான் நானும் வெளியே வந்தேன்."

"வீட்டை எதிர்த்துச் சண்டை போட்டுட்டு வந்துட் டீங்களா?"

"ஹா... ஹா... அதெல்லாம் சினிமாலதான் நடக்கும். எனக்குப் பிடிச்ச விசயத்தை வாழ்க்கையில் ஒரு முறையாவது முயற்சி பண்ணி வெற்றியடைஞ்சுக்கிறேன். அதுக்கப்புறம் நீங்க என்ன சொன்னாலும் கேட்கிறேன்னு என் அப்பாகிட்ட சொன்னேன். இரண்டு வருசம் மட்டும் வேலை பார்க்க அனுமதி கொடுத்தார். அதை நாலு வருசமா இழுத்தடிச்சு என் வண்டியை ஓட்டிட்டு இருக் கேன். இந்த ஓட்டத்துக்கு எப்போ எங்கப்பா ஃபுல் ஸ்டாப் வைப்பாருன்னு எனக்கே தெரியலை..."

"ஹ்ம்ம்... பணக்காரக் குடும்பத்துல பிறக்கிறதும் ஒரு விதத்துல சாபம்தான் இல்ல! நினைச்சது எதையும் சுலபமா செய்ய முடியறதில்லை..."

"வாழ்க்கையில எதுவுமே ஈசி இல்ல..."

"ஹ்ம்ம்... அவ்ளோ பெரிய குடும்பத்திலிருந்து வந்திருந்தாலும், நீங்களும் கூட எந்தப் பந்தாவும் இல்லாமதான் பழகுறீங்க.. இண்ட்ரெஸ்டிங்..." என்றாள் அவள், அவனைப் போலவே.

கடகடவெனச் சிரித்தவன்... தன் தட்டு காலியாகி விட்டதை உணர்ந்து, "சரி. நான் கிளம்பட்டுமா?" என்றவன், நின்று, "நாளைக்கும் வருவதானே?" என்று விசாரித்தான்.

"ம்ம்..." என்று தலையாட்டியவள், "செஃப் அவ்ளோ சொன்னப்புறம் வராம இருப்பேனா? ஒருவேளை



நாளைக்கும் எனக்கு இண்ட்ரெஸ்டிங்கா தெரிய லேன்னா... இங்க வீணாகிற என் பொன்னான மணிக் கூறுகளை எல்லாம் நீங்கதான் திருப்பித் தரணும்..." என்றாள்.

"கண்டிப்பா..." என்று சிரித்தவன், "பை..." சொல்லிக் கிளம்பி விட்டான்.

அவனுக்காகவே, அந்தச் சிரிப்பிற்காகவே, அந்த வாரம் முழுதும் கேம்பைனுக்குச் சென்றாள், ரம்யா.

"பழனி... நாயே! எங்கேடா இருக்கே? இன்னிக்கு லோடு வந்து இறங்குறதா முத்து ஃபோன் பண்ணி னாரே? கேன் எல்லாம் கொண்டு போய் குடௌன்ல போட்டுட்டியா?"

"என் பேரு பழனி நாய் இல்லை... வெறும் பழனி."

"இப்போ அதுவாடா முக்கியம்? நாயே... நாயே..."

"வாட்டர் கேனை எல்லாம் எடுத்தாச்சு. மினி வேன்ல குடௌன்க்கு ஏத்திட்டுப் போயிட்டிருக்கேன்."

"டேய், அந்தப் பார்வதம் மாமி ஃபோன் பண்ணுனாங்கடா. அவங்களுக்கு இரண்டு கேன் வேணுமாம். நீ போய்ப் போட்டுடுறியா?"

"எனக்கென்ன நாலு கையும், நாலு காலுமா இருக்கு? இப்போதான் கே.கே.நகர்ல இருந்து கிளம்பியிருக்கேன். நான் வர்றதுக்குக் குறைஞ்சது ஒன்றரை மணி நேரமாகும். இதுக்குத்தான் இன்னொரு

ஆளை வேலைக்குச் சேர்த்துக்கங்கன்னு சொல்றேன். எங்க கேட்கிறீங்க?"

"நீ எனக்கு ஐடியா கொடுக்கிறதை நிப்பாட்டுனாலே என் பிசினஸ் உருப்பட்டுடும்டா..."

"இந்த வேலையை விட்டு விலகினாலே நான் உருப்பட்டுடுவேன்."

"எதிர்த்துப் பேசாம, மாமி வீட்டு அட்ரஸை மெசேஜ் அனுப்பி வை. நானே டெலிவரிக்குப் போறேன்..." என்றவன் ஃபோனைக் கட் செய்தான். இந்தப் பயலோட போராடியே, என் பிசினஸ் மைண்ட்ல பாதி மழுங்கிப் போயிடும் போல... புலம்பியபடி இரண்டு கேன்களை வண்டியில் கட்டிக் கொண்டு பறந்தான்.

வழியில் சிக்னலில் காத்திருக்கையில் அருகில் நின்றிருந்த காரிலிருந்து இறங்கினர் ப்ரியாவும், அவளது தந்தையும்.

ப்ரியாவைக் கண்டதும் வேகமாக ஹெல்மட்டைக் கழற்றியவன், கூடவே இறங்கிய அவளது தந்தையைக் கண்டு வேகமாக முகத்தை மறைத்துக் கொண்டான்.

அதற்குள் அவனைக் கண்டு கொண்ட நடராஜன், "டேய்... ஹரி..." என்று அழைத்தார்.

"ஹ... ஹலோ அங்கிள்!" என்றவன், தயங்கிய படியே வண்டியை உருட்டிக் கொண்டு அருகே வந்தான்.

"எப்படிடா இருக்க? அப்பா நல்லா இருக்காரா? நீ காலேஜ் பக்கமே போறதில்லைன்னு தினம் புலம்பிட்டிருக்



கான் உங்கப்பன். இப்போவாவது காலேஜ் போறியா? இன்னும் ஒன்றரை மாசம் தானேடா படிப்பெல்லாம்? ஒழுங்காப் போனாத்தான் என்னவாம்?" என்று திட்ட...

எரிச்சலுடன் ஹெல்மட்டைக் கையில் எடுத்தவன், "இதுக்குத்தான் என்னைக் கூப்பிட்டீங்களாக்கும்? அட்வைஸ் எல்லாம் உங்க பொண்ணுக்குப் பண்ணுங்க. என்னை விடுங்க. நான் கிளம்புறேன்..." என்று கூற,

"டேய், டேய்! இருடா..." என்றவர், "அதுக்குள்ள என்ன கோபம் வருது உனக்கு? இறங்கு. சாப்பிட்டுப் போகலாம். எங்கே... வாட்டர் சர்வீஸுக்குக் கிளம்பிட்டியா? இன்னும் இரண்டு பசங்களை வேலைக்குச் சேர்த்துக் கிறதுல என்னடா வந்துச்சு உனக்கு? நீயே வாட்டர் கேனைத் தூக்கிட்டு அலைஞ்சிட்டிருக்க!" என்றார்.

"ஆமாம். லாபம் அப்படியே கொட்டுது பாருங்க. நாலு பேரை வேலைக்குச் சேர்த்துக்கிட்டா யார் அங்கிள் சம்பளம் கொடுக்கிறது?"

"அது உன் சாமர்த்தியம்தான்டா. உன் தாத்தா இப்படிச் சலிச்சுக்கிட்டு இருந்திருந்தா இவ்ளோ தூரம் முன்னேறியிருக்க முடியுமா?"

"சரி. பிளேடு போடாதீங்க. இப்போ நான் சாப்பிட ணுமா, வேணாமா?"

"சரி சரி. உட்காருடா..." என்று அவனை அமர வைத்தவர், மேலும் பல கதைகளைப் பேசத் தொடங் கினார்.

மூவரும் உண்டு முடித்ததும், "சரிம்மா. நீ ஹரி கூட வீட்டுக்குப் போயிடுறியா? நான் இப்படியே ஃபேக்டரிக்குக் கிளம்புறேன்..." என்று வினவினார் மகளிடம். அவள் சரியென்றதும், ஹரியிடம்... "பொறுப்பா காலேஜை முடிடா. காலாகாலத்துல கல்யாணம் பண்ணிக்கிட்டு நீயும் ஷ்யாம் மாதிரி பிள்ளை குட்டின்னு செட்டிலாகணும். புரியுதா?" என்று வினவ...

"ஹி... ஹி..." என வழிந்தபடியே, தலையாட்டி வைத்தான், ஹரி.

"மாமனார் இப்பவே ரொம்ப சப்போர்ட் இல்ல? நீ கொடுத்து வைச்சவன்டா, ஹரி!" என்று கூறியபடி திரும்பி ப்ரியாவை நோக்கினான்.

அவள் காது கேளாதது போல் எங்கோ பார்க்க... தோள் குலுங்கச் சிரித்தவன், "நீ இங்க வெயிட் பண்றியா? நான் இந்தக் கேனை டெலிவரி பண்ணிட்டு வந்து அழைச்சிட்டுப் போறேன்..." என்றான்.

அவள், "ஹ்ம்ம்..." என்றதும், வண்டியை எடுத்துக் கொண்டு பறந்தவன் பத்து நிமிடத்தில் அவள் முன்பு நின்றான்.

"ஏறிக்கிறியா?"

"ஹ்ம்ம்..."

"என் தோளைப் பிடிக்காம, கம்பியைப் பிடிச்சு உட்கார்."

கோபத்துடன் முறைத்தவளை ரியர் வியூ மிர்ரரில் கண்டு சிரித்தான்.



"கிளம்பட்டுமா?"

"ஹ்ம்ம்... ஓ.கே."

வண்டி வேகமெடுத்ததும்... இருவருக்கும் வானில் பறக்கும் உணர்வு தோன்றியது. புன்னகையைத் தாங்கியிருந்த இருவரது முகங்களிலும் புதிதாய் ஒரு வெட்கம்.

"இதுதான் நம்மளோட முதல் பைக் பயணம் இல்ல?" என்றான் ஹரி.

"இல்லை. நான் பன்னிரண்டாம் வகுப்புப் படிக்கும்போது, உங்க வீட்டுக்கு ரம்யா கூட குரூப் ஸ்டடி பண்ண வந்தப்போ... நைட் லேட்டாகிடுச்சுன்னு அங்கிள் உங்க கூடத்தான் என்னை வண்டியில் அனுப்பி வைச்சார்."

"ஆமாமாம். எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. உனக்கும் நினைவிருக்கான்னு டெஸ்ட் பண்ணேன். ஹிஹி..."

நாக்கைத் துருத்தி அழகு காட்டியவளை மீண்டும் ரியர் வியூ மிர்ரரில் பார்த்துச் சிரித்தான், ஹரி.

"இப்போ நீ கண்டிப்பா வீட்டுக்குத்தான் போகணுமா?"

"ஆமாம். பின்னே?"

"முதன் முதலா உன் லவ்வர் கூட ஊர் சுத்த உனக்கொரு வாய்ப்புக் கிடைச்சிருக்கு. அதை இப்படி வேஸ்ட்டாக்கப் பார்க்குற?"

"லவ்வரா... யாரு?"

"அடிப் பாவி. நான்தான்!"

"அஃபிஷியலா டிக்ளேர் பண்ணாதவங்களை யெல்லாம் நான் கணக்குல சேர்க்கிறதா இல்லை. இப்போ நான் என் எதிர் வீட்டு ராஜேஷை சின்சியரா சைட் அடிச்சிட்டு இருக்கேன்."

"என்ன சொன்ன? ராஜேஷா! எவன் அவன்? அநாவசியமா நீ என்னைக் கடுப்பேத்தினதுக்காக இப்போ நான் உன்னைப் பீச்சுக்குக் கடத்தப் போறேன்."

"எ...என்ன சொல்றீங்க?" என்று அவள் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே, வண்டியை வளைத்துத் திருப்பி பெசன்ட் நகர் பீச்சை நோக்கிப் பறந்தான், ஹரி.

கடல் காற்றில் பறந்த கூந்தலைக் கைகளால் அடக்க முயன்றபடி, வண்டியை விட்டிறங்கிய ப்ரியா, "இங்கே ஏன் என்னைக் கூப்பிட்டு வந்தீங்க? அப்பா வுக்குத் தெரிஞ்சா என்ன ஆகும்?" என்றாள்.

"என் வேலை மிச்சமாகும்."

"விளையாடாதீங்க, ஹரி..." - சிணுங்கியவளிடம், "எ... என்ன சொன்ன இப்போ?" என்றான்.

"விளையாடாதீங்க ஹரின்னு சொன்னேன்."

மறுபுறம் திரும்பிப் புன்னகைத்தவன், "இப்போதான் நீ என் பேர் சொல்லிக் கூப்பிடுறதைக் கேட்கிறேன்..." என்றான்.



சிவப்பாய் மாறிவிட்ட முகத்தை மறைக்க எண்ணிக் கடலை நோக்கி நடந்தாள் ப்ரியா.

"தண்ணியில கால் நனைக்க வேண்டாம். அப்புறம் அம்மா எங்கே போன... யார் கூடப் போனன்னு விசாரிப்பாங்க."

"ஓ.கே. ஹ்ம்ம்... லவ் பண்றதும் கஷ்டம்தான் போல. ஏகப்பட்ட பொய் சொல்லணும் போலவே!"

சிரித்தபடி அவள் தலை குனிகையில் அவளது செல்போன் அடித்தது.

"அய்யோ... ரம்யா கூப்பிடுறா!"

"ச்சீ... அவளுக்கெல்லாம் பயப்படுவியா என்ன?" என்றவன், அவள் கையிலிருந்த செல்போனைப் பிடுங்கி, "ஹலோ!" என்றான்.

ஆண் குரலைக் கேட்டு மறுமுனையில் குழம்பிப் போன ரம்யா மீண்டும், "ஹலோ!" என்றாள்.

"இன்னும் எத்தனை தடவை ஹலோ சொல்லுவ? மக்கு.... மக்கு..."

"ஹ... ஹரி... டேய், நீ எப்படிடா ப்ரியா ஃபோனை அட்டெண்ட் பண்ணுற? ஏய்... ப்ரபோஸ் பண்ணிட்டியாடா தடிமாடே? என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லல? யாஹ்ஹூ..." என்று கத்திக் கும்மாளமிட்டாள் ரம்யா.

"ஏய்... குதிக்காதேடி... இன்னும் நான் ப்ரபோஸ் பண்ணவே இல்லை."

"பின்னே?"

"பின்னே என்னன்னு... என் பக்கத்துல வெட்கப் பட்டுட்டு நிக்குற உன் ஃப்ரெண்ட்கிட்டதான் கேட்கணும்."

"என்னடா குழப்புற?"

"அதெல்லாம் உனக்குப் புரியாதுடி, கொரில்லா. டிஸ்டர்ப் பண்ணாம ஃபோனை வை. அப்புறம் பேசு றேன்..." என்றவன், ஃபோனைக் கட் செய்தான்.

ஃபோனை அவளிடம் நீட்டியவனின் முகம் பார்க் காமல் வாங்கிக் கொண்டவள்... மறுபுறம் திரும்பினாள்.

"கொஞ்சம் இந்தப் பக்கம் திரும்பியும் வெட்கப் படலாம்ல? உன் தலை முடி அழகா இருக்குதான். ஆனாலும் அதையே எவ்ளோ நேரம் பார்க்கிறது? சிவந்து போகிற உன் முகத்தைப் பார்க்கணும்னு எனக்கு ஆசை இருக்காதா?"

கண்களை அழுந்த மூடிக் கொண்டு இரண்டடி வேகமாய் எடுத்து வைத்தவள்... சட்டெனத் தடுமாற,

"ஏய்... ஏய்..." என்று அருகே வந்தவன்... அவளைத் தன் மீது தாங்கினான்.

படபடப்புடன் விலகப் பார்த்தவளை மேலும் தன்னருகே இழுத்துக் கொண்டவன்... அவள் காதருகே குனிந்து, "இப்போ... இந்த நிமிசம் என் மேல சாய்ந் திருக்கிற உன்னை விலக்கி நிறுத்தாம... என் கூடவே அணைச்சுக்கணும்னு மனசு சொல்லுது. நிகழ் காலத்தை



மறந்து, எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப்படாம, உன்னை இப்படியே கூட்டிட்டு ஆளில்லாத தீவுக்கு ஓடிடணும் போல இருக்கு..." என்று கூற...

இமைக்க மறந்து அவனையே விழி விரிய நோக்கினாள் ப்ரியா.

சிரிப்புடன் அவளை விலக்கி நிறுத்தியவன், "ஏகப்பட்ட ஆசை மனசு முழுக்க இருக்கு. அதை யெல்லாம் உன்கிட்ட வெளிப்படுத்தப் போகிற நாளை ரொம்ப ஆர்வமா எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன் நான்..." என்றான்.

மௌனமாய்த் தலை குனிந்தவள் மெல்ல அவனருகே வந்து நெருங்கி நிற்க... புன்னகையுடன் அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு வண்டியை நோக்கி நடந்தான் ஹரி.

# 5

## *The Proposal*

**அதுவரை கவிதை வழியாக மட்டுமே மனசுல இருக்கிறதை வெளிப்படுத்திட் டிருந்த எங்கள் இருவருக்குமிடையில் அன்று பயங்கர காரசாரமான வாக்குவாதம்!**

**"மனசுல இருக்கிறதை வெளிப்படுத்தத் தெரி யாதவன் மனுசனா இருந்து ஒரு பிரயோஜனமும் இல்லை. உன் கூடப் பழகணும்னா சாப்பாட்டுல உப்புப் போட்டு சாப்பிடக் கூடாது." – கோபமாய் நான்.**

"வாழ்க்கையில நிறைய விசயங்கள் தப்பான வழிக்குப் போகாம இருக்கனும்னா சாப்பாட்டுல உப்பைக் குறைச்சிக்கிறது தப்பில்லைன்னு என் தாத்தா சொல்லியிருக்கார்..." – பொறுமையாய் அவன்.

எரிச்சலுடன் செல்ஃபோனைத் தூக்கி எறிந்தேன் நான்.

மறுநாள் முழுக்க விடாமல் அவனிடமிருந்து அழைப்பு. நான் கண்டு கொள்ளவில்லை.

அன்றிரவு, "தயவு செஞ்சு பேசு ப்ளீஸ்..." என்று கெஞ்சியவனிடம்,

"என்ன?" என்று கோபமாய் நான் கேட்டதற்கு அவன் பதில் அளித்தான்.

"உன்னை ஃப்ரெண்ட் ஸ்தானத்துல வைச்சு இனிமே பார்க்க முடியும்னு எனக்குத் தோணலை..."

அவன் முடித்ததும் செல்போனைத் தலையணைக் கடியில் போட்டு விட்டுப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டேன் நான். மனம் மணிக்கு 800 கி.மீ. வேகத்தில் வானில் ஜிவ்வெனப் பறக்கத் தொடங்கி யிருந்தது.

அந்த மெசேஜைப் பத்து நிமிடத்தில் பத்தாயிரம் தடவை நோக்கி விட்டு நான் கொடுத்த, "இப்போ நான் என்ன பண்ணனும்?" என்ற பதிலுக்கு அவன் அளித்த புன்னகை. இன்னும் என் மனத் திரையில்...

ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...



அன்று மெரிடியன் ஃபுட் கேம்பெய்னின் கடைசி நாள்.

தோள் பையை இறுகப் பற்றிக் கொண்டு விறுவிறு வெனப் படியேறி வந்த ரம்யாவை வாசலிலேயே எதிர் கொண்டான், சதிஷ்.

"குட் ஈவினிங்!" என்றவனுக்குப் பதிலாய் ஹாய் சொல்ல வந்தவள்... மூச்சு வாங்க நிற்க...

"ஏன்... ஏன் இப்படி மூச்சு வாங்குது... ஓடி வந்தியா?" என்றான்.

"ஹ்ம்ம்.... ஷ்... ஷ்யாம் என்னை என்ட்ரன்ஸ்ல விட்டுட்டுப் போயிட்டான். லேட்டாயிடுச்சுன்னு அங்கே இருந்து ஓடி வர்றேன்..." என்றவளிடம், வேகமாய் ஓடிச் சென்று தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்து கொடுத்தான்.

கேம்பெய்ன் நடந்த அந்த ஏழு நாட்களில் இருவருடைய நட்பும் வெகுவாக வளர்ந்திருந்தது. ஃபோன் நம்பர் பரிமாற்றத்திலிருந்து தொடங்கி, 'எனக்குப் பெயிண்ட்டிங்கில் ரொம்பவும் இன்ட்ரெஸ்ட்... எனக்குக் கிட்டார்னா உயிர்...' என்பதுவரை தங்களுடைய உணர்வுகள் அனைத்தையும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

அன்று கடைசி நாள் என்பதும், இதன் பின்பு ஒருவரை ஒருவர் எப்படிக் காண்பது என்பதும், இருவருக்கும் பெருங்கவலையாக இருந்தது. ஒருவர் மனதில் இருப்பதை மற்றவரிடம் வெளிப்படுத்த முடியாமல் தயங்கியபடி அமர்ந்திருந்தனர் இருவரும்.

வந்ததிலிருந்து நெளிந்தபடியே அமர்ந்திருந்த ரம்யா, ஐந்தாவது முறையாகச் சீட்டிலிருந்து அசைய... அவள் புறம் திரும்பிய சதிஷ், "ஆர் யூ ஓ.கே.?" என்று வினவினான்.

"ஹாங், ஐ அம் ஓ.கே! ஒ... ஒன்னும் பிரச்சனை யில்லையே?"

"வந்ததிலிருந்து அன்கம்ஃபர்ட்டபிளா இருக்க... என்னாச்சு?"

"இ...இல்லையே... இ... இந்தச் சேர் கொஞ்சம் அன்கம்ஃபர்ட்டபிளா இருக்குன்னு நினைக்கிறேன்."

"அப்படியா! இந்தச் சேர் யூஸ் பண்றியா?" என்று எழப் பார்த்தவனின் கரம் பற்றி வேகமாகத் தடுத்தவள், "இல்லையில்ல... பரவாயில்ல. நீங்க உட்காருங்க..." என்றாள்.

தன் கரத்தின்மீது பதிந்திருந்த அவள் கரத்தை ஒரு முறை நோக்கியவன், அதில் தன் ஐந்து விரல்களையும் பதித்து, "நீ சொன்னா சரிதான்..." என்றான்.

அசடு வழிந்தபடி புன்னகைத்தவளின் பார்வையில் அவன் கைகளில் சிக்கியிருந்த தன் கரம் பட... வேகமாய் இழுத்துக் கொள்ள முயன்றாள். அவள் முயற்சியைக் கண்டு கொண்டு அவள் புறம் திரும்பியவன்,

"ஏன் பிடிக்கலையா?" என்றான்.

பதிலின்றி எதிரே தெரிந்த சுவரை நோக்கிக் கொண்டிருந்தவளிடம்...



"எனக்குப் பிடிச்சிருக்கு..." என்றவன், அதன் பின்பு அவள் கையைப் பற்றியதையே மறந்தவன் போன்று, விழாவில் மூழ்கிப் போனான்.

ஒரு மணி நேரம் கழித்துக் கை நோகத் தொடங் கியதும்...

மெதுவாக அவன் தோளைத் தட்டியவள், "கை... கை வலிக்குது..." என்று கூற,

அவசரமாய் விடுவித்தவன், "சாரி, சாரி... சாரி ரம்யா! ரொம்பவும் வலிக்குதா?" எனக் கேட்டு, அவள் கரத்தை நீவினான்.

கூச்சத்தில் நெளிந்தவள், "ப... பரவாயில்லை...." என்று கூற,

"வெரி சாரி ரம்யா... இன்னிக்குத்தான் கடைசி நாள் காம்பெய்ன். இனி எப்போ போர்க்கப் போறோ மோன்னு ஒரு வேகத்துல உன் கை பிடிச்சிட்டே உட்கார்ந் துட்டேன். ரொம்ப சாரி!" என்றான்.

அவள் பதில் கூறாமல் அமைதியாய் அமர்ந் திருக்கவும், "அப்போ இதுதான் கடைசியா?" என்று வினவி னான்.

அப்போதும் பதில் பேசாதிருந்தவளை ஒரு மாதிரி நோக்கியவன், "எக்ஸ்ப்ரெஸ் பண்றதுல நீ ஜீரோ ரம்யா!" எனக் கூறி எழுந்து சென்றான்.

லூசு, லூசு ரம்யா... என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டு, அவன் பின்னே எழுந்து ஓடியவள், ஆளரவ

மற்ற காரிடாரிலிருந்த ஜன்னல் அருகே நின்றிருந்த வனின் பின்னே சென்று அமைதியாக நின்றாள்.

"உனக்கு இந்த மாதிரி எந்த ஹார்ட் ஃபீலிங்ஸும் இல்லையா? ஒருத்தரையொருத்தர் மீட் பண்றதுக்கு இனி வாய்ப்புக் கிடைக்குமா... கிடைக்காதா? இனி எப்போ பார்ப்போம்... எப்படிப் பார்ப்போம்? இப்படி எதுவுமே தோணலையா?"

"......"

"ஆனா, எனக்குத் தோணுது. இன்னிக்குத்தான் உன்னை நான் கடைசியாப் பார்க்கப் போறேன்னு நினைச்சா... 'ஓ...'ன்னு அடைச்சுகிட்டு மனசுல ஒரு துக்க உணர்வு உருவாகுது. அது ஏன்னு எனக்குச் சத்தியமாத் தெரியலை...

"......"

"பதில் பேசு, ரம்யா... நீ என்ன நினைக்கிறன்னு உன் மனசைத் திறந்து என்னால பார்க்க முடியாது."

"......"

"சரி. நான் கிளம்புறேன். எப்போதாவது என் நினைப்பு வந்தா... என் நம்பர்க்கு ஒரு மெசேஜ் அனுப்பு..." என்று கூறி முடித்தவன் நகரப் பார்க்க...

'வாயில கொழுக்கட்டைய வைச்சு அடைச்ச மாதிரி இப்படியே நிக்கிறியேடி ரம்யா... இப்போ மட்டும் ஹரி உன்னைப் பார்த்தா... இந்த அமைதிச் சிலை நீதானான்னு கேட்டுக் கேலி பண்ணியிருப்பான். கம்



ஆன் ரம்யா!' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள், வேகமாய்க் கை நீட்டி அவனைத் தடுத்தாள்.

"நான்... நான்..." - என்ன சொல்வதென்று தெரியாமல் இழுத்தவளைக் கையைக் கட்டி நின்று கொண்டு வேடிக்கை பார்த்தான் சதீஷ்.

"நீ... நீங்க சொன்ன மாதிரி நான் எக்ஸ்ப்ரஸ் பண்றதுல ரொம்ப வீக். இ... இப்போ உங்க கிட்ட என்ன பேசணும்னு கூட எனக்குச் சரியாத் தெரியல. நீ... நீங்க சொன்னீங்களே... சம்திங் மனசுல அடைச்சுக்கிட்டு... சோ... சோகமா... ஏதோ... எ... எனக்கும் கூட சேம் ஃபீலிங்... அதாவது வந்து..." என்றவள்... நிறுத்தி, அவன் முகம் பார்த்து, "சொதப்புறேனா?" என்று வினவினாள்.

அவள் முக பாவனையும், அவள் கேட்ட விதமும் சிரிப்பூட்ட... கடகடவென நகைத்த சதீஷ் அவள் நெற்றியில் முட்டி, "மை ஸ்வீட் ஏஞ்சல்!" என்றான்.

இதயம் படபடத்து முகம் சூடாகி விட... அவனை விட்டு இரண்டடி தள்ளி நின்று கொண்டவளிடம்...

"எனக்கு ஒரே ஒரு விஷயம் மட்டும் தெரியணும். நாம இனிமே வெளியே மீட் பண்ண முடியுமா, முடியாதா?"

"முடியும்." - பட்டெனப் பதில் வந்தது, ரம்யாவிட மிருந்து.

"உன் தாத்தா திட்டுவார்னு வராம இருக்க மாட் டியே?"

"ம்ஹூம். நான் அவரை ஏமாத்திடுவேன்..." என்று கண்ணடித்தவளின் அருகே வந்து கன்னம் பற்றியவன்...

"எனக்கே என் மனசுல இருக்குற எதுவும் இன்னும் தெளிவாப் புரியல. புரிய வரும்போது... உனக்கும் எனக்கும் இடையில இருக்கிற இந்த நாலு மீட்டர் இடைவெளியும் இல்லாமப் போயிடும்னுதான் நான் நினைக்கிறேன்..." என்றான்.

புரியாமல் விழித்துக் கொண்டு நின்றிருந்தவளிடம், "இன்னொரு நாள் பார்க்கலாம்!" எனக் கூறி விட்டு நகர்ந்து சென்றிருந்தான் அவன்.

அன்று தன் கடைசிப் பரிட்சையை முடித்திருந்த ஹரி ஏகத்துக்கும் குஷியாகி யிருந்தான். இனி, கல்லூரி இல்லை. புத்தகங்கள் இல்லை. அவனைக் கொலை வெறியாக்கும் எக்ஸாம்ஸும் இல்லை. கடைசி நேரத்தில் படித்தாலும் பார்டரில் பாஸாகி விடும் வித்தையை அவன் அறிந்து வைத்திருந்தபடியால் எப்படியும் டிகிரி வாங்கி விடலாம் என்று நம்பிக்கையுடன் இருந்தான்.

இனி என்ன? தாத்தாவின் பர்மிஷனுடன் ஹோட்டலைக் கைப்பற்றி... ப்ரியாவின் கரம் பற்றுவதுதான் பாக்கி. ஹா! வாழ்க்கை இப்படியே தெளிந்த நீரோடையாக... ஒரே திசையில் தொய்வின்றி ஓடிக் கொண்டேயிருந்தால்... எவ்வளவு நன்றாக இருக்கும்!

வண்டியை நிறுத்தி விட்டு வீட்டுக்குள் நுழைந்தவன், "அத்தை, காஃபி!" என்று குரல் கொடுத்தான்.



அடுக்களையிலிருந்து எட்டிப் பார்த்த ரம்யா, "என்னடா தடியா! இப்போல்லாம் உன்னைப் பார்க்க முடியறதேயில்லை..." என்று விசாரித்தாள்.

"ஏய்... எனக்கு எக்ஸாம்ஸ்டி... இன்னிக்குக் கடைசிப் பரிட்சையையும் எழுதி முடிச்சு ஒரு முதுகலைப் பட்டதாரியா நான் உன் முன்னாடி நின்னுட்டிருக்கேன்."

"நீ எப்பவும் முதுகு வலிப் பட்டதாரிதான்டா!" என்றவளை முறைத்து விட்டு,

"அத்தை... நான் ஒரு காஃபி கேட்டேன்..." என்று குரல் கொடுத்தான்.

"ஏய் தள்ளுடி... நான் உள்ளே போகணும்."

"போகலாம். அதுக்கு முன்னாடி என் ஃப்ரெண்ட் ப்ரியாவை நீ என்ன பண்ணன்னு சொல்லு."

"நான் ஒன்னுமே பண்ணலையே!"

"நீ இப்போ என்கிட்ட உண்மையைச் சொல்லாம... ஒரு அடி கூட நகர முடியாது..." - இரண்டு கைகளால் அடுக்களை வாசலை அடைத்துக் கொண்டு நின்று அவனைத் திமிராக நோக்கினாள்.

"ஏய் தள்ளு... லூசு, தள்ளுடி..." என்றவன், குனிந்து, அவள் கைக்கும் தரைக்கும் இருந்த இடைவெளியில் நுழைந்து விட்டான்.

"ஹரி, வந்துட்டியாடா?" என்று வாஞ்சையுடன் அழைத்த லட்சுமியிடம் சென்று, "இப்போதான் வந்தேன்

அமுல் டின். நீ என்னை மிஸ் பண்ணியா?" என்று கேட்டபடியே, அவன் கட்டிக் கொள்ள... உதட்டைப் பிதுக்கினாள், ரம்யா.

"பரிட்சையெல்லாம் முடிஞ்சிடுச்சுல்ல, கண்ணு?"

"ஓ! முடிஞ்சிடுச்சு."

"பாஸாயிடுவதானே?"

"ஏன் அத்தை, அசிங்கப்படுத்துற? இதுவரைக்கும் நான் அரியர் வைச்சதா சரித்திரமே இல்லை. அடிச்சுப் பிடிச்சாவது பார்டர்ல பாஸாயிடுவேன்... தெரியும்ல?"

"சரி, சரிடா கண்ணு. நீ அறிவாளிதான். அடுத்து என்ன பண்ணுறதா இருக்க?"

"அத்தை, என்ன மறந்துட்டியா? நான் படிப்பு முடிச்சதும் நம்ம பழைய ஹோட்டலை எனக்கு எழுதித் தர்றதா தாத்தா வாக்குக் கொடுத்திருக்கார். இன்னிக்கு என் எக்ஸாம்ஸ் முடியுதுன்னு அவருக்குத் தெரியும். அவரே என்னைக் கூப்பிடுவார் பாருங்க..." என்று அவன் கூறிக் கொண்டிருக்கையிலேயே...

"ஹரி, உன்னைத் தாத்தா கூப்பிடுறார்டா..." என்று அழைத்தாள் ஷ்யாமின் மனைவி, சங்கீதா.

"பார்த்தியா?" என்று அத்தையிடம் கண்ணைக் காட்டியவன், "இதோ வர்றேன் அண்ணி...!" என்று ஓடினான்.

"நிஜமாவே தாத்தா கூப்பிடுறாராம்மா?" என்று வியந்த ரம்யா, தானும் அவன் பின்னேயே ஓடினாள்.



தாத்தாவின் அறைக்குள் நுழைந்த ஹரி, "வரச் சொன்னீங்களாமே?" என்று கேட்டபடியே சென்றமர்ந்தான்.

"எக்ஸாம்ஸ் எல்லாம் முடிஞ்சதா?"

"ம்... முடிஞ்சிடுச்சு."

"நல்லா பண்ணியிருக்கியா?"

"பாஸாயிடுவேன்."

"ஹ்ம்ம்... அடுத்து ஒரு ஆறு மாசத்துக்கு உன் அண்ணனோட சேர்ந்து நம்ம ஹோட்டலுக்குப் போய்த் தொழில் கத்துக்க..." என்று அவர் முடித்து விட,

கோப மூச்சொன்றை வெளியிட்டபடி ஒரு நிமிடம் அமைதியானவன், "நான் படிப்பு முடிச்சதும் பெசண்ட் நகர் ஹோட்டல் பொறுப்பை ஏத்துக்கலாம்னு நீங்க தானே சொல்லிச் சொல்லி வளர்த்தீங்க? இப்போ திடீர்னு அண்ணனோட பிசினஸ் பார்க்கச் சொல்றீங்க!" என்று ஆத்திரத்துடன் வினவினான்.

அவன் கோபத்தைக் கண்டு சிரித்த தாத்தா, "கேட்பாரில்லாம மோசமான நிலையில இருக்கிற அந்தப் பழைய ஹோட்டல் மேல உனக்கு என்னடா பாசம்? அது வெறும் நினைவுச் சின்னம்தான். அதைப் புதுப்பிக்கிற ஐடியால்லாம் எனக்கு இல்லை. அதனால் நான் சொல்றதை மட்டும் செய் நீ..." என்றார்.

"இருபது வருஷமா அந்த ஹோட்டலை நினைச்சு ஒவ்வொரு நாளும் கனவு கண்டு வளர்ந்த என்னை...

நிமிஷத்துல சாகடிக்கிறீங்களே, தாத்தா? இப்படித் திடீர்னு என் ஆசையில மண்ணை வாரிப் போட்டா... எனக்கு எவ்வளவு ஏமாற்றமா இருக்கும்னு கொஞ்சம் கூட நினைச்சுப் பார்க்க மாட்டீங்களா?

"ஹோட்டலைப் புதுப்பிக்கிற ஐடியா உங்களுக்கு வேணா இல்லாம இருக்கலாம். ஆனா, எனக்கு இருக்கு. வெறுமனே அதை அப்படியே விட்டு வைச்சாலும் வைப்பீங்க. உங்க பேரனுக்குத் தர மாட்டீங்க... அப்படித் தானே?"

ஆவேசமாய்த் தன் போக்கில் பேசிக் கொண்டே சென்ற ஹரி, அப்போதுதான் தாத்தாவைத் தான் எதிர்த்துப் பேசிக் கொண்டிருப்பதையே உணர்ந்தான்.

பயந்து அவர் முகம் பார்த்தவன்... அவர் சலன மின்றி அமர்ந்திருப்பதைக் கண்டு, எழுந்து அருகே சென்று அவர் காலடியில் அமர்ந்தான்.

"எனக்கு ஒரே ஒரு சான்ஸ் கொடுங்க, தாத்தா, ப்ளீஸ்!"

"ஹ்ம்ம்.. உன் ஐடியா எல்லாத்தையும் இன்னும் ஒரு வாரத்துல ஒரு ரிப்போர்ட்டா கொண்டு வந்து கொடு. படிச்சுப் பார்த்துட்டுப் பிடிச்சிருந்தா நான் அதைப் பத்தி மேல யோசிக்கிறேன்."

"நி...நிஜமா! நிஜமாகத்தான் சொல்றீங்களா?"

"ஹ்ம்ம்...."



"தேங்க்ஸ் தாத்தா! ரொம்ப... ரொம்பத் தேங்க்ஸ் தாத்தா!" – உற்சாகத்தில் கூவியவன்... சிரிப்புடன் வெளியே வந்தான்.

அறை வாசலில் சுவரோடு ஒன்றிக் கொண்டு பல்லி போல் நின்றிருந்த ரம்யாவைக் கண்டு முறுவலித்தவன்... அவள் தலையைக் கலைத்துத் தோளில் கை போட்டு அருகில் இழுத்து, "என்னடி குள்ளச்சி? ஒட்டுக் கேட்குறியா!" என்றான்.

"டேய்... ஒரு வாரத்துல ரிப்போர்ட் ரெடி பண்ணிடு வியாடா? ஒரு வாரத்துக்கு மேல ஒரு நாள் லேட் டானாலும் தாத்தா ரிஜெக்ட் பண்ணிடுவார்."

"அதுக்கு வாய்ப்பே இல்லை. தாத்தா இப்படிக் கேட்பார்னு தெரிஞ்சு ஏற்கெனவே என் ஐடியாஸை டாக்குமெண்டா போட்டு வைச்சிருக்கேன் நான். அதை ஜஸ்ட் ரிப்போர்ட் வடிவத்துல கொடுக்கணும். அவ்ளோ தான்..."

"சூப்பர்டா ஹரி. உனக்குள்ள ஒரு பிசினஸ் மேக்னட் இருக்கிறது இப்போதான் எனக்குத் தெரியுது."

"அது சரி. என்னை நக்கல் அடிக்கிறதெல்லாம் இருக்கட்டும். நீ என்ன... ஒரு வாரமா காலேஜ் போகலி யாம். ஊர் சுத்தக் கூடக் கிளம்பாம ஃபோனையே முறைச்சுப் பார்த்துக்கிட்டு வீட்டிலேயே இருக்கன்னு பெரியம்மா சொன்னாங்க. என்னடி? என்ன பிளான் போட்டிருக்கே?"

"ஒரு பிளானும் இல்லை. எனக்குப் போரடிக்கிறதால நான் வீட்டில் இருக்கேன். உனக்குப் போரடிச்சா நீயும் வேணா இருந்து பாரு... ரொம்ப ஜாலியா இருக்கு..." என்றவள், அவன் தன்னை உற்றுப் பார்ப்பதைத் தவிர்க்க அறைக்குள் ஓடி விட்டாள்.

அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தியவள், கோபமும், எரிச்சலுமாய்த் தன் மொபைலை நோக்கினாள். முழுதாக நான்கு வாரமாகி விட்டது, கேம்பைன் முடிந்து. பெரிதாய் வசனம் பேசி இன்னொரு நாள் சந்திப்போம் என்றவன், இன்றுவரை அவளுக்கு ஒரு ஃபோன் கூடச் செய்யவில்லை.

தானே அவனுக்கு டயல் செய்து பேசுமளவிற்கு இவளுக்கும் தைரியம் இல்லை. தினம் இதே போல் ஃபோனை முறைத்துப் பார்த்தபடியே நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறாள்.

பெருமூச்சுடன் கட்டிலை விட்டு எழ எத்தனிக்கையில் அவளுடைய ஃபோன் அழைத்தது.

திரையில் ஒளிர்ந்த பெயரைக் கண்டு இதயம் எம்பிக் குதிக்க, ஆர்வத்துடன் காதில் வைத்து, "ஹலோ!" என்றவளுக்குப் பதிலாய்...

"ஹா ஹா... ஒரு ரிங் கூட முழுசாப் போகல, அதுக்குள்ள அட்டெண்ட் பண்ணிட்ட. அவ்ளோ ஆர்வமா என் கால்-ஐ எதிர்பார்த்துட்டு இருந்தியா?" - வழக்கமான சிரிப்புடன் சதீஷின் குரல் ஒலித்தது.



"இ...இல்ல... ஃபோனைக் கையிலதான் வைச்சிருந்தேன். அதனாலதான் உடனே அட்டெண்ட் பண்ணினேன்."

"அப்படின்னா, நீ என்னை மிஸ் பண்ணவே இல்லைன்னு சொல்றியா?"

"அய்யோ! அப்படி இல்ல."

"அப்போ என்னை மிஸ் பண்ற... அப்படித்தானே?"

"ம்ம்ம்."

"ஹா ஹா ஹா... என்னோட ஸ்வீட் ஏஞ்சலை நான் ரொம்ப நாள் காக்க வைச்சிட்டேனா? இனிமே ஒரு நிமிஷம் கூடப் பார்க்காம இருக்க நானும் தயாரா இல்ல, நீ இப்போ எங்கே இருக்கன்னு சொல்லு. நான் உடனே வாறேன்."

"நா... நான் இப்போ வீட்ல இருக்கேன்."

"உங்க வீட்டுக்கு வரட்டுமா?"

"ஹய்யோ, தாத்தா திட்டுவார்."

"அப்படின்னா எங்க வரட்டும்? நீயே சொல்லு."

"ஹ்ம்ம், எக்ஸ்பிரஸ் அவென்யூக்கு வர்றீங்களா?"

"ஓகே. இன்னும் அரை மணி நேரத்துல நான் அங்கே இருப்பேன்," எனக் கூறி அவன் ஃபோனைக் கட் செய்ததும், படுக்கை மீது ஏறித் துள்ளிக் குதித்தாள், ரம்யா.

எக்ஸ்ப்ரஸ் அவென்யூவின் காஃபி ஷாப் ஒன்றில் காத்திருப்பதாகக் கூறியிருந்தான், சதீஷ்.

வண்டியிலிருந்து இறங்கி, ரியர் வியூ மிர்ரரில் முகம் பார்த்துத் தலை முடியைச் சரி செய்து கொண் டவள், மூச்சை வெளியிட்டுத் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு, காஃபி ஷாப்பை நோக்கி நடந்தாள்.

விரல்களால் மேஜையைத் தட்டியபடி கார்னர் சீட்டில் அமர்ந்திருந்த சதீஷும் பரபரப்புடன்தான் காணப் பட்டான்.

அவனைக் கண்டதும் அவளது மனம் தன் சிறகு களை விரித்துக் கொண்டு பறந்து போய், அவளுக்கு முன்பாக அவனருகே அமர்ந்து கொண்டது.

அதற்குள் அவளைக் கண்டு கொண்டவன், கை யசைக்க, சிரிப்பும், தயக்கமுமாய் அவனருகே சென்றமர்ந் தாள். இருவரும் என்ன பேசுவதென்று தெரியாமல் இரண்டு நிமிடங்களை மௌனமாகவே கடத்தினர்.

லேசாய்த் தலை சாய்த்தபடி தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவனின் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் நிமிர்ந்து, "ஏ... ஏதாவது வேணுமா?" என்றாள்.

"ஹ்ம்ம்ம். நிறைய... நிறைய வேணும். தருவியா?" என்றான் அவன்.

புரியாமல் விழித்தவள், "கு... குடிக்க ஏதாவது வேணுமான்னு கேட்டேன்..." என்றாள்.



"ஓ! சா...சாரி சாரி, ரம்யா. ஒரு மாசத்துக்கு அப்புறம் உன்னைப் பார்க்கிறதால எனக்கு ரொம்ப எக்ஸைட் ஆயிடுச்சு. அதான் எல்லாத்தையும் மறந் துட்டேன். நான் சாப்பிடுறதெல்லாம் இருக்கட்டும். நீ என்ன சாப்பிடுற?"

"ஒரு ஹாட் சாக்லேட்."

வெயிட்டரை அழைத்து அவள் கேட்டதை அவன் ஆர்டர் செய்து கொண்டிருக்கையில் நிமிர்ந்து அவனை நோக்கினாள். அவன், "நிறைய... நிறைய வேணும்..." என்று கூறியது என்னவென்பதை அறிந்து கொள்ள அவள் மனம் பரபரத்தது.

வெயிட்டர் சென்றதும், "நி...நிறைய ஏதோ வேணும்னு கேட்டீங்களே! அது என்னன்னு நான் தெரிஞ் சிக்கலாமா?" என்று தயக்கத்துடன் வினவினாள்.

உதட்டோரம் சிரிப்பில் நெளிய அவளையே நோக்கினான், சதீஷ்.

அன்று போல்... இன்றும் கூட நாற்காலியில் நெளிந்தபடியேதான் அமர்ந்திருந்தாள். கை இறுக்கமாய் மேஜையிலிருந்த கைபேசியைப் பற்றியிருந்தது. சுருள் முடி மறைத்திருந்த விழிகள் இங்குமங்கும் நகர்ந்த வண்ணமிருந்தன.

"நிறைய்ய்ய... வேணும்தான். ஆனா இப்போ தைக்கு மூணு மட்டும் போதும்."

"எ... என்ன?"

உதட்டைக் கடித்தபடி கைபேசியில் பதிந்திருந்த அவள் விரல்களை நோக்கியவன், அவளது ஒரு விரலைப் பற்றிப் பிரித்து...

"முதல்ல ஒரு ஐ லவ் யூ."

அடுத்த விரலைப் பிரித்து, "இரண்டாவதா ஒரு ஹக்."

மூன்றாவது விரலைப் பிரித்து, "மூணாவதா ஒரு முத்தம்..." என்றான்.

லப்-டப் இதயம் வேக வேகமாக அடித்துக் கொண்டு, அவளைப் படபடப்புக்குள்ளாக்க, சட்டென அவனிடமிருந்து தன் விரல்களை விலக்கிக் கொண்டவள், மறு கையால் அவ்விரல்களை அழுத்திப் பிடித்துக் கொண்டு தலை குனிந்தபடி அமர்ந்தாள்.

அவன் ஸ்பரிசம் பட்டதும் பற்றிக் கொண்ட விரல் ஏன் உடல் முழுதையும் தகிக்க வைக்கிறது?

"ரம்யா..."

"ம்..."

"ஏதாவது பதில் பேசு... எனக்கு டென்ஷனா இருக்கு. ப்ளீஸ்!"

"..........."

"என்னைப் பிடிச்சிருக்கா?"

"............"

"அப்போ பிடிக்கலையா?"



"............"

"நீ இப்படியே அமைதியா இருந்தா, இங்கேயே... இப்போவே... உன்னை எழுப்பிக் கட்டிப் பிடிச்சுப்பேன். அது உனக்கு ஓகேன்னா, நீ இப்படியே அமைதியாவே இருக்கலாம்."

அவசரமாய் நிமிர்ந்தவள், "வே... வேணாம்!" என்று பதற...

லேசாய் நகைத்தவன், "சரி, அப்போ பதில் சொல்லு!" என்றான்.

"வ... வந்து... தி...திடீர்னு... மூச்சு நின்னு போன மாதிரி இருக்கு. கா...காஃபி குடிச்சப்புறம் பே...பேசட்டுமா?"

"ஹ்ம்ம் சரி!" என்றவன், "பேரர்...." என்றழைத்தான்.

காஃபி கப்பை அவள் புறம் நகர்த்தி விட்டுக் கை கட்டி அமர்ந்து கொண்டவனிடம், "உ...உங்களுக்கு எதுவும் வே...வேணாமா?" என்றாள்.

"எனக்குத்தான் நீ தரப் போறியே? நிறைய்யய..." எனக் கூறிக் கண்ணடித்தான் அவன்.

இரண்டு மிடறு அருந்தியதும் மெல்ல நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

"தா... தாத்தாவுக்கு லவ் மேரேஜெல்லாம் பிடிக்காது."

"பரவாயில்லை, நாம ஓடிப் போய்க் கல்யாணம் பண்ணிட்டு எங்கேயாவது வெளி நாட்டுல செட்டில் ஆயிடலாம்."

"ஹரி கிட்ட இன்னும் உங்களைப் பத்தி நான் சொல்லவேயில்லை."

"இப்போ என்ன? வீட்டுக்குப் போனதும் இன்னிக்கே சொல்லிடு."

"அ... அம்மா, அப்பா கூட...."

"ரம்யாஆஆஆ..." என்றான், அவன் - பொறுமை யின்றி.

குடை இமைகளை அழகாய்த் தாழ்த்திக் கொண் டவள், "எ... எனக்கு என்ன சொல்றதுன்னு சத்தியமாத் தெரியல!" என்றாள்.

"ரம்யா... ரம்யா..." என்றபடி, அவள் கைகளைப் பற்றியவன், "சொதப்புற... ரொம்பவே!" என்றான்.

"நிஜமாவா?" என்றவளின் கண்கள் கவலையை வெளிப்படுத்த...

"ஓகே! நான் சொல்ற மாதிரி செய்..." என்றவன், "கண்ணை மூடிக்கோ!" என்றான்.

கண்களை மூடிக் கொண்டவளிடம், "இப்போ நீ கண்ணைத் திறக்கும்போது நான் இல்லாம போனா நீ எப்படி ஃபீல் பண்ணுவ?" என்று வினவினான்.

"ரொ... ரொம்ப ஏமாற்றமா இருக்கும். கோ... கோபம் கூட வரும்."

"கோபம் வந்தா என்ன செய்யத் தோணும்?"

"உங்க சட்டையைப் பிடிச்சு ஏன்டா என்னை விட்டுட்டுப் போனன்னு சண்டை போடத் தோணும்."



குனிந்து தோள் குலுங்க நகைத்துக் கொண்டவன், "ஏன் சண்டை போடத் தோணுது?" என்றான்.

"ஏ....ஏன்னா... ஏன்னா..."

"ம்... ஏன்னா...?"

"ஏன்னா... எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு!" என்றாள்.

பற்கள் பளிச்சிடக் கர்வமாய்ப் புன்னகைத்தவன், "இதை மேடம் வாயிலிருந்து வரவைக்க நான் இவ்ளோ போராட வேண்டியிருக்கு. இதுல இன்னும் நம்பர் 2, நம்பர் 3-லாம் நான் என்ன செய்யப் போறேனோ?" என்று கூற... தலை குனிந்தபடி மௌனமானாள் அவள்.

"உன் மேக்ஸிமம் வெட்கத்தோட அளவே இவ்ளோ தான் இல்ல?"

"ஏ...ஏன்? இதைவிட அதிகமா வெட்கப்படுவாங் களா என்ன?"

"நீ பழைய தமிழ் சினிமா பார்த்ததில்லையா?"

"ம்ஹூம், புதுப் படம் மட்டும்தான் பார்ப்பேன்."

"ஹ்ம்ம். உனக்கு ஒரு நாள் சரோஜாதேவி மேடம் நடிச்ச படம் போட்டுக் காட்டுறேன்," என்றவன், தொடர்ந்து... "ஐ திங்க் இப்போ நான் இதைத் தைரியமா சொல்லலாம்."

"எதை?"

"ஐ லவ் யூ..."

மீண்டும் கைபேசியைப் பற்றிக் கொண்டு அமைதியானவளிடம்,

"ரம்யா... ஐ லவ் யூ..." என்றான், சத்தமாக.

சிரிப்பும், வெட்கமும் போட்டி போட அவனை நிமிர்ந்து நோக்கியவள் கைபேசியை எடுத்துக் கொண்டு ஓட... "ஹே... ஹேய்... சரோஜாதேவி தேவையே இல்லை போலவே, சூப்பரா வெட்கப்படுற ரம்யா... சீரியஸ்லி..." என்று கத்திக் கொண்டே தானும் தொடர்ந்து ஓடினான், சதீஷ்.

## 6

## *Love is destined*

எனக்கு விதிக்கப்பட்ட காதல் அதுதான்னு நான் தீர்மானம் பண்ணின நொடி எதுன்னு இப்போவரைக்கும் எனக்குச் சத்தியமா நினைவில்லை. நட்பைத் தாண்டி ஏன் அவனுடனான உறவை நான் இரண்டாம் நிலைக்குக் கொண்டு போக நினைச்சேன்?

வயதுக்கு வந்ததிலிருந்து நான் கனவு கண்ட 'ட்ரீம் ஹீரோ' டைப்பா அவன்? இல்லை! எஸ்.பி.பி. வாய்ஸ் கேட்கும்போதெல்லாம், சினிமா நடிகர் சிரஞ்சீவியைப் பார்க்கும் போதெல்லாம் நினைச்சேனே! எனக்கு வரப் போகிறவன் நல்லாப் பாடணும், பார்க்க சிரஞ்சீவி மாதிரி இருக்கணும்னு! இது இரண்டுல ஏதாவது அவன்கிட்ட இருக்கா?



அதுவுமில்லை! சின்ன வயசுல இருந்து நான் பார்த்து, ரசிச்ச விசயங்கள் எதுவுமே அவன் கிட்ட இல்லை! ஆனா... ஏன் மனசு சட்டுன்னு அவன் புறம் சாய்ந்திடுச்சு? இதுவரைக்கும் எனக்குக் காரணம் தெரியல... இதனாலதான் 'லவ் இஸ் டெஸ்டைன்ட்'னு சொல்றாங்களோ....?

**ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...**

முகம் முழுக்கச் சிரிப்பும், மகிழ்ச்சியுமாய் விசில் அடித்தபடி, பைக்கில் தன் ஹோட்டலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான், ஹரி.

ஹோட்டலைப் புதுப்பிக்கும் அவனது ஐடியாக்களைக் கண்ட அமாத்யா், "ஓ.கே! உன் கனவுகளைச் சாத்தியமாக்க நான் பணம் தர்றேன். ஆனா ஒரு வருஷத்துல நீ லாபம் காட்டலேன்னா... இந்த ஹோட்டலை அப்படியே விட்டுட்டு உன் அண்ணனோட சேர்ந்து தொழிலைப் பார்க்க ஆரம்பிக்கணும். இது உனக்கு ஓகே-ன்னா உன் ஐடியாக்களுக்கு எஸ்டிமேஷன் போட்டுக் கொண்டு வா!" என்று கூறி விட...

அடுத்த ஒரு வாரத்தில் எஸ்டிமேசனையும் அளித்து பர்மிஷன் வாங்கி விட்டான் அவன். இது போதாதா! குதித்துக் குத்து டான்ஸ் ஆடுமளவிற்குத் தாறுமாறான சந்தோசத்தில் இருந்தான் அவன்.

ஹோட்டலின் தோற்றத்தை மாற்றியமைக்க வந்த இன்டீரியர் டிசைனர்ஸ் நான்கு பேர் முப்பது நாட்களில் வேலையை முடித்து விடுவதாகக் கூறி விட்டனர். அவன்

நினைத்தபடி அடுத்த மாதம் 20-ஆம் தேதி ஹோட்டலுக்கு க்ராண்ட் ஓபனிங் கொடுக்க... இனி எந்தத் தடையும் இல்லை.

வண்டியை நிறுத்தி விட்டு இறங்கியவனை செல் ஃபோன் அழைக்க... எடுத்து "ஹலோ!" என்றவனிடம்,

பழனியின் குரல் ஹை-டெசிபலில் ஒலித்தது.

"ஓனர் அண்ணா, இன்னிக்கு லோடு வந்து இறங்குற நாளாச்சேன்னு நான் வேளச்சேரிக்கு வந்தேன், நீங்க புது கேன் எதுவும் வேணாம்னு சொல்லிட்டதா முத்துச்சாமி சொல்றாரு. உண்மையாவா?"

"ஏன்டா நாயே, கத்துற? நான்தான் கேன் வேணாம்னு சொல்லிட்டேன். நீ அங்க நின்னு கத்திட்டு இருக்காம வீடு போய்ச் சேரு."

"என்னணா சொல்றீங்க? புது கேன் எடுக்காம பிசினஸ் எப்படி ஓடும்?"

"டேய் பழனி..."

"ம், இருக்கேன், இருக்கேன்."

"இந்தப் பிசினஸை நான் இழுத்து மூடிட்டா நீ ரொம்பச் சந்தோசப்படுவேல்லடா?"

"ஆமா, பின்ன? எக்ஸ்ட்ரா ஆள் சேர்த்துக்காம ஒரு ஆளை வைச்சே பிசினஸை ஓட்ட நினைக்குற ஒரு மோசமான முதலாளிக்குக் கீழ வேலை பார்க்க யாருதான் ஆசைப்படுவா?"



"அதனாலதான்டா, நான் இந்த பிசினஸை இதோட நிப்பாட்டிக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்."

"எ...என்ன! என்ன சொன்னீங்க இப்ப? இங்க என்ன படமா ஓட்டிட்டிருக்கோம், இடையில நிப்பாட்டுறதுக்கு! ஓனர்ண்ணா, நா... நான் விளையாட்டுக்கு உங்களைக் கேலி பண்றதுக்காகச் சொல்றது அதெல்லாம்! நீங்க நிஜமாவே மோசமான முதலாளியா இருந்திருந்தா நான் இத்தனை நாளா உங்ககிட்ட வேலை பார்த்திருப்பேனா?

"அண்ணா, நான் உங்க கூடத் தொடர்ந்து வேலை பார்க்கணும்னு ஆசைப் படுறேன். நான் சொன்னதுக்காகல்லாம் கடையை மூடாதீங்கண்ணா! சொன்னாக் கேளுங்கண்ணா..."

பழனியின் குரல் அதிர்ச்சியில் பதறியதைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்தான், ஹரி.

"டேய்... நாயே... நாயே... பதறாதே. உன் ஓனர் இப்போ ஒரு ஹோட்டலோட முதலாளிடா. இனியும் எதுக்குடா நஷ்டத்துல ஓடுற வாட்டர் பிசினஸைப் பார்க்கச் சொல்ற? அடுத்த மாசத்துல இருந்து உனக்கு நம்ம ஹோட்டல்லதான் வேலை. அதனால இருக்குற கேனை எல்லாம் வித்து முடிச்சிட்டு என்னை வந்து பாரு. நான் எல்லாத்தையும் விவரமாச் சொல்றேன்."

"நிஜமா! நிஜமாவா சொல்றீங்க? நம்ம ஹோட்டலா? ஹை... நான் அடுத்த மாசத்துல இருந்து ஹோட்டல்ல வேலை பார்க்கலாமா? ஹப்பாடா... இனி

ஓடி ஓடிப் போய் வீடு வீடா கேன் போடணும்னு அவசிய மில்ல. ஓனர்ண்ணா, எனக்குச் சந்தோசம் தாங்க முடியல...."

அவன் உற்சாகத்தில் குதித்துக் கொண்டிருப்பதைக் கேட்ட ஹரிக்கும் குஷியாகி விட, சத்தமாகச் சிரித்தான்.

"சரி சரி. அதெல்லாம் இருக்கட்டும். போன மாசச் சம்பளப் பாக்கியை எப்போ தர்றதா இருக்கீங்க?"

"ஹலோ... ஹலோ... டேய் பழனி, நீ பேசுறது ஒன்னுமே கேக்கலைடா!"

"அதானே! எப்படிக் கேட்கும்? மரியாதையா ஈவினிங் கடைப்பக்கம் வாங்க. என் கணக்கை முடிச்சுக் காசைக் கொடுக்கிற வழியைப் பாருங்க."

"தர்றேன்டா டேய்... சாயந்தரம் பார்க்கலாம்," என்று ஃபோனைக் கட் செய்தவன், சிரிப்புடன் உள்ளே சென் றான்.

வேலை நடந்து கொண்டிருந்த ஹோட்டலின் உட்புறத்தை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த வனுக்கு, 'நினைச்சதுதான் கொஞ்சம் கொஞ்சமா நடந் துட்டே இருக்கே! ப்ரியா கிட்ட எப்போடா ப்ரபோஸ் பண்ணப் போற?' என்று சக்தி நச்சரித்தது நினைவிற்கு வர... உடனே ஃபோனைக் கையில் எடுத்தவன், 'வாட்ஸ் ஆப்'-ஐ ஓபன் செய்தான்.

பிங்க் நிறச் சுடிதாரில் தலை சாய்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்த ப்ரியாவின் ஃபோட்டோவை நோக்கி விட்டு... "ஹாய் மைனா...." என்று அனுப்பினான்.



"மைனா?" - உடனே அவளிடமிருந்து பதில் வந்தது.

"ஹ்ம்ம், ஏன் வேண்டாமா? அப்போ புறா,கிளி, கோழி... இல்ல, இல்ல. காக்கா-ன்னு கூப்பிடட்டுமா?"

"போடா ஒட்டகச் சிவிங்கி!"

"டா....?"

"ஹா ஹா... ஆமாம்டா, டா டா டாஆஆஆ... ஆயிரம் தடவைக் கூட டா போடுவேன்..."

"எங்கிருந்து வந்தது அம்மணி, இந்தத் திடீர் தைரியம்?"

"ஹ்ம்ம், மெசேஜ்தானே! நீங்கதான் நேர்ல... என் முன்னாடி இல்லையே... அந்தத் தைரியம்தான்."

"ம்... இந்தத் தைரியம் ரொம்ப ஆபத்தானதாச்சே! அதனால உடனே நேர்ல வந்து இதுக்கு ஆப்பு வைக் கிறேன், நான்."

"ஹய்யோ... நிஜமாவா! வேணாம், வேணாம். அப்போ நான் டா சொல்லல..."

"ஹா ஹா! என்னைப் பார்க்குறது, உனக்கு அவ்ளோ பயமாவா இருக்கு?"

"அப்படியெல்லாம் ஒன்னுமில்லை."

"அப்போ இன்னிக்கு ஈவ்னிங் நாலு மணிக்குச் சவேராவுக்கு வந்துடு."

"????"

"ஹோட்டல் சவேரா... ஃபோர் ஓ க்ளாக்... பை. பை!" - என்று தன் உரையாடலை முடித்துக் கொண்டு, மொபைலைச் சட்டைப் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டான்.

"ஹலோ ஏஞ்சல்... எங்கே இருக்க?" - ஸ்ப்ரேயைத் தெளித்து மேஜையை சுத்தப்படுத்தியபடி பார்ட்-டைம் வேலையில் ஈடுபட்டிருந்த ரம்யா, தன் செல்ஃபோன் வழியாக ஒலித்த சதீஷின் குரலைக் கேட்டுக் குஷியாகி விட்டாள்.

"நான் பீட்சா ஷாப்-ல வேலை பார்த்துட்டு இருக்கேன். நீங்க?"

"ஹ்ம்ம், ஹோட்டல்தான். நானும் வேலை பார்த் துட்டு இருக்கேன். புதுசா ஒரு 'தாய்' டிஷ் ட்ரை பண்ணினேன். நீ சாப்பிட்டுப் பார்த்துக் கமெண்ட் சொன்னா எப்படியிருக்கும்னு தோணுச்சு. அதான் கால் பண்ணினேன். எப்போ என்னைப் பார்க்க வர்ற, டார்லிங்?"

"ஹ்ம்ம், ஆஃப்டர் த்ரீ எப்போ வேணாலும்..."

"ஓகே! அப்போ ஃபோர் ஓ க்ளாக் சவேராவுக்கு வந்துடு. எனக்கு அப்போ ப்ரேக் டைம்."

"ஹ்ம்ம்... கண்டிப்பா!" என்றாள்.

மூன்றரை மணிக்கே சவேராவுக்குள் நுழைந்த ரம்யா, அவளுக்கு முன்பே வந்து அமர்ந்திருந்த சதீஷைக் கண்டு வியப்புற்றாள்.



"ஏன்? ஏன் சீக்கிரம் வந்துட்டீங்க?"

"மேடம் ஏன் சீக்கிரம் வந்தீங்க?"

"ஹ்ம்ம். உங்களுக்கு முன்னாடியே நான் வந்து உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்தா... நீங்க சந்தோசப் படுவீங்கல்ல! அதுக்குத்தான்."

"நானும் அதுக்காகத்தான் வந்தேன். என்னைப் பார்த்ததும் உன் முட்டைக் கண்ணை விரிச்சு நீ ஒரு எக்ஸ்ப்ரஷன் கொடுத்தியே... அதைப் பார்க்கத்தான்."

சிரிப்புடன் அருகே வந்து அமர்ந்தவளிடம் தான் சமைத்ததைக் கொடுத்துச் சுவை பார்க்கச் சொன்னான். பொறுமையாக அதை உண்டு, அதிலிருந்த நுணுக்கங் களை அறிந்து கொண்டு, மேலும் அதில் என்ன சேர்த் தால் சுவை நன்றாக இருக்குமென்று தனது கருத்து களையும் கூறினாள் ரம்யா.

"வாவ்...! எனக்குக் கூட இது தோணலை பாரேன்... நிஜமாவே சமையல்ல நீ ஜீனியஸ்தான் ஏஞ்சல்!" என்றவனைக் கண்டு சிரித்தாள் அவள்.

பின் உண்டதை ஒதுக்கி வைத்து விட்டு, மேலும் ஏதேதோ பேசிச் சிரித்தபடி அமர்ந்திருந்தனர் இருவரும். தன் போக்கில் கண்களைப் பெரிதாக்கிக் கைகளை ஆட்டி ஆட்டிப் பேசிக் கொண்டிருந்தவளை மேலிருந்து கீழ்வரை நோக்கினான், சதீஷ்.

வழக்கம் போல் ஜீன்ஸ்-ம், கிளிப்பச்சை நிற டாப்பும் அணிந்திருந்தாள். சுருள் முடி தோளில் தவழ்ந்து

கொண்டிருந்தது. அடர் புருவமும், கரு விழிகளும், இதழ்களின் வடிவமும் அவள் முகத்தைப் பேரழகாகக் காட்டிக் கொண்டிருந்தன.

ஐஸ்க்ரீமைக் கிண்டிக் கொண்டிருந்த அவள் வலது கையைப் பற்றித் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டவன் இமைகளை உயர்த்தி அவளை நோக்கினான்.

"நீ சுடிதார், புடவையெல்லாம் போட்டுக்க மாட்டியா?"

"ம்ஹும்... சுடிதார், குர்த்தி... எப்போவாவது போடுவேன். புடவை இதுவரைக்கும் ட்ரை பண்ணினதே இல்லை."

"சுத்தம்... கு...குழந்தைகள்னா பிடிக்குமா? பேபீஸ்?"

"ஓ! எங்க அஷுக் குட்டியை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனா எங்கே அவன் என் ட்ரஸ்ல மூச்சா போயிடுவானோன்னு பயந்து நான் தூக்கவே மாட்டேன். எப்பவும் ஹரிதான் தூக்கி வைச்சுப்பான். நான் கொஞ்சிட்டே இருப்பேன்."

"கஷ்டம்தான் போல. அப்போ, நம்ம குழந்தைய என்ன பண்ணுவ?"

"நீங்க தூக்கிக்கோங்கன்னு உங்க கையில கொடுத்துடுவேன். இல்லை யில்ல. நாப்பி மாட்டி விட்டுடுவேன். பயமில்லாம இருக்கலாம்ல?"

சிறு பிள்ளையாய் நகைத்தவளின் கன்னம் பற்றிக் கிள்ளினான்.



"ஹ்ம்ம். அப்போ உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா எனக்குக் கிடைக்கப் போகிற நல்ல விசயம் மூணு வேளை சாப்பாடு மட்டும்தான். இல்ல!"

"ஆமா. அதுக்கு நான் கியாரண்ட்டி!" - பெரு விரலைத் தூக்கிக் காட்டிக் கர்வமாய்ப் புன்னகைத்தவளைக் கண்டு சிரிப்புடன் அவளது உள்ளங்கையில் அழுந்த முத்தமிட்டான், சதீஷ்.

ஹோட்டலுக்குள் நுழைந்து ப்ரியாவைத் தேடிக் கொண்டிருந்த ஹரியின் விழிகளில் இந்தக் காட்சி தென்பட்டு விட... திடுக்கிட்டவன் ஒரு நொடி கூட யோசிக்காமல் கோபத்துடன் அருகே ஓடினான்.

"ரம்யா..." என்றவனின் காட்டுக் கத்தலில் திடுக்கிட்டு விலகிய இருவரையும் ஒரு பார்வையில் நோக்கியவன், சதீஷின் சட்டையைக் கொத்தாகப் பற்றித் தூக்கி நிறுத்தினான்.

"யாருடா நீ, ராஸ்கல்...! என்னடா பண்ணுற அவளை? அவ யாருன்னு உனக்குத் தெரியுமா?" என்று சீறியவன்... அவன் சட்டை காலரைப் பற்றி அருகில் இழுக்க...

தானும் கோபம் கொண்ட சதீஷ் அவன் கையைத் தட்டி விட்டு, "முதல்ல நீ யாருன்னு சொல்லுடா, இடியட்?" என்றான்.

"நான் யாரா?" என்றபடி மீண்டும் கோபத்துடன் அவன் சட்டையைப் பற்றியவனைக் கண்டு அதுவரை

இருவரையும் விலக்கப் போராடிக் கொண்டிருந்த ரம்யா, "ஸ்டாப் இட் ஹரி!" என்று கத்தினாள்.

"எதுக்குடி கத்துற? நீ இந்த நேரத்துல வீட்ல இல்லாம, இங்க என்னடி பண்ணுற! யாருடி இவன்...? உன் கையைப் பிடிக்கிறான். பார்த்துட்டுச் சும்மா உட்கார்ந் திருக்க? என்னடி நடக்குது இங்க?" - பொறுமையின்றித் தன் போக்கில் கத்தியவனை அடக்கத் தெரியாமல் முழித்தாள், ரம்யா.

"ஹரி, ஹரி! மெதுவாப் பேசுடா. எல்லாரும் வேடிக்கை பார்க்குறாங்க."

"நான் ஏன்டி மெதுவாப் பேசணும்? பப்ளிக் ப்ளேஸ்ல உன் கையைப் பிடிக்கிறான். அவன் மண்டையைப் பொளக்காம, நீ பாட்டுக்கு அமைதியா உட்கார்ந்திருக்க?"

"அவர் யார், என்னன்னு தெரியாம உன் இஷ்டத் துக்குக் கத்தாதே, ஹரி!"

"அப்படி யார் இவன்... உன் கையைப் பிடிக்கிற அளவுக்கு ரைட்ஸ் இருக்கிறவன்...?"

"இவரைத்தான் நான் காதலிக்கிறேன், ஹரி. இவர் பேரு சதீஷ்!" என்றாள் ரம்யா.

உடல் விரைக்க ஒரு நிமிடம் உறைந்து போனவன், இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். மூளையும், மனதும் செயல்பாட்டை நிறுத்தி விட்டது போல் தோன்ற, அடுத்து என்ன செய்வதென்று அவனுக்குப் புரிபடவே யில்லை.



சட்டென முன்னே வந்து, "எக்ஸ்கியூஸ் அஸ் ப்ளீஸ்!" என்று ரம்யா அவனைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தாள்.

அவள் இழுத்த இழுப்பிற்கு உடன் நடந்த ஹரிக்கு அப்போதும் கூட இதயம் துடிக்கும் ஓசையை மூளை உணரவில்லை.

அதிர்ச்சியுடன் அமைதியானவனைக் கண்ட ரம்யா கலக்கத்துடன், "நா... நான் உன்கிட்ட சொல்லாம விட்டது என் தப்புதான் ஹரி. நீ ஹோட்டல் வேலையில ரொம்ப பிசியா இருந்ததால என்னால உன்னை அடிக்கடி பார்க்க முடியல. அதனாலதான்டா சொல்லல. சாரிடா. ப்ளீஸ்டா!" என்றாள்.

அவள் கூறிய வார்த்தைகள் எதுவும் ஹரியின் காதுகளுக்கு எட்டவேயில்லை. சதீஷ், ரம்யாவின் கரம் பற்றி முத்தமிட்ட காட்சி மீண்டும் மீண்டும் கண் முன்னே தோன்றி, அவன் மனதைத் தகிக்க வைத்தது.

"எவ்ளோ தைரியம் ராஸ்கல்!" என முணுமுணுத் தவன் மீண்டும் கோபம் தலைக்கேற விரைத்துப் போய் நின்றான்.

"என்னடா முணுமுணுக்குற?"

"எவ்ளோ தைரியம் இருக்கணும் அவனுக்குன்னு கேட்குறேன்...." - எங்கோ பார்த்தபடி உள்ளங்கையை அழுந்த மூடியவனைக் கண்டு....

"அவர் என் லவ்வர்டா!" என்றாள், ரம்யா.

"அதுக்காக!" எனக் கோபமாய் அவள் புறம் திரும்பியவன்... "அதுக்காகக் கையைப் பிடிப்பானாடி?" என்று வினவ...

புரியாமல் தலையசைத்தபடி அவனை நோக்கியவள், "ஹரி..." என்றாள்.

என்ன சொல்வதென்று தெரியாமல், தன் மூளை யோசிக்கும் விதத்தைப் புரிந்து கொள்ளவும் முடியாமல், "ப்ச்!" எனத் தலை முடியைக் கோதியவன் அவள் முகம் பார்க்காமல் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

அவனது செயல்களுக்கான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாத ரம்யா வேகமாய் சதீஷிடம் ஓடினாள்.

அமைதியாய் அமர்ந்திருந்தவனின் அருகே சென்று, "சா... சாரி சதீஷ். அவன்... அவன்தான் என்னோட கஸின் ஹரி. நான் சொல்லியிருக்கேன் இல்லையா? இரண்டு பேரும் சின்ன வயசுல இருந்தே ரொம்ப க்ளோஸ். எனக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு என்னை விட அவனுக்குத்தான் நல்லாத் தெரியும். வ. வந்து... என் மேல இருக்குற அக்கறையில தான் உங்களை அப்படித் திட்டிட்டான். ரொம்ப... ரொம்ப சாரி சதீஷ்..." என்றாள், கலக்கத்துடன்.

"இட்ஸ் ஓகே! நீ அவர் கிட்ட ஏற்கெனவே நம்மளைப் பத்தி சொல்லியிருப்பனு நினைச்சேன். சரி, பரவாயில்லை. என்கிட்ட சாரி கேக்குறது இருக்கட்டும். சின்ன வயசுல இருந்து ரொம்ப க்ளோஸ்னு சொல்ற.



அவர் கிட்ட நீ முன்னாடியே விசயத்தைச் சொல்லலைன்னு அவர்தான் ரொம்பவும் கோபத்துல இருப்பார். நீ உடனே வீட்டுக்குப் போய் அவரைச் சமாதானப்படுத்து!" என்று கூறிச் சிரித்தான் அவன்.

சரியாக நான்கு மணிக்கு சவேராவுக்கு வந்து விட்ட ப்ரியா ஹரியைக் காணாது அவனைத் தன் செல் ஃபோனில் அழைத்தாள்.

வெகு நேரம் கழித்து அழைப்பை எடுத்து, "ஹலோ!" என்றவனிடம், "நான் ஹோட்டல் வாசல்ல நிற்கிறேன். நீங்க எங்க இருக்கீங்க?" என்று வினவினாள்.

ஒரு நிமிடம் அவனிடமிருந்து பதிலின்றிப் போக மீண்டும், "ஹலோ...." என்றவளிடம்...

"ம்" எனத் தொண்டையைச் செருமியவன், "நீ உள்ளே போக வேண்டாம். நான் அவசர வேலையா வெளியே சுத்திட்டிருக்கேன். நீ வீட்டுக்குப் போயிடு. நாம இன்னொரு நாள் பார்க்கலாம்..." என்றான்.

"ஹ்ம்ம்..." எனச் சோகமாய்த் தலையாட்டியவளின் கண்களில் ரம்யா தென்பட, "ஹேய்... ரம்யா இங்கதான் இருக்கா போல. நான் அவளை மீட் பண்ணிட்டு வீட்டுக்குப் போறேன்..." என்றவளிடம்,

அவசரமாய், "ஏய்... ஏய்... நீ அங்கே போகாதே. சொன்னாக் கேளு. அவ... அவ லவ்வரோட இருக்கா!" என்றான்.

"லவ்வரா!" என்று கண்களை விரித்த ப்ரியா, "ஹா ஹா.... இந்த டாக் எப்போ இருந்து லவ் பண்ண ஆரம்

பிச்சா? ஒரு வார்த்தை என் கிட்ட சொல்லல. வெளியே வரட்டும் நாய்... இன்னிக்கு அவளைக் கொன்னு போட்டுடுறேன்... ஹேய்... இது என் காலேஜுக்கு லெக்சர் கொடுக்க வந்த செஃப் சதீஷ் ஆச்சே! ஆள் செம ஹேண்ட்சம்... வாவ்...! எனக்கு ஓடிப் போய் ரம்யாவைக் கட்டிப் பிடிச்சு என் சந்தோசத்தைச் சொல்லணும் போல இருக்கு..." என்றாள்.

எரிச்சலுடன் அவள் பேசியதைக் கேட்டவன், "ஹ்ம்ம், அதெல்லாம் அப்புறம் கட்டிப் புடிச்சுக்கோ. இப்போ வீட்டுக்குப் போ!" என்றவன் ஃபோனைக் கட் செய்து விட்டான்.

பெருமூச்சுடன் படுக்கையில் சாய்ந்து விட்டத்தை நோக்கிய ஹரி யோசனையில் ஆழ்ந்தான்.

நியாயமாகப் பார்த்தால்... இருவரையும் சேர்த்துப் பார்த்ததும் இப்போது ப்ரியா எப்படி ரியாக்ட் செய் கிறாளோ... அவனும் கூட அப்படித்தான் நடந்து கொண் டிருக்க வேண்டும். முதலில் ஒரு ஆச்சரியம். பின்பு சந்தோசம். பின் அவளைக் கலாய்த்து நாலு வார்த்தை. இதைச் செய்யாமல்... ஏன் அப்படிக் கோபப்பட்டான்?

ஏன் இன்னும் கூட, சதீஷ் அவளை முத்தமிட்டதை நினைத்துப் பார்த்தால்... கோபம் வருகிறது? இதில் என்ன லாஜிக் இருக்கிறது? அவனுக்கு ப்ரியா போல்... அவளுக்கு சதீஷ்... இதில் இவன் கோபப்பட என்ன இருக் கிறது? தலையை உலுக்கிக் கொண்டவனுக்கு என்ன யோசித்தும்... காரணம் மட்டும் தென்படவேயில்லை.



அடுத்த இரண்டு நாட்களும் ரம்யாவைப் பார்ப்ப தையும், பேசுவதையும் தவிர்த்தான் அவன்.

இரண்டு நாட்களும் நன்றாக யோசித்துப் பார்த்துப் பின் தனக்குக் காதல் வந்ததும் அவனிடம் அவள் முதலில் தெரிவிக்காததுதான் தனக்குக் கோபம் என்று முடிவு செய்தான்.

அன்று விடுமுறை நாள் என்பதால் அறைக் குள்ளேயே முடங்கியிருந்தான், ஹரி.

மதிய வேளை நெருங்குகையில், அறைக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது.

எரிச்சலுடன் எழுந்து சென்றவன், "ஹரி... ஹரி..." என ரம்யாவின் குரல் கேட்டு, அசையாமல் அப்படியே நின்றான்.

"கதவைத் திறடா ஒரு நிமிஷம்... ப்ளீஸ்டா!" என்றவளுக்கு, அவனிடமிருந்து எந்தப் பதிலும் வர வில்லை. அடுத்த இரண்டு நிமிடம் விடாமல் தட்டிப் பார்த்தவள் ஓய்ந்து போய்ச் சென்று விட்டாள்.

அவள் சென்றதும் தலை முடியை அழுந்தக் கோதியபடி ஜன்னலருகே சென்று நின்ற ஹரிக்குச் சத்தியமாய் அவனது செய்கைகளுக்கான அர்த்தம் புரியவேயில்லை.

தன் போக்கில் அவன் யோசித்துக் கொண்டு நிற்கையில் ஃபோன் அடிக்கவும், அதனருகே சென்றான்.

அவள்தான்! ரம்யாதான் அழைத்துக் கொண்டிருந்தாள். படுக்கையிலிருந்த ஃபோனைக் கையில் எடுத்தபடி முழங்காலிட்டு அமர்ந்தான்.

என்ன வேண்டுமாம் இவளுக்கு? திரும்பத் திரும்ப விடாமல் அழைத்துத் தொல்லை கொடுக்கிறாள்? நான்காம் முறை அவள் அழைத்ததும் ஃபோனைக் காதில் வைத்து, "ஹலோ!" என்றான்.

"ஹரி... ஹரி! ஏன்டா என் கிட்ட பேச மாட்டேங்கிற?"

"உனக்கு என்னடி வேணும்?"

"உனக்கு என்னடா பிரச்சனை?"

"உனக்கு என்னடி பிரச்சனை? ஏன் விடாம ஃபோன் பண்ணி டார்ச்சர் கொடுக்கிற?"

"ஹரி... நான்... நான்... எனக்கு இன்னிக்கு ஷோ இருக்குடா. அப்பாவுக்கு எப்படியோ இந்த விசயம் தெரிஞ்சிடுச்சுடா. என்னை வெளியே விட மாட்டேங்குறார். இது ரொம்ப ரொம்ப இம்பார்டன்ட் ஷோடா. இன்னிக்கு ஷோ-ல கிடைக்கிற பணத்தைக் கருணை இல்லத்துக்கு டொனேட் பண்றதா நாங்க வாக்குக் கொடுத்திருக்கோம்டா. நான் போகாட்டி ஷோவைக் கேன்சல்தான்டா பண்ணணும். எனக்கு ஹெல்ப் பண்ணுடா ப்ளீஸ்... ப்ளீஸ் ஹரி..."

"அதானே! காரியம் இல்லாம நீ என்னைத் தேட மாட்டியே?"

"உளறாதே ஹரி!"

"இப்போ நான் என்னடி பண்ணணும்?"



"நான் வெளியே போக நீ ஹெல்ப் பண்ணணும்."

"ஷோ எத்தனை மணிக்கு?"

"ஃபைவ் ஓ க்ளாக் டா. இன்னும் ஒரு மணி நேரத்துல..."

"சரி, பத்து நிமிஷத்துல நம்ம தோட்டத்து ஊஞ்சல் கிட்ட நில்லு."

"சரிடா... தேங்க்ஸ்... தேங்க்ஸ்டா ஹரி!" என்று அவள் கூறுகையிலேயே ஃபோனைக் கட் செய்து விட்டான் அவன்.

அடுத்து ஐந்து நிமிடத்தில் தயாராகி வந்தவளை, அவளுக்குக் காவலிருந்த தோட்டக்காரரையும், சமையல்காரரையும் ஏமாற்றிச் சமாளித்து வெளியே அழைத்து வந்திருந்தான், ஹரி.

வேகமாய் ஓடிச் சென்று வண்டியில் ஏறியவன், "சீக்கிரம் ஏறு... சீக்கிரம்!" என்றான்.

அவன் சொன்னபடி ஏறி அமர்ந்தவள் அவன் தோளைப் பற்றிக் கொள்ள... எரிச்சலுடன் அவள் கையை உதறியவன்... "ப்ச், கையை எடுடி!" என்றான்.

"ஏன்?" என்று விழி விரித்தவள் வேண்டுமென்றே அவனை இறுகக் கட்டிக் கொண்டு அமர... "லவ்வர்னு ஒருத்தனைக் காட்டுனியே பெருசா. அவனைக் கூப்பிட வேண்டியதுதானே இதுக்கெல்லாம்? என்னை எதுக்குத் தேவையில்லாம போட்டு டார்ச்சர் கொடுக்கிற?" என்று காட்டமாகக் கூறினான்.

சிரிப்புடன், “ஹா ஹா... பொஸஸிவ்நெஸ்ஸாடா, ஹரி? ஹிலாரியஸா இருக்குடா!” என்றவள், அவன் தோளில் தன் நாடியைப் பதித்து, “என்ன இருந்தாலும் என் ஹரி மாதிரி வருமா?” என்றாள்.

அவள், ‘என் ஹரி’ என்றது முரண்பாடான முறையில் அவன் மனதை அமைதிப்படுத்தி இதழில் புன்னகையைத் தோற்றுவிக்க... வண்டியை உதைத்துக் கிளப்பினான்.

“சதீஷ் பத்தி உன்கிட்ட சொல்லாதது தப்புதான்டா, ஹரி. நிறையத் தடவை உன் கிட்ட சொல்ல ட்ரை பண்ணியிருக்கேன்டா. ஆனா... ரொம்பத் தயக்கமா இருந்தது. நீ ப்ரியா கிட்ட ப்ரபோஸ் பண்ணினதும், நானும் என் மேட்டரை உன்கிட்ட சொல்லிடலாம்னு ப்ளான் வைச்சிருந்தேன். அதுக்குள்ள எல்லாம் சொதப்பிடுச்சு...

“என் காலேஜுக்கு லெக்சர் கொடுக்க வந்தப்போ தான் அவரை நான் ஃபர்ஸ்ட் டைம் பார்த்தேன். அப்புறம் ஃபுட் காம்பைன்லதான் அவரோட நல்லாப் பழக வாய்ப்புக் கிடைச்சது. எனக்கு அவரைப் பிடிச்சிருந்தது... அவர் பேசுறது, சிரிக்கிறது எல்லாம். காம்பைன் முடிச்சப் புறம் அவரைப் பார்க்காம இருந்த ஒரு மாசத்துலதான் நான் அவரை லவ் பண்றதை ஃபீல் பண்ணினேன்.

“அப்புறம் அவரே ஒரு நாள் என்னைக் கூப்பிட்டு லவ் பண்ணுறதா....” அவள் முடிப்பதற்குள் சட்டென ப்ரேக் இட்டு வண்டியை நிறுத்தினான் ஹரி.

திரும்பி அவளைக் கோபமாய் நோக்கியவன், “உன் லவ்வோட ஹிஸ்டரி, ஜியாகிரஃபியைக் கேக்குறதுக்காக



நான் உன்னைக் கூப்பிட்டு வரலை. சரியா? அதனால வாயை மூடிட்டு அமைதியா வர்றதா இருந்தா வா. இல்லாட்டி இப்படியே இறங்கி ஆட்டோ பிடிச்சுப் போயிடு,” என்றான்.

வாயை மூடிக் கொண்டு இறுகிப் போனவள், அவன் தோளிலிருந்து கையை எடுத்துக் கம்பியைப் பிடித்துக் கொண்டு அமர... ஆத்திரமாய் அவள் முகத்தை ரியர் வியூ மிர்ரரில் நோக்கி விட்டு மொத்தக் கோபத்தையும் வண்டியில் காட்டி வேகத்தை அதிகப்படுத்தினான், ஹரி.

“உனக்கு சதீஷைப் பிடிக்கலையாடா ஹரி?”

“..............”

“நீ ஏன் கோபப்படுறன்னு சத்தியமா எனக்குத் தெரியலடா. உன்கிட்ட சொல்லாம விட்டது தப்புதான். அதுக்காக ஏன் இப்படி நடந்துக்கிற?”

“............”

இறங்க வேண்டிய இடம் வந்ததும், வண்டியை நிறுத்தி விட்டு அமைதியாக நின்றான்.

வண்டியிலிருந்து இறங்கியவள் ஒரு நொடி நின்று நேர் வெறித்தபடி அமர்ந்திருந்தவனின் முகத்தை நோக்கி விட்டு எதுவும் கூறாமல் நடந்து சென்று விட்டாள்.

அவள் சென்றதும் வண்டியை எடுத்துக் கொண்டு எங்கெங்கோ அலைந்தான் ஹரி.

அவனுக்காகத்தான் ஒரு வாரமும் காம்பைனுக்குச் சென்றிருக்கிறாள். அவன் பேச்சு, சிரிப்பு அத்தனையும் பிடித்திருக்கிறதாம். ராஸ்கல்! ஊரில் இவனுக்கு வேறு பொண்ணே கிடைக்கவில்லையா?

'ஆனால்... எனக்கு ஏன் கோபம் வர வேண்டும்? சதீஷ் இல்லையென்றால்... வேறு எவனோ ஒருவன் ரம்யாவின் வாழ்வில் வரத்தான் போகிறான். அவள் மட்டும் கல்யாணமாகாமல் கடைசிவரை குமரியாக வாழ்ந்துவிட முடியுமா? இது என்னடா முட்டாள்தனம் ஹரி!' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டு பைத்தியம் போல் வண்டியில் அலைந்து கொண்டிருந்தான்.

அவன் வீடு திரும்புகையில் மணி இரவு ஒன்பதுக்கும் மேலாகி யிருந்தது. அவன் வாசலில் வண்டியை நிறுத்தியதுமே ஓடி வந்த பாண்டி, "தம்பி, உங்களை உடனே தாத்தா வரச் சொன்னார்!" என்று கூற...

"ஏ...ஏன் என்னாச்சு?" என்றவன் தன் மொபைலை எடுத்து நோக்கினான். அப்பா, பெரியப்பா, மாமா என அனைவரிடமிருந்தும் அவனுக்கு அழைப்பு வந்திருந்தது.

அடித்துப் பிடித்துக் கொண்டு மாடிக்கு ஓடியவன் மாடி ஹாலில் கூடியிருந்த தன் மொத்தக் குடும்பத்தையும், நடுவில் தலை குனிந்தபடி நின்றிருந்த ரம்யாவையும் கண்டு, 'ஹ்ம்ம்ம். இனி ஒரு வாரத்துக்கு அவுட் ஹவுஸ் தானா?' என்று நினைத்துக் கொண்டு முன்னே வந்தான்.

இருவரையும் ஒரு முறை நோக்கிய தாத்தா, "எங்கே இருந்து வர்ற ரம்யா?" என்று வினவினார்.



கண்களை அழுந்த மூடி வேக மூச்சொன்றை வெளியிட்ட ரம்யா தைரியமாக அவரை நிமிர்ந்து நோக்கினாள். "உங்களுக்குப் பதில் தெரிஞ்ச கேள்வியைக் கேட்டு... ஏன் தாத்தா உங்க எனர்ஜியை வேஸ்ட் பண்ணிக் கிறீங்க?"

"அடிப் பாதகி!" - ஹரியின் மனச்சாட்சி.

"புரியலை எனக்கு..." என்றார், தாத்தா.

"சரி. உங்களுக்குத் தெரியலைன்னு நினைச்சே நான் பதில் சொல்றேன். நான் போரூர்ல ஒரு மியூசிக் ஷோ முடிச்சிட்டு வர்றேன்."

"உன்னை வீட்டை விட்டு வெளியே விடக் கூடாதுன்னு பாண்டி, செல்வத்துக்கிட்ட உன் அப்பா சொல்லி வைச்சதா சொல்றாரே! நீ எப்படி வெளியே போன? ஹரி சார்தான் உனக்கு உதவி பண்ணினாரா?"

"எனக்கு யாரும் எந்த உதவியும் பண்ணல. நானா தான் வெளியே போனேன்."

"என்னாச்சு இவளுக்கு? மொத்தப் பழியையும் தன் மேலயே போட்டுக்கிறா?" - எரிச்சலாய் முணுமுணுத்தான், ஹரி.

"இன்னொரு தடவை பாட்டு, கூத்துன்னு மேடை ஏறுனா... இந்த வீட்டை விட்டு வெளியேறச் சொல்லி யிருந்தேனே, நான்? நீ எந்தத் தைரியத்துல வீட்டுக்குள்ள வந்த?"

"நான் ஏன் தாத்தா வெளியே போகணும்? என்ன தப்பு செஞ்சேன் நான்? கஞ்சா கடத்துறேனா? இல்லை...

கொலை பண்ணிட்டேனா? என்ன தப்பு பண்ணினதுக் காக என்னை வெளியே அனுப்புறேன்னு சொல்றீங்க?"

"ரம்யா..." கோபமாய் முன்னே வர முயன்ற தந்தையைக் கை நீட்டித் தடுத்தவள்,

"இருங்கப்பா. நானும் தாத்தாவும் பேசிட்டிருக் கோமே..." என்றாள்.

"கஞ்சா கடத்துறதும், கொலை பண்றதும் மட்டும் தப்பில்லைம்மா! கால காலமா இந்தக் குடும்பம் கட்டிக் காப்பாத்திட்டு வர்ற பாரம்பரியத்தை அழிக்கிறதும் தப்பு தான்."

"கிட்டார் வாசிக்கிறது எப்படித் தாத்தா நம்ம குடும்ப பாரம்பரியத்தைக் குலைக்கிறதாகும்? எனக்குப் பிடிச்ச விசயங்களைப் பண்ணுறதுனால உங்க குடும்ப கலாச்சாரத்துக்கு என்ன களங்கம் வந்துடப் போகுது? உங்களுக்குப் பிடிச்ச மாதிரி வீணை கத்துக்கச் சொன் னீங்க, கத்துக்கிட்டேன். நீங்க கேட்கும் போதெல்லாம் வாசிச்சுக் காட்டுறேன். அதே போல, எனக்குப் பிடிச்ச மாதிரி நான் கிட்டார் கத்துக்கிட்டு எனக்கு வேணும்கிற போதெல்லாம் வாசிக்கறேன். இதுல என்ன தப்பு இருக்கு?"

"நீ உன் ரூம்க்குள்ளேயும் இந்த வீட்டுக்குள்ளேயும் கிட்டார் வாசிச்சுக்கிறதுல எனக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்ல..."

"பொத்திப் பொத்தி வைச்சாலும், பூ வாசம் வெளியே வரத்தான் செய்யும் தாத்தா."



"நான் கால காலமாக் காப்பாத்திட்டு வர்ற ஒழுக் கத்தைக் கெடுக்கிற மாதிரி வாசம் தர்ற பூவை முளை யிலேயே கிள்ளி எறியுறதுக்குக் கூட நான் தயங்க மாட்டேன்."

"கிள்ளி எறியத்தான் செய்றீங்க தாத்தா. இந்த வீட்ல பொறக்குற ஒவ்வொரு உயிரோட ஆசையையும் நீங்க கிள்ளித்தான் எறியுறீங்க. பெரிய மாமா ஃபோட்டோ கிராஃபர் ஆக ஆசைப்பட்டிருக்கார். சின்ன மாமா சினிமா டைரக்ஷன்ல இறங்க ஆசைப்பட்டிருக்கார். அம்மா ஸ்கூல் டீச்சராக ஆசைப்பட்டிருக்காங்க.

"ஏன், ஷ்யாம் கூட கிரிக்கெட்ல பெரிய ஆளா வர ணும்னு ஆசைப்பட்டான். நீங்க எதையுமே அனுமதிக்கல.

"வெற்றியோ, தோல்வியோ... எங்களுக்குப் பிடிச்ச விசயத்தை எங்க வாழ்க்கையில ஒரு தடவையாவது பண்ணிட்டோமேன்கிற திருப்தி எங்களுக்குக் கிடைச் சிருக்கும் தாத்தா. நீங்க எல்லாத்தையும் உங்க பிஸி னெஸ்க்காக கிள்ளித்தான் எறிஞ்சுட்டீங்க..."

"ரம்யா, நீ இப்போ நிறுத்தப் போறியா இல்லையா?" - ஜெகநாதன்.

"நான் ஏன்ப்பா நிறுத்தணும்? மனசுல நினைக் கிறதைப் பேசுறதுக்குக் கூட இந்த வீட்ல தடை இருக்கா? குடும்பம்கிற பேர்ல அராஜகம் நடக்குது இங்கே. நாங்க எல்லாத்தையும் சகிச்சுக்கிட்டு வாழணுமா?" என்று அவள் முடிக்கையில் அவளை ஓங்கி அறைந்தார், தாத்தா.

"அப்பா ஆஆஆ..." என்றபடி பிள்ளைகளும், "ரம்யா..." என்றபடி ஓடிய ஹரியும் வேகமாய்ச் சென்று இருவரையும் தாங்கினர்.

பிறந்ததிலிருந்து ஒரு முறை கூட வீட்டினர் எவரும் பிள்ளைகளின் மீது கை வைத்ததில்லை. அதுவும் கூடத் தாத்தாவின் சட்டம்தான். ஆனால் இன்று அவரே தன் பேத்தியைக் கை நீட்டி அடித்ததில் அதிர்ச்சியாகிப் போன குடும்பத்தினர் கலங்கிப் போய் நின்றனர்.

வெடவெடத்துப் போன ரம்யாவின் உடல் பயத்திலும் அதிர்ச்சியிலும் நடுங்கிச் சில்லிட்டுப் போயிருந்ததை, அவளை இறுகப் பற்றியிருந்த ஹரியினால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

கன்னத்தை அழுத்திப் பிடித்தபடி அவன் மார்பில் புதைந்திருந்தவளின் விழிகளில் கண்ணீர் பெருகி அவன் சட்டையை நனைத்தது. இதுவரை அவள் அழுது கண்டதில்லை அவன். கோபமாய் நிமிர்ந்து தாத்தாவை நோக்கினான்.

"ஃபேண்டஸிக்கும் நிஜ வாழ்க்கைக்கும் வித்தியாசத்தைப் புரிஞ்சுக்கத் தெரியாத பொடிசு நீ. நீ என்னை எதிர்த்துப் பேசுறியா? கனவு... வெறும் கனவு மட்டும் தான். வாழ்க்கை கனவோட டைரக்ட் ஆப்போசிட். சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டு ரோட்டோரத்துல பிச்சை எடுக்கிற குடும்பத்துல நீ பொறந்திருந்தா கிட்டாரைப் பத்தி யோசிச்சுப் பார்த்திருப்பியா? கஷ்டம் தெரியாம வளர்றவங்களுக்குத்தான் கனவு காண நேரமிருக்கும், தெரிஞ்சுக்கோ!



"உன் தாத்தா, முப்பாட்டனெல்லாம் வருங்காலச் சந்ததிக்காகப் பார்த்து யோசிச்சுச் சேர்த்த சொத்து இது. உன்னை மாதிரிச் சுயநலமா அவங்கவங்க கனவோட அவங்க வாழ்க்கையை முடிச்சிருந்தா இந்நேரம் உனக்கு இப்படிச் சொகுசான சாப்பாடும், வாழ்க்கையும் கிடைச்சிருக்காது.

"உனக்கு என்ன தெரியும், இந்தக் குடும்பத்தைப் பத்தி? நீ சொன்ன மாதிரி ஒவ்வொருத்தனையும் உன் ஆசைப்படி வாழுன்னு நான் அனுமதிச்சிருந்தா... சொந்தப் பொண்டாட்டியையும், பிள்ளையையும் நினைச்சபடி வாழ வைக்க முடியாம திண்டாடியிருப்பாங்க. அதை அவங்களே உணர்ந்ததனாலதான் இப்போவரை என் சொல் கேட்டு என் கூட இருக்காங்க.

"கனவுக்குள்ள குடும்பமும் இருக்கு. உறவுகள் இருக்காங்க. அவங்க மேல நீ வைச்சிருக்கிற பாசம் இருக்கு. ரம்யா-ங்கிறவ வானத்துல இருந்து குதிச்சவ இல்ல. உன் சந்தோஷத்தைத் தீர்மானிக்கிறது, உன்னைச் சுத்தியிருக்கிறவங்கதான். எல்லாத்தையும் ஞாபகம் வைச்சுக்கிட்டு கனவு காணு இனி...!" என்று முடித்து விட்டு நகர்ந்தவர்... மீண்டும் ஹரியின் மார்பில் புதைந்திருந்தவளின் அருகே வந்து,

"இனியும் உனக்கு இந்தக் குடும்பம் தேவையில்லை. கூத்துதான் முக்கியம்னு தோணுச்சுன்னா, உனக்கு எவ்ளோ பணம் வேணும்னு சொல்லு. செக் எழுதித் தர்றேன். வாங்கிட்டு வீட்டை விட்டுப் போயிடு!" என்று கூறிச் சென்றார்.

'பின் ட்ராப் சைலன்ட்ஸ்' என்பார்களே... அதுபோல் அந்த மாடியறை முழுதும் மயான அமைதியில் இருந்தது. சிலையாய் நின்றிருந்த மனிதர்கள் அனைவரும் செய்வதறியாது நிற்க... தன் மார்பில் சாய்ந்திருந்தவளின் தலையை நிமிர்த்தி "ரம்யா... ரம்யா..." என்று கன்னத்தைத் தட்டினான் ஹரி.

கண்ணீர்க் கறையுடன் கண் மூடியிருந்தவள், கால்கள் தொய்ந்து கீழே விழப் பார்க்க... "ரம்யா..." என்று பதறித் தாங்கினான்.

அதற்குள், "அய்யோ பாப்பா... ரம்யா... கண்ணே..." என்றழைத்தபடி பெரியவர்கள் அனைவரும் அருகே ஓடி வர... கோபத்துடன் நிமிர்ந்து அனைவரையும் நோக்கிய ஹரி, "யாராவது அவ பக்கத்துல வந்தீங்கன்னா கொலை விழும்!" என்று கர்ஜித்தான்.

"ஹரி..." என்று தொடங்கிய ராமமூர்த்தியிடம்,

"எல்லார் முன்னாடியும் அப்படிப் போட்டு அடிக்கிறார். பார்த்துட்டு அமைதியா நிக்கறீங்க? நாங்க உங்களோட பிள்ளைகளா... இல்லை, அவரோட பிள்ளைகளாப்பா? ஒரு தடவையாவது நீங்க எங்களை அடிச்சிருக்கீங்களா! அவர் யார் எங்களை அடிக்கிறதுக்கு? நாங்க ஏன்ப்பா அவர் போடுற சட்டதிட்டத்துக்கெல்லாம் கட்டுப்பட்டு மிலிட்டரி வாழ்க்கை வாழணும்? அவளுக்குப் பிடிச்சதை அவ செய்யுறா... அதுல என்ன தப்பு இருக்கு? வாழ்நாள் முழுக்க மேடையேறி கிட்டார் வாசிச்சிட்டேவா இருக்கப் போறா? வயசும், ஆசையும் இருக்கறவரை



தானேப்பா இதெல்லாம்? அதுக்குக் கூட அவளுக்கு உரிமையில்லையா?

"அவர் கஷ்டப்பட்டு வளர்ந்து சேர்த்த சொத்துதான் இது. ஒத்துக்கிறேன். எங்க வாழ்க்கையும் கஷ்டமேயில்லாம இப்படியேவா போகப் போகுது? நாங்களும் தடுக்கிக் கீழே விழும்போது தன்னாலேயே எழுந்து வந்து விடுவோம்ப்பா. இதையே சொல்லிச் சொல்லி ஏன் எங்களுக்கும் சேர்த்து அவரே வாழ நினைக்கிறார்?" என்றான், ஆத்திரம் குறையாமல்.

"ஹரி, தாத்தா கெட்டவர் இல்லைப்பா. அவர் சொல்றது எல்லாமே நல்லதுக்கு மட்டும்தான். அதை நீங்க நிச்சயம் உணர்வீங்க!" என்ற ஜெகநாதனிடம்,

"உணரும்போது பார்க்கலாம்!" என்றவன், சட்டெனக் குனிந்து அவளைத் தூக்கிக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்தான்.

படுக்கையில் அவளைக் கிடத்தி விட்டு, முகத்தில் தண்ணீர் தெளித்துப் பார்த்தான். அப்போதும் அவள் விழிக்காததைக் கண்டு அவன் பயம் கொள்கையில் கதவைத் திறந்து கொண்டு வந்தார் டாக்டர்.

அவளைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு, "பயப்பட ஒண்ணுமில்லை, ஹரி. காலையிலிருந்து அவ சாப்பிடவேயில்லை போல! போதாததுக்கு ரொம்பவும் பயந்திருக்கா வேற. அதனால்தான். மத்தப்படி எதுவுமில்லை. அவள் எழுந்ததும் சாப்பாடு கொடு!" என்று சென்று விட்டார்.

நிம்மதிப் பெருமூச்சுடன் அவள் தலையை வருடிய படி அமர்ந்திருந்தவன், அரை மணி நேரத்தில் அவள் கண் விழித்ததும், சாப்பாடளித்து மருந்து சாப்பிட வைத்து அருகே யிருந்து கவனித்துக் கொண்டான்.

அடுத்த நாள் காய்ச்சலில் படுத்து விட்டவளைக் குடும்பமே தாங்கினர்.

மூன்றாம் நாள் காலை ஹரியின் அறைக்குள் நுழைந்த கிருஷ்ணமூர்த்தி, பால் குடித்து விட்டுக் கப்பை ஹரியிடம் நீட்டிக் கொண்டிருந்த ரம்யாவையும், அதை வாங்கியபடியே கையிலிருந்த துணியால் அவள் வாய் துடைத்து விட்ட ஹரியையும் கண்டபடி, "இரண்டு பேரை யும் தாத்தா கூப்பிடுறார்டா!" என்றார்.

விரைத்து நிமிர்ந்த ரம்யாவின் உதடுகள் பயத்தில் நடுங்கத் தொடங்க, பற்களால் அதை அழுந்தக் கடித்து நடுக்கத்தைக் கட்டுப்படுத்த முயன்றாள்.

பொறுமையின்றி, "இன்னும் என்ன பெரியப்பா?" என்று வினவிய ஹரியிடம், "தாத்தா வில்லன் இல்ல, ஹரி. உங்களுக்கு நல்லது மட்டுமே நினைக்கிற ஜீவன் அவர். எத்தனையோ நல்ல விசயங்களைக் குடும்பத் துக்கும், உலகத்துக்கும் செய்துட்டு இருக்கார்டா. அவரைத் தேவையில்லாம காயப்படுத்தாதீங்கடா. அவர்தான்டா இந்த வீட்டோட ஆணி வேர்..." என்ற கிருஷ்ணமூர்த்தி அவன் தோளைத் தட்டி விட்டுச் சென்று விட்டார்.

மெல்லக் கட்டிலை விட்டு இறங்கிய ரம்யா கால்கள் தள்ளாட மேஜையைப் பற்றினாள்.



அவளது நடுக்கத்தைக் கண்ட ஹரிக்குத் தாத்தாவின் மேல் ஆத்திரம் வந்தது. மெதுவாக நடந்து அவனருகே வந்து நின்றவள் நிமிர்ந்து அவன் முகம் நோக்கினாள்.

வாடிக் களைத்துப் போயிருந்த அவள் முகத்தைக் கண்டவனின் நெஞ்சம், "இப்படியிருக்காதேடி ப்ளீஸ்!" என்று கெஞ்ச... அவன் விழிகளில் அப்பட்டமாய்த் தெரிந்த வலியைக் கண்டு விழி விரித்தாள், ரம்யா. ஒருவரை யொருவர் நோக்கியபடி இரண்டு நிமிடம் அமைதியாக நின்றிருந்தனர் இருவரும்.

பின் ஒரு கையால் அவளைப் பற்றி லேசாக அருகிலிழுத்தவன், தன்னோடு அணைத்துக் கொண்டு, "தாத்தா என்ன சொன்னாலும், நான் எப்பவும் உனக்கு சப்போர்ட்டா இருப்பேன்டி. தயவு செஞ்சு பயப்படாதே!" என்றான்.

அப்போதும் நிமிர்ந்து அவன் முகத்தை விழி விரிய நோக்கியவளை மேலும் அருகில் இழுத்தவன் கண்கள் இறுக மூடிக்கொண்டு, அவள் நெற்றியில் அழுந்த முத்த மிட்டு இரு கையால் அவளை அணைத்துக் கொண்டான்.

தாத்தாவின் அறைக்குள் இருவரும் நுழைகையில் மொத்தக் குடும்பமும் கூடியிருந்தது. ஹரியின் கையைப் பற்றியபடி அவன் பின்னேயே நின்று கொண்டாள் ரம்யா.

"ரம்யாவுக்கு ஃபீவர்னு சொன்னானே, ஜெகன். இப்போ எப்படியிருக்க, ரம்யா?" என்ற தாத்தாவிடம், "இப்போ ஃபீவர் குறைஞ்சிடுச்சு. நல்லாயிருக்கா!" என்றான், ஹரி.

"நான் ரம்யாவைக் கேட்டேன். நீ ஏன் பதில் சொல்ற?" என்று கர்ஜித்தவரின் குரல் கேட்டு ஹரியின் சட்டையை அழுத்திப் பற்றி அவன் முதுகில் ஒண்டினாள், ரம்யா.

அவள் நடுக்கத்தை உணர்ந்து, "தாத்தா... அவ..." எனக் கோபமாய்த் தொடங்கியவன், "அவ ஏற்கெனவே பயந்து போயிருக்கா தாத்தா.. ப்ளீஸ்!" என்றான், ஹரி.

"சரி. அப்போ நான் நேரா விசயத்துக்கு வந்துடுறேன். ஒரு நல்ல விசயத்தைப் பத்திப் பேசத்தான் உங்க எல்லோரையும் வரச் சொல்லியிருக்கேன். அதனால யாரும் பயப்படவோ, பதறவோ தேவையில்ல. நான் ஹரிக்கும் ரம்யாவுக்கும் கல்யாண ஏற்பாட்டைத் தொடங்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன். நீங்க என்ன சொல்றீங்க?" என்றார் தாத்தா.

இதை யாரும் எதிர்பாராததால் ஒருவரையொருவர் குழப்பமாய்ப் பார்த்துக் கொண்டனர்.

"அவசரமான முடிவுதான். ஆனாலும் குடும்பத்தோட இப்போதைய மனநிலை ஒரு சுப நிகழ்ச்சி நடந்தா நிச்சயம் மாறிடும்னு நம்பி நான் இந்தக் காரியத்தைத் தொடங்கி வைக்கப் போறேன்..." என்றவர், இருவரின் புறமும் திரும்பி, "இன்னும் இரண்டு வாரத்துல உங்க இரண்டு பேருக்கும் கல்யாணம்!" என்றார்.

"யா... யாரோட?" - அதிர்ச்சியில் தயங்கி வெளி வந்த ஹரியின் வார்த்தைகளுக்குத் தாத்தா அலட்டிக் கொள்ளாமல் கூறிய பதில் இருவரையும் உறைய வைத்தது.

"யாரோடன்னா... என்ன கேள்வி இது? உனக்கு ரம்யாவோட... ரம்யாவுக்கு உன்னோட கல்யாணம்!" என்று அவர் கூற...

ஹரியின் முதுகில் ஒன்றிப் போயிருந்த ரம்யாவும், ரம்யாவின் கையை இறுகப் பற்றியிருந்த ஹரியும் அவரது வார்த்தைகளைக் கேட்டுச் சிலையாகிப் போயினர்.

அந்த அறையின் மௌனத்தைக் கலைக்க எண்ணிய ராமமூர்த்தி, "சரிதான்ப்பா. இது இவங்க சின்ன வயசா இருக்கும்போதே பேசி வைச்சதுதானே! ஆனா இவ்ளோ அவசரம் அவசியம்தானான்னு தோணுது. இருந்தாலும், நீங்க முடிவு பண்ணினப்புறம் அதைத் தடை சொல்ல இந்தக் குடும்பத்துல யாருக்குத் தைரியம் இருக்கு?" என்றார்.

ஆத்திரம் தலைக்கேறத் தந்தையைச் சட்டெனத் திரும்பி நோக்கிய ஹரியை அவர் கண்டு கொள்ளவேயில்லை.

அவன் முதுகிலிருந்து மெல்ல... மெல்லச் சரிந்து மயக்க நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் ரம்யாவை ஹரியினால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவள் கையை இறுகப் பற்றித் தெம்பளிக்க முயன்றவனின் கைகளே நடுக்கமெடுக்கத் தொடங்க... செய்வதறியாது விழித்தான், ஹரி.

"கல்யாணம் முடிஞ்ச கையோட இரண்டு பேரையும் பெசன்ட் நகர் வீட்ல தனிக் குடித்தனம் வைச்சிடலாம். அங்கேயிருந்து ஹோட்டலுக்குப் போக ஹரிக்கு வசதியா இருக்கும்," என்று அவர் தொடர்ந்து கூறினார்.

துரத்துகிறார்! வீட்டை விட்டு இருவரையும் துரத்து கிறார். இந்தாளெல்லாம் மனுஷனே இல்ல.

ஹரியின் உள்ளம் ரௌத்திரத்தில் குமுறியது. இல்லையில்லை... இவரைத் தடுத்தாக வேண்டும், எப்படி யேனும்! இல்லையெனில், இருவருடைய வாழ்வும் வீணாகி விடும்.

அவன் ஒருத்தியையும், அவள் ஒருவனையும் காதலித்துக் கொண்டிருக்கையில், எப்படி இவர்கள் இருவரும் கல்யாணம் செய்து கொள்ள முடியும்? ரிடிகுலஸ்!

சட்டென நிமிர்ந்தவன், "எனக்கு இந்தக் கல்யா ணத்துல இஷ்டமில்ல, தாத்தா!" என்றான்.

இதை எதிர்பார்த்தவர் போன்று தாடியைத் தடவி யவர், "சரி, அப்படின்னா... பெசன்ட் நகர் ஹோட்டல் வேண்டாம்னு எனக்கு எழுதிக் கொடுத்திட்டு வீட்டை விட்டு வெளியே போயிடு..." என்றார்.

எப்படி? எப்படி... இந்த மனிதரால் இப்படி இரக்க மின்றி நடந்து கொள்ள முடிகிறது? இவர் நல்லது செய்வதாகக் குடும்பமே ஹை-பிச்சில் கத்துகிறதே! இவர்கள் இருவருக்கு மட்டும் ஏன் அநீதி இழைக்கிறார்?

பதில் சொல்ல முடியவில்லை அவனால்.



எப்படி முடியும்? ஐந்து வயதிலிருந்து 'அது என் ஹோட்டல்' எனக் கூறிக் கனவு கண்டவனால்... எப்படி அதைத் தாரை வார்க்க முடியும்? எப்படியெல்லாம் செக் வைக்கிறார்! இறுகிப் போய் அமைதியாய் நின்றிருந் தவனைக் கண்டு விட்டு, மகன்களிடம் திரும்பித் திருமண ஏற்பாட்டைப் பற்றிக் கூற ஆரம்பித்தார் அமாத்யர்.

'வேண்டாம்! வேண்டாம்...' என்று கதறிய இரு நெஞ்சங்களின் ஓலங்களை அங்கிருப்பவர்கள் எவரும் மதிப்பதாகத் தெரியவில்லை.

ஹரியின் சட்டையின் பின்புறம் ரம்யாவின் கண்ணீரினால் நனைந்து கொண்டிருந்தது. கோபத்தை அடக்கத் தெரியாமல் பெரிய பெரிய மூச்சுகளை வெளி விட்டவனின் கண்களிலும் நீர் கோத்திருந்தது.

அவன் பின்னிருந்து வெளி வந்தவள் மெல்ல, "தாத்தா..." என்றழைக்க, அனைவரும் நிமிர்ந்து அவளை நோக்கினர்.

"நா... நான் பண்ணினது தப்புதான், தாத்தா. இனி சத்தியமா கிட்டாரைக் கையில் தொட மாட்டேன். நீ... நீங்க சொல்றதெல்லாம் கேட்கிறேன் தாத்தா. இ... இந்தக் கல்யாணம் மட்டும் வேண்டாம், தாத்தா ப்ளீஸ்!" என்று கையெடுத்துக் கெஞ்சியவளைக் கண்டு பெண்கள் நால் வரும் கண்ணீர் வடித்தனர்.

தாத்தா மட்டும் கொஞ்சம் கூட அலட்டிக் கொள் ளாமல், "சங்கீதா... ரம்யாவை அறைக்கு அழைச்சிட்டுப் போம்மா!" என்றார்.

அவளருகே வந்து கைபற்றி இழுத்த சங்கீதா விடமிருந்து திமிறி, "தாத்தா... ப்ளீஸ் தாத்தா... நான் பண்ணுன தப்புக்காக ஏன் ஹரியைத் தண்டிக்கிறீங்க? அவனை விட்டுடுங்க, தாத்தா... ப்ளீஸ்!" என்றவளின் குரல் தேய்ந்து போய் விட... கை முஷ்டியை இறுக்கி அழுகையை அடக்கினான் ஹரி.

கோபமாய் வெளியேறியவனைத் தொடர்ந்து மொத்தக் குடும்பமும் பின்னே வர... சட்டையில் கண்ணீரைத் துடைத்தவன், "இதை விடப் பெரிய தண்டனையை எங்களுக்குக் கொடுக்க முடியாது!" என்றான்.

"ஹரி..." என்ற ஜெகநாதனிடம்,

"இப்போ என்ன மாமா? நான் இந்தக் கல்யா ணத்துக்கு ஒத்துக்காட்டி என் கனவை என்கிட்ட இருந்து பறிச்சிடுவார். அவ்ளோதானே? காசு, சொத்தைச் சுற்றி மட்டுமே யோசிக்கிற அவரை மாதிரி நான் இல்லைன்னு சொல்லிடுங்க அவர்கிட்ட. அவர் பேச்சைக் கேட்க முடிய லேன்னா வீட்டை விட்டு வெளியே போயிடுன்னு அடிக்கடி சொல்வாரே! நான் இப்போ வெளியே போறேன்.

"குடும்ப பாரம்பரியம், கௌரவம்னு பேசிட்டு அவரை இப்படியே இருக்கச் சொல்லுங்க..." என்றவன், வேகமாகச் சென்று தன் பைக் சாவியைக் கையில் எடுத்தான்.

பின் வெறுப்புடன் அதை வீசியெறிந்து விட்டு விறு விறுவெனப் படிகளில் இறங்கினான். வாசலை அவன்



எட்டியபோது அடியாட்களைப் போல் காட்சியளித்த இருவர் அருகே வந்தனர்.

வியப்புடன் திரும்பித் தந்தையை நோக்கினான், ஹரி. "அடியாள் வைச்சிருக்கீங்களாப்பா?" என்றவன், நக்கலாகச் சிரித்து, "இவங்க இரண்டு பேரை அடிச்சுப் போட்டுட்டு வெளியே போக எனக்கு எவ்ளோ நேரம் ஆகும்னு நினைக்கிறீங்க?" என்றான்.

நிதானமாகப் படிகளிலிருந்து இறங்கி வந்த ராமமூர்த்தி, "வெளி வாசல்ல 20 பேர் நிக்கிறாங்க. ரோட்டில 200 பேர். ஊர் முழுக்க 2000 பேர் கூட இருக்கலாம். உன் தாத்தா ஏற்பாடு பண்ணின ஆட்கள். இவங்களையெல்லாம் அடிச்சுப் போட்டுட்டு ஓடிட முடியுமா உன்னால?" என்றார்.

அவசரமாய் யோசித்தவனின் முகம் நோக்கியவர், "இப்போ நீ உயிரை விட நினைச்சாக்கூட உன் தாத்தா வோட பர்மிஷன் வேணும், ஹரி!" என்றார்.

"நீங்கதான் என்னைப் பெத்தீங்களா? இல்ல... ரோட்டோரத்தில கிடந்த என்னைத் தூக்கிட்டு வந்து வளர்க்குறீங்களாப்பா? பெத்த பிள்ளையைக் கைதி மாதிரி ட்ரீட் பண்ணுற நீங்கள்லாம் குடும்ப பாரம்பரி யத்தைப் பேச வந்துட்டீங்க..." கோபமாய்ப் பொரிந்து விட்டுப் படியேறித் தன் அறைக்குச் சென்று சாத்தினான், ஹரி.

நாள் முழுக்க இருவரும் அறைக்குள்ளேயே சிறை வைக்கப்பட்டனர்.

வீடு முழுக்கக் காவல் வேறு. குடும்பத்தினர் அனைவரும் இருவரையும் பாவமாய் நோக்கினாலும், ஒருவருக்கும் தாத்தாவை எதிர்க்கும் துணிவில்லை.

இப்படியே ஒரு வாரம் சென்று விட... அன்றிரவு மொட்டை மாடியில் நின்றபடி தோட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தவனின் அருகே வந்தாள் ரம்யா.

அவளைக் கண்டதும் விரைத்துப் போனவன் இன்னும் தீவிரமாய்த் தோட்டத்தை வெறித்தான்.

"ஹரி...."

"............"

"எ...என் மேல கோபமாடா?"

"கோபம் இல்ல. கொலை வெறில இருக்கேன்." - பட்டெனப் பதில் வந்தது அவனிடமிருந்து.

"நா... நான் என்னடா செய்யட்டும்?"

"இன்னும் நீ செய்றதுக்கு என்னடி இருக்கு? அதான் எல்லாம் பண்ணிட்டியே... உன்னாலதான்டி, நான் அனுபவிச்ச துயரமெல்லாம்... உன்னால மட்டும் தான். சின்ன வயசுல இருந்து நீ பண்ணுன தப்புக் கெல்லாம் நானும் சேர்த்துத் தண்டனை அனுபவிச்சேன், பார். அதுக்குத்தான்டி என்னைக் கொண்டு வந்து இப்படி நிப்பாட்டிட்ட..." என்று அவன் முடிப்பதற்குள்...

"எல்லாப் பழியையும் அவ மேலயே போடாதடா ராஸ்கல்!" என்றபடி அருகே வந்தார், ராமமூர்த்தி.



"உங்க பையனோட வாழ்க்கை அழியப் போகிற நிலையில இருக்கும்போது கூட எப்படிப்பா உங்களால அவளுக்கு சப்போர்ட் பண்ண முடியுது?"

"எனக்கு இரண்டு பேருமே முக்கியம்தான்டா. என் பையன்-ங்கறதுக்காக நீ பண்ணின தப்பை நான் நியாயப்படுத்த முயற்சிக்க முடியாது."

"நான் என்ன தப்பு பண்ணினேன்?"

"நடராஜன் மகள் ப்ரியாவும், நீயும் காதலிக் கிறீங்களா?"

பேச்சின்றித் தலை குனிந்தவனிடம், "பதில் பேசுடா!" என்றார் அவர்.

"ஆமாம், அவளைத்தான் காதலிக்கிறேன். அதில் என்ன தப்பு இருக்கு?"

லேசாய் நகைத்தவர், "அவ உன் காதலின்னா, இவ யாருடா?" என்றார்.

"அப்பா...." என்றபடி ஹரியும், "மாமா......." என்றபடி ரம்யாவும் இடைமறிக்க....

"என்னடா... ஏன் கத்துறீங்க? எந்நேரமும் ஒட்டிக் கிட்டே சுத்துறீங்க! ஒரே ரூம்ல தூங்குறீங்க கை பிடிச்சுக் கிறீங்க, கட்டிப் பிடிச்சிக்குறீங்க. உங்களை லவ்வர்ஸ்னு நாங்க நினைக்கக் கூடாதுன்னு எப்படிடா சொல்றீங்க?

"நீங்க இரண்டு பேரும் காதலிக்கிறதா நினைச்சு உங்க படிப்பு முடிஞ்சதும் கல்யாணம் பண்ணலாம்னு நாங்க திட்டம் போட்டிருந்தோம். எங்க ஆசையில

மண்ணை வாரிப் போடுற மாதிரி இந்தப் பய நடராஜன் மகளோட பீச்சுல சுத்துற விவரம் தாத்தாவுக்குக் கிடைச் சது. நாங்க அதிர்ச்சியடையாம என்னடா செய்வோம்? இது இன்னைக்கு, நேத்து நடக்கிறதில்லை. பரம்பரை பரம்பரையாகக் குடும்பத்துக்குள்ள கல்யாணம் பண்றது தான் நம்ம வழக்கம். எதிர்த்துப் போராடி உங்களையும் கஷ்டப்படுத்தி, எங்களையும் கஷ்டப்படுத்தாம நடப்பை ஏத்துக்கிட்டு சந்தோசமா வாழப் பழகுங்க..." என்றவர் ரம்யாவை இழுத்துக் கொண்டு கீழே சென்று விட்டார்.

அதிர்ச்சியில் ஆடிப் போய் நின்ற ஹரிக்கு, அதற்கு மேல் யோசிக்கத் தோன்றவேயில்லை. தொடர்ந்து வந்த வாரத்தில் இருவரும் தப்பிக்க யோசித்த வழிகள் அனைத்தும் சுலபமாய் அடைக்கப்பட்டுக் கொண்டி ருந்தன.

நாளை திருமணம் என்ற நிலையில் இருவரையும் தேடி வந்தாள், ப்ரியா.

வீடு முழுக்கத் தோரணங்களையும், அலங்காரங் களையும் கண்டவளுக்குத் துக்கம் பொங்கியது. இரண்டு வாரமாக இருவரது அலைபேசிக்கும் முயற்சித்து, அவள் சோர்ந்திருந்த வேளை, 'ஹரிக்கும், ரம்யாவுக்கும் கல்யாணம்' என்று தந்தை கூறியபோது, அவளால் நம்பவே முடியவில்லை.

அவசர அவசரமாய்க் கல்யாணம்! ஏன்? உடன் பிறந்தவர்கள் போன்று ஒன்றாய் வளர்ந்திருந்த இருவ ரையும் எப்படிச் சேர்த்து வைத்து யோசிக்க முடிந்தது?



கண்களில் நீர் கோக்க சுற்றிச் சுற்றி நோக்கிய வளை வரவேற்ற சங்கீதாவிடம், "நா... நான் ஹரியைப் பார்க்கணும் அண்ணி!" என்றாள்.

என்ன கூறுவதென்று தெரியாமல் தவித்த சங்கீதா, "ப்ரியா, இப்போ வீடு இருக்கிற சூழ்நிலை உனக்குத் தெரியுமா...? என்னன்னு எனக்குத் தெரியல. வீட்டில் தாத்தாவைத் தவிர ஒருத்தர் கூட சந்தோசமா இல்ல. கல்யாண வீடு, கிட்டத்தட்ட எழவு வீடு மாதிரி இருக்கு. தயவு செஞ்சு இருக்குற சிச்சுவேஷனை இன்னும் வொர்ஸ்ட் ஆக்காம நீ கிளம்பிடு ப்ளீஸ்!" என்றாள்.

"ஒ... ஒரு தடவை அண்ணி... ப்ளீஸ்..." என்று கெஞ்சியவளை இழுத்துக் கொண்டு வாசலுக்குச் சென்றவள், "நான் ஹார்ஷா பிஹேவ் பண்ணுறதா நினைக்காதே, ப்ரியா. இப்போ நீ ஹரியைப் பார்க்குறது நல்லதில்லை. தாத்தாவுக்குத் தெரிஞ்சா விசயம் உன் அப்பா காதுவரை போகும். அப்புறம் இரண்டு குடும்பத் துக்கும் இருக்குற உறவு சுமுகமா இருக்கும்னு நாம நினைக்க முடியாது. தயவு செய்து போயிடு, ப்ரியா. ப்ளீஸ். நான் உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்," என்று கூறப், பதிலின்றி அழுதபடியே ஓடிச் சென்றாள், ப்ரியா.

அவள் சென்றதும் முட்டிக் கொண்டு வந்த அழுகை யைக் கட்டுப்படுத்த முடியாமல் திரும்பிய சங்கீதாவிடம், "தா... தாங்க்ஸ் அண்ணி!" என்றான் ஹரி.

கோபத்துடன் அவனை நிமிர்ந்து நோக்கியவள், "இனி மனுஷத்தன்மையே இல்லாத இந்த மாதிரி காரி

யத்தை என்னைச் செய்யச் சொல்லாதே, ஹரி...” எனக் கூறி விட்டு அழுகையுடன் நகர்ந்து விட்டாள்.

கண்களில் தேங்கியிருந்தக் கண்ணீருடன் ப்ரியா ஓடிச் செல்வதை நோக்கிய ஹரி தனது கையாலாகாத தனத்தை எண்ணிக் கோபத்திலும், ஆத்திரத்திலும் தன் அருகேயிருந்த கண்ணாடியை ஓங்கி அடித்தான்.

அழுகை முட்ட இதைப் பார்த்துக் கொண்டிருந்த ரம்யாவிற்குத் தோழியின் நிலையை எண்ணி அழுவதா? அல்லது ஹரியை நினைத்தா? இல்லை, தன்னை நினைத்தா? நடப்பது எதையும் அறியாமல் தன்னை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் சதிஷை நினைத்தா என்றே தெரியவில்லை.

நான்கு ஜீவன்களின் இதயத்தை ஒரே அடியில் வீழ்த்தி விட்ட அமாத்யரைத் தவிர, மறுநாள் அவர்களது வீட்டில் நடந்த இருவரது திருமணத்தில் எவரும் மகிழ்ச்சி யாய் இல்லை.

நடுக்கமும், துக்கமுமாய் நேர் வெறித்தபடி அமர்ந் திருந்த ரம்யாவின் கழுத்தில் தாலி கட்டிய ஹரி, தங்கள் மீது சிதறிய அட்சதைகளுக்கு நடுவே அவள் முகம் நோக்கினான்.

அவன் பார்வையை உணர்ந்து அவன் புறம் திரும்பிய ரம்யாவும் அவனையே நோக்கினாள்.

இருவரது பார்வையும் ஒரே கேள்வியைத்தான் கேட்டது.

‘இனி நம்ம வாழ்க்கை எப்படியிருக்கும்?’



# 7

## *You are driving me crazy!*

**குழந்தைன்னு சொன்னாலே எனக்குச் சட்டுன்னு நினைவுக்கு வர்றது ஷ்யாம் தான்! என் பக்கத்து வீட்டுல குடியிருந்த பெங்காலி வீட்டுப் பையன். வெள்ளை வெளேர்னு கொழுகொழு கன்னத்தோட, அந்தச் சின்னச் சின்னக் கால்களை வைச்சு எந்நேரமும் அவன் ஓடிட்டே திரியுற அழகைச் சலிக்காம பார்க்கலாம்!**

**அழுக்கேறி யிருக்கிற அந்தப் பிஞ்சு விரல்களை வைச்சு என் கன்னத்தைத் தட்டி, “வா... வா...”ன்னு கைகாட்டி விளையாடக் கூப்பிட்டதும், புது டிரஸ் போடும் போது கன்னத்தில கை வைச்சு, “நல்லாக் காடி...”ன்னு ஆடிட்டே அவன் கேக்குறதும், இன்னும் என் கண்ணுக் குள்ளேயே இருக்கு.**

**குழந்தைகளுக்கு முத்தம் கொடுக்கும்போது சொர்க்கத்தைத் தொட்டுட்டு வர்ற மாதிரி ஒரு உணர்வு... அது ஏன்?**

**ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...**

“நீ எங்க போனாலும்... நான் ப்ரே பண்ணுவேன்...

எல்லாச் சாமியும் நான் ப்ரே பண்ணுவேன்...”

தொலைக்காட்சிப் பெட்டியின் மீது பார்வையைப் பதித்தபடி யோசனையில் ஆழ்ந்திருந்த ஹரியை வீட்டின் அழைப்பு மணி கலைத்தது.

கையிலிருந்த டிவி ரிமோட்டை சோபாவில் எறிந்து விட்டு வாசலுக்குச் சென்றவன் கதவைத் திறந்தான்.

அவன் ஆர்டர் செய்திருந்த பீட்சா வந்திருந்தது. வாங்கிக் கொண்டு கதவைச் சாத்தி விட்டு உள்ளே வந்தவனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. வேகமாக டப்பாவைப் பிரித்து பீட்சாக்களை வாயிலடைத்தவனுக்கு நான்கு வாய் உள்ளே சென்றதும் தொண்டை அடைக்க, தண்ணீர்ப் பாட்டிலை எடுத்துக் கொண்டு கிச்சனுக்குச் சென்றான்.

ஹை-டெக் மாடுலர் கிச்சன்! அழகாயிருந்து என்ன பிரயோஜனம்? இதுவரை ஒரு வேளை உணவு சமைத்த தில்லை.

பாட்டிலை நிரப்பிக் கொண்டு திரும்பியவனின் கண்களில் கழுவப்படாமல் கிடந்த டீ கப்புகள் பட்டன. அருகே சென்று கப்பைக் கையில் எடுத்துப் பார்த்தான். மூன்று வேளையும் வெறும் பால் மட்டும் குடித்து உயிர் வாழ்கிறாள்! திமிர் பிடித்தவள். கோபப் பெருமூச்சை வெளியிட்டபடி எட்டி எதிரே யிருந்த அறையை நோக்கி னான்.

இந்த வீட்டிற்கு வந்து ஒரு வாரமாயிற்று. ஒரு முறை கூட அவளைக் கண்ணால் காணவில்லை அவன். இத்தனைக்கும் இந்த ஏழு நாட்களும் இருவரும் வீட்டை விட்டு வெளியேறவில்லை.

என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள் இவள்? இப்படியே வாழ்நாள் முழுவதையும் கடத்தி விடலாம்



என்றா? அடுத்து என்ன செய்வதென்று புரியாமல் முழித்துக் கொண்டு திரிகிறான், இங்கே ஒருவன். இவள் சொகுசாக அறைக்குள்ளேயே காலத்தைக் கழிக்கிறாள். எரிச்சலுடன் சென்று அவள் அறை முன்பு நின்றவன் கதவு உடைந்து விழும் அளவிற்கு அதை ஓங்கித் தட்டி னான்.

அன்று திருமணம் முடிந்து மணமேடையை விட்டு எழுந்த இருவரையும் தாத்தாவிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொள்ளச் சொல்லிக் குடும்பமே வற்புறுத்தியது.

அசையாமல் நின்ற இருவரையும் கண்டு, "அதெல்லாம் வேணாம், வேணாம். நல்லாயிருங்க!" என்று கைகாட்டி விட்டுச் சென்று விட்டார், அமாத்யர்.

"ஹரி...." என்று பல்லைக் கடித்த தந்தையிடம், "அதான் அவரே வேணாம்னு சொல்லிட்டாரே!" என்று முணுமுணுத்தான், ஹரி.

தலை நிமிராமல் இறுகிப் போய் நின்றிருந்த ரம்யா, அவர் நகர்ந்ததும் மாலையைக் கழற்றி சோபாவின் மீது எறிந்து விட்டு விறுவிறுவெனத் தன் அறைக்குச் சென்று விட்டாள்.

எங்கோ பார்த்தபடி நின்றிருந்த ஹரியும் தோளைக் குலுக்கி விட்டுத் தன் பைக் சாவியை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டான்.

ஆளுக்கொரு பாதையில் சென்று விட்டவர்களைக் கண்டு பேய் முழி முழித்தனர் குடும்பத்தினர்.

பதினைந்து நிமிடத்தில் அறையை விட்டு ஜீன்ஸ், டாப் சகிதம் வெளியே வந்த ரம்யா தன் அன்னையை நோக்கி, "என் திங்ஸ் எல்லாம் எப்போ அந்த வீட்டுக்கு மூவ் பண்றீங்க?" என்று வினவினாள்.

"ரம்யா..." என்று காட்டமாக அழைத்த தந்தையை அவள் கண்டு கொள்ளவேயில்லை.

"கண்ணு... ரம்யா..." என்றழைத்த வைஜெயந்தியையும் தவிர்த்து விட்டு, "என் கிட்ட அந்த வீட்டுச் சாவி ஒரு செட் இருக்கு. நான் நேரா அங்கே போயிடுறேன்," என்றவள் தோள் பையை மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

வீட்டினர் அனைவரும் செய்வதறியாது நோக்குவதைப் பொருட்படுத்தாமல், தன் ஸ்கூட்டியை உயிர்ப்பித்து அவள் நேராகச் சென்றது, சதிஷ் வேலை செய்யும் பார்க் ஹோட்டலுக்கு.

அவனை எப்படி எதிர்கொள்வது? நடந்து போன விசயங்கள் அத்தனைக்கும் அவனிடம் என்ன விளக்கம் சொல்வது? இனி அவர்களிருவரது எதிர்காலம் என்னவென்று எப்படித் தீர்மானிப்பது? இது எதுவுமே அவளுக்குத் தெரியவில்லை.

அவளுக்கு அவனைப் பார்த்தாக வேண்டும். நடந்தேறிய நிகழ்வுகள் அனைத்தும் அவளது விருப்பமின்றி... கட்டாயத்தின் பேரில் நடந்ததென அவனிடம் கூற வேண்டும். அதன் பின்பு அவன் என்ன நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை.



அவனுக்காகக் காத்திருந்த நொடிகள் ரணமாய் நகர... வேகமாய் அடித்துக் கொள்ளும் இதயத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தாள், ரம்யா.

கடைசியில் வந்தான் அவன், "ஹலோ மிஸ். ரம்யா!" என்றபடி.

திகைத்து நிமிர்ந்து நோக்கியவளுக்கு அவனது கண்களிலிருந்து எதையும் கண்டறிய முடியவில்லை. வழக்கமான சிரிப்பைத் தாங்கியிருந்தது அவன் முகம். அதே சிரிப்புடன் அவள் முன்பு தன் வலது கையை நீட்டியவன்.. "கங்க்ராட்ஸ் ரம்யா. கல்யாணம் ஆயிடுச்சுன்னு கேள்விப்பட்டேன்..." என்றான்.

சட்டென நிமிர்ந்து அவனை நோக்கியவள் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் கால் விரலில் குடியேறி யிருந்த மெட்டி, கை முழுதிலும் கோலமிட்டிருந்த மெகந்தி, நெற்றியிலிருந்த குங்குமக் கறை... அவள் அணிந்திருந்த சட்டையை மீறி வெளியே ஜொலித்துக் கொண்டிருந்த மஞ்சள் கயிறு! அனைத்தையும் கண்டவனுக்கு உள்ளே தகதகவென எரிந்தது.

"கல்யாணப் பொண்ணுக்கு இங்க என்ன வேலை? பை சான்ஸ்! உன்னோட ரிசப்ஷன் எதுவும் இங்க நடக்குதா?"

"............."

"ஆமான்னு மட்டும் சொல்லிடாத. கோபத்துல ஃபங்ஷனுக்கு வர்ற எல்லாரோட சாப்பாட்டுலயும் விஷம் வைச்சிடப் போறேன்."

"சதீஷ்... ப்ளீஸ்..."

"வாழ்நாள் முழுக்க உன்னை ப்ளீஸ் பண்ணிக்கத் தான் நான் விரும்பினேன், ரம்யா. உன்னை இப்படி ஒரு கோலத்துல என் முன்னாடி பார்க்கிறதுக்கு இல்ல. தமிழ் சினிமால நிறையப் பாட்டு இருக்கு. பொண்ணுங்க ஏமாத்துறதையும், துரோகம் பண்றதையும் சொல்ற மாதிரி. இப்போல்லாம் நான் அந்த மாதிரிப் பாட்டைத் தான் நிறையக் கேட்கிறேன். ஊர்ல என்னை மாதிரி நிறையப் பேர் இருக்கான் போல. நீ கேட்டிருக்கியா, அந்தப் பாட்டெல்லாம்?"

"..............."

"ஓ! மேடம்... ராக் மியூசிக் கேக்குற ஆளாச்சே! நேரம் கிடைக்கும்போது வேணா, கேட்டுப் பாரேன்."

"சதீஷ்......."

"இன்னொரு தடவை என் பேரைச் சொல்லாத, ரம்யா. எனக்கு ஆத்திரம் வருது. பளார்னு உன்னை அறையணும் போல இருக்கு."

"தயவு செய்து நான் சொல்றதைக் கேளுங்க, சதீஷ். இது எப்படி நடந்தது... ஏன் நடந்ததுன்னு என்னை விளக்கம் சொல்ல விடுங்க, ப்ளீஸ்."

"விளக்கம் கேட்டு முடிச்சப்புறம் நான் என்ன செய்யணும்?"

"சதீஷ்......"



"இனி என்ன இருக்கு ரம்யா... உனக்கும், எனக்கும் இடையில? கல்யாணம் முடிஞ்ச கையோட நீ இப்படி ஓடி வந்து என்கிட்ட எக்ஸ்ப்ளைன் பண்ணக் காரணம் என்ன? என்ன கான்சீக்வன்ஸஸை எதிர்பார்த்து என்னைத் தேடி வந்த? அதுக்குப் பதில் சொல்லு முதல்ல!"

"நான் எதையும் எதிர்பார்த்து வரலை, சதீஷ். என்னைக் காதலிச்ச உங்ககிட்ட.... இது எப்படி, ஏன் நடந்ததுன்னு எக்ஸ்ப்ளைன் பண்றது நியாயம்னு என் மனசுக்குப் பட்டது. அதனாலதான் உங்களைத் தேடி வந்தேன். மத்தப்படி நீங்க நினைக்கிற மாதிரி எந்த எதிர் பார்ப்பும் எனக்கு இல்ல."

"நான் என்ன நினைக்கிறேன்னு உனக்கு எப்படித் தெரியும்? சரி, என்ன விளக்கம் கொடுக்க நினைச்ச? சொல்லிட்டு இடத்தைக் காலி பண்ணு."

சோர்வுடன் அவனை நிமிர்ந்து நோக்கியவள், நடந்த அத்தனையையும் விவரித்தாள்.

"ஹ்ம்ம். அப்போ உன்னோட விருப்பமே யில்லாம நடந்த கட்டாயக் கல்யாணம் இது. அப்படித்தானே?"

"ஆமாம்."

"அப்படின்னா இன்னும் கூட உன் மனசு என்னைத் தான் விரும்புது?"

"..........."

"இந்த மௌனத்தை நான் சம்மதம்னு எடுத்துக் கட்டுமா?"

"............"

"சரி, அப்டின்னா இப்பவே என் கூட வா. உன் தாத்தா, குடும்பம் எதுவும் தேடி வராத இடத்துக்கு உன்னை நான் அழைச்சிட்டுப் போறேன். நாம நினைச்ச படி இரண்டு பேரும் சந்தோசமான ஒரு வாழ்க்கை வாழலாம். என்ன சொல்ற?"

"சதீஷ்..." வியப்புடன் ஒலித்தது ரம்யாவின் குரல்.

"ஏன்... ஏன் ஆச்சரியப்படுற? இது கட்டாயக் கல்யாணம்னு நீ விளக்கம் கொடுத்து முடிச்சதும், என்னோட ரியாக்ஷன் இதுவாத்தானே இருக்கும்? இதை எதிர்பார்க்காமலா என்னைத் தேடி ஓடி வந்த? கம் ஆன் ரம்யா... விருப்பமில்லாத உறவுக்குள்ள நீ ஏன் இருக் கணும்? என் கூட வா. எல்லாத்தையும் நான் பார்த்துக் கிறேன்," என்றபடி அவள் கைபற்றியவனின் கரங்களைச் சட்டென உதறிய ரம்யா...

"உளறாதீங்க, சதீஷ்!" என்றாள்.

நக்கலாகச் சிரித்தபடி அவளை விட்டு நான்கடி தள்ளி நின்ற சதீஷ், "அன்னிக்கு யாருடா நீன்னு அவன் என் சட்டையைப் பிடிச்சப்பவே நான் யோசிச்சிருக்கணும். நான் உன் கையைப் பிடிச்சதையே அவனால பொறுத் துக்க முடியல. அவன் எப்படி நீயும், நானும் லவ் பண்ணு றதை ஏத்துப்பான்? இதெல்லாம் அவனோட ப்ளானா தான் இருக்கும்..." என்றான்.

கோபத்துடன் அவனை இடைமறித்த ரம்யா, "தேவையில்லாம ஹரி மேல பழி போடாதீங்க. இந்தக் கல்யாணம் அவனோட விருப்பமும் இல்லாமதான் நடந்தது..." என்றாள்.



"அதை நீ நம்பு. நான் நம்ப வேண்டிய அவசிய மில்லை. பொறுக்கி, ராஸ்கல். வேற ஒருத்தனை லவ் பண்ணுற பொண்ணுக்கு வெட்கமில்லாம தாலி கட்டி யிருக்கான். பாஸ்டர்ட்!"

அவன் முடிப்பதற்குள் ஆத்திரத்துடன் அவன் சட்டையைப் பற்றினாள் ரம்யா.

"இனி ஒரு வார்த்தை என் ஹரியைப் பத்தித் தப்பா பேசுன... மூஞ்சியைப் பேத்துடுவேன். யாருடா பாஸ்டர்ட்... ராஸ்கல்! உனக்கு என்னடா தெரியும் அவனைப் பத்தி? என் விருப்பத்தை மதிக்கிற, என்னை அக்கறையாய்ப் பார்த்துக்கிற ஒரே ஜீவன் இந்த உலகத்திலேயே அவன் மட்டும்தான். இனி வாயைத் திறந்தேனா... பல்லைத் தட்டிடுவேன்."

"வீராங்கனையெல்லாம் வெளியே வர்றாங்க போல! கோபத்தைக் குறைச்சுக்கிறதுதான் இல்லத்தரசிகளுக்கு நல்லதாம். அதனால, இனி காரமாச் சாப்பிடாத!" என்றபடி அவள் கையை விலக்கிய சதீஷ்...

"எப்படி எப்படி? 'என் ஹரி...' ஹ்ம்... இனி, உன் கிட்டப் பேச எனக்கு எதுவும் இல்லைன்னு தோணுது, ரம்யா. உன் கல்யாண வாழ்க்கை நாசமாப் போக என்னோட வாழ்த்துகள்!"

அவள் கையை வலுக்கட்டாயமாகப் பற்றிக் குலுக்கி விட்டு, விறுவிறுவெனச் சென்று விட்டான்.

கோபமும், ஆத்திரமும் ஒரு சேர அவனை நோக்கிய ரம்யாவின் மனம் சோர்ந்து போனது.

அவள் நினைத்து வந்ததென்ன? இங்கே நடந்த தென்ன? அவளது சிறகுகள் அனைத்தையும் ஒடித்து, ஒடுங்க வைத்துச் சிறைப்படுத்தி அவள் தாத்தா நடத்தி வைத்த திருமணம் இது என்று கூறி... அவனைக் காயப் படுத்திய இந்த நிகழ்விற்காக மன்னிப்புக் கேட்கத்தான் அவள் வந்ததே!

அது... அது... இப்படி மாறும் என்று அவள் நினைக்கவே இல்லை.

அவனது கோபமும் நியாயம்தான்! காதலித்த பெண் வேறு ஒருவனைத் திருமணம் செய்து கொள்கிறாள் என்கையில் எவருக்கா யிருந்தாலும் கோபம் வரத்தானே செய்யும்? நெற்றியை அழுத்தித் தேய்த்தபடி அவன் பின்னே ஓடியவள்,

"சதீஷ்... சதீஷ் ப்ளீஸ்... கோபப்படாம யோசிச்சு என்னைப் புரிஞ்சுக்க ட்ரை பண்ணுங்க. நான்... நான்... ஐ அம் சாரி சதீஷ்... இது எவ்ளோ அபத்தமான வார்த் தைன்னு எனக்குத் தெரியும்... சதீஷ்...!" என்று கூற,

அவன் காது கேளாதவன் போல் லிஃப்டில் ஏறிச் சென்று விட்டான்.

கண்களில் நீர் கோத்துவிட... அழுது கொண்டே ஹோட்டலை விட்டு வெளியேறினாள் ரம்யா. அடுத்து ப்ரியாவைத் தேடிச் சென்றாக வேண்டும்.



உயிர்த் தோழி அவள்! அவளுக்கே துரோகம் செய்தாக வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டு விட்டாள். எல்லாத்துக்கும் காரணம் அந்தக் கிழவன் தான்! தாத்தாவைக் கொன்று போட்டு விடுமளவிற்கு வெறியே வந்தது அவளுக்கு.

ப்ரியாவின் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே சென்றாள். நல்ல வேளை. அவளது தந்தையும், தாயும் வீட்டில் இல்லை. நேராக அவளது அறைக்குள் நுழைந்தவள்... கண்டது, எதிர்பார்த்த ப்ரியாவின் தோற்றம்தான். அழுது, அழுது முகம் வீங்கி யிருந்த நிலையிலும் அவளைக் கண்டதும் எழுந்து புன்னகைத்த தோழியைக் கண்டு, அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்துச் சிதற... முகத்தை மூடிக் கொண்டு கதறினாள், ரம்யா.

ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்ட ப்ரியா, அவள் முதுகை நீவி ஆசுவாசப் படுத்தினாள். "நீ.. நீயாவது என்னை நம்புவியாடி? அவர்... ச... சதீஷ் எ... என்னைப் புரிஞ்சுக்காம திட்டிட்டார்டி..."

தேம்பல்களுக்கிடையில் புலம்பியவளின் கண்களைத் துடைத்த ப்ரியா... அவளைச் சமாதானப்படுத்தினாள்.

பின் அவள் கையில் தண்ணீரைக் கொடுத்து அமர வைத்தவள், "இங்கே ஏன் வந்த? உன் தாத்தாவுக்குத் தெரிஞ்சா பிரச்சனையாயிடுமே...!" என்றாள்.

விரக்தியுடன் சிரித்த ரம்யா, "இனி, பிரச்சனையாக என்னடி இருக்கு? இனி அவர் என்ன பண்ணினாலும்

எனக்கு எந்தக் கவலையும் இல்ல!" என்றவள் தோழியின் கையைப் பற்றிக் கொண்டு,

"ப்ரியா... நீ... நீ அழாதே. உடைஞ்சு போகாதே. என்னைக்கா இருந்தாலும் ஹரியோட பொண்டாட்டியா அவனோட வாழப் போறது நீ மட்டும்தான். கொஞ்ச நாள்... கொஞ்ச நாள் நிலைமை சரியானதும், நான் எனக்குன்னு ஒரு வேலையைப் பார்த்துக்கிட்டு இது எல்லாத்தையும் தலை முழுகிட்டு எங்கேயாவது வெளி நாட்டுக்குப் போயிடுவேன். உங்க இரண்டு பேரோட வாழ்க்கைக்கு நிச்சயம் நான் தடையா இருக்க மாட்டேன். இதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்..." என்றாள்.

அவள் கூறுவதைக் கேட்டுப் புரியாமல் நோக்கிய ப்ரியா, "லூசு மாதிரி உளறாத!" என்றாள்.

"இல்லடி. நான் நிறைய யோசிச்சு எடுத்த முடிவு தான் இது. என் தாத்தா கிட்டயிருந்து தப்பிக்க இதைவிட வேற வழியே கிடையாதுடி. ஹரிக்கு அந்த ஹோட்டல் தான் கனவு, லட்சியம் எல்லாம். அதனால... அவனால என் குடும்பத்தை விட்டு அவ்ளோ சுலபமா வெளியே வர முடியாது. ஆனா எனக்கு அப்படியில்ல. நான் இது எல்லாத்தையும் விட்டு வெளியே போகத் தயாரா இருக்கேன்."

"உணர்ச்சி வேகத்துல பேசுற நீ... முதல்ல வீட்டுக்குப் போ. எல்லாம் நிதானமா அப்புறம் பேசிக்கலாம்."

"நீ எப்போ கேட்டாலும் என்னோட முடிவு இது தான்டி..."



"நீ கிளம்பு முதல்ல. என் அப்பா பார்த்தார்னா பிரச்சனையாயிடும்."

"ப்ரியா...."

"நீ என் ஃப்ரெண்ட் டி. நான் எப்படி உன்னைத் தப்பா நினைப்பேன்? என் வாழ்க்கை முக்கியம்னு நீ நினைக்கிற மாதிரி, உன் வாழ்க்கையும் எனக்கு முக்கியம் தான். உன்னை எங்கேயோ ஒரு மூலைக்குத் துரத்தி விட்டுட்டு நான் ஹரியோட சந்தோசமா வாழ்வேன்னு நினைக்கிறியா? நீ எப்பவும் போலக் கற்பனையில பார்க்குற விசயங்களை நிஜமாக்க நினைக்குற. ஆனா.. நீ சொன்ன எதுவும் ப்ராக்டிகலா சாத்தியமில்லாத விசயம். கிளம்புடி லூசு.

"ஒரு வாரம், ஒரு மாசம் அழுது தீர்த்துட்டு நானும் என் வாழ்க்கையோட ட்ராவல் பண்ண ஆரம்பிச்சுடுவேன். ஐ வில் பீ கம்ப்ளீட்லி ஆல்ரைட். இப்போ மூளையை நேராக்கிச் சரியா யோசிக்க வேண்டியது நீதான். போ..."

குழப்பத்துடன் தன் முகம் பார்த்த தோழியை அனுப்பி வைத்து விட்டு அறைக்குள் நுழைந்த ப்ரியா விற்குக் கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

**த**ன் பைக்கில் நாள் முழுக்கச் சென்னை முழுதை யும் சுற்றித் தீர்த்த ஹரி நேராக பெசன்ட் நகர் வீட்டிற்குச் சென்றான். அவன் அபார்ட்மெண்ட்டுக்குள் நுழைகை யில்.. தன் கையிலிருந்த சாவியால் வீட்டுக் கதவைத் திறக்க முயன்று கொண்டிருந்தாள், ரம்யா.

அவளருகே சென்று நின்றவன் அமைதியாக அவளது செய்கையை வேடிக்கை பார்த்தான். கதவு

திறந்ததும் உள்ளே வந்த இருவரும் எதிரெதிரே இருந்த அறைகளுக்குள் நுழைந்து கொண்டனர்.

தன் அறைக் கதவைச் சாத்திய ஹரியின் காது களில் தந்தையின் வார்த்தைகள் ஒலித்தன. 'ஒரே ரூம்ல படுக்கிறீங்க. கைபிடிச்சுக்கிறீங்க. கட்டிப் பிடிச்சிக்கிறீங்க. உங்களை எப்படிடா நாங்க லவ்வர்ஸ்-னு நினைக்கக் கூடாதுன்னு சொல்றீங்க?' தலையை உலுக்கிக் கொண் டவன் தொப்பெனப் படுக்கையில் விழுந்தான்.

அன்று தான் அவளைக் கடைசியாகக் கண்டான் அவன். அதன் பின்பு ஒரு முறை கூட அவள் அறைக் கதவைத் திறந்து வெளியே வந்ததை அவன் பார்க்க வில்லை.

**ஹ**ரி இரண்டாம் முறையாகக் கதவை ஓங்கித் தட்டியதும் பட்டெனத் திறந்தாள், ரம்யா. முழங்கால்வரை யிருந்த ட்ரௌசருடனும், டி-ஷர்ட்டுடனும், பரட்டைத் தலை யுடனும் காட்சியளித்தவளை மேலிருந்து கீழ்வரை நோக்கி னான் ஹரி.

"வெளியே வா."

"எதுக்கு?"

"நான் உன் கூடக் கொஞ்சம் பேசணும்."

"உன் கூடப் பேச எனக்கு எதுவுமில்லை. அதனால, இனி என் ரூம் கதவைத் தட்டாத!"

பார்வையை மறுபுறம் திருப்பிக் கோப மூச்சை வெளியிட்டவன், "உன்கிட்டலாம் வாயால மட்டும் பேசுறது



தப்புதான்டி!" என்றபடி ஓரடி எடுத்து வைத்து அவள் கையைப் பற்றித் தரதரவென இழுத்துக் கொண்டு கிச்சனுக்குச் சென்றான்.

"கையை விடுடா. கையை விடுடா, இடியட்!" என்று கத்தியவள், அவன் தன் கையை விடுவித்ததும் ஆத்திரத் துடன் முறைத்தாள்.

கிச்சன் சிங்க்குக்குள் கிடந்த கப்பைச் சுட்டிக் காட்டி யவன்...

"என்ன இது? உண்ணா விரதமா! இல்ல, தற்கொலை முயற்சியா? எதைச் சாதிக்கிறதுக்கு இப்படி பண்ணுற, சொல்லு!" என்றான்.

எரிச்சலுடன் அவனை நோக்கியவள், "அக்கறை யாடா? இதுவரைக்கும் நீ அக்கறை காட்டி நான் அனுபவிச்சதெல்லாம் போதும், ராஜா. இனிமே நான் என்ன செஞ்சாலும் நீ கேள்வி கேட்காத, ப்ளீஸ்!" என்றாள்.

"அடேங்கப்பா... உன் மேல எனக்கென்ன அக்கறை? நீ சாகுறதுக்கு ட்ரை பண்றதா இருந்தா பால் குடிக் கிறதைக் கூட நிப்பாட்டிடுன்னு ஃப்ரீ அட்வைஸ் கொடுக் கத்தான் கதவைத் தட்டினேன். ம்... அப்புறம் முக்கியமான விசயம், என் சாவுக்குக் காரணம் ஹரி இல்லைன்னு ஒரு லெட்டர் எழுதி வைச்சிடு!" என்றவன், தொடர்ந்து,

"இவ கூட ஒரே வீட்ல இருக்கிற பாவத்துக்கு நான் கொலைப்பழியை வேற சுமக்கணுமா?" - புலம்பியபடியே

அவளை இடித்துக் கொண்டு கடந்து சென்றவன் மீண்டும் ஹாலுக்கு வந்து பீட்சா சாப்பிடத் தொடங்கினான்.

கோபத்துடன் தங்தங்கென நடந்து அறைக்குச் சென்ற ரம்யாவைப் பீட்சாவின் வாசனை கிறங்கடித்தது. பாலும், கார்ன் ஃப்ளேக்ஸ்-ஐயும் ஒரு வாரமாக உண்ப வளுக்குப் பீட்சாவின் வாசனை நாக்கில் எச்சில் ஊற வைக்கக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல், அருகே வந்தவள்.. பீட்சா டப்பாவைப் பிரித்துக் கடகடவென உண்ணத் தொடங்கினாள்.

இரண்டு வாய் உண்டதும், தொண்டை அடைக்க... கையை மடக்கி நெஞ்சைக் குத்தியபடி தண்ணீரைத் தேடினாள்.

உண்பதை நிறுத்தி விட்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஹரி விக்கியவளிடம் தண்ணீரை நீட்டி னான். அவன் முகம் பார்க்காமல் வாங்கிப் பருகியவள் அடுத்த பீஸை எடுத்து உண்ணத் தொடங்க... தன் புறம் இருந்த பீட்சாக்கள் அனைத்தையும் அவள் புறம் தள்ளி விட்டு... உண்பவளையே வேடிக்கை பார்த்தான் ஹரி.

"வாய் முழுக்க சீஸ், இன்னும் பாப்பா மாதிரியே சாப்பிடுறது..." கையை நீட்டி அவள் வாயைத் துடைக்க வந்தவனிடம், முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ரம்யா.

"இதோடா. ரொம்பத்தான்..."

நடுவிலிருந்து பீட்சா டப்பாவின் எதிரெதிரே தரை யில் அமர்ந்திருந்தனர் இருவரும்.



"நீ சாப்பிடாம இருந்து போராட்டம் பண்ணுற, ஓ.கே. எனக்கு ஏன்டி சோறு போடாம இருக்க?"

பீட்சாவிலிருந்த மஷ்ரூமைத் தனியாக எடுத்து டப்பாவில் போட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

"பதில் பேசுடி."

அவள் பீட்சா உண்ணும் சத்தம் மட்டுமே பதிலாய் வந்தது.

"என்கிட்ட உன் கோபத்தைக் காட்டி என்ன பிரயோ ஜனம்? என்கிட்ட பேசாம இருக்கிறதால நான் உன் கழுத் தில கட்டின... அ...அ...அது... இல்லைன்னு ஆயிடாது."

"ஹ்ம். என்னாலதான் வாழ்க்கையே போச்சுன்னு கோபப்பட்டவன் கிட்ட பேச எனக்கு என்ன இருந்துடப் போகுது?" என்றவள் தொடர்ந்து, "இவன் பண்ணின தப்பாலதான் என் வாழ்க்கை பாழாச்சு. நியாயமா பார்த்தா... அந்த டயலாக்கைச் சொல்ல வேண்டியது நான். இவன் முந்திக்கிட்டான்..." என்று முணுமுணுத்தாள்.

"என்ன? எ... என்ன சொன்ன இப்போ? நான் பண்ணின தப்பால உன் வாழ்க்கை பாழாயிடுச்சா?"

"ஆமாம். நீ லவ் பண்ணி ஊர் சுத்திக்கிட்டிருக்கற விசயம் தெரிஞ்சதாலதான தாத்தா இப்படிப் பண்ணி வைச்சார்?"

"அடேங்கப்பா... நீ மட்டும் என்ன பெரிய ஒழுங்காடி? பப்ளிக் ப்ளேஸ்ல எவனோ ஒருத்தன் உன்

கையைப் பிடிச்சு முத்தம் கொடுக்கிற அளவுக்கு ஒரு ரிலேஷன்ஷிப்ல இருந்த? நீ என்னைக் குற்றம் சொல் றியா? இதோ பாருடி. ஒரு வாரத்துக்கு முன்னாடி வரைக்கும் நான் அதைப் பொறுத்துக்கிட்டேன். இனி, என்னால முடியாது. இன்னொரு தடவை நீ அவனைப் பார்த்தாலோ, பேசினாலோ நான் சும்மா இருக்க மாட் டேன், சொல்லிட்டேன்..." - முழுக் குரலில் கத்தியவனைக் கண்டு கொதித்துப் போனாள் ரம்யா.

"என்னடா? ரொம்ப உரிமையா மிரட்டுற? என்னைக் கண்ட்ரோல் பண்ற ரைட்ஸை உனக்கு யாருடா கொடுத்தது? நான் என்ன பண்ணணும், யாரைப் பார்க்கணும்னு டிசைட் பண்றதுக்கு நீ யாருடா? ஓ! தாலி கட்டிட்டதால சாருக்குக் கொம்பு முளைச்சுடுச்சோ! நீ இப்படியெல்லாம் நடந்துப்பன்னு தெரிஞ்சுதான்டா இந்த வீட்டுக்குள்ள நுழைஞ்சதுமே நான் அதைக் கழற்றி வீசிட் டேன்."

கூலாகக் கூறியவளைக் கண்டு விழிகளைப் பெரிதாக விரித்த ஹரி, "எ... என்ன சொன்ன? தா... தாலியைக் கழற்றி வீசிட்டியா?" கோபத்துடன் எட்டி அவள் தோளைப் பற்றிக் கீழே சாய்த்தவன் அவள் வயிற்றின் மீது ஏறி அமர்ந்து அவள் அணிந்திருந்த டி-ஷர்ட்டின் காலர் பட்டனை வேகமாகக் கழற்றினான்.

"என்னடா பண்ணுற? பொறுக்கி! தடிமாடு... எழுந்து தொலைடா!" என்று காட்டுக் கத்தலாகக் கத்தியவளைப் பொருட்படுத்தாமல் அவள் கழுத்திலிருந்த தாலியைக் கையில் எடுத்தவன் நிம்மதியுடன் மூச்சை வெளியிட்டான்.



"இதை மட்டும் நீ உண்மையிலேயே கழற்றி வீசி யிருந்தா உன்னை வெட்டிப் பொலி போட்டிருப்பேன்."

"ஆ... ஆ... சாப்பிட்ட பீட்சா தொண்டைக்கு வருது. எழுந்து தொலைடா, பன்னி!" என்றபடி அவனை உருட்டித் தள்ளி விட்டு எழுந்து நான்கடி தள்ளி அமர்ந்தாள், ரம்யா.

வயிற்றைப் பிடித்துக் கொண்டு கோபத்துடன் அவனை நோக்கியவளின் கண்களில் சீற்றம் தெறித்தது.

"இனி, என் அனுமதியில்லாம என்னைத் தொடாதே. சொல்லிட்டேன்."

அவளருகே வந்து நெற்றி முடியை ஊதி விலக் கியவன், "தொட்டா என்னடி பண்ணுவ?" என்றான்.

ஆத்திரம் தலைக்கேறக் கையை நீட்டி ஏதோ கூற வந்தவளைத் தடுத்தவன்...

"நீ செக்ஸியாக ட்ரெஸ் பண்ணிட்டு வந்து என் முன்னாடி ஐட்டம் டான்ஸ் ஆடுனா கூட எனக்கு எந்த ஃபீலிங்ஸும் வராது. ஏன்னா... என்னைப் பொறுத்த வரைக்கும் நீ பொண்ணே கிடையாது," என்று கூற..

கோபத்தில் கையை ஓங்கி விட்டாள் ரம்யா.

அவள் தன் கன்னத்தை இடித்துப் பற்களைப் பதம் பார்ப்பதற்குள் அவள் கையைப் பற்றி விட்ட ஹரி, "நீயும் கூட என் அனுமதி இல்லாம இனிமே என்னைத் தொடாதேடி. எனக்கும் கற்பு ரொம்ப முக்கியம்!" என்றான்.

அவன் இறுக்கமாகப் பற்றியதில் கை நோக... "கையை விடு!" என்று இழுத்துக் கொண்டவள், தேய்த்து விட்டபடியே அவனை நோக்கினாள். "இந்தத் தடிமாடு எப்போ இவ்ளோ ஸ்ட்ராங்கா மாறுச்சு?"

"சரி, சண்டை வேண்டாம். இனிமே ஆக வேண்டிய காரியத்தைப் பத்திப் பேசலாம். இங்கே வந்து உட்காரு," என்றவன் மீண்டும் பழைய இடத்திற்கே சென்றமர்ந்தான். தானும் சற்று முன்னே வந்தமர்ந்து பீட்சாவைக் கையில் எடுத்துக் கொண்டாள் ரம்யா.

"இனி என்ன பண்ணுறதா இருக்க?" - ஹரி.

"டிவோர்ஸ்தான் ஆப்வியஸ்லி. இதுல என்ன டவுட்?"

"தயவு செஞ்சு என்னை எரிச்சல் படுத்தாதேடி, ப்ளீஸ்!" - பல்லைக் கடித்தான் ஹரி.

"பின்னே? உன் கூடக் குடும்பம் நடத்தச் சொல் றியா... பொறுக்கி!"

"ஹ்ம்ம். என்னை டைவர்ஸ் பண்ணிட்டு அந்த நெட்டைக் கொக்கு சதீஷைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியா?"

"ப்ச். அவர் எனக்குக் கல்யாணம் ஆன விசயம் தெரிஞ்சு கோபப்பட்டுப் போயிட்டார்..." என்றவள், அன்று நடந்ததை விவரித்தாள்.

"எப்படியோ அவன் தொலைஞ்சானே! அது வரைக்கும் சந்தோசம்."



"ஆனா... நான் உன்னை மாதிரி யோசிக்கல. நேரா ப்ரியா கிட்ட போய் இன்னும் கொஞ்ச நாள்தான்டி... நான் டிவர்ஸ் வாங்கினப்புறம் நீ ஹரியைக் கல்யாணம் பண்ணிட்டு சந்தோசமா இருக்கலாம்னு சொல்லிட்டு வந்தேன்," - என்றவளைத் திகைத்து நோக்கியவன்...

"எ... என்ன... ப்ரியாவைப் பார்த்தியா?" என்று வினவ, அவள் வீட்டில் நடந்ததையும் விவரித்தாள் ரம்யா.

"வெளி நாட்டுல வேலை வாங்கி எஸ்கேப் ஆகப் போறியா? எப்படிடி இவ்ளோ சுயநலமா இருக்க? கொஞ்ச மாவது என்னையும், நம்ம குடும்பத்தையும் யோசிச்சுப் பார்த்தியா?"

"ஹ்ம். உன்னையும், நம்ம குடும்பத்தையும் யோசிச்சுப் பார்த்து உன் கூடவே கடைசிவரை வாழ்ந்து பிள்ளை, குட்டியெல்லாம் பெத்துக்கச் சொல்றியா?"

"அதுல என்ன தப்பு இருக்கு?"

"எ... என்ன?" - கண்களை விரித்து ஆச்சரி யத்தைக் காட்டியவளிடம்...

"ச்சீ... ச்சீ... உன்னை எதிர்க்கணுமேன்னு ஒரு வேகத்துல பேசிட்டேன். சாரிடி. இதோ பார், நீ வெளி நாட்டுக்கு ஓடுறியோ, பாலைவனத்துக்கு ஓடுறியோ... அதைப் பத்தி எனக்கு எந்தக் கவலையும் இல்ல. ஆனா ஒரு வருஷத்துக்கு நீ என்ன நினைச்சாலும், உன்னால என்னை விட்டுப் போக முடியாது. நான் போகவும் விட மாட்டேன்."

"அது என்ன ஒரு வருஷம்?"

"தாத்தா எனக்குக் கொடுத்த காலக்கெடு. இந்த ஒரு வருஷத்துல அந்த ஹோட்டலை வைச்சு நான் லாபம் காட்டலேன்னா... அதை அப்படியே விட்டுட்டு அண்ணனோட சேர்ந்து புது ஹோட்டல்ஸைப் பார்த்துக்கிற பொறுப்புல இறங்கணும்கிறதுதான் தாத்தா எனக்குப் போட்ட கண்டிஷன். நீ பாட்டுக்கு, உன் வாழ்க்கையைப் பார்த்துக்கிட்டு வெளிநாட்டுக்குப் பறந்துட்டா... ஹோட்டலை என்கிட்ட இருந்து பிடுங்கிட்டு எனக்கு நாமம் போட்டுடுவார், தாத்தா."

"இப்போ நீ உன் வாழ்க்கையைப் பத்தி மட்டும் சுயநலமாத்தானே யோசிக்கிற?"

"நான் சுயநலமா யோசிக்கல. உனக்கு டிவர்ஸ் தானே வேணும்? கல்யாணம் ஆகி ஒரு வாரம் ஆன தம்பதிக்கு எந்தக் கோர்ட்டும் டிவர்ஸ் கொடுக்காது. நீ மௌன ராகம் பார்த்ததில்லை? டிவர்ஸ் எல்லாம் ஒரு வருஷம் ஆனாத்தான் தருவாங்க. சோ, எப்படிப் பார்த்தாலும் இந்த ஒரு வருஷக் கணக்கு ரொம்பவும் முக்கியம்."

"ஒரு வருஷம்? அதுவரைக்கும் நான் என்னடா செய்ய?"

"என் ஹோட்டலுக்கு வந்துடு."

"வாட்?"

"ஹேய்... உனக்குத் தேவை வேலையும், டிவர்ஸும். என்னோட தேவை ஹோட்டல். நீ இந்த ஒரு வருசமும் எனக்கு உதவியா நம்ம ஹோட்டல்ல வேலை



பார்த்தா... உனக்கும் நீ கேட்கிறது கிடைச்சிடும். எனக்கும் நான் நினைக்கிறது நடந்துடும். என்ன சொல்ற?"

"ஹ்ம்ம்... டீல் நல்லாத்தான் இருக்கு. ஆனா... இந்த ஒரு வருஷத்துல உன்னால லாபம் காட்ட முடியாம போனா என்ன செய்வ?"

"சனியனே, ஏன்டி அபசகுனமா பேசுற?"

"இல்லடா. எல்லா விதத்துலயும் நான் தயாராக வேண்டாமா?"

"என்னால லாபம் காட்ட முடியாமப் போனா... தாத்தா சொன்ன மாதிரி நான் அண்ணனோட பிசினஸ்ல இறங்கிடுவேன். உனக்கு டிவர்ஸும் கொடுத்துடுவேன். ஆனா, அது நடக்க வாய்ப்பு ரொம்ப ரொம்பக் கம்மி."

"ஹ்ம்ம், கான்ஃபிடண்ட்டாதான் பேசுற. வெரி குட்."

"இப்போ சொல்லு. உன் பதில் என்ன?"

"ஹ்ம்ம். எனக்கு ஓகே. பட் ஒரு வருஷத்துல நீ எனக்கு டிவர்ஸ் கொடுக்காம ஏமாத்திட்டா நான் என்ன செய்றது?"

"ப்ச்... உனக்கு டிவர்ஸ் கொடுக்காம... காலம் பூரா என்னைக் கன்னிப் பையனா வாழச் சொல்றியாடி? என்னை என்ன துறவின்னு நினைச்சியா? எனக்கும் 'அந்த' மாதிரி ஆசையெல்லாம் நிறைய இருக்கு. சரியா?"

"தெரியும், தெரியும். லேப்டாப்ல அத்தனை ஷகிலா படம் வைச்சிருக்கிறவனுக்கு 'அந்த' ஆசையில்லாமலா இருக்கும்?"

"ஏன்? உனக்கு இல்ல?"

"ச்சீ... என்னடா பேச்சு இது?"

"சரி, வெட்கப்படாதே. என்னால பார்க்க முடியல. உனக்கு ஓகேன்னா, நாளைக்குக் காலைல நம்ம ஹோட்டலுக்கு வா. இன்டர்வியூ பண்ணி எடுத்துக்கிறேன் நான்."

"அந்த ஹோட்டலுக்கு இன்டர்வியூ ஒன்னுதான் குறை!" என்று முணுமுணுத்த ரம்யா, "எங்கடா எழுந்து போற? இதோட நம்ம பிரச்சனை முடியல. இரு!" என்றாள்.

"எப்படியோ நீயும், நானும் ஒருத்தரை யொருத்தர் சகிச்சிக்கிட்டு ஒரே வீட்டுக்குள்ள ஒரு வருஷம் வாழ்ந் தாகணும்னு முடிவாயிடுச்சு. ஆனா எனக்கு அதுல நிறைய கண்டிஷன்ஸ் இருக்கு."

தானும் சற்று யோசித்த ஹரி, "எனக்கும் கூட இருக்கு..." என்றான்.

"கண்டிஷன் நம்பர் 1: தினம் உனக்கும் சேர்த்து நானே மூணு வேளையும் சமையல் பண்ணுறேன். அதனால சாப்பாட்டுக்கு உனக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது. பட் கிச்சன் கிளீனிங் வொர்க்கெல்லாம் நீ தான் பண்ணணும்."

"என்னது? அடிச்சுப் பல்லைக் கழட்டிடுவேன். யாரைடி கிளீன் பண்ணச் சொல்ற?"

"ஓகே! அப்போ நான் க்ளீன் பண்ணுறேன். நீ டெய்லி சமையல் பண்ணிடு."



"என்னடி உளர்ற! எனக்குச் சமைக்கத் தெரியாது."

"அப்போ... க்ளீன் பண்ணு."

பல்லைக் கடித்தபடி, "ம்ம்..." என்றான் ஹரி.

"வீட்டை க்ளீன் பண்ணுறதை ரெண்டு பேரும் ஷேர் பண்ணிக்கலாம்."

"ஹ்ம்ம்... இது நியாயம். எனக்கு டபுள் ஓ.கே!"

"அடுத்த முக்கியமான கண்டிஷன்... தேவை யில்லாம... இல்ல, தேவையிருந்தாக் கூட நீ என் ரூம்க்குள்ளே வரக் கூடாது."

"பெரிய உலக அழகி. இந்தக் கண்டிஷன் உனக்கும் அப்ளிகபிள்தான்டி."

"அப்புறம், ராத்திரி நேரத்துல உனக்கு ஹார்ட்-அட்டாக்கே வந்தாலும் நீ என் ரூம் கதவைத் தட்டக் கூடாது. நான் திறக்க மாட்டேன்."

"கவலையே படாதே. அந்த டைம்லலாம் நான் சின்சியரா ஷகிலா படம் பார்த்துட்டு இருப்பேன்."

"ச்சே! வெட்கமே இல்லடா உனக்கு. அடுத்தது, நான் எங்கே போறேன், வர்றேன், யார் கூடப் பழகுறேன், என்ன ட்ரெஸ் போட்டுக்கிறேன்னு கேட்டு நீ தேவை யில்லாம என் விசயத்துல மூக்கை நுழைக்கக் கூடாது."

"நீதான் அந்த சதீஷ் பயலோட ப்ரேக்-அப் பண்ணிட்டதா சொல்றியே! இனி எனக்கென்ன கவலை?"

"ஆனா.. நீ ப்ரியா கூட தாராளமாப் பழகலாம். எனக்கு அப்ஜெக்ஷனே இல்ல."

"ம்ம்ம்... என் கண்டிஷனே அதுதான். அவளையும், என்னையும் சேர்த்து வைக்கிறதா நினைச்சு நீ ஏதாவது முட்டாள்தனம் பண்ணினா உனக்குக் கடைசிவரை நான் டிவர்ஸ் தரவே மாட்டேன்."

பயந்து அவனை நோக்கியவள், பின் புரியாமல், "ஆனா ஏன்?" என்றாள்.

"ஏன்னா? நீ ஏன் சதீஷ் உன்னை வா, எங்கே யாவது போயிடலாம்னு கூப்பிடப்போ போகல?"

"அ... அது... அது தப்புல்லடா?"

"தப்புதான். என் வாழ்க்கையோட அந்த அத்தி யாயம் முடிஞ்சு போயிடுச்சு. உடைஞ்ச கண்ணாடியை ஒட்ட வைக்க முடியாதுன்னு சொல்வாங்களே! என்னால ஒரு தடவை ஏமாந்துட்ட அவளுக்கு இனி என் மேல நம்பிக்கை வரும்னோ, எங்களால நடந்ததை மறந்துட்டு ஒன்னா சேர்ந்து வாழ முடியும்னோ எனக்குத் தோணல. அதனால நீ உன் வாயை மூடிட்டு உன் வேலையை மட்டும் பாருன்னு சொல்றேன்."

உதட்டை வளைத்துப் புருவத்தைத் தூக்கியவள், "எனிவேஸ், அது உன் இஷ்டம். நான் உன் கண்டி ஷனை அக்செப்ட் பண்ணிக்கிறேன்."

"தேங்க்ஸ்."

"என்னோட கண்டிஷன் அவ்ளோதான். உனக்கு வேற எதுவும் இருக்கா?"

"இல்ல."



"ஓகே!" என்றபடி அவன் முன்பு தன் வலது கையை நீட்டியவள், "நீங்க நினைச்சபடி உங்க ஹோட்டல் இந்த ஒரு வருசத்துல நல்ல லாபம் அடைய என்னோட வாழ்த்துகள் மிஸ்டர் ஹரிகிருஷ்ணன்!" என்றாள்.

லேசாய் நகைத்தபடி அவள் கையைப் பற்றிக் குலுக்கிய ஹரி, "தேங்க்ஸ். உங்களுக்கும் இந்த ஒரு வருஷத்துல டிவர்ஸ் கிடைச்சு நீங்க நினைச்ச மாதிரி வெளிநாடு பறக்க என்னோட வாழ்த்துகள் மிஸ் ரம்யா!" என்றான்.

மறுநாள் காலை ஹோட்டல் வேலைகள் அனைத்தும் நிறைவு பெற்று விட்டதாக இன்டீரியர் டிசைனர் ராகேஷ் தெரிவிக்க காலையிலேயே கிளம்பி விட்டான் ஹரி. வண்டியை நிறுத்திவிட்டு இறங்கியவன் ஹோட்டலின் புதுத் தோற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியாக முறுவலித்தான்.

அவன் கூறியது போலவே வாசலில் இரண்டு புறமும் வரிசையாக வளர்ந்திருந்த மரங்களின் கிளை களை வளைத்து ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டியிருந்தனர். வளைவு, வளைவான தோற்றத்துடன் நான்கடி தூரத் திற்கு நிழல் கொடுத்த கிளைகளைப் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தான், ஹரி.

முன் வாசலிலிருந்து தொடங்கி இடது புறமிருந்து ஹோட்டலின் பிரதான வாசல்வரை வரிசையாகத் தொட்டி களில் வெள்ளை, சிவப்பு, ரோஸ், ஊதா என அனைத்து நிறங்களிலும் பூக்கள். சொர்க்கத்திற்குள்

நுழைந்து விட்டது போல் மிக அழகாய்த் தோற்றமளித்த முகப்பில் "கிங் அண்ட் குயின்" என்ற ஹோட்டலின் பெயர்ப் பலகை யிருந்தது.

'அமாத்யர் ரெஸ்டாரண்ட்ஸ்' என்கிற பழைய பெயரை மாற்றி இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்திருந் தான், ஹரி.

"ஹோட்டலுக்கு வர்ற ஒவ்வொருத்தரையும் கிங் அண்ட் குயின் மாதிரி ட்ரீட் பண்ணுவோம் நாங்க..." என்றான் - பெயர்க் காரணம் கேட்டதற்கு.

கண்ணாடிக் கதவைத் திறந்து உள்ளே நுழைகை யில் வலது புறம் முழுக்க டேபிள், சேர்கள் போடப் பட்டிருந்தன. சுவரில் ஆங்காங்கு ரெசிபிக்களுடன் கூடிய செஃப் உடை அணிந்த பொம்மைகளின் புகைப்படங்கள் இருந்தன. பார்ட்டி ஹாலுக்குச் செல்ல வலது புற அறை யில் நுழைவாயில் இருந்தது. இடது புறத்தில் கல்லாவைத் தொடர்ந்து மாடிப்படி யிருந்தது.

அதைத் தொடர்ந்து உள்ளே நடந்து சென்றால் இடது புறத்தில் பெரிதாக ஒரு சமையலறை. வலது புற அறையில் உண்பவர்கள் சமையலறையின் ஒரு புறத்தைப் பார்க்கும்படி வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஹோட்டலின் பழைய தோற்றம் முற்றிலும் மாறி ஜொலி ஜொலித்ததில் திருப்தியாகி விட்டான், ஹரி.

"ரொம்பவும் அழகாயிருக்குல்ல தம்பி! என்னால நம்பவே முடியல. நீங்க வளர்ந்து வந்து இந்த ஹோட்



டலை இப்படியெல்லாம் மாத்தணும்னு விதி இருக்கு, பாருங்களேன்...." - முகம் முழுக்கப் பல்லாய், நம்பி.

கடகடவெனச் சிரித்த ஹரி, "தேங்க்ஸ் அங்கிள். இவ்ளோ வருசமா விடாம இந்த ஹோட்டலை சப்போர்ட் பண்ணினதுக்கு நான்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும்..." என்றவன், "இந்த ஹோட்டல்ல மொத்தம் எத்தனை பேர் குக்கிங் செக்ஷன்ல இருந்தாங்க அங்கிள்?" என்று விசாரித்தான்.

"இந்த ஹோட்டல்ல மொத்தம் வேலை பார்த்ததே ஐந்து பேர்தான் தம்பி. தொழில் சரியா இல்லாததால நிறையப் பேரை வைச்சுச் சம்பளம் கொடுத்துச் சமாளிக்க முடியல என்னால..."

"சரி. அந்த ஐந்து பேரையும் நான் பார்க்கலாமா?"

"உடனே வரச் சொல்றேன், தம்பி!" என்றவர் அடுத்த பத்து நிமிடத்தில் ஐவரையும் அழைத்து வந்தார்.

தன் செல்ஃபோனில் பழனியை அழைத்து அவனை ஹோட்டலுக்கு வரச் சொன்ன ஹரி, தன் முன்னே நின்றிருந்த ஐவரையும் நோக்கினான்.

"இ.. இவங்கதான் இத்தனை நாளா சமைச்சாங் களா?"

"ஆமா, தம்பி. ரொம்பச் சுவையாச் சமைப்பாங்க."

எச்சில் விழுங்கியபடியே ஒவ்வொருவரையும் நோக் கினான் ஹரி. கைலி வேட்டியுடனும், ரப்பர் செருப்புடனும் முதலில் நின்றிருந்தவன் தலை முடியைக் காடு மாதிரி

வைத்திருந்தான், அடிக்கடி சொறிந்து கொண்டு, பழுப் பேறிப் போயிருந்த அவன் கை நகங்களில் ஒன்றரை வண்டி அழுக்கு.

அடுத்து நின்றிருந்தவன் வாயை மூடாமல், 'ஹச், ஹச்' எனத் தும்மியதில் ஐந்தடி தள்ளி அமர்ந்திருந்த ஹரியின் மீது சாரல் அடித்தது. "ச்சீ..." என முகத்தைச் சுழித்தவன் அதற்கு மேல் தாங்க முடியாமல் அனை வரையும் அனுப்பி வைத்து விட்டான்.

"இ... இவங்களை வைச்சா அங்கிள் இத்தனை நாளா ஹோட்டல் நடத்துனீங்க?"

"ஏன் தம்பி, உங்களுக்குப் பிடிக்கலையா? நீங்க போன தடவை சாப்பிட்ட ரவா கேசரி அந்த முதல்ல நின்றிருந்தவன் சமைச்சதுதான்."

"உவ்வே... கருமமே, சொல்லாதீங்க, அங்கிள்! ப்ளீஸ். சாப்பாட்டுக்குச் சுத்தம் ரொம்ப முக்கியம் அங்கிள். இந்த மாதிரி ஆளுங்க சமைச்சா எப்படிச் சாப்பிடத் தோணும்?"

"இப்ப என்ன தம்பி பண்ணுறது?"

"அவங்க சம்பளப் பாக்கியைக் கொடுத்து அனுப்பி வைச்சுட்டு சமையலுக்கும், வேலைக்கும் ஆட்கள் தேவைன்னு வெளியே ஒரு போர்டு வைங்க. நானும் ஆன்லைன்ல ரெக்வஸ்ட் போடுறேன்."

"சரிங்க தம்பி!" – என அவர் சென்றதும், தலையைப் பிடித்துக் கொண்டான், ஹரி.



ஹோட்டலுக்கு வரும் எவரும் அதன் வெளித் தோற்றத்தைக் கண்டு வருவதில்லை. சாப்பாடு சரியா யிருந்தாலொழிய கூட்டத்தைக் காண்பது அரிது. தன் அலைபேசியிலிருந்து சக்திக்கு அழைத்தான்.

அடுத்த அரைமணி நேரத்தில் பழனியும், சக்தியும் ஒன்றாய் நுழைந்தனர்.

"டேய் பழனி, எப்படிடா இருக்க? பார்த்து ரொம்ப நாளாச்சு!"

"நான் நல்லாயிருக்கேன், சக்திண்ணா! நீங்க எப்படி யிருக்கீங்க?"

"நானும் நலம்டா தம்பி. என்ன? நீயும் உன் ஓனர் கூடச் சேர்ந்து ஹோட்டல் பிசினஸ்ல இறங்கிட்டியா?"

"டேய்.. நீங்க குசலம் விசாரித்ததெல்லாம் போதும். நாம ஒரு முக்கியமான விசயத்துக்கு முடிவு கண்டு பிடிக் கணும். இங்கே வந்து உட்காருங்க..." என்றான் ஹரி.

"இன்டீரியர் சூப்பர் மாப்ள, ராகேஷ் செமையா பண்ணிக் கொடுத்துட்டாரு..."

"ஹோட்டல் அழகா மாறிட்டது முக்கியமல்ல, மச்சி! சமைக்கிறதுக்கு எவனையும் காணோம்டா!" என்ற ஹரி விவரத்தைக் கூறினான்.

"சரிடா. இது பெரிய பிரச்சனையில்ல. நாம வேலை விவரத்தை ஆன்லைன்ல போட்டா கூட்டம் வந்து குவியும். நமக்குத்தான் ஓப்பனிங்குக்கு இன்னும் நாள் இருக்கேடா!" என்றான் சக்தி.

"ஹம்ம். ஆனா அதுக்கு முன்னாடி நான் முக்கிய மான இரண்டு பேரை ஹயர் பண்ணியாகணும்."

"யார் அந்த விஐபிஸ்?"

"நீயும், இவனும்தான்."

"என்ன மாப்ள சொல்ற?"

ஹோட்டல் மூலையிலிருந்த பொம்மையின் அருகே சென்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பழனி, அதைப் போல் போஸ் கொடுத்து, "ஓனர்ண்ணா... எனக்கு டபுள் ஓகே! ஆனா... இந்த மாதிரி ஒரு யூனி ஃபார்ம் மட்டும் கொடுத்துடுங்க, ப்ளீஸ்!" என்றான்.

"என்னால முடியாது. என்னையெல்லாம் கணக்குல சேர்க்காதே..." என்றான் சக்தி.

"சரி, உன் ஃப்யூச்சர் ப்ளான் என்ன?"

"ஒரு வருசத்துக்கு இப்படியே ஊர் சுத்திட்டு அதுக்கப்புறம் எங்கப்பாவோட பிசினஸைப் பார்க்க வேண்டியதுதான்."

"ஊர் சுத்தப் போற அந்த ஒரு வருசத்தை நீ இங்க யூஸ்ஃபுல்லா செலவழிக்கலாம்லடா? மாசம் 30,000 சம்பளம் தர்றேன். மச்சி, ப்ளீஸ்டா!"

"ஹ்ம்ம், நல்ல ஐடியாதான். சரி மச்சி, எனக்கு ஓகேடா!" என்ற சக்தியைக் கட்டிப் பிடித்து, "நண்பேன்டா," என்றான் ஹரி.

அடுத்த இரண்டு நாட்களும் வேலைக்காக வந்து குவிந்த ஆட்களை இன்டர்வியூ செய்வதில் பிசியாகிப் போயினர் இருவரும்.



"மச்சி, எனக்குத் தெரிஞ்சவரோட பொண்ணு ஒருத்தி இருக்கா. செல்வின்னு பேரு. ரொம்பக் கஷ்டப்படுற குடும் பத்தைச் சேர்ந்த பொண்ணுடா. அவ கேட்டரிங்கெல்லாம் பெருசாப் படிக்கல. ஆனா மதுரைல பாண்டியன் ஹோட் டல்ல செஃப்-ஆ வேலை பார்த்திருக்கா. அவளுக்கு இங்கே வேலை கொடுக்கலாமாடா?" என்றான், சக்தி.

"ம்ம் கண்டிப்பாடா. இன்டர்வியூ வரச் சொல்லு, பார்த்துக்கலாம்."

"இன்னிக்கு இன்டர்வியூக்கு வந்திருக்காடா!"

ஹரி ஓகே என்றதும், அடுத்ததாகச் செல்வியை அழைத்தான் பழனி. குட்டையாய், ஒல்லியாய்ச் சுடிதார் அணிந்து கொண்டு தன் முன்னே அமர்ந்த சின்னப் பெண்ணைப் பார்த்ததுமே ஹரிக்குப் பிடித்துப் போனது.

"யார்ண்ணா இந்த முட்டக் கண்ணி?" என்று பழனி, சக்தியின் காதில் முணுமுணுத்ததைக் கண்டு கொள் ளாமல், அவளது ரெசியூமை வாங்கி நோக்கினான் ஹரி.

"பாண்டியன் ஹோட்டல்ல எத்தனை வருஷமா வேலை பார்த்த?"

"ஒரு வருஷமா."

"ஏன் அதுக்கப்புறம் தொடரல?"

"தம்பி இங்கே சென்னைக் காலேஜ்ல படிக்க வந்துட்டான். அப்பாவுக்கும் கூட இங்கே வேலை கிடைச் சிடுச்சு. அதனாலதான்."

"சரி, இப்போ ஏதாவது சமைச்சு எடுத்துட்டு வந்திருக் கியா?"

அவள் நீட்டிய வெஜ்-மஞ்சூரியனையும், பாதாம் அல்வாவையும் மூவரும் சுவைத்தனர்.

"அண்ணா... இது ஆனந்த பவன்ல வாங்கின மாதிரி இருக்குல்ல?" - பழனி, சக்தியின் காதில் மீண்டும் முணுமுணுக்க...

"இது நானே சொந்தமாச் சமைச்சது. எந்தக் கடையிலயும் வாங்கல. சமையல்ல கூட நேர்மை இருக் கணும்னு எதிர்பார்க்கிறவ நான். அதனால தேவை யில்லாம என்னையும், என் சமையலையும் அவமானப் படுத்தாதீங்க!" - பட்டாசு போல் வெடித்தாள் அவள்.

சக்தியும், ஹரியும் வாயைப் பிளக்க... பழனி அடங்கிப் போனான்.

அவனைக் கண்டு சிரித்த ஹரி, "சரிதான். இவன் வாயை அடக்க ஒரு சரியான ஆளைக் கண்டுபிடிச்சாச்சு. இதை விட வேற குவாலிஃபிகேஷனே தேவையில்லை. அதனால நான் உன்னை வேலைக்குச் சேர்த்துக்கிறேன்," என்றான்.

சிரிப்பும், மகிழ்ச்சியுமாய் அவள் எழுந்ததும், முணு முணுத்துக் கொண்டே வெளியே சென்று விட்டான் பழனி.

"சரி மாப்ள, நான் அவனோட போய் மூணு பேருக்கும் சாப்பாடு வாங்கிட்டு வரேன்டா..." என்று சக்தியும் எழுந்தான்.



அவன் வாசலுக்கு வருகையில் தன் ஸ்கூட்டியை ஸ்டாண்ட் போட்டபடி இறங்கிக் கொண்டிருந்தாள், ரம்யா.

"ஊஃஃபிஃப்ஃப்...." என விசிலடித்த சக்தி, "பார்ரா.. ஹரிகிருஷ்ணனோட சம்சாரம்..." எனக் கூற...

"யாரு? யாருண்ணா?" என்றான் பழனி.

சக்தி கை காட்டியதும் அவன் விறுவிறுவென ரம்யாவை நோக்கிச் செல்ல... "டேய்... டேய்... டேய்..." என்று அவனைத் தடுப்பதற்குள் அருகே சென்று விட்ட பழனி, "வணக்கம் அண்ணி!" என்று கை கூப்பிவிட்டு இளிப்புடன் கடந்து சென்றான்.

அதைக் கண்டு நகைத்த சக்தியை நோக்கி நடந்து வந்தாள், ரம்யா.

"என்ன மிஸஸ் ஹரிகிருஷ்ணன்? ஹோட்டல் பக்க மெல்லாம் வர்றீங்க! உங்க மாமனுக்குக் கஞ்சி கொண்டு வந்திருக்கீங்களா?"

"வெறுப்பேத்தாத, சக்தி!"

"போ... போ... போ..." என்றவன் சிரித்துக் கொண்டே சென்று விட, முறைத்தபடியே நுழைந்த ரம்யா, இன்டர்வியூவிற்காக அமர்ந்திருந்தவர்களைக் கடந்து உள்ளே சென்றாள்.

அன்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியலைப் பார்த்தபடி அமர்ந்திருந்த ஹரி அரவம் கேட்டு நிமிர்ந் தான். ஹோட்டலைச் சுற்று முற்றும் நோக்கிக் கொண்

டிருந்த ரம்யாவிடம், "இன்டர்வியூக்கு வந்திருக்கீங்களா?" என்று கணீர்க் குரலில் வினவினான்.

"ம்..." எனத் திரும்பியவள், அவனை முறைத்து, "ம்ம்... ஆமாம்..." என்றாள்.

"இங்க வந்து உட்காருங்க."

"...."

"ரெஸ்யூம் கொண்டு வந்திருக்கீங்களா?"

"இல்லை."

"சரி, உங்க பயோடேட்டா ஃபில் அப் பண்ணிக் கிறேன். பெயர் சொல்லுங்க!"

"ரம்யா ஜெகநாதன்."

"ம்?"

"ரம்யா ஜெகநாதன்."

"ம்ம்? எனக்குச் சரியாக் கேட்கல..." காதைத் தேய்த்து விட்டுக் கொண்டான் அவன்.

உஷ்ண மூச்சை வெளியிட்டவள், "ரம்யா ஹரி கிருஷ்ணன்!" என்றாள்.

"ஓஹோ... ஹரிகிருஷ்ணன் யாரு?"

"என்னோட ஹஸ்பண்ட்."

எழுதிக் கொண்டிருந்தவன் நிறுத்தி, அந்தப் பேப்பரால் தன் முகத்தை மறைத்துக் கொண்டு, "ஹஸ்பண்டாம்!" என முணுமுணுத்துக் கண்ணை இறுக மூடித் தோள் குலுங்கச் சிரித்தான்.



முறைத்துக் கொண்டே எட்டி அவனை நோக்கு பவளைக் கண்டு பேப்பரை முகத்திலிருந்து விலக்கி விட்டு,

"ம்க்கும்..." என்றபடி, "என்ன படிச்சிருக்கீங்க?" என்று மேலும் விசாரித்தான்.

"அவ்ளோ பெரிய ஹோட்டல்ஸ் வைச்சு நடத்துற ஃபேமிலின்னு சொல்றீங்க... நீங்க ஏன் வேலை தேடுறீங்க?"

"என்ன பண்றது? என் ஹஸ்பண்ட் ஒரு தெண்டத் தீவெட்டி. இனிமேதான் பிசினஸே தொடங்கப் போறான். எனக்குச் சாப்பாடு கூட அவனால போட முடியுமோ, என்னவோ... அதனாலதான்!" என்று அவள் முடிப்ப தற்குள், "ஏய்... திமிராடி!" என்று பாய்ந்து விட்டான் ஹரி.

"பின்ன... நீ மட்டும் எதுவுமே தெரியாத மாதிரி கேள்வி கேட்டு என்னை டார்ச்சர் கொடுக்கிற?"

"இன்டர்வியூன்னா அப்படித்தான்டி."

"எனக்கு உன் வேலையே வேண்டாம். ஒரு வருச மெல்லாம் வெயிட் பண்ண மாட்டேன். நான் இப்பவே கிளம்புறேன்."

"போ... நானும் கடைசிவரை உனக்கு டிவர்ஸ் தரவே மாட்டேன்."

"ஹரிரிரி..."

"ரம்யாஆஆ...."

# 8 *I am falling for you!*

அம்மாவோட உலகம் எவ்ளோ சின்னது இல்ல? குழந்தைங்க, சமையல், சாமிப் பாட்டு, டிவி சீரியல், பக்கத்து வீட்டுக்காரங்க, உறவுக்காரங்க, சேலை, நகை, வெங்காயம், வெள்ளைப் பூண்டு. அவங்களோட யோசனை முழுக்க இதைச் சுற்றித்தான்.

அவங்களோட சந்தோசம், துக்கம், கோபம், அழுகை எல்லாமே இதுக்குள்ளதான். சேலை, நகைங் களைப் பார்த்தா சந்தோசம்...! குழந்தைகளுக்கு ஏதாவதுன்னா துக்கம்! உறவுக்காரங்களைப் பகைச் சுக்கும்போது கோபம்! சிறுபிள்ளைத் தனமான விசயங்களுக்கு அழுகை! எனக்கு அம்மாவோட அறியாமையை நினைச்சா... சில சமயம் சிரிப்பு வருது. பல சமயம் கோபம் வருது. ஆனா எவ்ளோ சின்னதா இருந்தாலும்... அம்மாவோட உலகம் ரொம்பவும் அழகானது! சுயநலமில்லாதது! எனக்குக் கை கால் உடைஞ்சாலோ, நான் நோய் வந்து படுத்துட் டாலோ... அம்மா என்னைக் கடைசிவரை பார்த்துப் பாங்க..! அந்தப் பொறுமையும், சகிப்புத் தன்மையும் எனக்குக் கணவன்-ங்கிற நேம் டாக்-ஓட வரப் போகிற ஜீவனுக்கு இருக்குமான்கிறது சந்தேகம்தான்!

ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...

"ஹ்ம்ம். இதுவரைக்கும் குக்கிங், செர்விங், க்ளீனிங், செக்யூரிட்டிக்குன்னு மொத்தம் 15 பேரை



வேலைக்கு எடுத்தாச்சு. நாளைக்கு எல்லாருக்கும் ஜாயினிங் டேட் சொல்லியிருக்கேன். அடுத்த ஒரு வாரத்துக்கு எல்லாருக்கும் ட்ரெயினிங் கொடுத்துட்டா... 25ஆம் தேதி நாம ஹோட்டல் ஓப்பனிங் ஃபங்ஷனை வைச்சுக்கலாம். இனி நாம விளம்பரப்படுத்துறதுதான் ரொம்பவும் முக்கியம்..." என்று தன் முன்னே அமர்ந் திருந்த சக்தி, நம்பி, பழனி, ரம்யாவிடம் விவரித்துக் கொண்டிருந்தான், ஹரி.

"ட்ரெயினிங் யார் கொடுக்கப் போறா?" - ரம்யா.

"ஷ்யாம் 5 ட்ரெயினர்ஸ் அனுப்பி வைக்கிறேன்னு சொல்லியிருக்கான்." - ஹரி.

"பின்ன என்ன, மச்சி? ஆல் செட். இனி ஓபனிங் டே-க்கு ப்ளான் பண்ண வேண்டியதுதான். நாளைக்கு வர்ற ட்ரெயினர்ஸ் ஓப்பனிங்க்கு என்ன மெனு வைக்கப் போறோம்னு சொல்லிடுவாங்கதானே?" - சக்தி.

"ஆமாம்டா. நம்ம டவுட்ஸ் எல்லாம் அவங்ககிட்ட கேட்டுக்கலாம். அப்புறம், முக்கியமான விசயம். வொர்க் கர்ஸ்க்கு யூனிஃபார்ம், பேட்ஜும் டிசைன் பண்ணணும் மச்சி. ரம்யா, உனக்கு ஏதாவது ஐடியா இருக்கா?"

"ஹ்ம்ம். நான் ஏற்கெனவே யோசிச்சு வைச்சிருக் கேன். உங்களுக்கெல்லாம் பிடிச்சிருக்கான்னு பாருங்க!" என்றவள், தன் ஐபேடைத் திறந்து காட்டினாள்.

"யூனிஃபார்ம் ஸ்டாண்டர்ட்தான். வெள்ளைச் சட்டை, கருப்பு பேண்ட், கருப்பு கோட் அண்ட் ஏப்ரன், வெள்ளை

கேப். இது... பேட்ஜ் டிசைன்!" என்று அவள் காட்டியதை அனைவரும் நோக்கினர்.

கோல்டன் நிற வட்ட வடிவ பேட்ஜின் மேற்புற இரு மூலைகளிலும் ஒரு கிங்கும், குயினும் நீள செஃப் கேப் அணிந்து ஈஈஈ எனச் சிரித்தபடி இருந்தனர்.

வட்டத்தின் நடுவே கிங் அண்ட் குயின் என்று எழுதியிருந்தது. கிட்டத்தட்ட மிக்கி மவுசின் முகம், காது போலிருந்தது.

"ஹ்ம்ம்... சிம்பிளா, அழகா யிருக்கு. இந்த டிசைன்லயே போட்டுடலாம். சக்தி, நீ யூனிஃபார்ம்க்கு நான் சொன்ன மாதிரி ப்ரீதம் கிட்ட போ. நான் இந்த பேட்ஜ் வேலையைப் பார்த்துக்கிறேன். இன்னும் ஒரு வாரத்துல ரெடியாகணும்டா..." என்றான், ஹரி.

அடுத்து வந்த ஐந்து நாட்களும் ட்ரெயினிங்கில் ஹோட்டல் பிசியாகி விட... சக்தியும், ஹரியும் அலைந்து, திரிந்து வெளி வேலைகளை முடித்தனர்.

மறுநாள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த ஹோட்டல் ஓபனிங் டே.

சமையல் வேலையை அதிகாலையிலேயே தொடங்க வேண்டியிருந்ததால், ரம்யா விரைவிலேயே ஹோட்டலுக்குச் சென்று விட்டாள். பரபரப்பிலும், மகிழ்ச்சியிலும் இரவு முழுதும் தூங்க முடியாமல் திணறிய ஹரி, அதிகாலையில்தான் உறங்கப் போயிருந்தான். அரக்கப் பரக்க எழுந்து குளித்து அவன் ஹோட்டலுக்கு வந்து சேர்கையில் மணி எட்டு.



"போர்டை இந்தப் பக்கம் தள்ளி வை. கொஞ்சம் லெஃப்ட்... லெஃப்ட்டா நாயே..." என்று பழனியைத் திட்டிக் கொண்டிருந்த சக்தி, காரில் வந்திறங்கியவனிடம், "என்னடா ஹரி, இவ்ளோ லேட்டா வர்ற?" என்று பொரிந்தான்.

"சாரிடா... நைட் முழுக்கத் தூக்கம் வரலை. ரொம்ப டென்ஷனா இருந்தது. எல்லாம் நல்லபடியா போயிட்டிருக்குதானே? 8.30க்கு வாசல்ல ரிப்பன் கட்டிடு மச்சி. ஒன்பது மணிக்குத் தாத்தா வந்துடுவார்..." – என்றவன், தொடர்ந்து உள்ளே சென்றான்.

ஆங்காங்கு கிங் அண்ட் குயின் பெயரைத் தாங்கி பேனர்களும், போர்டுகளும் நிற்க வைக்கப்பட்டிருக்க, ஹோட்டலின் முகப்பு முழுதும் வெள்ளை, நீல பலூன்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேஜை, தரையைச் சுத்தம் செய்தபடி மக்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்க... திரும்பி கிச்சனை நோக்கியவனின் பார்வையில் ரம்யா தெரிந்தாள்.

அவள் யூனிஃபார்ம் அணிந்திருப்பதைக் கண்டு சிரித்தவன் தன்னைக் கடந்து சென்று கொண்டிருந்த பழனியை நிறுத்தி... "யூனிஃபார்ம் நல்லாயிருக்குடா. பேட்ஜ் கூட நாம் எதிர்பார்த்தபடி வந்திருக்கு..." என்று கூற,

"இதெல்லாம் அண்ணியைப் பார்த்துச் சொல்லுங்க, ஓனர்ண்ணா!" என்றவன், முறைத்தபடி சென்று விட்டான்.

அடுத்த பதினைந்து நிமிடத்தில் ஷ்யாம் வந்து விட, இருவரும் சேர்ந்து மேற்பார்வை பார்த்தனர். எட்டரை

மணியிலிருந்து வரத் தொடங்கி விட்ட விருந்தாளிகளை வாசலில் நின்று கொண்டு வரவேற்கத் தொடங்கினர் இருவரும்.

"இங்க வர்ற பல மூஞ்சிகளை யாருன்னே எனக்குத் தெரியாதுடா, அண்ணா!"

"பிசினஸ் நல்லா போகணும்னு நினைப்பு இருந்தா எல்லார்கிட்டேயும் பல்லைக் காட்டி வைடா!" – என்றான், ஷ்யாம்.

வைப்ரேஷனில் அதிர்ந்த அலைபேசியை எடுத்து நோக்கியவன், "தாத்தா இன்னும் பத்து நிமிஷத்துல வர்றாராம்டா, அண்ணா!" எனக் கூறி விட்டு, "பழனி... டேய் பழனி..." என்று அவனைக் கூவி அழைத்தான்.

"இனி வர்றவங்களை இந்த வாசல் வழியா உள்ளே அனுப்பாதே. வலது பக்க வாசல் வழியா கூப்பிட்டுப் போ. சக்திகிட்ட சொல்லி ரிப்பன் கட்டச் சொல்லு!" – என்றவன்... ஓடிச் சென்றவனை நிறுத்தி, "ரம்யா... ரம்யாவை வரச் சொல்லு!" என்றான்.

இரண்டு நிமிடத்தில் மீண்டும் ஓடி வந்த பழனி, "ஓனர்ண்ணா... அண்ணி வர முடியாதுன்னு சொல் றாங்க," என்றான்.

"அகராதி, அகராதி..." என்று முணுமுணுத்த ஹரி, உள்ளே ஓடினான்.

ஏப்ரனை நீக்கியபடி பாத்ரூமை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரம்யாவின் கைபற்றி நிறுத்தியவன், "ஏய்.. பத்து நிமிசத்துல தாத்தா வந்துடுவார். வா.. வந்து எங்க ளோட என்ட்ரன்ஸ்ல நில்லு!" என்றான்.



"எனக்கு அவரைப் பார்க்க இஷ்டமில்லை, ஹரி. நான் வரலை."

"ப்ச். என்னடி விளையாடுறியா?"

"நீதான் விளையாடுற, என் விருப்பு, வெறுப்பு களோட! உனக்கு இந்த ஹோட்டல் முக்கியம். அதனால தாத்தாவைக் காக்கா பிடிக்கிற! என்னை ஏன்டா உன் கூடக் கூட்டு சேர்த்துக்கிற... என்னால வர முடியாது."

"இதோ பாருடி. நான் நல்ல மூட்-ல இருக்கேன். அதைக் கெடுக்கிறதுக்குன்னே ஆடாதே. இதுல என் சுயநலம் மட்டுமில்ல. நம்ம இரண்டு பேரையும் சேர்த்துப் பார்த்தா உன் அப்பா, அம்மா, என் அப்பா, அம்மான்னு நம்ம குடும்பமே சந்தோசப்படும். தயவு செஞ்சு என் கூட வா!" என்றவன் அவளை இழுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

பத்து நிமிடத்தில் அவனது மொத்தக் குடும்பமும் வாசலில் வந்திறங்க, மூவரும் சிரிப்புடன் வரவேற்றனர்.

அமாத்யரைத் தவிர மொத்தக் குடும்பத்தின் பார்வையும் ரம்யா – ஹரியின் மீது தானிருந்தது.

"நல்லா சாப்பிடுறியா கண்ணு?"

"உன்னைப் பார்க்கவே வரலைன்னு அத்தை மேல கோபமா?"

"மெலிஞ்சு தெரியுற ராஜா" - என்று ஐந்து நிமிடத்தில் ஐந்நூறு கேள்விகளைக் கேட்டு விட்ட குடும்பத்தினரிடம் சிரிப்புடனே பதிலளித்தனர் இருவரும்.

ரம்யாவின் தலையைக் கோதியபடி ராமமூர்த்தி நிற்க... ஹரியின் தோளைப் பற்றிக்கொண்டு நலம் விசாரித்துக் கொண்டிருந்தார், ஜெகன்.

அனைவரையும் கண்ட அமாத்யர் தொண்டையைக் கனைத்து விட்டு, ரம்யாவிடம், "நீ ஏன் யூனிஃபார்ம் போட்டிருக்க?" எனக் கேட்டார்.

"நான் இங்க வேலை பார்க்குறேன்."

"நீ இங்க வேலை பார்க்கப் போறதா ஹரி என் கிட்ட சொல்லவேயில்லை!"

"ஏன்? இதையும் கூட நான்..." எனக் கோபத்துடன் ஆரம்பித்தவளின் கையை ஒரே நேரத்தில் இறுகப் பற்றி அடக்கினர், அவளது இருபுறமும் நின்றிருந்த ஷ்யாமும், ஹரியும்.

"நான் திடீர்னு டிசைட் பண்ணினதுதான், தாத்தா. இவளும் சும்மா வீட்ல இருந்தா போரடிக்கும்தானே! அதனாலதான் இங்கே வந்து வேலை பார்க்கட்டும், கொஞ்ச நாளைக்குன்னு கூப்பிட்டு வந்தேன்," என்றான், ஹரி.

"நேரமாச்சு, தாத்தா. ரிப்பன் கட் பண்ணணும். போகலாமா?" என்ற ஷ்யாம், அவரை அழைத்துக் கொண்டு நகர்ந்து விட... நின்று ரம்யாவை அழுந்த



முறைத்த ஹரி, "ச்சே..." என்று கூறி விட்டு, விறுவிறு வென நடந்து சென்று விட்டான்.

"உனக்குப் பொறுமை-ன்றது கொஞ்சம் கூடக் கிடையாது, ரம்யா!" - தந்தை வழக்கம் போலத் தன் பாட்டைத் தொடங்க...

"தாத்தா சொல்றதையெல்லாம் பெருசா எடுத்துக் காத, கண்ணு!" என்று ஆறுதல் படுத்தினார் ராமமூர்த்தி.

ரிப்பன் கட் செய்து முடித்ததும், அமாத்யர் மற்றும் குடும்பத்தினர் உள்ளே சென்று அமர்ந்தனர். வந்திருந்த விருந்தாளிகள் அனைவரும் அமாத்யரைப் பற்றியும், அவரது பேரன்களைப் பற்றியும் புகழ்ந்து தள்ள.. வேலையாட்களின் நடுவே நின்றபடி, அதைக் கேட்டு கொண்டிருந்த ரம்யாவிற்குத் தலை வலித்தது.

கடைசியாக அனைவரும் சேர்ந்து ஹரியை மேடையில் ஏற்றி மைக்கைக் கையில் கொடுத்தனர். அவன் மேடை ஏறியதும், 'ஊஃப்ஃப்ஃப்' எனப் பழனி விசிலடிக்க... அதைத் தொடர்ந்து வேலையாட்கள் அனை வரிடமிருந்தும் கைதட்டலும், விசிலும் பறந்தது.

சிரித்தபடி இரு கை தூக்கிப் போதும் போதும் எனச் சைகை செய்தவன்... காதைத் தடவியபடி மைக்கை ஏந்தி, "என்ன, எல்லாரும் கலாய்க்கிறீங்களா?" என்றான்.

கூட்டம் நகைக்கத் தொடங்கியதும், அவன் தொடர்ந் தான்.

"திடீர்னு மேடை ஏத்தி விட்டதால கை கால்லாம் நடுங்குது. லைட்டா வாய் கூடக் குளறுதுன்னு நினைக்

கிறேன். அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க!" எனக் கூறியதும், சிரித்த கூட்டத்தோடு சேர்ந்து தானும் நகைத்தவன், "வாசல்ல கட்டியிருக்கிற பலூன்ல இருந்து தொடங்கி இங்க டேபிள் மேல போடப்பட்டிருக்கிற க்ளாத் வரை எல்லாத்தையும் ப்ரிப்பேர் பண்ணின நான், மேடையில என்ன பேசணும்னு ப்ரிப்பேர் பண்ண மறந்துட்டேன்.

"நான் ஹோட்டல் பிசினஸில் இறங்குனதுக்கு பெரிய ஸ்பெஷல் ரீசன் எதுவுமில்லை. சின்ன வயசுல என் தாத்தோவோட சேர்ந்து அடிக்கடி இந்த ஹோட்டலுக்கு வருவேன். அதுக்கு முக்கியக் காரணமா இருந்தது இங்க வேலை பார்க்குற நம்பி அங்கிளோட வைஃப் பரிமளா ஆன்ட்டிதான். அப்போ ஆன்ட்டி ரொம்ப அழகா யிருப்பாங்க. அந்த வயசுல என்கிட்ட யாராவது உலகத்திலேயே யார் ரொம்ப அழகுன்னு கேட்டிருந்தாங்கன்னா நான் பரிமளா ஆன்ட்டின்னுதான் சொல்லியிருப்பேன்..." என்று அவன் கூறியதும், வெட்கப்பட்டுச் சிரித்த நம்பியை உலுக்கிக் கைதட்டி விசில் அடித்தனர் இளைஞர்கள்.

"ஆக, இந்த ஹோட்டலுக்கு நான் அடிக்கடி வந்து, இந்தத் தொழிலைப் பார்த்துப் பழகிப் பிடிக்க ஆரம்பிச்சதுக்கான பேஸ் பரிமளா ஆன்ட்டிதான்.

"பிசினஸ் பீக்-ல இருக்கிற தாத்தாவோட எத்தனையோ ஹோட்டல்களை விட்டுட்டு நான் ஏன் இந்தப் பழைய ஹோட்டலைப் புதுப்பிக்க நினைச்சேன்கிறது பல பேரோட கேள்வியா இருக்கு. அதுக்கு நான் இப்போ பதில் சொல்லிடுறேன்.



"நாங்க கஷ்டப்படாம வளர்ந்துட்டதா என் தாத்தா அடிக்கடி சொல்லுவார். ஒரு விசயத்துக்காக முயற்சி பண்ணி, அதுக்காக உழைச்சு, தோற்றுப் போய் அந்த வலியை அனுபவிச்சு... ஜெயிக்கிறதுக்கான பாதையைக் கண்டுபிடிச்சு... படிப்படியா முன்னேறி வெற்றிக் கொடியை நாட்டுகிறவனுக்குத்தான் வாழ்க்கை ருசியாயிருக்கும். உங்களை மாதிரி பாட்டன் சொத்தை அனுபவிச்சுட்டு மூணு வேளை மூக்குப் பிடிக்கச் சாப்பிடுறவனுக்கெல்லாம் வாழ்க்கை ரெடிமேட்தான்டா. இப்படித்தான் வாழணும்னு டெம்ப்ளேட் சூஸ் பண்றதுக்கு உங்களுக்குப் பணம் இருக்குன்னு சொல்லுவார்.

"அவர் சொன்னது என்னை ரொம்பவே பாதிச்சுடுச்சு. என் தாத்தாவோட பிசினஸ்ல ஈடுபட்டு அவரோட அசையும் சொத்துக்கள்ல ஒன்னா நான் இருக்க விரும்பல. நான் கீழே விழுந்து கஷ்டப்பட்டு அடிச்சுப் பிடிச்சு என் கால்லயே முன்னாடி வர ஆசைப்படுறேன்," என்று அவன் முடித்ததும் கூட்டம் கரகோஷம் எழுப்பியது.

சிரிப்பும், குஷியுமாயிருந்த வேலையாட்களைத் திரும்பி நோக்கினார், அமாத்யா். முழுக்க முழுக்க இளைஞர்கள் பட்டாளம் அது. இளமையும், அதற்குண்டான உற்சாகமும் அவர்களிடத்தில் நிரம்பி வழிந்தது. தன் வயதையொத்தவன் முதலாளியிருப்பது அவர்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சி. திருப்தியுடன் புன்னகைத்தபடி திரும்பி ஹரியை நோக்கினார்.

"நிறைய மனசுல தோணுது. ஆனா என்னால பேச முடியலை. ஏன்னா நான் இன்னும் ப்ரேக்-ஃபாஸ்ட்

சாப்பிடல!" எனக் கூறிச் சிரித்தவன், "என்னையும் மதிச்சு.. என் முயற்சியை என்கரேஜ் பண்ண வந்த எல்லாருக்கும் ரொம்ப ரொம்ப நன்றி. ஹோட்டலோட லாப, நஷ்டத்தைக் கணக்குப் பார்க்காம தரமான உணவுகளை மக்களுக்குக் கொடுக்கணும்னு ஆசைப்படுறேன். அதுக்குத் தொடர்ந்து உங்க ஆதரவை எதிர்பார்க்கிறேன். நன்றி!" என்று முடித்து விட்டு ஒற்றை விரலால் இடது புருவத்தைச் சொறிந்தபடி விறுவிறுவெனப் படி யிறங்கினான்.

நகைச்சுவையும், குறும்புமாய் அவன் பேசியதைக் கேட்ட ரம்யா ஆடிப்போய் விட்டாள்.

கூட்டம் கலைந்து அனைவரும் எழுந்த சத்தம் எதுவுமே அவள் காதுகளை எட்டவேயில்லை. க்ரே நிற கோட், சூட் சகிதம் வேக நடையுடன் தாத்தாவின் அருகே சென்று குனிந்து அவரிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்த ஹரி மட்டுமே அவள் கண்களுக்குத் தெரிந்தான்.

இவன் எப்போதிலிருந்து அழகனாய் மாறினான்?

"பழனி... பழனி..." என்றழைத்துத் தலையை மெல்ல ஆட்டித் தாத்தாவைக் கண் காட்டியவன் கூட்டத் தைச் சுற்றிச் சுற்றி நோக்கியபடி ஆட்களை ஏவிக் கொண்டிருந்தான். இடையில் ராமமூர்த்தி ஏதோ கூறிய தற்கு அவரை நோக்கிக் குனிந்தவன், "அதெல்லாம் பார்த்துக்கிறேன்ப்பா!" என்றபடியே பின் மண்டையைக் கோதினான்.

ரம்யாவின் பார்வையில் அவன் அன்று வித்தியாச மாய்த் தெரிந்தான். கல்லூரி மாணவனின் ஃபங்க்கி லுக்



கிலிருந்து மாறித் தலைமுடியை ஏற்றிச் சீவியிருந்தான். இரண்டு புறமும் காதுவரை நீண்டிருந்த கிருதா அவன் முகத்தை மேலும் ஆண்மையாய்க் காட்டியது. இடது கையில் ரோலக்ஸ் அணிந்திருந்தவன் ஒரு கையைப் பாக்கெட்டுக்குள் செருகிக் கொண்டு மறுகையால் காதைத் தடவியபடி பதிலளிப்பது பார்க்க மிக அழகாயிருந்தது. "ஸ்மார்ட் ஆயிட்டடா ஹரி!" என்று உதட்டை வளைத்த ரம்யாவிற்குப் பெருமையும், கர்வமுமாயிருந்தது.

அதற்குள் அவளைச் செல்வி அழைக்கச் சமைய லறைக்குள் புகுந்து கொண்டாள். அன்று ஹோட்டல் ஓப்பனிங்கை முன்னிட்டு மதியச் சாப்பாட்டில் நிறைய ஆஃபர்களை வழங்கியிருந்தபடியால் கூட்டம் குவிந்தது. வாசலில் கதவு திறந்து விடும் செக்யூரிட்டியிலிருந்து தொடங்கி பார்க்கிங்கில் நிற்பவன், செர்விங், குக்கிங்கில் இருப்பவர்கள் என அனைவரும் படு பிசியாயிருந்தனர்.

அனைத்தையும் மேற்பார்வை பார்த்தபடி நடமாடிக் கொண்டிருந்த ஹரியை அவனது குடும்பத்தார் பிடித்துக் கொண்டனர்.

"மேடையில பேசும்போது பசிக்குதுன்னு சொன்ன கண்ணு... இன்னும் சாப்பிடலையேப்பா?"

"ஆமா அத்தை, ரொம்பப் பசிக்குது. அப்படியே ஒரு நாலு வாய் ஊட்டி விடு. சாப்பிட்டு ஓடுறேன்..." -என்று அவன் சொன்னதும், ஆளாளுக்கு ஊட்டி விடத் தொடங்கினர்.

"ஹரி, என்கிட்ட ஒரு வாய் வாங்கிக்கோ!" என்று அழைத்த சங்கீதா, அவன் வாயில் இட்லியைத் திணிக்க... அஷ்வத், "நானும், நானும்..." என்றபடி தானும் ஊட்டி னான்.

"மட்டன் ஸ்ட்யூ!" என்று கத்தியபடியே வெளியே வந்த ரம்யா இந்தக் காட்சியைக் கண்டு மௌனமாகி விட்டாள். ஏனோ அந்தச் சூழ்நிலை அவளை அந்தக் குடும்பத்திலிருந்து பிரித்துத் தனித்துக் காட்டியது. திடீரென அநாதையாகி விட்டதாக உணர்ந்தாள்.

"உனக்கு ஹோட்டல் முக்கியம், அதனால குடும் பமும் முக்கியம்னு நினைக்கிற!" என்று அவனைத் திட்டிய வார்த்தைகளெல்லாம் அபத்தமாய்த் தோன்றியது இப்போது.

அவளுக்கு மட்டும் குடும்பம் தேவை யில்லையா என்ன? எந்தத் தைரியத்தில், மனோபாவத்தில் குடும் பத்தை விட்டு விலகி வெளிநாடு ஓடி விடுவேன் என்று பேசிக் கொண்டிருக்கிறாள்?

ஒரு நாளைக்கு எத்தனை முறை வைஜ் அத்தையும், சாவித்ரி அத்தையும் அவள் கனவில் வந்து போகிறார்கள்? அன்னை, தந்தை உடன் இல்லாமல் ஒற்றை அறையில் இரண்டு வாரமாகத் தனியே படுத் திருப்பது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது!

பெரிய மாமா, சின்ன மாமா, ஷ்யாம், சங்கீதா, அஷூ.... அத்தனை பேரையும் எப்படி அவளால் தூக்கி யெறிய முடியும்?



அவள் ஏன் ஹரியைப் போலில்லை? குடும்பத்தின் மீது அவன் எந்தக் கோப தாபமும் வைத்துக் கொள்வ தில்லை. திட்டினாலும், சிரித்தாலும் எல்லோரிடமும் அனுசரணையாக நடந்து கொள்கிறான். அனைவரையும் சரிசமமாக நடத்துகிறான். வீட்டுக்கு வரும் உறவினர் களிலிருந்து தொடங்கி இங்கு வேலை செய்யும் நம்பி, பழனி வரை... ஏன்... இன்று காலை அவனுக்காகக் கைதட்டிய கூட்டம்வரை அத்தனை பேரிடமும் எப்படி அவனால் நல்லவனாக நடந்து கொள்ள முடிகிறது? எவ்வளவு சகிப்புத்தன்மை உண்டு அவனுக்கு!

கேப்பைக் கழட்டியபடி பின் நோக்கி நடந்தவளை, "மட்டன் ஸ்ட்யூ... ஹேய்... மட்டன் ஸ்ட்யூ!" என்று கத்திய செல்வி அவள் பின்னேயே ஓடி வந்து, "எங்க திரும்ப எடுத்துட்டுப் போறீங்க?" என்று திட்டி விட்டு அவள் கையிலிருந்ததை வாங்கிக் கொண்டு செல்ல... சத்தம் கேட்டுத் திரும்பிய ஹரி... சோர்வுடன் நடந்து சென்ற வளைக் கண்டு புருவம் நெரித்தான்.

அதன் பின்பு வீட்டார் கிளம்புகையில் கூட அவள் வெளியே வரவில்லை. "நான் சொல்லிக்கிறேன், பெரியம்மா. நீங்க கிளம்புங்க!" என்று சமாளித்த ஹரி அனைவரையும் வழியனுப்பி வைத்தான்.

அன்றைய நாள் வெற்றிகரமாய் முடிந்து விட.. அனைவரும் ஹோட்டலைச் சுத்தம் செய்து வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினர்.

"தாங்க்ஸ்டா பசங்களா... நீங்க இல்லாம இந்த நாள் இவ்ளோ சக்ஸஸ்ஃபுல்லா இருந்திருக்க சான்ஸே

இல்ல. சாப்பாடு, சர்விங் எல்லாமே சூப்பர்!" என்றதும், "ஹே..." என்று கைதட்டி மாற்றி மாற்றி ஹை-ஃபைவ் கொடுத்துக் கொண்டனர் அனைவரும்.

"இதுக்காக உங்களுக்கு நிச்சயம் ஸ்பெஷல் போனஸ் உண்டு," என்று அவன் கூறியதும், மேலும் கத்திக் கும்மாளமிட்டபடி கிளம்பினர்.

"ராஜேந்திரன் அங்கிள், லைட்ஸ் எல்லாம் செக் பண்ணிட்டு லாக் பண்ணிடுங்க!" என்றவன், ரம்யாவைத் தேட...

"அவ அப்பவே கிளம்பிட்டா மாப்ள!" என்றான் சக்தி.

அவன் வீடு வந்து சேர்கையில் ரம்யாவின் அறைக் கதவு சாத்தியிருந்தது. அருகே சென்று தட்டுவதற்காக அவன் கையை உயர்த்துகையில் அவளது கண்டிஷன் நினைவிற்கு வர... அரவமின்றித் தன்னறைக்குச் சென்று விட்டான்.

உறக்கம் வராமல் லேப்டாப்பை நோண்டிக் கொண் டிருந்தவன் சிறிது நேரத்தில் அறைக் கதவை யாரோ தட்டும் ஓசையை உணர்ந்தான். எழுந்து சென்று கதவைத் திறந்தவன், கையில் தலையணையைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்த ரம்யாவைக் கண்டு... நிலைப்படியில் கைகட்டிச் சாய்ந்து நின்று கொண்டு... உதட்டை வளைத்து நக்கலாகச் சிரித்தான்.

"கண்டிஷன் நம்பர் - 3. ராத்திரியில ஹார்ட்- அட்டாக்கே வந்தாலும் நீ என் ரூம் கதவைத் தட்டக் கூடாது."



"என் கதவைத் தட்டக் கூடாதுன்னுதான் நான் கண்டிஷன் போட்டேன். உன் கதவைத் தட்டக் கூடா துன்னு நீ சொல்லவே யில்லை."

"சரி, இப்போ சொல்றேன். இனிமே தட்டாத. ஓ.கே. குட் நைட்!" என்று கதவைச் சாத்தப் பார்த்தவனை "ஏ... ஏய்..." என்று தடுத்தாள்.

"இப்போ என்ன வேணும் உனக்கு?" என்று கேள்வி கேட்டவனுக்குப் பதில் கூறாமல் எங்கெங்கோ நோக் கியவள், "நா.. நான் லோன்லியா ஃபீல் பண்றேன்," என்றாள்.

இதை ஓரளவு அவன் எதிர்பார்த்திருந்ததால்.. சாய்ந் திருந்த நிலைப் படியிலிருந்து சற்று விலகி நின்று, "உள்ளே வா..." என்றான்.

"ம்ஹூம்.. கண்டிஷன் நம்பர் 2: உன் ரூமுக் குள்ளே நானோ, என் ரூமுக்குள்ளே நீயோ வரக் கூடாது. அதனால..."

"அதனால?"

"ஹா... ஹால்ல பெட் போட்டிருக்கேன். அங்கே படுக்கலாம்," என்றாள்.

பதிலற்று வெற்றுப் பார்வை பார்த்தவன் தன் தலையணையைத் தூக்கிக் கொண்டு அவள் பின்னே வந்தான்.

ஹாலிலிருந்த கணப்பின் அருகே தரையில் படுக்கை விரித்திருந்தாள் அவள்.

தலையணையைப் போட்டு அவன் சாய்ந்ததும் தானும் படுத்துக் கண் மூடி உறங்க முயன்றாள், ரம்யா. அப்படியும் உறக்கம் வராமல் இருபுறமும் புரண்டு கொண்டிருந்தவளைத் திரும்பி நோக்கினான், ஹரி.

பின் பெருமூச்சுடன் அவளருகே சென்று அவள் வயிற்றில் கையிட்டுத் தன்புறம் இழுத்துக் கொண்டவன், அவள் தலையைத் தன் தலையணையின் மீது வைத்து அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

"தாத்தாவும், நம்ம குடும்பமும் உன்னை சப்போர்ட் பண்றாங்களோ இல்லையோ... நான் எப்பவும் உன் கூட... உனக்கு சப்போர்ட்டிவாதான்டி இருப்பேன்."

அவன் கூறியதும் சட்டென அவன் புறம் திரும்பியவள் அவன் தோளில் தன் தலையைப் பதித்து வலது கையால் அவனை இறுகக் கட்டிக் கொண்டாள்.

தன் தோள் மீது சாய்ந்திருந்தவளின் கூந்தலை வருடியவன், "தாத்தாவோ... இல்ல நம்ம ஃபேமிலியோ நமக்கு எதிரிங்க இல்லடி. அவங்களோட ஆசைகளும், கனவுகளும் நம்ம விருப்பத்தோட ஒத்துப் போகல. அவ்வளவுதான். ஒவ்வொருத்தரும் தன்னோட கனவு களைத் தக்க வைச்சுக்க நடந்த போராட்டத்துலதான் இப்படி எதிரியாயிட்டோம்..." என்றான்.

"கிளம்பும்போது நீ வரலைன்னதும் எல்லோரோட முகமும் எப்படி வாடிப் போயிடுச்சு, தெரியுமா? அத்தை - மாமாவை என்னால ஃபேஸ் பண்ணவே முடியல. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கூப்பிட்டு வந்து



இப்படிச் சமையல் கட்டுல போட்டுட்டேனேன்னு நினைச்சு ஃபீல் பண்றாங்களோன்னு எனக்குப் பயமாவே இருந்தது. இந்த வேலை கஷ்டமாயிருக்குன்னு தோணுச்சுன்னா நீ வேலையை விட்டு நின்னுடுடி. சரியா?"

"ம்ம்ம்..."

"பெரியம்மா உன்னை வீட்டுக்கு அழைச்சிட்டு வரச் சொன்னாங்க. நாம ஒரு நாள் நம்ம வீட்டுக்குப் போவோமா?"

"ம்ம்ம்..."

"தாத்தா இன்னிக்கு நிறையத் தடவை சிரிச்சார், பார்த்தியா? எனக்கு ரொம்ப ஆச்சரியமாயிருந்தது. அவர் என்ன பண்ணினாலும் அந்த மனுஷன் மேல எனக்கு எப்பவுமே வெறுப்பு வந்ததே யில்லைடி...."

"ம்ம்ம்..."

"நடந்து முடிஞ்ச விசயங்கள்ல எது தப்பு, எது சரின்னு எனக்குத் தெரியல. ஆனா, இனி நடக்கப் போகிற எல்லாம் நல்லதாவே இருக்கும்னு ஒரு நம்பிக்கை வருது. உனக்கும் அப்படித் தோணுதா?"

"........."

"தூங்கிட்டியாடி?"

அவளிடம் பதிலற்றுப் போக... இடது கை ஒற்றை விரலால் அவள் நாடியைப் பற்றித் தூக்கித் தன் முகம் காணச் செய்தான் அவன். கண் விழித்து அவனை நோக்கியவள் மீண்டும் கண் மூடிக் கொள்ள இரண்டு

நிமிடம் இமைக்காமல் அவளையே நோக்கியவன் குனிந்து அவள் நெற்றியில் தன் இதழ்களை அழுந்தப் பதித்தான்.

அவன் இதழ்களிலிருந்து தன்னைப் பிரித்து அவன் மார்பில் தலை சாய்த்தவளுக்கு... முதன் முதலாக அவனது முத்தம் உடலில் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

**அ**டுத்த நாள் காலை ஹோட்டலுக்குள் நுழைந்த ஹரி, உள்ளே ஒரு ஈ, காக்காய் கூட இல்லாததைக் கண்டு திகைத்தான். எட்டிச் சமையலறையை நோக்கியவன்... அங்கே அனைவரும் ஆங்காங்கு அமர்ந்து கொண்டும், நின்று கொண்டும் பேசிச் சிரித்தபடி இருந்ததைக் கண்டு சக்தியிடம்... "என்னடா இது?" என்று விசாரித்தான்.

"வேற என்ன மச்சி பண்ணுவானுங்க அவனுங்களும்? காலையில் மூணு பேர் டிஃபன் சாப்பிட வந்தானுக. அதோட சரி. அதுக்கப்புறம் ஒரு கஸ்டமர் கூட வரக் காணோம். வேலை வெட்டி எதுவுமில்ல. அதனாலதான் பசங்க பேசிச் சிரிச்சிட்டு இருக்காங்க."

"இப்படியே போனா நம்ம ஹோட்டல் நிலைமை என்னடா ஆகுறது? தாத்தா என் கழுத்துல கயித்தை மாட்டித் தொங்க விட்டுடுவார்."

"பொறுமையா இரு மச்சி. ஒரே நாள்ல எல்லாத்தையும் சாதிச்சிட முடியுமா?" என்றவனிடம்,

"அது சரி!" என்று தலையாட்டிய ஹரி, ஷ்யாம் நேற்றளித்த ஃபோன் நம்பர்களுக்கு அழைத்துத் தன்



ஹோட்டலைப் பற்றிச் சொல்லி விசேஷ நாட்களுக்கும், விருந்துகளுக்கும் தங்களிடம் ஆர்டர் அளிக்கலாம் என்று கூறிக் கொண்டிருந்தான்.

மதிய இடைவெளி நேரத்தில் அனைவரும் வெளியே சென்று விட... பழனி, செல்வி, ரம்யா மூவரும் கிச்சனில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

"டேய்.. பழனி... டேய், கஸ்டமர்ஸ் வர்றாங்க பாருடா!" - ஹரியின் குரல் உச்ச ஸ்தாயியில் ஒலிக்க...

"இவர் வேற... ரோட்டுல போகிற யாராவது நம்ம ஹோட்டலுக்குள்ள எட்டிப் பார்த்தாக் கூட கஸ்டமர், கஸ்டமர்னு கூவி அவங்களைப் பிடிச்சு உள்ளே இழுத்துப் போட்டுடுறார்!" என்று எரிச்சலுற்ற பழனி, "வந்துட்டேண்ணா..." என்று ஓடினான்.

ஒரு தம்பதி தன் இரண்டு குழந்தைகளுடன் குடும்பமாய் வந்திருந்தனர். ஹோட்டலைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி உள்ளே வந்த அனைவரும் தங்களுக்குள் பேசிக் கொள்ள... அவர்களை ஓடிச் சென்று வரவேற்று அமர வைத்தான், ஹரி.

அதற்குள் பழனி அவர்களருகே சென்று மெனு கார்டைக் கொடுத்து ஆர்டர் எடுத்துக் கொண்டான்.

அடுத்த அரை மணி நேரத்தில் சூடாக அவர்களின் முன்பு பரிமாறப்பட்ட உணவை அனைவரும் ஆர்வத்துடன் உண்டனர். அவர்களது முக பாவனைகளைப் பார்த்த ஹரி திருப்தியாய்ப் புன்னகைத்தான்.

சிறிது நேரத்தில் கையில் ஒரு குவளையுடன் வெளிப்பட்டாள் ரம்யா. சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களின் அருகே சென்று புன்னகைத்தவள், "இது நாங்க புதுசா ட்ரை பண்ணின சிக்கன் ரெசிபி. இன்னிக்கு வர்ற கஸ்ட மர்ஸ்க்கு ஸ்பெஷலாத் தர்றோம். இதுக்குக் காசு கிடை யாது. ஃப்ரீதான். நீங்க சாப்பிட்டுப் பார்த்து உங்க கருத்தை எங்களோட பகிர்ந்துக்கிட்டீங்கன்னா.. எங்க ஹோட்டலோட குவாலிட்டியை இம்ப்ரூவ் பண்றதுக்கு ரொம்ப உதவியா இருக்கும்," என்று கூற... அவர்களும் "ஷ்யூர்!" என்றபடி வாங்கிச் சுவைத்தனர்.

சாப்பிட்டு முடித்ததும் அந்தக் குழந்தைகள் இன்னும் வேண்டுமெனக் கேட்டு அடம் பிடிக்க, ரம்யாவிடம் அந்தப் பெண், "ரொம்பச் சுவையா இருக்கு, மேடம். பாருங்க இரண்டு பேரும் எவ்ளோ அடம் பிடிக்கிறாங்கன்னு. இன் னொரு பௌல் வாங்கினா ஃப்ரீதானா?" என்று வினவ,

"இல்லை மேம், எக்ஸ்ட்ரா வாங்கினா நீங்க காசு கொடுக்கணும்..." என்றாள், ரம்யா.

அப்போது சூடு பிடிக்கத் தொடங்கிய தொழில் அடுத்த ஒரு மாதத்தில் நல்ல வளர்ச்சியைப் பெற்று விட்டிருந்தது. காலை ப்ரேக்ஃபாஸ்ட்டிலிருந்து தொடங்கி இரவு டின்னர்வரை எந்நேரமும் மக்கள் வந்து சென்ற வண்ணம் இருந்தனர். புதுப் புது விதமான ரெசிபிக்களை மெனுவில் சேர்த்துத் தங்களது ஹோட்டலை வெற்றிக் களமாக மாற்றிக் கொண்டிருந்தது அந்த இளைஞர் பட்டாளம்.



சுறுசுறுப்பாக அனைவரும் அன்று மதிய நேரச் சமையலில் ஈடுபட்டிருந்தனர். "ஆறாவது டேபிளுக்கு இரண்டு வெஜ் நூடுல்ஸ் & பேபிகார்ன் கோல்டன் ஃப்ரை!" - என்று செல்வியின் குரல் ஒரு பக்கம் ஒலிக்க...

சமையலறையிலிருந்து சாப்பாட்டு ஹாலை எட்டிப் பார்த்த ரம்யா, "லோகேஷ்... லோகேஷ்!" எனக் கத்தி அழைத்து, "மட்டன் சுக்கா டேபிள் 5..." என்றபடியே அவனிடம் கிண்ணத்தை நீட்டிக் கொண்டிருந்தாள்.

"ஆசை நூறு வகை... வாழ்வில் நூறு சுவை வா..." என்று பாட்டுப் பாடியபடியே தன்னருகே நின்றிருந்த வரலட்சுமியின் தோளை இடித்தாள் செல்வி.

"அந்தப் பக்கம் போய் ஆடுடி. என்னை இடிக்காத!"

"வரு-க்கா, இன்னைக்கு நம்ம ஓனர் லாவண்டர் கலர் சட்டை, க்ரீம் கலர் பேன்ட்டு போட்டுக்கிட்டு சும்மா தல அஜித் மாதிரி செம ஸ்மார்ட்டா இருக்காரு."

"பேசு, பேசு... அவர் பொஞ்சாதி, பக்கத்துல நின்னு எல்லாத்தையும் கேட்டுக்கிட்டுத்தான் இருக்கு."

எட்டி ரம்யாவை நோக்கினாள், செல்வி.

"ரம்யாக்கா... நான் நம்மாளைப் பார்த்து டெய்லி கமெண்ட் அடிக்கிறதுல உங்களுக்கு ஏதாவது அப்ஜெக் ஷன் இருக்கா?"

"அவரு ரம்யாவோட ஆளுடி. நீ ஏன் நம்ம ஆளுன்னு சொல்லி அவரைப் பொதுச் சொத்தாக்குற?" - வரலட்சுமி.

அன்றைய டேபிள் மெனுவைத் தயாரித்துக் கொண்டிருந்த ரம்யா நிமிர்ந்து, "நீ அவன் கையைப் பிடிச்சு இழுத்துக் கட்டிப்பிடிச்சாக் கூட எனக்கு எந்த அப்ஜக்சனும் இல்ல..." என்று கூறி முடிக்கையில்,

"குட் மார்னிங்!" என்றபடி, சமையலறைக்குள் நுழைந்தான் ஹரி.

தினம் காலை ஹோட்டலுக்கு வந்ததும் அனைவ ரையும் ஒரு முறை பார்த்துச் சிரிப்புடன், குட் மார்னிங் சொல்லும் முதலாளியை யாருக்குத்தான் பிடிக்காது?

"குட் மார்னிங் ஓனர்!" என்றனர், அனைவரும் கோரசாக. இந்த ஓனர் என்கிற வார்த்தையை அனை வருக்கும் பழக்கி விட்ட பெருமை பழனியையே சாரும்.

லேசாய்த் தலையசைத்து விட்டு ரம்யாவின் புறம் திரும்பியவன், "இன்னிக்கு டேபிள் மெனு என்ன?" என்று விசாரித்தான்.

"சில்லி ஃபிஷ் அண்ட் சில்லி சோயா நக்கட்ஸ்."

"ஹ்ம்ம், ரெடியா? நான் டேஸ்ட் பார்க்கட்டுமா?"

"இல்ல, ஒரு பத்து நிமிஷமாகும்."

"ஓகே. ரெடியானதும் கூப்பிடு. நான் டேஸ்ட் பண்ணப்புறம் டேபிள் செட் பண்ணிடு!" என்று கூறி விட்டுத் திரும்பியவன் மீண்டும் அவளருகே சென்று... "ஏன் இப்படி வியர்த்திருக்கு?" என்று வினவினான்.

"ப்ச், இது என்ன கேள்வி? சமைக்கிறவனுக்கு வியர்க்காம குளிரவா செய்யும்?" என்று சிடுசிடுத்தவளைக் கண்டு தன் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்துத் துடைத்து விட்டான் ஹரி. "எல்லார் முன்னாடியும் என்னடா பண்ணுற?" என்று முணுமுணுத்தவளைப் பொருட் படுத்தாமல்.



"ஓனர்! எனக்குக் கூட வியர்க்குது..." - பக்கவாட் டிலிருந்து குரல் கொடுத்த செல்வியை முறைத்துத் தலையில் தட்டியவன், "காப்படி உழக்கு சைஸ்ல இருந்துக்கிட்டு பேச்சைப் பாரு..." என்று கூறி விட்டு வெளியேறினான்.

அன்று அவர்களது ஹோட்டல் எதிர்பாராத ஒரு விருந்தாளியைச் சந்தித்தது.

"சக்தி... கல்யாண ஆர்டர் ஒன்னு வந்திருக்குடா. அடுத்த வாரம் புதன் கிழமை கிண்டியில நடக்குதாம். நம்மளை ஃபுட் சப்ளை பண்ணச் சொல்லிக் கேட்டிருக் காங்க..." என்றான், ஹரி.

"சூப்பர் மச்சி. முதல் பெரிய ஆர்டர்டா இது. சரி, டீடெய்ல்ஸ் எதுவும் சொன்னாங்களா? இல்லை, நாம நேர்ல போய்ப் பேசணுமா?"

"இன்னிக்கு நைட் நம்மளை மீட் பண்றேன்னு சொல்லியிருக்காங்க. பார்ட்டி வெயிட்டான ஆளுன்னு தான் நினைக்கிறேன் மாப்ள..." என்று கூறிக் கொண் டிருந்த ஹரியின் கவனத்தைப் பறித்து, ஹோட்டல் வாசல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த நெடிய உருவம்.

"பார்ட்டி பெயர் என்னடா? நைட் எத்தனை மணிக்கு வர்றேன்னு சொல்லியிருக்காங்க? ஹரி... டேய் ஹரி... எங்கடா வேடிக்கை பார்க்குற?" என்று சக்தி உலுக்கியதும், அவன் புறம் திரும்பியவன், "டீடெயில்ஸ் உனக்கு மெயில் அனுப்பியிருக்கேன் மாப்ள. இருடா, இதோ வர்றேன்," எனக் கூறி விட்டு வாசலை நோக்கி நடந்தான்.

ஹோட்டலைச் சுற்று முற்றும் பார்த்தபடியே உள்ளே நுழைந்த சதீஷ், தன் எதிரே வந்து நின்ற ஹரியைக் கண்டு புருவம் உயர்த்தினான்.

"வணக்கம், ஹோட்டல் முதலாளி!"

"இங்கே எதுக்கு வந்திருக்க?"

"என்ன கேள்வி இது? ஹோட்டலுக்கு எதுக்கு வருவாங்க? சாப்பிடத்தான். கஸ்டமரை எப்படி ட்ரீட் பண்ணணும்னு கூடத் தெரியாமலா பிசினஸ் பண்றீ?"

"எனக்கு பிசினஸ் சொல்லித் தர்ற அளவுக்கு நீ பெரிய ஆள் இல்ல. வந்த விசயத்தைச் சொல்லு."

"அதை உட்கார்ந்து பேசலாமா?" என்றவன், அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

எரிச்சலுடன் வேறு வழியின்றி அவனுக்கெதிரே அமர்ந்த ஹரியை ஒரு நிமிடம் இமைக்காமல் வெற்றுப் பார்வை பார்த்தான், சதீஷ்.

"என்ன? நீ கண்ணாடியில் முகம் பார்க்கும் போது அதுல தெரியுற பிம்பத்தை விட நான் ஸ்மார்ட்டா இருக்கேனேன்னு பார்க்கறியா?'



உதட்டை வளைத்து முகத்தைத் திருப்பி நக்கலாகச் சிரித்தான், சதீஷ்.

"நான் நேரா விசயத்துக்கு வந்துடறேன். நான் ரம்யாவைப் பார்க்கணும்."

இறுகிய ஹரியின் உடல் அவனது கோபத்தைப் பறைசாற்ற... "என் பொண்டாட்டிய எவனோ ஒருத்தன் அநாவசியமா மீட் பண்றதுல எனக்கு விருப்பமில்ல..." என்றான்.

"ரொம்ப உரிமையாப் பொண்டாட்டினு சொல்லுற! உங்களுக்கு நடந்தது கட்டாயக் கல்யாணம்னு சொன்னாளே, ரம்யா?"

"அது ஐம்பது நாளைக்கு முந்தைய நிலைமை. இன்னிக்கு நிலைமையப் பொறுத்தவரைக்கும் நானும், என் பொண்டாட்டியும் மேட் ஃபார் ஈச் அதர் கப்பிள்."

"அதை அவ வந்து சொல்லட்டும், நான் நம்புறேன்!"

"நீ நம்பணும்னு அவசியமில்லை. நான் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளுறதுக்குள்ள மரியாதையா வெளியே போயிடு."

"நான் ரம்யாவைப் பார்க்காம இங்கே இருந்து நகர்றதா இல்ல..."

அவன் பிடிவாதமாய் மறுத்துக் கொண்டிருக்கையில் சமையலறையிலிருந்து இவர்கள் இருவரையும் கண்டு விட்ட ரம்யா அவசரமாய் ஓடி வந்தாள்.

"சதீஷ்..." என்கிற அவளது அழைப்பைக் கேட்டு இருவரும் நிமிர்ந்து பார்த்தனர்.

அவளைக் கண்டதும் கண்களை இறுக மூடிக் கோபத்தைக் கட்டுப்படுத்தியவன், சட்டென நிமிர்ந்து அவளை நோக்கினான்.

"உனக்கு கிச்சன்ல வேலையில்லையா?" - ஹரி.

"ரம்யா... நான் உன்கிட்ட பேசணும்..." - சதீஷ்.

"ரம்யா... உள்ளே போ!" - ஹரி.

"ரம்யா... நில்லு..." சதீஷ்.

"நீ அவ பேரைச் சொல்லிக் கூப்பிடாதே. எனக்குக் கொலை வெறியாகுது..." - ஹரி.

"ரம்யா... என் கூட அஞ்சு நிமிஷம் உன்னால வெளியே வர முடியுமா, முடியாதா?" - சதீஷ்.

"நீ இப்போ உள்ளே போறியா இல்லையாடி?" - ஹரி.

சரிக்குச் சரியாக மாறி மாறிப் பேசிக்கொண்டிருந்த இருவரையும் எரிச்சலுடன் ஏறிட்ட ரம்யா... ஹரியின் பார்வையைத் தவிர்த்து, "சொல்லுங்க சதீஷ்... என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்திருக்கீங்க?" என்று சதீஷிடம் வினவினாள்.

"எனக்கு யு.எஸ்.ல வேலை கிடைச்சிடுச்சு. நான் நாளைக்குக் கிளம்புறேன். போறதுக்கு முன்னாடி உன் கூட ஒரு பத்து நிமிஷம் பேசணும்னு ஆசைப்படுறேன். உன்னால வெளியே வர முடியுமா, முடியாதா?"



"ஹோட்டல் வாசல்ல வெயிட் பண்ணுங்க... நான் இரண்டு நிமிஷத்துல வர்றேன்."

"இங்கே யிருந்து ஒரு அடி எடுத்து வைச்ச... உன்னைக் கொன்னு போடக் கூட யோசிக்க மாட்டேன் நான்..." அடிக் குரலில் கிட்டத்தட்ட கர்ஜித்தான் ஹரி.

திரும்பி அவளை நோக்கியவனின் கண்கள் ஏமாற்றம், கோபம், ஆத்திரம் எனச் சகல உணர்ச்சிகளையும் பிரதிபலித்தன.

கோபத்துடன் அவனை ஏறிட்டவள், "என்ன? மிரட்டுறியா? நான் யாரைப் பார்க்கணும், பேசணும்னு டிசைட் பண்றதுக்கு நீ யாருடா? தேவையில்லாம என் விசயத்துல தலையிடாத...!" என்று கூற...

முகம் கன்றிச் சிவந்து விட்டது அவனுக்கு, முதுகுக்குப் பின்னே சதீஷ் சிரிப்பது போல் தோன்றியது.

"உங்க பர்சனல் விசயத்துல தலையிடுறதுக்கு உங்க புருஷனுக்கு வேணும்னா உரிமை யில்லாம இருக்கலாம் மிஸஸ் ரம்யா! ஆனா... வேலை நேரத்துல வேலை செய்றதை விட்டுட்டு வெட்டி அரட்டைல இறங்குறவங்களை எந்த முதலாளியும் அனுமதிக்கிறது இல்ல.

"அதனால உள்ளே போய் உங்க வேலையைத் தொடங்குங்க. எந்த மாதிரியான 'சொந்த' விஷயமா யிருந்தாலும் அது ஹோட்டல் வேலை நேரம் முடிஞ்சப் புறம், ஹோட்டலுக்கு வெளியே வைச்சுக்கோங்க. இங்க அந்த மாதிரி கீழ்த்தரமான விசயங்களை நாங்க என்கரேஜ் பண்றதில்லை..." என்றான் இறுகிய குரலில்.

பல்லைக் கடித்தபடி அவனை முறைத்து நோக்கி யவள் சதீஷிடம், "நான் உங்களை நைட் ஒன்பது மணிக்கு மீட் பண்றேன், சதீஷ்!" என்று கூற, அவன் தோளைக் குலுக்கி விட்டு, "தேங்க்ஸ்!" எனச் சென்று விட்டான்.

சிலையென நின்றிருந்தவனை முறைத்து விட்டு விறுவிறுவென உள்ளே சென்றாள், ரம்யா.

சொன்னபடி ஒன்பது மணிக்குச் சதீஷை ஹோட் டலுக்கு அருகே யிருந்த காஃபி ஷாப்பில் சந்தித்தாள், ரம்யா.

வழக்கம் போல் கையைக் கட்டிக் கொண்டு அவளையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான், சதீஷ்.

ஏனோ இந்த முறை அவன் பார்வை எவ்விதச் சலனத்தையும் உண்டாக்கவில்லை அவளுக்குள்.

"குண்டான மாதிரி இருக்க. ரொம்பச் சந்தோஷமா பார்த்துக்கிறான் போல உன் புருஷன்..."

"உங்களுக்கு என்ன பிரச்சனை சதீஷ்?"

"இந்தக் கேள்வியை அவன்கிட்ட கேளு. உன்னை லவ் பண்ணித் தொலைச்ச பாவத்துக்காகக் கிளம்பற துக்கு முன்னாடி உன்கிட்ட ஒரு நாலு வார்த்தை நல்ல படியா பேசிட்டுப் போகத்தான் நான் ஆசைப் பட்டேன். என்னைப் பார்த்ததும் ஏன் அவன் அப்படிக் கோபப் பட்டான்னு எனக்குச் சத்தியமா புரியல!"



"இப்போ புரியாது. உங்களுக்கும் கல்யாணம் ஆனப்புறம்... உங்க வைஃபைப் பார்க்க அவளோட முன்னாள் காதலன் தேடி வரும்போது புரியும்."

"நீ எப்பவும் அவனுக்குத்தானே சப்போர்ட் பண்ணுவ. நீங்க இரண்டு பேரும் மனமொத்த தம்பதி களா வாழ்றதா அவன் சொன்னானே, உண்மையா?"

"அதுல என்ன தப்பு இருக்குறதா தெரியுது, உங்களுக்கு?"

"தப்பாத் தெரியலயா உனக்கு? கல்யாணம் முடிஞ்ச கையோட என்னைத் தேடி ஓடி வந்து அழுத நீ. உன் விருப்பமில்லாம நடந்த கல்யாணம் இதுன்னு கதறுன. ஏன்? நான் ஃப்ராங்க்கா சொல்லிடறேன், ரம்யா... நான் உன்னை வரச் சொன்னதே உன்னால என் கூட யு.எஸ்.க்கு வந்து என்னோட புது வாழ்க்கை வாழ முடியு மான்னு கேட்கத்தான்."

சற்று நேரம் அமைதியாய் நொடிகளைக் கடத்திய ரம்யா தீர்க்கமாய் நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

"கல்யாணம் முடிஞ்சதும் நான் உங்களைத் தேடி வந்ததுக்கான காரணம் மன்னிப்புக் கேட்க மட்டும்தான். அதோட அர்த்தம் நீங்க எப்போ கூப்பிட்டாலும் உங்க பின்னாடி வந்துடுவேன்கிறது இல்ல. விருப்பமில்லாம நடந்த கல்யாணம்தான்.

"இன்னிக்கு வரைக்கும் நானும் அவனும் தினம் சண்டை போடாத நாளில்லைதான். ஆனா நான் இந்தக் கல்யாணத்தை மதிக்கிறேன். எல்லாத்தையும் தூக்கி

யெறிஞ்சுட்டு வான்னு நீங்க சொன்னதும், தாலியைக் கழற்றித் தூக்கிப் போட்டுட்டு வர்றதுக்கு நான் அந்த மாதிரிப் பொண்ணில்ல, சதீஷ். என் தாத்தா என்னை அப்படி வளர்க்கல. சாரி..." என்று எழுந்தவள், "இனிமே லைஃப்ல நான் உங்களைப் பார்க்கவே கூடாதுன்னு நினைக்கிறேன்..." எனக் கூறிவிட்டு விறுவிறுவெனச் சென்று விட்டாள்.

தன் ஸ்கூட்டியில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தவளுக்கு ஹரியின் கோப முகத்தை எண்ணி மனம் கனத்துப் போனது. மதியம் அவனது கோபத்தைக் கிளறி விட்டதற்கு என்ன செய்யக் காத்திருக்கிறானோ?

மெதுவாக வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றவள் அவன் அறையில் அவனைத் தேடினாள். இன்னும் வீட்டிற்குத் திரும்பவில்லை அவன்... நல்லதாகிப் போனது!

தன் அறைக்குள் முடங்கிக் கொண்டவள், பதினொரு மணிக்கு மேல் உறக்கத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் காலிங் பெல் அடிக்கும் சத்தம் கேட்டது. அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தவள், "கீ இல்லையா? ஏன் பெல் அடிக்கிறான்? தடிமாடு!" என்று முணுமுணுத்தபடி எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

"சக்தி... நண்பா சக்தி... நீ எனக்குக் கிடைச்ச வைரம்டா..." மொடாக் குடிகாரன் போல் நன்றாகக் குடித்திருந்த ஹரி சக்தியின் தோள்களில் தொங்கிக் கொண்டு ஊஞ்சலாடியபடி வசனம் பேசிக் கொண்டிருந்தான்.



"எ... என்னடா சக்தி இதெல்லாம்?" - ரம்யா.

"என்னைக் கேட்டா... மேரேஜ் ஆர்டர்க்காக ஒருத்தனை மீட் பண்ண பார்க்குப் போனோம். அங்கே அந்தாளு ஊத்தி ஊத்திக் கொடுத்தான். மாப்ள நல்லா அடிச்சுட்டான். பொதுவா ஒரு மூடி குடிச்சாலே வாந்தி எடுத்துடுவான். இன்னிக்கு... எப்படின்னுதான் தெரியல!" என்று சக்தி முடித்ததும், நிமிர்ந்து ரம்யாவை நோக்கிய ஹரி கோணலாய்ச் சிரித்து... "ஹாய்... பொண்டாட்டி..." என்றான்.

அவள் பெரிதாய் விழிக்கையிலேயே, "ஓ! மை பொண்டாட்டி... மை பொண்டாட்டி!" என்றபடியே அவள் மீது சரிந்து கட்டிக்கொண்டு கழுத்தில் தலை சாய்த்தான்.

கதவைப் பிடித்துக் கொண்டு தடுமாறி நின்றவளைக் கண்டு தலையில் அடித்துக் கொண்ட சக்தி, "ச்சே... இந்தக் கன்றாவியெல்லாம் என்னால பார்க்க முடியாது. நீயாச்சு, உன் புருஷனாச்சு!" என்று கூறி விட்டு டாட்டா காட்டிச் சென்று விட்டான்.

தன் மீது சாய்ந்திருந்தவனின் தலையைக் கொத்தாகப் பிடித்துத் தூக்கியவள், "டேய்... நாயே... ஹரி... தடிமாடு..." என்றபடியே அவன் கன்னத்தைப் பலமாகத் தட்டினாள்.

அவள் கையைப் பற்றித் தடுத்து, "ஆஆஆ... வலிக்குதடி பொண்டாட்டி..." என்றவன் மீண்டும் அவள் மீதே சாய்ந்தான்.

"டேய்... இப்ப நீ எழுந்திரிக்கலேன்னா நான் என் ஜூடோ திறமையெல்லாம் வெளிக் கொண்டு வர வேண்டி வரும்..." என்று அவள் கூறியதும், அவள் கழுத்தில் இருந்து தன் தலையை நிமிர்த்தியவன், "என்னடி செய்வ? ம்... என்ன செய்வ?" என்றபடியே, தன் சட்டையின் காலர் பட்டனைப் பிய்த்து எறிந்து நெஞ்சைக் காட்டி, "அடிப்பியா? அடிடி... அடிடி பார்க்கலாம்!" என்று வம்புக்கு நிற்க...

தலையில் அடித்துக் கொண்ட ரம்யா... அவன் காலரைப் பற்றித் தரதரவென இழுத்துக் கொண்டு அவனறைக்குச் சென்றாள்.

அறை வாசலருகே சென்றதும் நிலைப்படியை இறுகப் பற்றிக் கொண்டு நின்று கொண்டவன், "ம்ஹ்ம்... நான் உள்ளுக்குள்ள வர மாட்டேன். கண்டிஷன் நம்பர் 2. நான் உன் ரூமுக்குள்ளே வரக் கூடாது!" எனக் கூறினான்.

"டேய் எருமை... எருமை... இது உன் ரூம்தான்டா."

"ம்ஹ்ம். நீ பொய் சொல்ற. நான் வரமாட்டேன்!" என்று அடம் பிடித்தவனுடன் போராடி இழுத்துச் சென்று அவனைப் படுக்கையில் தள்ளினாள்.

"ரேப்... ரேப்... அய்யோ! என்னை இவ ரேப் பண்ணப் பார்க்குறா... ஏய்... போ... போடி... தள்ளிப் போடி..." என உச்சஸ்தாயியில் கத்தியவனின் வாயைத் தன் கைகளால் இறுகப் பொத்தியவள், "டேய்... பக்கத்து வீட்டுக்காரங்க எல்லாம் எழுந்து வந்துடப் போறாங்க. கத்தாதேடா எருமை!" என்று அவன் தலையில் அடித்தாள்.



தலையைச் சொறிந்தபடியே அமர்ந்திருந்தவனின் அருகே சென்று அவனது ஷூ, சாக்ஸைக் கழற்றி விட்டெறிந்தாள். சட்டையைத் தளர்த்தி விட்டு இடது கையிலிருந்த வாட்சை எடுத்து அருகே வைத்தவள்... உஃப்ஃப்.... எனப் பெருமூச்சை வெளியிட்டாள்.

"புதுசு, புதுசா கெட்ட பழக்கம் பழகுறான்... பரதேசி!"

"பொண்டாட்டி... ஏய் பொண்டாட்டி..."

"என்னடா புருஷா... சொல்லித் தொலை..."

"உனக்கு என்னை விட அந்த நெட்டைக் கொக்கு சதீஷைத்தான் ரொம்பப் பிடிக்குமா? அப்புறம் ஏன்டி அன்னிக்கு என் ஹரி மாதிரி வருமான்னு டயலாக் விட்ட? அவன்... அவன் கூப்பிட்டதும்... நாய்க் குட்டி மாதிரி... பின்னாடியே போற... இ... இங்க ஒருத்தன் நாய் மாதிரி உன் பின்னாடியே திரியறது... உன் கண்ணுக்குத் தெரியல..."

நாக்குழறக் குழற... போதையில் உளறிக் கொண்டிருந்தவனைக் கண்ட ரம்யா... 'அதெப்படி? போதையில் கூட இத்தனை விஷயங்களைத் தெளிவாகச் சொல்கிறான்? ஒரு வேளை குடித்த மாதிரி நடிக்கிறானோ...!

உளறி முடித்துக் கண் மூடி விட்டவனின் அருகே சென்றவள் அவன் சுவாசத்தைச் சோதிக்க எண்ணி... மெல்லக் குனிந்து அவன் மூக்கின் அருகே சென்று அவள் முகர்ந்த வேளை... சட்டென எழுந்தான் ஹரி.

வேகமாக எழுந்ததில் வெகு அருகே யிருந்த ரம்யாவின் நெற்றியில் அவன் பலமாக இடித்துத் தள்ளி விட... ஆஆஆ... என்றபடி நான்கடி தள்ளித் தரையில் விழுந்தாள், ரம்யா.

தலையையும், நெஞ்சையும் தடவியபடி எழுந்தவன்... "பாத்ரூம்..." என்றபடி சென்று பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டான்.

நெற்றியைத் தடவியபடியே தரையில் முழங்காலிட்டு அமர்ந்திருந்த ரம்யாவிற்கு அவன் உள்ளே வாந்தி எடுக்கும் சத்தம் நன்றாகவே கேட்டது.

வெகு நேரம் கழித்து முகத்தைத் துடைத்தபடியே வெளியே வந்தவன் வேறு உடைக்கு மாறியிருந்தான்.

தரையில் அமர்ந்திருந்தவளைத் திரும்பி நோக்கியவன், "நீ இங்கே என்ன பண்ற?" என்றான்.

"தெ... தெளிஞ்சுட்டியாடா?" என்றபடி, அவன் முன்னே சென்று நின்றவள், "பொறுக்கி, பொறுக்கி... உனக்கு இந்தப் பழக்கம் வேற இருக்காடா? ஏன்டா குடிச்ச? பன்னி... ஏன்டா குடிச்ச?" என்று அவன் தலையில் அடிக்கக் கை ஓங்க...

ஓரடி பின்னால் சென்று அவள் அடியில் இருந்து தன்னைக் காத்துக் கொண்டவன், அவளை ஒரு மாதிரி நோக்கி விட்டுக் கடந்து சென்றான்.

"இப்படிப் பார்த்தா... இப்படிப் பார்த்தா என்னடா அர்த்தம்? ஏன்டா குடிச்ச? இங்க ஒருத்தி கேட்டுட்டு இருக்கேன்ல?"



"என்னைக் கேள்வி கேட்கிறதுக்கு நீ யாரு? உனக்கு என்ன ரைட்ஸ் இருக்கு?"

"ரைட்ஸ்! பிறந்ததிலிருந்து உன் கூடவே வளர்ந்த... உன் அத்தை பொண்ணு நான். இதை விட வேற என்ன ரைட்ஸ் இருக்கணும்...?"

"அந்த ரைட்ஸோட தான் நான் இன்னிக்கு மதியம் உன்னை அவன் கூடப் போகாதேன்னு தடுத்தேன். ஆனா நீ மதிச்சியா?"

"அ... அ... அது வேற. இது வேற. இரண்டையும் ஒன்னா சேர்க்காதே!"

"இரண்டும் எப்படி வேற வேற ஆகும்?"

"டேய்... சதீஷ் நான் காதலிச்ச பையன். அதுக்காகவாவது நான் அவரை மதிக்க வேணாமா? அவர் என்கிட்ட என்ன சொல்ல நினைக்கிறார்னு தெரிஞ்சுக்க வேணாமா?"

"காதலிச்ச பையன்னு சொல்லி நீயே பாஸ்ட் டென்ஸ் ஆக்கிட்ட. அப்புறம் இன்னும் எதுக்கு அவனோட உறவாடிட்டு இருக்க? நம்ம இரண்டு பேருக்கும் கல்யாணம் நடக்குற முன்னாடிவரைக்கும் நீ அவனோட எங்கே கொஞ்சப் போனாலும் நான் ஒரு வார்த்தை கேட்டிருக்கேனா? இல்லல்ல! இனி, என்னால் அப்படியிருக்க முடியாது. இனி அவனோட போறதையும், பேசுறதையும் என்னால் ஏத்துக்க முடியாது."

"ஏன்?"

"ஏன்னா... என்ன கேள்வி இது? நீ என்னோட பொண்டாட்டிடி. நீ என்னை விட்டுட்டு எவன் பின்னாடியோ போறதையோ, என்னைத் தவிர எவனையும் பார்க்கிறதையோ என்னால பொறுத்துக்க முடியாது."

மூச்சு வாங்க நடு ஹாலில் நின்று கொண்டு ஆத்திரமாய்க் கூறியவனைக் கண்டு வாயடைத்துப் போனாள் ரம்யா.

"ஏ... ஏய்... ஏய்.. இ... இது இதெல்லாம் ரொம்ப ஓவர். இது நம்ம கண்டிஷன்லயே இல்லை."

"பரவாயில்லை. இப்போ சேர்த்துக்கோ. நீ என் கூட வாழப் போற இந்த ஒரு வருஷமும் நீ என்னைத் தவிர வேற எவனையும் பார்க்கக் கூடாது. எவன் கூடவும் பேசக் கூடாது."

சட்டமாய் அதிகாரம் செய்தவனைத் தடுக்க முடியாமல்... தடுக்கத் தோன்றாமல் நின்றிருந்த ரம்யாவிற்கு மனம் மிகவும் குழம்பியது போலிருந்தது. தலை முடியைக் கையால் கோதியபடி நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

"இல்ல, இல்ல. இது சரிப்பட்டு வராது. உனக்கும், எனக்கும் என்னிக்குமே ஒத்து வராது. இந்த ஒரு வருஷ கண்டிஷனையெல்லாம் குப்பையில் போட்டுட்டு, நான் சீக்கிரமே எனக்கொரு வேலையைத் தேடிக்கிட்டு இந்த வீட்டை விட்டுக் கிளம்புறேன்."

பதில் சொல்லாமல் அவளை முறைத்து விட்டு நகர்ந்தவன் கிச்சனுக்குச் சென்று லைட்டை எரியவிட்டு ஃப்ரிட்ஜிலிருந்து தண்ணீரை எடுத்துப் பருகினான்.



தங்தங்கென நடந்து சென்று அவன் பின்னே நின்றவள், "இதோ பாருடா... நான் விளையாட்டுக்குச் சொல்றேன்னு நினைக்காத. அர்த்தமேயில்லாத இந்தக் கல்யாணத்துக்கு நீ இத்தனை கண்டிஷன் போடுற. நீயும் சராசரி ஆம்பளைதானே! என்னால் இதையெல்லாம் டாலரேட் பண்ண முடியாது. நீ எனக்கு டிவர்ஸே கொடுக்காம போனாலும் பரவாயில்லை. உன்னை மாதிரி ஒரு ஆளோட ஒரு நாள் கூட என்னால் வாழ முடியாது!" என்றாள்.

"ஹும்ம். அப்போ தாத்தாகிட்ட சொல்றதைத் தவிர வேற வழியில்லை. அவர் உன் கை, காலை ஒடிச்சு ஹவுஸ் அரெஸ்ட்ல வைச்சார்னாதான் உனக்கெல்லாம் புத்தி வரும்."

கோபத்துடன் முறைத்தவள், "நீ தாத்தா கிட்ட சொல்றவரை நான் ஏன் வெயிட் பண்ணப் போறேன்? இன்னிக்கு நான் சதீஷை மீட் பண்ணினப்போ அவர் என்னை யு.எஸ்.க்குக் கூப்பிட்டார். என்னோட வா. ரெண்டு பேரும் சேர்ந்து வாழலாம்னு. நீ உன் ப்ளானை எக்ஸிக்யூட் பண்றதுக்குள்ளே நான் சதீஷ்கூட யு.எஸ்.க்கு..." என்று அவள் முடிப்பதற்குள்,

சட்டெனத் திரும்பிய ஹரி அவள் கையை வினாடிக்குள் பற்றி யிழுத்து அவளை ஃப்ரிட்ஜின் மீது சாய்த்திருந்தான்.

"ஏ... என்னடா பண்ற!" என்று திமிறியவளின் இரு கரங்களையும் ஃப்ரிட்ஜில் அழுத்தி இறுகப் பற்றியவன்...

கோபத்துடன் அவளை நோக்கினான். அத்தனை அருகில்... அப்படியொரு சூழ்நிலையில்... செய்வதறியாது முழித்துக் கொண்டு நின்ற ரம்யாவிற்கு அவனது முகத்தை நிமிர்ந்து பார்க்கவே பயமாயிருந்தது.

அடுத்து என்ன நடக்கப் போகிறதென்பதை யோசித்துப் பார்க்கக் கூட விரும்பாதவள்... அவனிட மிருந்து விடாமல் திமிறியபடி நிற்க... இரண்டு நிமிடம் அவளையே விடாது நோக்கினான் அவன்.

வழக்கம் போல் முழங்கால் வரையிலான ட்ரௌசரும், கறுப்பு நிற டி-ஷர்ட்டும் அணிந்திருந்தாள். டி-ஷர்ட்டைத் தாண்டி வெளியே தொங்கிக் கொண்டி ருந்தது அவன் கட்டியிருந்த தங்கத் தாலி.

அது அவனுக்கு என்ன அர்த்தத்தை உணர்த் தியதோ... தன் முட்டைக் கண்களை இங்குமங்கும் ஓட விட்டபடி அவனிடமிருந்து திமிறிக் கொண்டிருந்தவளின் இதழ் நோக்கி மெல்லக் குனிந்தான்.

அவனது நோக்கத்தைப் புரிந்து கொண்ட ரம்யா... வாயை இறுக மூடிக் கொண்டு தன் தலையை இடது புறமாகத் திருப்பினாள். பதிலேதுமின்றித் தலையைச் சாய்த்து இடது புறம் குனிந்திருந்தவனைக் கண்டு பதறிச் சட்டெனத் தலையை வலது புறம் திருப்பினாள்.

கண்களை இறுக மூடிக் கோபத்தை அடக்கிய ஹரி அவளை விலக்கித் தள்ளி விட்டுத் தன்னறையை நோக்கி நடந்தான்.



## 9

## *I need all your kisses!*

மழையில் ஆடுறதை விடப் பரம சந்தோஷம் வேற எதுவும் உலகத்துல இருக்கான்னு எனக்குத் தெரியல. மழை எனக்குக் கொடுத்தது அழகான நிகழ்வுகளையும், நினைவு களையும் மட்டும்தான்!

ஒரு மழை நாள்ல நானும், என் தோழியும் பள்ளி முடிஞ்சு வீட்டுக்குத் திரும்புறப்போ நாங்க நடந்து போகிற தெரு காலியா இருக்கிறதைப் பார்த்துட்டு, 'மேகம் கறுக்குது, மின்னல் சிரிக்குது'ன்னு... பாடி ஆடிட்டே வீடு போய்ச் சேர்ந்ததுதான் முதல் அனுபவம். அதுக்கப்புறம் கல்லூரி படிக்கிற காலத்துல தொப்பலாக நனைஞ்சு, காலால் நான் தண்ணியைத் தள்ளிட்டு சிரிச்சுக்கிட்டே லூசு மாதிரி நடந்து வந்தப்போ... அதைப் பார்த்து என் பக்கத்து ஆத்துப் பையன் நக்கலா சிரிச்சதை நினைச்சு ஒரு வாரத்துக்கு அட கடவுளேன்னு ஃபீல் பண்ணினது இரண்டாவது அனுபவம்!

எல்லாத்தையும் விட மழை எனக்குக் கொடுத்த மிக அழகான நாள்... அப்பார்ட்மெண்ட் வாசலில் அருகருகே... கொட்டும் மழையை வேடிக்கை பார்த்தபடி... அடிக்கடி கள்ளப் பார்வையைப் பகிர்ந்து சிரிப்புடன் அவனுடன் நின்றிருந்த நாள்தான்...

ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...

"குட் மார்னிங் ஓனர்"

"குட் மார்னிங் மா" - கண்ணைக் கசக்கியபடியே சுரத்தின்றிப் பதிலளித்த ஹரியைக் கண்ட செல்வி... 'என்ன... எப்பவும் ஒரு புன்சிரிப்பைச் சிந்துவாரே... இன்னிக்கு ஏன் அது மிஸ் ஆகுது...' என்றெண்ணியபடி, கதவைத் திறந்து கிச்சனுக்குள் நுழைந்தவனைத் தொடர்ந்து தானும் நுழைந்தாள்.

அடுத்த வாரம் வரவிருக்கும் கல்யாண ஆர்டரைப் பற்றி விவரித்தவன் அதற்கான தனது ஏற்பாட்டையும் கூறினான். கேள்வியெழுப்பிய தொழிலாளர்களுக்கும் பதிலளித்து விட்டு அன்றைய மெனுவைப் பற்றி ரம்யா விடம் விசாரித்தான்.

"டேபில்ல இன்னிக்கு என்ன வைக்கப் போறோம்?"

"பனீர் இன் அ லெமன் சாஸ், அப்புறம் ஃப்ரைட் சில்லி சிக்கன்."

"நான் டேஸ்ட் பார்க்கலாமா?"

"ஹ்ம்ம்..." என்றபடி சின்னச் சின்னக் கிண்ணங் களில் நிரப்பியிருந்த மேற்கூறிய சமையல் வகைகளை அவனிடம் நீட்டினாள். ஸ்பூனால் இரண்டிலும் ஒரு வாய் எடுத்துச் சுவைத்துப் பார்த்த ஹரி முகத்தைச் சுழித்தான்.

"எ..என்ன ரெசிபி இது? லெமன் சாஸ் இந்த டிஷ்ல நிறைய சேர்த்திருக்க! புளிப்பு வாய்ல வைக்க முடியல. பனீரோட டேஸ்ட் ரொம்பக் கேவலமா இருக்கு. இது என்ன சில்லி சிக்கன்? சகிக்க முடியாத அளவு காரமா



இருக்கு. உப்புக் கூடப் பத்தல. நீ ஒன்னு பண்ணு, இதெல்லாத்தையும் தூக்கிக் குப்பையில கொட்டிட்டு வேற ஏதாவது ட்ரை செய். எங்கேயோ நினைப்ப வைச்சுட்டு வேலை பார்த்தா... பார்க்குற வேலை எப்படி உருப்படும்?" என்றவன், அவளை முறைத்து விட்டு விறுவிறுவென வெளியே சென்று விட்டான்.

"அக்கா.. நம்மாளு இன்னிக்கு க்ரே பேண்ட், கறுப்பு சட்டைல செம ஹாட்டா இருக்காரேன்னு நினைச்சேன். அதான் இப்படி அனலடிக்கிறார்!" என்று வரலட்சுமியின் காதில் முணுமுணுத்தாள், செல்வி.

"ப்ச், வாயை மூடுடி!" என்ற லட்சுமி, ரம்யாவிடம், "நான் டேஸ்ட் பண்ணிப் பார்த்தப்போ எல்லாமே பெர்ஃபக்ட்டாத்தான் இருந்தது ரம்யா! அவருக்கு ஏன் பிடிக்கலைன்னு தெரியலயே..." என்றாள், கவலையாக.

கோப மூச்சை வெளியிட்டபடி அவன் சென்ற பாதையை முறைத்துக் கொண்டிருந்த ரம்யா, "வேணும்னே பண்றான் பரதேசி!" என்று முணுமுணுத்தாள்.

"டேபிள் 10-க்கு சோயா நக்கட்ஸ் 3, பனீர் - 65 2..." என்று பழனி வலது பக்க அறையிலிருந்து குரல் கொடுக்க, மூவரும் வேலையில் இறங்கினர்.

வரலட்சுமி அளித்த சோயா நக்கட்ஸையும், பனீர் 65-ஐயும் எடுத்துக் கொண்டு டேபிள் 10-ஐ நோக்கிப் பாட்டுப் பாடியபடியே நடந்து சென்ற செல்வி, டேபிள் அருகே செல்கையில் கால் தடுக்கிப் படாரெனக் கீழே

விழுந்தாள். அருகே நாற்காலியில் அமர்ந்திருந்த பெண்மணியின் உடையில் உணவு சிதறி விட, "வாட் த ஹெல்!" என்றபடியே எழுந்தாள் அவள்.

முகம் கன்ற... படபடத்துப் போன செல்வி, "சாரி மேம்... சாரி மேம்... தெரியாமக் கால் தடுக்கி விழுந் துட்டேன். இப்போ க்ளீன் பண்ணிடுறேன் மேம்... சாரி!" என்றபடியே எழுந்தாள்.

"என்ன சாரி... ம்... என்ன சாரி? நீ வேடிக்கை பார்த்துகிட்டு பாட்டுப் பாடிட்டே ஸ்டைலா நடந்து வந்ததை நான் நோட் பண்ணிட்டு இருந்தேன். இப்படியா கவனக் குறைவா இருப்ப? என்ன அன்னதானம் போடுறியா? ஏய், இந்தா வாங்கிக்கன்னு எங்களுக்குச் சாப்பாட்டைத் தூக்கியா எறியப் போற! இல்லேல்ல? கஸ்டமர் கிட்ட ஒரு பணிவு வேணாம்... மரியாதை வேணாம்?"

"சாரி மேம்.. வெரி சாரி மேம். தெரியாம நடந் துடுச்சு மேம்!"

"என்ன தெரியாம நடந்துடுச்சு? இந்த ஸ்கர்ட்டோட விலை எவ்ளோன்னு உனக்குத் தெரியுமா? 8500 ரூபாய். உன் மாசச் சம்பளம் கூட அவ்ளோ இருக்காது. அதை... அதை இப்படிப் பாழாக்கிட்ட!"

"நா... நான் க்ளீன் பண்ணிடுறேன் மேம். ப்ளீஸ் மேம்! கஸ்டமர்ஸ் எல்லாம் பார்க்குறாங்க மேம். சாரி மேம்!" என்றவள் ஓடிச் சென்று துணி எடுத்து வந்து அந்தப் பெண்மணி அணிந்திருந்த ஆடையைத் துடைத் தாள்.



அதன் பின்பும் கூட விடாமல் கத்திக் கொண்டிருந்த பெண்ணை அடக்கத் தெரியாமல் விழித்துக் கொண்டு நின்றவளைக் கண்டு ஓடிப் போய் கிச்சனில் இருந்த வர்களிடம் விசயத்தைக் கூறினான் பழனி.

"ஆர்டர் என்னடா?" என்று கேட்டு விட்டு மீண்டும் உணவு வகைகளைத் தயாரித்து அள்ளிப் போட்டுக் கொண்டு வெளி வந்தாள், ரம்யா.

"பழனி, இதைக் க்ளீன் பண்ணுடா!" என்று அவனிடம் கூறி விட்டு, "வெரி சாரி மேம்... தெரியாம தப்பு நடந்துடுச்சு. மனுசனாப் பிறந்தவங்க எல்லாரும் தப்பு செய்றது இயல்புதானே? அடுத்த முறை அவ ரொம்ப கேர்ஃபுல்லா நடந்துக்குவா. ஃப்ரெண்ட்ஸோட என்ஜாய் பண்ண வந்திருக்கீங்க. இருக்குற மூடை ஸ்பாயில் பண்ணிக்க வேண்டாமே! இந்தத் தப்பு இன்னொரு முறை நடக்காமப் பார்த்துக்கிறோம், மேடம்!" என்றபடி மேஜையில் உணவுக் கிண்ணங்களை அடுக்கிய வளிடம்...

"நீ என்ன? இவளுக்கு சப்போர்ட்டா? கையில சாப்பாட்டை வைச்சுக்கிட்டு எப்படிப் பாட்டுப் பாடிட்டு ஸ்டைலா நடந்து வந்தா, தெரியுமா! கஸ்டமரைக் கொஞ்சம் கூட மதிக்காத இந்த மாதிரி ஆட்களை யெல்லாம் உடனே வேலையை விட்டு நிறுத்தணும். உங்க மேனேஜரைக் கூப்பிடுங்க. நான் அவர்கிட்ட பேசிக்கிறேன்."

"பாட்டுப் பாடுறது ஒன்னும் பெரிய தப்பில்லையே மேடம். உங்களை மாதிரி விதவிதமா ட்ரெஸ் பண்ணிக் கிட்டுப் போற ஆளுங்க இல்லை மேடம், நாங்க. அந்த கிச்சனுக்குள்ளேயே நாள் பூரா அடைஞ்சு கிடக்கிறோம். சிரிப்போ சந்தோஷமோ ஹோட்டலுக்குள்ளேதான் எங்க ளுக்கு எல்லாம். ஏதோ ஒரு குஷில அவ பாடிட்டு நடந்து வந்திருப்பா. அதையெல்லாம் பெருசா எடுத்துக்காதீங்க மேடம்."

"இதோ பாரு... என் ஸ்கர்ட்டைப் பாரு... 8500 ருபீஸ் வொர்த் ஸ்கர்ட். இந்தக் கறையால எவ்ளோ அவலட்சணமா தெரியுதுன்னு?"

"கறை அப்படி ஒன்னும் பெருசாத் தெரியலையே மேடம். ஒரு சின்னப் பொட்டளவுதானே இருக்கு. நாங்க வேணும்னா ட்ரை வாஷ் பண்ணிக் கொடுத்திடுறோம்."

"ம், நீ வாஷ் பண்றவரைக்கும் நான் என்ன யூனிஃபார்மைப் போட்டுகிட்டு உட்காரணுமா? உங்களை மாதிரி ஆளுங்களோட பேச எனக்கு இஷ்டமில்லை. உன் மேனஜரைக் கூப்பிடு. ப்ளடி... இடியட்ஸ்!" என்று அந்தப் பெண்மணி கெட்ட வார்த்தை சொல்லித் திட்டவும் கொதித்துப் போனாள், ரம்யா.

கையில் வைத்திருந்த நக்கட்ஸ் கிண்ணத்தை இறுகப் பற்றியவள், அடுத்து என்ன செய்திருப்பாளோ... அதற்குள் அவர்களருகே வந்து விட்ட ஹரியும், சக்தியும் அந்தப் பெண்மணியை அமர வைத்துச் சமாதானம் பேசத் தொடங்கினர்.



கோபத்துடன் கேப்பைக் கழட்டி விட்டு விறுவிறு வென வாசலை நோக்கி நடந்தாள், ரம்யா.

வாசலிலிருந்த பூக்களைப் பார்த்தபடியே நின்றிருந் தவளுக்குக் கோபம் கண்ணை மறைத்தது. உலகத்துக் கெட்ட வார்த்தைகள் அனைத்தையும் மனம் உச்சரிக்க, அந்தப் பெண்மணியின் முடியைப் பிடித்திழுத்துச் சண்டை போடுமளவிற்கு ஆத்திரத்தில் இருந்தாள்.

அந்தப் பெண்மணியைச் சமாதானம் செய்தபடி நின்றிந்த சக்தி, ஹரியின் பார்வை ரம்யாவின் மீதே பதிந்திருந்தது. அந்த நேரம் பார்த்துப் பழனி தன் கையில் மூட்டை, மூட்டையாக மாவு வகைகளைக் கையில் ஏந்தியபடி சென்று கொண்டிருந்தான்.

என்ன இது என்று வினவியவளிடம்... அவன், "மைதா மாவு அண்ணி!" என்று கூற, அவனிடமிருந்து ஒரு மூட்டையைக் கேட்டு வாங்கிக் கொண்டாள்.

பின் செக்யூரிட்டியிடம் சென்று, "அந்த 10-ஆவது டேபிள்ல உட்கார்ந்திருக்கிற அம்மாவோட காரை எங்க அங்கிள் நிப்பாட்டி யிருக்கீங்க?" என்று கேட்டுக் கொண்டவள் பார்க்கிங்கை நோக்கி நடந்தாள்.

அவள் பழனியிடமிருந்து மூட்டையை வாங்கிக் கொண்டதையும், செக்யூரிட்டியிடம் பேசியதையும் கண்ட சக்தியும், ஹரியும் ஒருவரை யொருவர் ஒரு நொடி புரியாமல் நோக்கி விட்டுப் பின் கண்களை அகல விரித்தபடி, "டேய்... ஓடுடா!" என்று கத்திக் கொண்டே விறுவிறுவென வாசலை நோக்கி ஓடினர்.

அதற்குள் அந்தக் காரின் அருகே சென்று விட்ட ரம்யா, அருகேயிருந்த தண்ணீர் பைப்பில் மூட்டையை நீட்டி மாவைக் கலக்கி விட்டு, அதைத் தூக்கிக் காரின் மீது ஊற்ற இருந்த வேளை... "நோ....." என்றபடி ஓடி வந்த ஹரியும், சக்தியும் அவளை வேகமாகப் பின்புறம் நோக்கி இழுத்தனர்.

"டேய்... என்னை விடுங்கடா. இப்போ விடல, இரண்டு பேர் மண்டையையும் உடைச்சிடுவேன். கையை விடுங்கடா!"

"ராங்கி.. என் பிசினஸைக் கெடுத்து நான் தலையில துண்டைப் போட்டுட்டு உட்கார்றதைப் பார்க்கிறதுக்குத் தானடி இப்படிச் செய்யற?" என்றான் ஹரி.

"டேய் ஹரி.. இவளை எப்படிடா சமாளிக்குற?" என்றான், சக்தி.

"கையை விடப் போறீங்களா இல்லையாடா?"

"சக்தி... அந்த மூட்டையைப் பிடுங்குடா."

"ஏய்... என்கிட்ட கொடு... கொடு..." என்ற சக்தி பாடுபட்டு மூட்டையை அவளிடமிருந்து பறித்து விட்டான்.

நிம்மதிப் பெருமூச்சை வெளியிட்டபடி இருவரும் அவள் கையை விட்டு விலகி நின்ற வேளை... "மூணு பேரும் இங்க என்ன பண்றீங்க?" என்று ஒலித்தது ப்ரியாவின் குரல்.

தோழியைக் கண்டதும் ஆச்சரியத்தில் கோபம் நீங்கி வாயெல்லாம் பல்லாக மாறிய ரம்யா, "ப்ரீ..." என்றபடியே ஓடிச் சென்று கட்டிக் கொண்டவள்,



"எப்படி யிருக்கீங்க மேடம்?" என்று தானும் அவளைக் கட்டிக் கொண்ட ப்ரியா... ஹரியிடம் திரும்பி "அடையாளமே தெரியல. ஆளே மாறிட்டீங்க!" என்றாள்.

தயக்கத்துடன் தலை குனிந்து முறுவலித்தவன் ஒற்றை விரலால் நெற்றி வியர்வையைச் சுண்டியெறிந்த படி, "நீ எப்படியிருக்க?" என்று விசாரித்தான்.

இருவர் முகத்தையும் மாறி மாறி நோக்கிய ரம்யாவிற்கு மனம் சோர்ந்தது. தோழியின் கைகளை விடுத்து ஒதுங்கி நின்றவள் முயன்று புன்னகைத்து, "உள்ளே வாடி!" எனக் கூறி விட்டு, "சக்தி, அந்த லேடியை நீங்க எப்படிச் சரிக் கட்டுனீங்க?" என்று வினவியபடியே அவனை இழுத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

முகம் இறுகச் செல்லும் அவளையே பார்த்துக் கொண்டு நின்ற ஹரியிடம், "ரம்யா இன்னும் மாறவே இல்லல்ல?" என்றாள் ப்ரியா.

"எதை வைச்சுச் சொல்ற?"

"உங்களையும், என்னையும் இன்னும் கூடத் தனியா விட்டுட்டுப் போறாளே!"

"இந்த மாதிரி முட்டாள்தனத்தைச் செய்யாதன்னு நான் அவகிட்ட ஓராயிரம் தடவை சொல்லிட்டேன். அவ எங்கே கேட்குறா?"

"எதை முட்டாள்தனம்னு சொல்றீங்க?"

"தன்னோட புருஷனை அவனோட முன்னாள் காதலியோட விட்டுட்டுப் போகிற பொண்டாட்டி முட்டாள் தானே?"

"..........."

"சரி, என்ன விசயமா வந்திருக்க?"

"சு...சும்மாதான்.. உங்க இரண்டு பேரையும் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்."

"........." பதிலின்றி பூக்களை வெறித்தான், ஹரி.

"நா... நான் கல்யாணத்துக்கு முன்னாடி உங்களைப் பார்க்க உங்க வீட்டுக்கு வந்தேன்."

"தெரியும். அண்ணி கிட்ட சொல்லி உன்னைத் திருப்பி அனுப்பினதே நான்தான்."

திடுக்கிட்டு நிமிர்ந்தவள், "ஏன்?" என்று வினவினாள்.

"அப்போ இருந்த சூழ்நிலையில உன்னை நான் பார்க்குறது சரின்னு படலை. அதுமட்டுமில்லாம, அப்போ நான் உன்னைப் பார்த்திருந்தாலும், எதுவும் மாறி யிருக்காது. உனக்கு நான் ஏற்கெனவே கொடுத்த வலிகளே போதும். மேலும் அதைக் கிண்டிக் கிளறி ரண மாக்க வேண்டாம்னுதான் நான் உன்னைப் பார்க்கல."

"ஹ்ம்ம்ம்..." எனப் பெருமூச்சு வெளியிட்டவள், "ஒ...ஒருவேளை அன்னிக்கு நீங்க என்னைப் பார்த் திருந்தா இந்தக் கல்யாணம் நடந்திருக்காதோ?"

"அதுக்கு வாய்ப்பு ரொம்பக் கம்மி. என் தாத்தாவைச் சமாளிக்கிறது சுலபமில்லை..."

"ஒ...ஒருவேளை... நா...நான் உங்க தாத்தாகிட்ட பேசியிருந்தா... உங்க சந்தோசத்தைக் கெடுத்த இந்தக் கல்யாணம் நடக்காமலே போயிருந்திருக்கும்."



"யார் சொன்னா... என் சந்தோசத்தை இந்தக் கல்யாணம் கெடுத்திடுச்சுன்னு? நான் ரொம்ப சந்தோச மாயிருக்கேன் என் பொண்டாட்டியோட!"

"அதனால... நீ உன் வாயை மூடிட்டுப் போன்னு சொல்றீங்களா?"

"............"

"நான் கிளம்புறேன்."

"ப்ரியா, ஒரு நிமிஷம்...."

"............"

"இனிமே நீ இங்க வர்றதா இருந்தா ரம்யாவோட ஃப்ரெண்டா மட்டும் வா."

"............" பதில் கூறாமல் நடந்து சென்று விட்டாள் அவள்.

பெருமூச்சுடன் ஹோட்டலுக்குள் நுழைந்தவனின் முகத்தைக் கிச்சனுக்குள்ளிருந்து கண்ட ரம்யாவுக்கு உள்ளே தகதகவென எரிந்தது.

**அ**ன்றிரவு ஹரி வீடு திரும்பிய போது, கிச்சனுக் குள் எதையோ உருட்டியபடி நின்று கொண்டிருந்தாள் ரம்யா.

அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவனை ஓரக் கண்ணால் நோக்கி விட்டு, "சும்மா விடக் கூடாது இவனை இன்னிக்கு..." என்று முணு முணுத்தாள்.

"ஏய்... எனக்குப் பயங்கரமாப் பசிக்குது. சாப்பிட என்ன இருக்கு?"

"உப்புமா."

"உப்புமாவா! ச்சீ... எனக்கு உப்புமா பிடிக்காதுன்னு தெரிஞ்சும் ஏன்டி அதைச் செய்யுற?"

"உன்னை மாதிரி நானும் உழைச்சிட்டுத்தான் வீட்டுக்கு வர்றேன். நாள் முழுக்கச் சமையல்கட்டுல நின்னு வேலை செஞ்சிட்டு வர்ற என்னால இவ்ளோ தான் சமைக்க முடியும்."

"சரி சரி. கத்தாதே. கொடு, பசிக்குது."

ஒரு கிண்ணத்தில் உப்புமாவைக் கொட்டி ஸ்பூன் இட்டு அதை அவன் புறம் கையால் தள்ளினாள்.

அவளை முறைத்தபடியே கிண்ணத்தைக் கையில் எடுத்தவன், "நாய்க்குக் கூட உலகத்துல இப்படிச் சோறு வைக்க மாட்டாங்க!" என்று சத்தமாகப் புலம்பியபடி சென்றான்.

சோபாவில் சென்றமர்ந்து கொண்டு டிவி பார்த்தபடி உண்ணத் தொடங்கியவன் சிறிது நேரத்தில்... "ஏய் பிக்கிள் இருக்கா?" என்று சத்தமிட்டான்.

"இருக்கு."

"எனக்குக் கொஞ்சம் வை."

"ஏன்... கால் இல்ல? வேணும்னா வந்து எடுத்துட்டுப் போ."

"திமிர் பிடிச்சவ!" என்று முனகியபடியே வந்து ஊறுகாயை எடுத்துக் கொண்டு சென்றான்.



"யாருக்குத் திமிரு...! இவனுக்கா, எனக்கா...?" என்று முணுமுணுத்த ரம்யா... பாத்திரங்களை டங்டங்கெனத் தூக்கிப் போட்டுச் சத்தம் எழுப்பியபடியே நின்றிருந்தாள்.

சிறிது நேரம் பொறுத்துப் பார்த்த ஹரி பின் எரிச்சலுடன் எழுந்து வந்தான்.

"உனக்கு என்னடி பிரச்சனை? எதுக்குப் பாத்திரத்தைத் தூக்கி இப்படி போடுற?" எனக் கேட்டபடியே திரும்பி சிங்க்கை நோக்கியவன் வாயைப் பிளந்தான்.

சமையலறையிலிருந்த மொத்தப் பாத்திரங்களும் தொட்டிக்குள் இருந்தன.

"ஏ...ஏய் எதுக்குடி எல்லாப் பாத்திரத்தையும் சிங்க்குள்ள போட்டு வைச்சிருக்க?"

"ம்... நீ க்ளீன் பண்ணத்தான்."

"எ... என்னது? இத்துனூண்டு உப்புமா சமைச்சதுக்கு இத்தனை பாத்திரமா? இதெல்லாம் ரொம்ப ஓவர்டி. மரியாதையா எல்லாப் பாத்திரத்தையும் எடுத்து வைச்சிடு."

"முடியாது."

"என்ன முடியாது? வேணும்னுதானே பண்ணுற? எதுக்குடி என்னைப் பழி வாங்குற இப்போ?"

"எதுக்குன்னு உனக்குத் தெரியாது?"

"தெரியாது."

இடுப்பில் கை வைத்து முறைத்தபடி அவனருகே வந்து நின்றவள், "ஏன்டா, நான் அந்த சதீஷ் கூடப்

பேசினப்போ என்னை என்னவெல்லாம் சொன்ன! எப்படியெல்லாம் ஆர்டர் போட்ட? இன்னிக்கு நீ மட்டும் உன் முன்னாள் காதலி கிட்ட பல்லிளிக்கிற? நீ பண்ணினா மட்டும் தப்பில்ல. நான் பண்ணினா தப்பா? இது எந்த ஊர் நியாயம்டா? பரதேசி!" என முட்டைக் கண்ணை உருட்டியபடி கோபமாய்க் கேள்வி கேட்டாள்.

ஒரு நிமிடம் பதிலற்று நின்ற ஹரியின் கண்களில் எரிச்சல் மறைந்து போனது. சுருங்கியிருந்த புருவங்கள் நீண்டு சாதாரண நிலைக்குத் திரும்பியிருந்தன. ஆனால் அவனது முகம் மட்டும் மனதிலிருந்த எதையும் பிரதி பலிக்கவே யில்லை.

பின் சிங்க் அருகே சென்று பாத்திரங்களைக் கையில் எடுத்தவன் அதைக் கழுவியபடியே, "எங்க இரண்டு பேரையும் சேர்த்து வைக்கக் கிளம்பினவளுக்கு எதுக்குக் கோபம் வருது?" என்றான்.

"நான் சேர்த்து வைக்கிறேன்னு சொன்னா... நீ பல்லைக் காட்டிட்டு அவ பின்னாடியே போயிடுவியா?"

காதருகே வந்து கத்திக் கொண்டிருந்தவளின் தோளைப் பற்றி அருகிலிழுத்துக் கொண்டவன், "அவ பின்னாடி போகாம... பின்னே உன் பின்னாடி வரச் சொல்றியா?" என்றபடியே சோப்பினால் அவளுக்கு மீசை வரைந்தான்.

"ஏய்...த்தூ... ச்சீ... விடுடா!" என்று திமிறியவள் குனிந்து, அவன் தோளில் தன் முகத்தைத் தேய்த்து மீசையைத் துடைத்தாள்.



சிரிப்புடன் அவள் தலையை நிமிர்த்தியவன், அவள் மூக்கில் சோப்பு நுரையைத் தடவி, "நாளைக்குக் காலையில நம்ம வீட்டுக்குப் போறோம். நாளைக்கு அண்ணிக்கு பர்த் டே!" என்றான்.

"ஆமாம்ல! ஆகஸ்ட் 25. சங்கீ பர்த் டே. சரி. நான் போய் அவளுக்கு என்ன கிஃப்ட் வாங்கலாம்னு நெட்ல பார்க்குறேன்," என்றவள்... பேசிக் கொண்டிருந்த விசயத்தை மறந்து குதூகலத்துடன் ஓடி விட்டாள்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு அவளைத் தயாராக இருக்கும்படி ஹரி சொல்லி யிருக்க... அவள் காலையில் கண் விழிக்கையில் மணி 8.30.

அரக்கப் பரக்க எழுந்தவள் குளிக்கச் செல்லும் முன், 'ஹய்யோ... இவன் ப்ரேக்ஃபாஸ்ட் கேட்பானே!' என்றெண்ணியபடி, வேகமாக கிச்சனுக்குச் சென்று அடுப்பில் பாலை வைத்து விட்டு... இந்தப் பால் காய்ந்து பொங்குவதற்குள் குளித்து முடித்து விட வேண்டும் என்றபடி ஓடினாள்.

தன் செல்ஃபோனில் பாட்டை ஒலிக்க விட்டுக் குளிக்கத் தொடங்கியவள் பாலை மறந்து போக... திடீரென இடையில் நினைவு வந்து துண்டை மட்டும் கட்டிக் கொண்டு வேகமாகக் கிச்சனை நோக்கி ஓடினாள். நல்ல வேளை, அவன் ரூம் கதவு சாத்தியிருக்கு என்று எண்ணியபடி... பொங்கி வந்த பாலை ஊதியபடி அவள் நின்று கொண்டிருக்கையில்...

"ஏய்... ப்ரேக்ஃபாஸ்ட் ரெடியா?" என்று சட்டையின் காலர் பட்டனை மாட்டியபடி தன் அறையை விட்டு வெளியே வந்த ஹரி... கிச்சனுக்குள் நின்றிருந்தவளின் கோலத்தைக் கண்டு ஆடிப் போனான்.

அவனைச் சற்றும் எதிர்பார்க்காத ரம்யா... உறைந்து போய்க் கழுத்திலிருந்த செயினைப் பற்றிக் கொண்டு பெரிதாய், 'பே'-வென விழித்தபடி நின்றாள்.

அவசரமாகப் பார்வையைத் திருப்பிக் கையை மடக்கி உதட்டில் வைத்து, "ம்க்கும்..." எனச் செருமிய ஹரி, "ப்ரேக்ஃபஸ்ட் ரெடியான்னு கேட்கிறேன்ல..." என்றபடி அருகே வந்தான்.

"பா...பால்... பால் பொங்குது பாரு..." என்றவன் வேகமாக ஓடி வந்து அடுப்பிலிருந்து திரும்பி அவனைப் பார்த்தவாறு நின்றிந்தவளின் அருகே சென்று அவளைத் தாண்டிக் குனிந்து, "உஃப்ஃப்..." என ஊதியபடி அடுப்பை அணைத்தான்.

"பார்த்துட்டே நிக்குற?" என்றபடி நிமிர்ந்தவனின் பார்வையில் அவனுக்கு மிக அருகே உறைந்த பனியாக நின்று கொண்டிருந்த ரம்யா தெரிந்தாள்.

மார்பிலிருந்து தொடங்கி முழங்கால்வரை நீண்டிருந்த துண்டு அவளை முழுதாக மறைத்திருந்தது. அவன் எதிர்பார்த்த எதுவும் கண்களுக்குப் புலப்படாததில் சற்று ஏமாந்து போனவன்... ஈரத் தலை முடியிலிருந்து சொட்டிக் கொண்டிருந்த நீர் நனைத்திருந்த அவள் முகத்தை நோக்கினான்.



அவளை நெருங்கி நின்று தன் கைகளை அவளுக்கு இருபுறமும் வைத்துக் கொண்டு அவள் முகத்தை நோக்கிக் குனிந்தான் அவன். தலையை நன்றாகக் குனிந்து கொண்டு கண்களை இறுக மூடிக் கொண்ட ரம்யாவைக் கண்டு பக்கெனச் சிரித்தவன் அவள் தலையில் தட்டி, "ஏய்... நான்தான் ஏற்கெனவே சொல்லியிருக்கேன்ல? நீ செக்ஸியா டிரஸ் பண்ணிட்டு என் முன்னாடி நின்னாக் கூட எனக்கு எந்த ஃபீலிங்ஸும் வராதுன்னு...?" என்றவன்...

திகைத்து நின்றவளைப் பொருட்படுத்தாமல், "போ... போ... சீக்கிரம் டிரஸ் பண்ணிட்டுக் கிளம்பு!" என்றான்.

அவனை முறைத்து விட்டு விலகிய ரம்யா தங்...தங்கென நடந்து தன் அறைக்குச் செல்ல, மறுபுறம் திரும்பி நின்று அடக்கி வைத்திருந்த மூச்சை வெளியிட்ட ஹரி, "இந்தக் கொரில்லா இவ்ளோ ஹாட் ஃபிகரா?" என்று முணுமுணுத்தான்.

அடுத்த அரை மணி நேரத்தில் தயாராகி வெளியே வந்தவளைக் கண்டு அந்த நாளில் இரண்டாவது முறையாக ஆடிப் போனான் ஹரி.

பச்சை நிற லாங் ஸ்கர்ட் அணிந்திருந்தாள். அதில் ஏதேதோ ஊசி பாசி மணியெல்லாம் தைக்கப்பட்டிருந்தது. சிவப்பு ஸ்லீவ்லெஸ் டாப் அவளது நிறத்திற்கு மிகப் பொருத்தமாயிருந்தது. சுருட்டை முடியை ஸ்ட்ரெய்ட்டன் செய்திருந்தாள்.

சுருண்டிருந்தபோது தோள் வரையிருந்த முடி இப்போது முதுகு முழுவதும் படர்ந்திருந்தது. காதுகளில்

பச்சை நிறத் தொங்கட்டான்கள் அவள் முக அசைவிற்கு ஏற்ப ஆடிக் கொண்டிருந்தன. அனைத்தையும் மீறி மாசு மருவற்ற கொழுகொழுக் கன்னங்கள்தான் அவனை மிகவும் கவர்ந்தன.

காலில் செருப்பணிந்தபடி தன் தோள் பையில் எதையோ சரி பார்த்துக் கொண்டிருந்தவளின் முன்னே சென்று நின்றான் ஹரி.

பேண்ட் பாக்கெட்டுக்குள் இரு கைகளையும் விட்டபடி தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந் தவனை நிமிர்ந்து நோக்கிய ரம்யா, "கிளம்பலாமா?" என்று வினவினாள்.

"ம்ம்ம்..." என்றபடியே பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு கையை எடுத்து நீட்டி, "உ... உன் கன்னத்துல ஏதோ..." என்றபடியே அவள் கன்னத்தை ஒற்றை விரலால் மெல்ல வருடினான். எவ்ளோ வழுவழுக் கன்னங்கள்!

"எ... என்னடா? என்ன இருக்கு கன்னத்துல? போயிடுச்சா! நான் வேணா போய்க் கண்ணாடியைப் பார்க்கட்டுமா?" என்று விடாமல் பேசிக் கொண்டிருந் தவளின் அருகே சென்று குனிந்து அழுந்த இதழ் பதித் தான் ஹரி.

மையிட்ட விழிகள் மெல்ல மெல்ல விரிந்து அகலமாகி நின்று விட... அவள் கன்னத்திலிருந்து இதழ் களைப் பிரித்துச் சிரித்தபடி முன்னே சென்றான் அவன்.



நொடியில் முகம் சிவந்து... உடல் சிலிர்த்துப் போய் விட, வேகமாய் ஓடிச் சென்று அவன் முன்னே மூச்சு வாங்க நின்றவள், அவனை முறைத்து... "இப்போ என்னடா பண்ண?" என்று வினவினாள்.

"கிஸ் பண்ணேன்!" அசால்ட்டாய்த் தோளைக் குலுக்கினான் அவன்.

"உனக்கு எவ்ளோ தைரியம்? பொறுக்கி!" எனப் பல்லைக் கடித்தபடி கையை ஓங்கியவளின் கரத்தைப் பற்றியவன்...

"ஏய்... கன்னம் பார்க்க அழகா... வழுவழுன்னு இருக்கேனு கிஸ் பண்ணேன். மத்தப்படி உன் மேல எனக்கு எந்த ஃபீலிங்ஸும் இல்லை. சரியா?" என்றான்.

புருவத்தைச் சுருக்கிக் கொண்டு குழம்பிப் போய் நின்றிருந்தவளிடம், "ஆமா... நீ முகத்துக்கு என்ன க்ரீம் போடுற?" என்று விசாரித்தான்.

"க்...க்ரீமா! நா... நான் க்ரீமெல்லாம் யூஸ் பண்ண மாட்டேன். நேச்சுரல் ப்யூட்டி!" என்றவளிடம் நக்கலாய்ச் சிரித்தவனை முறைத்து, "ஏன்... ஏன்டா சிரிக்கிற? அப்போ நம்ப மாட்ட?" என்று சண்டையிடத் தொடங் கியவள் வழக்கம் போல் முந்தைய உரையாடலை மறந்து போய் விட... சிரித்துக் கொண்டே காரை நோக்கி நடந் தான் ஹரி.

"கண்ணழகா... காலழகா...

பொன்னழகா... பெண்ணழகா..."

காருக்குள் ஒலித்த பாட்டைக் கேட்டுத் திரும்பி ரம்யாவை நோக்கியவனின் பார்வை சிரிப்பையும்... சந்தோசத்தையும் மட்டுமே தாங்கியிருந்தது. பாட்டு முடியும்வரை அடிக்கடி திரும்பித் திரும்பி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜோடியாக வீட்டுக்குள் நுழைந்த இருவரையும் கண்ட குடும்பத்தினரின் மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. "எங்களைத்தான் தாத்தா உங்களைத் தேடிப் போகக் கூடாதுன்னு சொல்லிட்டாரு. நீங்க ஏன் கண்ணு இத்தனை நாளா வீட்டுப் படி ஏறாம இருக்கீங்க?" என்று புலம்பிய சாவித்ரியைச் சமாதானம் செய்தாள் ரம்யா.

சமையல்காரரிலிருந்து தொடங்கித் தோட்டக்காரர் வரை அனைவரும் இருவரையும் கண்டு மகிழ்ச்சி யுற்றனர்.

"அண்ணி... இதோ எங்களோட கிஃப்ட்!" என்று ஒரு பெண்டண்ட்டை நீட்டிய ஹரியிடம் சிரித்த சங்கீதா,

"போன வருசம்வரைக்கும் தனித் தனியா உங்க இரண்டு பேர்கிட்ட இருந்து கிஃப்ட் வாங்கிட்டு இருந்தேன். இப்போ ஒன்னா வாங்குறது எவ்ளோ சந்தோசமா இருக்கு, தெரியுமா?" என்று கூற... இருவரும் ஒருவரை யொருவர் பார்த்து முறுவலித்துக் கொண்டனர்.

வீட்டினருடன் சிரித்தபடியும் சண்டையிட்டபடியும் வீடு முழுக்க ஓடித் திரிந்தவளைப் பார்க்கப் பார்க்கச் சலிக்கவில்லை அவனுக்கு.



அடர்த்தியாய் மையிடப்பட்டிருந்த விழிகளின் கரு மணிகள் ஒவ்வொரு முறை அசையும் போதும் அவனுள் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அஷ்வத்தை மடியில் வைத்துக் கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனைக் கண்டுவிட்ட ரம்யா, புருவம் சுருக்கியபடி எழுந்து அருகே வந்தாள்.

அவள் கண்டு கொண்டதில் படபடத்துப் போனவன் வேகமாகத் தலை குனிய,

"எதுக்குடா அப்படி பார்க்குற எருமை?" என்று அருகே வந்து சண்டை போட்டாள்.

"நா... நான் ஒன்னும் பார்க்கல. இவன்தான் உன்னைக் கூப்பிட்டான்..." என்ற ஹரி, அஷ்வத்தை அவள் கையில் திணித்து விட்டு அவனறைக்குச் சென்று விட்டான்.

அறைக்குள் நுழைந்து கண்களை அழுந்த மூடித் தலையைக் கோதியவனின் மனக் கண்ணில் விழிகளைப் பெரிதாய் விரித்து அவனைக் காணும் ரம்யாவே தோன்றி னாள். புன்முறுவலுடன் அப்படியே கட்டிலில் விழுந்தான்.

சிறிது நேரத்திலேயே கதவைத் திறந்து கொண்டு ஏதோ ஆங்கிலப் பாடலைப் பாடியபடி அஷ்வத்தும், ரம்யாவும் ஒன்றாய் உள்ளே நுழைந்தனர். சிறுவனுடன் சரிக்குச் சரியாக அபிநயத்துடன் பாடியபடியே வந்தவள் கட்டிலில் அவனருகிலேயே படுத்து... தன் வயிற்றின் மீது அமர்ந்திருந்த அஷ்வத்திடம், "சூப்பா... சூப்பர் குட் பாய்... மம், நெக்ஸ்ட்..." என்றபடி பாட்டைத் தொடர்ந்தாள்.

ஒற்றைக் கையால் தலைக்கு முட்டுக் கொடுத்து அவள் புறம் திரும்பிப் படுத்த ஹரி...

"உயிரே... உயிரே... உனை விட எதுவும்

உயிரில் பெரிதாய் இல்லையடி...

அழகே... அழகே உனை விட எதுவும்

அழகில் அழகாய் இல்லையடி..."

என்று காரில் கேட்ட பாடலைப் பாட... அஷ்வத் அவன் புறம் திரும்பி, "சித்தப்பா... நீ தப்பான லிரிக்ஸ் பாடுற!" என்றான்.

தானும் அவனை நோக்கிய ரம்யா, "ஏன்டா சித்தப்பா தப்பா பாடுற?" என்று கூறி விட்டுச் சிறுவனுடன் மீண்டும் பாடத் தொடங்கினாள். அழகாய்க் கண் மூடிச் சிரித்தபடி அவளையே நோக்கினான் ஹரி.

அதன் பின்பு உண்டு முடித்து விட்டு ரம்யாவின் தோளில் முகம் பதித்து வாய் துடைத்த போதும், "உங்க பையன் நல்லவன் அத்தை. டெய்லி எனக்குப் பாத்திரம் கழுவித் தர்றான்!" என்று அவள், அவன் தோளில் கை போட்டுத் தலைமுடியைக் கலைத்து விட்ட போதும்,

சங்கீதாவுக்குக் கேக் வெட்டுகையில் வெடித்த பலூன் சத்தத்தில் காதை மூடியபடி அவன் மார்பில் அவள் புதைந்து கொண்ட போதும், கடைசியாக அனைவரிடமும் விடை பெறுகையில் அவனது கையைப் பற்றிக் கொண்டு அவள் நின்ற போதும்... கொஞ்சம் கொஞ்சமாக அவளிடம் தன்னைத் தொலைத்தான் ஹரி.



அன்றிரவு கருமேக மூட்டங்களுடனும், லேசான மின்னலுடனும் காட்சி அளித்துக் கொண்டிருந்த வானம், இருவரும் வீட்டை அடைகையில் பெரிதாய் மழையைப் பொழியத் தொடங்கியிருந்தது.

வீட்டை அடைந்து அவன் உடை மாற்றி வெளி வருகையில் அவளும் அறையை விட்டு வெளி வந்தாள். முழங்காலுக்குச் சற்றுக் கீழ்வரை யிருந்த வெள்ளை நிற ஃப்ராக் அணிந்திருந்தாள்.

ஃப்ரிட்ஜைத் திறந்து தண்ணீரை எடுத்தபடி, "சூப்பர் மழையில்லடா? எவ்ளோ நாளாச்சு மழையில் நனைஞ்சு! அவுட் ஹவுஸ்ல இருக்கும் போது மழை பெய்றப்பல்லாம் நாம மொட்டை மாடியிலதான் இருப்போம்!" என்று கூறியவளின் அருகே வந்து கையைப் பற்றியவன்,

"இப்போ கூட நனையலாம். யாரும் நம்மைக் கேள்வி கேட்க மாட்டாங்க..." என்றபடியே, "டேய்... டேய்... டேய்..." என்று கத்தியவளை இழுத்துக் கொண்டு மொட்டை மாடிக்கு ஓடினான்.

"மெதுவா... மெதுவாடா!" என்று கத்தியபடியே அவன் இழுத்த இழுப்பிற்கு ஓடினாள்.

அந்த அபார்ட்மெண்டின் மூன்று மாடியைக் கடந்து மொட்டை மாடிக்குள் அவளை இழுத்துச் சென்றவன் நேராகச் சென்று மழையில் நிறுத்தினான்.

மூச்சு வாங்க அவனை நோக்கியவளின் முகத்தில் பட்டுத் தெறித்த மழைத் துளி கவிதையாகத் தோன்றியது

அவனுக்கு. கலகலவெனச் சிரித்தபடி இரு கையையும் நீட்டி வானத்தை நோக்கிக் குவித்தவள் ஓடிச் சென்று, "டேய்... பால்டா..." என்று கீழே கிடந்த வாலிபால் ஒன்றை எடுத்து வந்தாள்.

ஓரத்தில் கட்டியிருந்த நெட்டைக் கண்டு குஷியாகி விட்ட இருவரும் வாலிபால் ஆடத் தொடங்கினர். கொட்டிக் கொண்டிருந்த மழை இருவரையும் இணைக்கும் பால மாக அன்று மாறி விட... பாலைத் தூக்கியெறிந்து கத்திக் கும்மாளமிட்டபடி விளையாடிக் கொண்டிருந்தனர் இருவரும்.

அடுத்த அரை மணி நேரத்தில் மழை நின்று விட... "போதும்டா! கீழே போகலாம்..." என்றபடி மூச்சு வாங்க அவனருகே வந்தாள் ரம்யா.

லிஃப்ட்டுக்குள் ஏறி 5-ஆவது நம்பரை அழுத்தி விட்டுத் திரும்பிய ஹரி நடுங்கிக் கொண்டு நின்றிருந் தவளின் அருகே சென்று, "குளிருதா?" என்றபடி பின் னிருந்து கட்டிக் கொண்டான்.

"ஷ்ஷ்ஷ்!" என்று சிலிர்த்துக் கொண்டே தன் வயிற்றின் மீது பதிந்திருந்த அவன் கையைப் பற்றியவள் திரும்பி அவன் தோளில் முகத்தை அழுத்தி, "ம்ம்... ரொம்ம்ப..." என்றாள்.

அவளது உஷ்ண மூச்சை உணர்ந்தவனுக்கு உடல் முழுதும் சிலிர்க்க, கண்களை மூடியபடி குனிந்து அவள் கூந்தலில் முகத்தை அழுந்தப் பதித்தான்.



சட்டெனத் திறந்து கொண்ட லிஃப்ட் இருவரையும் பிரித்து வைக்க... "ஆ!"வென வாயைப் பிளந்தபடி அவர்களை நோக்கிக் கொண்டிருந்த வயதான தம்பதியைக் கண்டு நெற்றியைத் தேய்த்துக் கொண்டாள் ரம்யா. "சா... சாரி... சாரி!" என்றபடியே ரம்யாவின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு வீட்டை நோக்கி ஓடினான் ஹரி.

"ஹா... ஹா...! அந்தப் பாட்டி பாவம்டா... யாரிந்த லூசுங்க? இப்படி மழைல நனைஞ்சு தொப்பலாகி நிக்குதுகன்னு நினைச்சுருக்கும்... அந்தத் தாத்தா... எப்படி முழிச்சார் பார்த்தியா?" என்று சிரித்தபடியே வீட்டுக்குள் நுழைந்து அறையை நோக்கி ஓடிய ரம்யா... "ஆஆஆ!" எனக் கால் வழுக்கி விழப் பார்க்க, "ஏ... ஏய்...ஏய்... பார்த்துடி..." என்றபடி ஓடி வந்து தாங்கினான் ஹரி.

பாதி தொங்கிய நிலையில் நின்றிருந்த ரம்யா தரையை நோக்கி விட்டு, "நல்ல வேளை, கீழே விழல..." என்றபடியே நிமிர்ந்து ஹரியை நோக்கினாள். அவளுக்கு வெகு அருகே தெரிந்த அவனது கண்கள் காட்டிய உணர்ச்சியையும் இதழ்களில் தேங்கியிருந்த சிரிப்பையும் கண்டு சிலிர்த்துப் போனாள்.

திகைத்துத் திமிறியவள் வழுக்கிய தரையைப் பொருட்படுத்தாமல் அவனிடமிருந்து விலக முயற்சிக்க, இரு கைகளால் அவள் இடையை இறுக்கப் பற்றிக் கொண்டு அவளை மேலும் அருகிலிழுத்தான் அவன்.

நின்று போயிருந்த மழை பெரும் இடியுடன் மீண்டும் பொழியத் தொடங்கியிருந்தது.

விக்கித்துப் போய் விரிந்த விழிகளுடன் அவனையே நோக்கிக் கொண்டிருந்தவளின் இதழ் நோக்கிக் குனிந்தான் அவன்.

அவன் அருகே வர வரத் தலையை மெல்லப் பக்கவாட்டில் சாய்த்து மறுபுறம் திரும்பினாள் அவள். அவன் மீண்டும் குனிகையில் தலையை வலதுபுறம் சாய்த்துக் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

பேச்சின்றி நிமிர்ந்து அவளையே நோக்கிக் கொண்டிருந்தவன்... கண்களை மெல்லப் பிரித்து, அவள் அவன் புறம் திரும்பிய வேளை சட்டெனக் குனிந்து அவள் இதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

கருமணிகள் தெறித்து விடுமளவிற்கு விழிகளைப் பெரிதாய்த் திறந்தவள் கண்டது... கண்களை மூடியபடி முத்தத்தில் திளைத்திருந்த ஹரியின் முகத்தைத்தான். அடுத்த நொடி கண்களை இறுக மூடியிருந்தாள்.

அவன் தோளைப் பற்றி விலக்க எத்தனித்தவளின் முயற்சிகளனைத்தும் வீணாக... கடைசியாக மூச்சுக்குத் தவித்து அவனை எட்டித் தள்ளி விட்டுச் சட்டென மறுபுறம் திரும்பி நின்றாள் ரம்யா.

மூச்சு வாங்கத் தன் மனைவியின் தோளில் நெற்றியை அழுத்தியவன் குனிந்து அவள் கழுத்தில் அழுந்த முத்தமிட்டான். கண்களை இறுக மூடி நடுங்கும்



உதடுகளைக் கட்டுப்படுத்த முயன்றவள் சட்டென அவனிடமிருந்து விலகி அறைக்கு ஓடிச் சென்று விட்டாள்.

அவள் நகர்ந்த பின் சுய நினைவிற்கு வந்த ஹரி தலை முடியை அழுந்தக் கோதியபடி தன் அறையை நோக்கிச் சென்றான்.

வெகுநேரம் ஜன்னல் வழியே தெரிந்த மழையை வெறித்தபடி அமைதியாய் நின்றிருந்த ரம்யா... குளிரத் தொடங்கியதும் உடை மாற்றி... தொப்பெனப் படுக்கையில் விழுந்தவளுக்குத் தாகமெடுக்கத் தண்ணீர் பாட்டிலைத் தூக்கிக் கொண்டு கிச்சனுக்குச் சென்றாள்.

அவள் தன் பாட்டிலில் நீர் நிரப்பிக் கொண்டிருந்த வேளை, ஹரி, தன் பாட்டிலிலிருந்த நீரைப் பருகிய படியே வெளியே வந்தான்.

மறுபுறம் திரும்பி நின்றிருந்தவளின் அருகே சென்று அவள் மீது தண்ணீரைத் தெளித்தான். அதிர்ந்து திரும்பியவளை நெருங்கி அவளது இருபுறத்திலும் கை பதித்து நின்றவன், “எதுக்குடி அப்போ ஓடிப் போன?” என்று வினவினான்.

“ஏன்? பிடிக்கலையா?”

பதில் கூற வராமல்... அவனை நிமிர்ந்து காணவும் முடியாமல்... விழிகளை அலைய விட்டபடி லேசாய்க் குனிந்திருந்தவளின் நாடியை ஒற்றை விரலால் பற்றித் தூக்கியவன்... நிமிர்ந்து அவனை நோக்கியவளின் விழிகளைச் சந்தித்து, “இனிமே நீ என் பக்கத்துல இருக்கும்போது என்னால கையைக் கட்டிட்டு அமைதியா

உன்னை வேடிக்கை பார்க்க முடியும்னு தோணலடி!" என்றவன்... குனிந்து அவள் இதழ்களில் முத்தமிட்டு விட்டு விலகிப் போனான்.

## 10

***Let's love like we've never been hurt before!***

நான் தங்கியிருக்கிற ஹாஸ்டல்ல ஒரு பெண் நாய் உண்டு. அதோட பேரு ஜூலி. பொதுவா பிராணிகள்னாலே அலர்ஜியாகிற நான்... அது பக்கத்துல கூடப் போக மாட்டேன். பூட்டியிருக்கிற கம்பிக் கதவு வழியா தினம் எங்க ரூமை எட்டிப் பார்த்துட்டே நிற்கும். ஒவ்வொரு முறை கதவைத் திறந்து வெளியே போகும் போதும், வரும்போதும் ஆள் துணையைத் தேடிட்டிருந்த நான் ஒரு நாள் யாருமில்லாதப்போ, வெளியே வரும் போது ஜூலி என் கால்கிட்ட நின்னு என்னைப் பய முறுத்த... நான் எஸ்.ஜே.சூர்யா ரேஞ்சுக்கு, "போ... போ... போஓஓ..."ன்னு கத்தினதுல அது ஓடியே போய்ப் படிக்குக் கீழே நின்னுக்கிட்டு எட்டிப் பார்த்துச்சு.

வெள்ளை நிறத்துல, பொசு பொசுன்னு முடிகளோட ரொம்ப அழகாயிருந்த ஜூலியை அன்னிக்குத் தான் நான், பொறுமையாய்ப் பார்த்தேன். அதுக்கப்புறம் "ஜூலி போ..." "ஜூலி வா..." "ஹேய் ஜூலி, நீ ஒரு பொண்ணுன்றதால மட்டும்தான் என் ரூம் கதவை நீ எட்டிப் பார்க்கிறதைப் பொறுத்துக்கிறேன் நான். இல்லை நடக்குறதே வேற!", "ஜூலி, ஆன்ட்டி எனக்கே சிக்கன் வைக்க மாட்டேங்குது. இதுல உனக்கு வேற பங்கு கொடுக்கணுமா!"ன்னு ஜூலியைத் தினம் கேலி பண்ணி அதோட என் உறவை அழகா வளர்த்துக் கிட்டேன். மனுஷனுக்கு ஏன் பிராணிகள் மேல பாசம் வருதுன்றதை நான் உணர்ந்தது ஜூலிகிட்ட தான்...

ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...



அழகாய் விடிந்திருந்த அந்தக் காலை நேரத்தில், அன்றைய மெனுவின் பட்டியலை ஹோட்டல் வாசலில் இருந்த போர்டில் ஒட்டிக் கொண்டிருந்தான் சக்தி.

"கீமா வித் பீஸ் கறி. ஹம்ம், ரம்யா மிகப் பெரிய ராங்கியா இருந்தாலும் அவ கைல ஒரு நளன் உட்கார்ந் திருக்கிறான்கிறதை எல்லாரும் ஒத்துக்கிட்டுத்தான் ஆக ணும்."

தனக்குள் பேசிக்கொண்டு போர்டை வெறித்தபடி நின்றிருந்தவனிடம்... "என்னண்ணா, நீங்களா லூசு மாதிரி ஏதோ பேசிட்டிருக்கீங்க?" எனக் கேட்டுக் கொண்டே கதவைத் திறந்து வெளியே வந்த பழனி, தன் கையில் வைத்திருந்த மாப்பினால் வாசலைத் துடைத்தான்.

"நாயே... பேச்சு வாக்குல லூசுன்ற?" என்ற சக்தி, அருகே இருந்த பைப்பைக் கையில் எடுத்துச் செடி களுக்கு நீர் ஊற்ற...

குதித்தபடியும் ஆடியபடியும் துடைத்துக் கொண் டிருந்த பழனி,

"காதலிக்கும் பெண்ணின் கைகள் தொட்டு நீட்டினால்...
சின்னத் தகரம் கூடத் தங்கம்தானே...
காதலிக்கும் பெண்ணின் வண்ணம்
கன்னம் இரண்டிலே
மின்னும் பருவும் கூடப் பவளம்தானே..."

என்று தனது கழுதைக் குரலில் சத்தமாகப் பாட... காதை அழுத்தித் தேய்த்துக் கொண்ட சக்தி கெட்ட வார்த்தை சொல்லித் திட்ட வருகையில்...

எங்கிருந்தோ குதித்த ஹரி,

"சிந்தும் வேர்வை தீர்த்தமாகும்
சின்னப் பார்வை மோட்சமாகும்..."

என்று ஈயென இளித்தபடியே பாட...

குஷியாகிப் போன பழனி மாப்-ஐ கீழே போட்டு விட்டு ஓடி வந்து அவன் கையைப் பற்றிக் கொண்டான்.

பின் இருவரும் சேர்ந்து, "காதலின் சங்கீதமே... ம்ஹ்ம்... பூமியின் பூபாளமே..." என்று ஆடிக் கொண்டே பாடினர்.

"டேய், நிறுத்துறீங்களா... இல்லையாடா?" என்று கத்திய சக்தி எரிச்சலுடன் அருகே வந்தான்.

"நீங்க பாடுற பாட்டைக் கேட்குறதுக்கு உள்ளே நம்பி போடும் சுப்ரபாதத்தையே கேட்கலாம் போல..."



"அவனுக்குப் பொறாமைடா... நீ வாடா, பழனி!" என்ற ஹரி டூயட் ஆடுவது போல் அவன் இடுப்பைப் பற்றிக் கொண்டு, "குண்டு மல்லி ரெண்டு ரூபாய்... உன் கூந்தல் ஏறி உதிரும் பூ கோடி ரூபாய்..." என்று தொடர்ந்து பாடினான்.

ஆடி முடித்து உள்ளே வந்தவனின் முகத்தில் எரிந்து கொண்டிருந்த தௌசண்ட் வாட்ஸ் பல்பைக் கண்டு புருவம் தூக்கிய சக்தி, "என்ன மச்சி? உன் முகத்துல ஒரு பரவசம் தெரியுதே!" என்று விசாரித்தான்.

"அ... அது... அது வந்து அப்படித்தான் மச்சி..." என்று விட்டத்தைப் பார்த்தவனைக் கண்டு, தலையில் அடித்துக் கொண்ட சக்தி,

"ச்சே... கருமமே... வெட்கப்படாதேடா! தயவு செஞ்சு... என்னால பார்க்க முடியல..." என்று அவன் கன்னத்தில் அடித்தான்.

அதற்கும் அவன், "ச்சீ... போங்கள்..." என்று அவன் மோவாயை இடித்து விட்டுப் போக,

"அடக் கன்றாவியே..." என்றான் சக்தி.

"குட் மார்னிங் ஓனர்!"

"மார்னிங் ஓனர்ண்ணா..." என்று ஆங்காங்கு கிளம்பிய வாழ்த்துகளுக்குப் பதிலளித்தபடி சமைய லறையை நோக்கிச் சென்றான், ஹரி.

காலர் பட்டனைக் கழற்றியபடி உள்ளே நுழைந் தவன், தன் எதிரே நின்றிருந்தவனிடம்,

"டேய், லோகேஷ்... ஒரு வாரமா டைஃபாய்டு காய்ச்சல்னு லீவ்ல இருந்தியாம். இப்போ எப்படிடா இருக்கு?" என்று விசாரித்தான்.

"இப்போ சரியாயிடுச்சு ஓனர்!" என்றவனிடம், மேலும் ஓரிரு வார்த்தைகள் பேசி விட்டுத் திரும்பியவன், ரம்யாவிடம், "மெனு டேஸ்ட் பண்ணட்டுமா?" என்று வினவினான்.

சரியெனத் தலையாட்டி அவள் நீட்டியவற்றை வாங்கி உண்டு விட்டுப் புருவம் உயர்த்தியவன், "சூப்பர் டார்லிங். இந்த டெசர்ட் ரொம்ப சூப்பரா வந்திருக்கு. எனக்குக் கொஞ்சம் பேக் பண்ணுறியா? வீட்டுக்கு எடுத்துட்டுப் போறதுக்கு..." என்றான்.

லேசாய்ச் சிரித்து, "ஹ்ம்ம்..." என்றவளை... ஆழ நோக்கியவன், திரும்பி, "டேய், பசங்களா... ஒரு இரண்டு நிமிஷத்துக்குக் கண்ணை மூடிக்கோங்களேன்... ப்ளீஸ்!" என்றான்.

எதுக்கு என்பது போல் பார்த்தவர்களிடம், "சொன்னதைச் செய்ங்களேன்டா..." என்று அவன் சத்தமிட, அனைவரும் பட்டெனக் கண் மூடிக் கொண்டனர்.

கையில் இருந்த கிண்ணத்தைக் கீழே வைத்து விட்டு, மனைவியின் அருகே சென்றவன், தன் இரு கைகளால் அவள் முகம் பற்றி, "இவ்ளோ சூப்பரா சமைச்ச என் பொண்டாட்டிக்கு எதுவுமே தராம எப்படிப் போக முடியும்?" என்று மெலிதாய் முணுமுணுத்தபடி



குனிந்து, "ம்ம்ம்மாஆஆஆ..." என்று மூடியிருந்த அவள் இதழ்களில் தன் இதழைப் பதித்து நிமிர்ந்தான்.

"ஹாங்..." என்று செல்வி வாயைப் பிளந்தபடி நின்று விட...

திரும்பி அவளை நோக்கித் தலையில் தட்டியவன், "கண்ணை மூடிக்கோன்னு சொன்னேன்ல?" என்று கூறி விட்டு, "வேலையைக் கண்டினியூ பண்ணுங்கடா... பசங்களா!" என்றபடியே துள்ளலுடன் வெளியே சென்றான்.

"ஓனரை இன்னிக்குப் பிங்க் டிரஸ்ல பார்த்ததுமே நினைச்சேன். அவர் ரொமாண்டிக் மூட்ல இருக்கார்னு..." என்ற செல்வி, ரம்யாவை நோக்கிக் கண்ணடிக்க... முகம் சிவந்து தலை குனிந்த ரம்யாவிற்கு யாரையும் நிமிர்ந்து பார்க்க முடியாமல் போனது.

விறுவிறுவென வெளியே ஓடியவளைக் கண்டு அனைவரும் சிரித்தனர்.

அன்று அவளைக் கடைசியாகக் கண்டவன்தான். அதன் பின்பு அவளைப் பார்ப்பதற்கு அவனுக்கு வாய்ப்பு அமையவே இல்லை.

அந்த வாரப் புதன் கிழமை அன்று கல்யாண ஆர்டர் இருந்ததால் தினமும் இரவு வீட்டிற்கு வெகுநேரம் கழித்துத்தான் திரும்பிக் கொண்டிருந்தான் அவன். அவன் வரும் முன் சமைத்து வைத்து விட்டு அறைக்குள் முடங்கி விடுபவளை இரண்டு நாட்கள் ஏதும் சொல்லாமல் இருந்

தவன்... மூன்றாம் நாள் அவள் அறைக் கதவைத் தட்டினான்.

தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டவள், எழுந்து செல்லவேயில்லை. ஹோட்டலிலும் கூட அவனை நேரில் காண்பதைத் தவிர்த்தாள்.

குழப்பங்கள் அனைத்தும் முடிவுக்கு வந்து எல்லாம் சரியாகச் சென்று கொண்டிருப்பதாக எண்ணி மகிழ்ந்தானே அவன்! இவள் எதற்காக இப்படி நடந்து கொண்டு அவனை வதைக்கிறாள்? ஏமாற்றம் மனதைச் சூழ்ந்து அடி வயிற்றில் எரிச்சல் மண்ட ஆரம்பிக்க... கோபத்துடன் தன் அலைபேசியைக் கையில் எடுத்து அவள் நம்பருக்கு அழைத்தான். அவள் எடுக்கவில்லை.

வாட்ஸ்-அப்பை ஓப்பன் செய்து பரபரவென மெசேஜைத் தட்டினான்.

"எங்கடி இருக்க?"

"........"

"ஏன் என்னைப் பார்க்க மாட்டேங்குற? பேச மாட்டேங்குற?"

"........"

"அவாய்ட் பண்ணுறியா?"

"........"

"ஆனா... ஏன்?"

"........"



"நீ இப்படி நடந்துக்கிறதுக்கு ரீசன் என்னன்னு எனக்குச் சத்தியமாத் தெரியலடி.."

"........"

"இஷ்டமிருந்தா பேசு. இல்லாட்டி போடின்னு உன் கூடச் சண்டை போடுற பழைய ஹரி இல்லடி நான். ரம்யா... இப்போ... இப்போ நிலைமையே வேற. என்... என்னோட எண்ணங்கள் முழுக்க உன்னைச் சுத்தி மட்டும்தான் இருக்கு. ஐ வான்ட் டு சீ யூ எவ்ரி டே. ஐ வான்ட் டு ஹக் யூ... ஐ வான்ட் டு கிஸ் யூ... தயவு செஞ்சு அவாய்ட் பண்ணாதே. என்னால... என்னால தாங்கிக்க முடியும்னு தோணல. பைத்தியம் பிடிக்கிற மாதிரி இருக்குடி. ப்ளீஸ்..." - ஹரி.

"நான் பார்ட்டி ஹால்ல சர்விங்ல இருக்கேன்..." - ரம்யா.

"நான் உன்னைப் பார்க்கணும்."

"இப்போ முடியாது."

"ரம்யா..."

"........"

பதில் இல்லை அவளிடம். அதன் பின்பு வெகு நேரம் அவளது ஒற்றை வரிப் பதில் மெசேஜ்களைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தவன் பெரு மூச்சுடன் உள்ளே சென்றான்.

அன்றிரவு அவன் விரைவாகவே வீடு திரும்பி யிருந்தான். மிக்ஸியில் சட்னியை ஓட விட்டபடி யோச

னையில் ஆழ்ந்திருந்த ரம்யா, ஹரி உள்ளே நுழைந்ததைக் காணவில்லை.

வீட்டிற்குள் நுழைந்த ஹரி, அடுப்படியில் சத்தம் கேட்டதை உணர்ந்து, வேகமாக அருகே சென்றான்.

சட்னியைக் கிண்ணத்தில் கொட்டிக் கொண்டிருந்தவள் அரவம் கேட்டு நிமிர்ந்து பார்க்க... அவளையே தீவிரமாக நோக்கியபடி நின்றிருந்தான், ஹரி.

அந்த நேரத்தில் அவனைச் சற்றும் எதிர்பாராததால் பதறிப் போன ரம்யா மெல்ல மறுபுறம் திரும்பி நின்றாள். அதன் பின்பு அவன் ஒருவன் அங்கு நிற்பதைக் கண்டு கொள்ளாதவள் போன்று வேலையில் ஆழ்ந்தவளின் அருகே வந்தான், ஹரி.

"என் பக்கத்துல வராதே!" என்றாள் ரம்யா.

"ஏன்?"

"வராதேன்னா வராதே."

"நான் வருவேன்."

"ஹரி... ப்ளீஸ்..."

அவனிடமிருந்து தள்ளிப் போய்ச் சுவரோரமாக நின்று கொண்டு, "ப்ளீஸ்..." என்றவளைக் கண்டு ஒரு நிமிடம் நின்ற ஹரி, பின்...

"ரம்யா..." என்றபடி அவள் கையைப் பற்ற முயற்சிக்க...

விருட்டெனக் கையைப் பின்னே இழுத்துக் கொண்டவள் தரையை வெறித்தபடி நின்றாள்.



கோபத்திலும், இயலாமையிலும் அவளையே மூச்சு வாங்க முறைத்த ஹரி சட்டென அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். அதன் பின்பு அவன் அவளைக் காண முயற்சிக்கவில்லை.

மறுநாள் காலை ஹோட்டலுக்குள் நுழைந்தவன்... நேராகச் சென்று தன் அறைக்குள் முடங்கிக் கொண்டான்.

"மச்சி, ஏதாவது பிரச்சனைன்னா மட்டும் கூப்பிடுடா. நான் உள்ளே தூங்குறேன்..." என்றவனிடம்,

"தூங்குறதுக்கு எதுக்குடா ஹோட்டலுக்கு வர்ற? வீட்லயே இருக்க வேண்டியதுதானே!" என்றான் சக்தி.

"ப்ச்... சொல்றதை மட்டும் செய்டா..." என்றவன், அவனிடம் எரிந்து விழுந்தான்.

அன்று டேபிள் மெனுவைச் சுவைப்பதற்காகச் சமையலறையினுள் சக்தி நுழைய, "குட் மார்னிங் ஓனர்!" என்று பெரிதாய் வாயைத் திறந்த செல்வி அவனைக் கண்டு, "நீங்களா!" என்றாள், உள்ளே சென்ற குரலில்.

"ம்... ஏன் என்னைப் பார்த்ததும் ஆஃப் ஆயிட்ட போல? இப்போல்லாம் கல்யாணம் ஆன பயலுகளைத்தான் பிள்ளைகளுக்குப் பிடிக்குது போல..." என்று புலம்பியவன் ரம்யாவிடம் திரும்பினான்.

"சாப்பிட என்ன வைச்சிருக்க?"

"என்னது?"

"இ... இல்ல. டேபிள் மெனு என்னன்னு கொடுத்தேன்னா டேஸ்ட் பண்ணிட்டுப் போயிடுவேன். மாப்ள சிக்கா இருக்கான்..."

"ம்..." என்றவள், சின்னச் சின்னக் கிண்ணங்களில் இருந்தவற்றை அவனிடம் நீட்டினாள்.

"என்ன? இத்துனூண்டு கிண்ணத்துல கொடுக்கிற! காக்காய்க்குச் சோறு வைக்கிற மாதிரி... நல்லா நிறைய வைம்மா. உன் சொத்தா போகுது? எல்லாம் என் நண்பன் சொத்து..." என்றவன், பெரிய கிண்ணம் நிறையக் கேட்டு வாங்கிக் கொண்டு நன்றாய்ச் சாப் பிட்டான்.

"இத்தனை நாளா மெனு டேஸ்ட் பண்றேன், டேஸ்ட் பண்றேன்னு பயபுள்ள எல்லாத்தையும் அதுவே தின்னுட்டு இருந்திருக்கு. துரோகி!" என்று ஹரியைத் திட்டியவன் விரலை நக்கியபடியே... "ஆமா. உப்பு, காரமெல்லாம் சரியாத்தானே இருக்கு... இதுல நான் என்னத்த சொல்ல?" என்று கேட்க...

தலையில் அடித்துக் கொண்ட ரம்யா, "டேய்... டேய்... வெளியே போடா... போடா..." என்றாள்.

அன்று நாள் முழுதும் அறையை விட்டு வெளியே வராமல் இருந்தவனைக் கண்டு, "ஓனருக்கு என்ன பிரச்சனையோ, தெரியலையே... இப்படி ரூமுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்காரு. வருக்கா, நீங்களாவது அவரு இன்னிக்கு என்ன கலர் ஷர்ட் போட்டிருந்தார்னு பார்த்தீங்களா? யாரும் உள்ளே போய் அவரைப் பார்க்க முடியாதா?" என்று புலம்பினாள், செல்வி.



அனைவரது பார்வையும் ரம்யாவின் மீது திரும்ப... "எ... என்ன எல்லாரும் என்னைப் பார்க்கிறீங்க? என்னாலல்லாம் போக முடியாது..." என்று கூறினாள் அவள்.

"சரி. எப்பவும் சிட்டுக் குருவி மாதிரி கலகலன்னு இருக்கிறவரு... இன்னிக்கு ஏன் இப்படிக் கூண்டுக்குள்ள அடைஞ்சு கிடக்கிறாருன்னாவது சொல்லேன்..." என்றாள் வரு.

"எ... எனக்கு எப்படித் தெரியும்? எனக்கு எதுவும் தெரியாது!" என்றாள் ரம்யா.

"கிழிஞ்சது. ரம்யாக்கா, நீங்க பேசாம அவரை டைவர்ஸ் பண்ணிடுங்க. நான் அவரைக் கட்டிக்கிட்டு கண்ணுக்குள்ள வைச்சுப் பார்த்துக்கிறேன்..." என்றாள், செல்வி.

"லெஃப்ட் கண்ணுலயா? ரைட் கண்ணுலயாடி?" - ரம்யா.

"ரொம்ப முக்கியம்..." - செல்வி.

ஆளாளுக்கு மாற்றி மாற்றி முணுமுணுத்தபடி வேலையைத் தொடர்ந்தனர்.

வாரத்திற்கு மூன்று நாட்கள் அனைவரும் வேலை நேரம் முடிந்து ஹோட்டலை க்ளீன் செய்வது வழக்கமா யிருந்தது.

அன்று க்ளீனிங் நாள் என்பதால் ஏழு வேலை யாட்கள் களத்தில் இறங்கிச் சுத்தப் படுத்திக் கொண்டி ருந்தனர்.

இரவு பத்து மணிக்குத் தன் லேப்டாப்பைத் தூக்கிக் கொண்டு கொட்டாவி விட்டபடி அறையை விட்டு வெளியே வந்தான், ஹரி.

தரையைத் துடைத்துக் கொண்டிருந்த பழனி அவனைக் கண்டு, "ஓனர்ண்ணா... என்ன காய்ச்சலா?" என்றான்.

"ப்ச்... இல்லடா!"

"பின்னே ஏன் டல்லடிக்கிறீங்க?" - லோகேஷ்.

"உடம்பு சௌகரியமில்லேன்னா இந்தச் சக்தி அண்ணனைக் கூப்பிட்டுக்கிட்டு ஹாஸ்பிடல் போக வேண்டிதானேண்ணா? நாள் முழுக்க அவரு வெட்டியாத்தான இருக்காரு?" என்றான் பழனி.

"அடிங்க நாயே... யாருடா வெட்டியாயிருக்கா? நான் ஏன்டா அவனைக் கூப்பிட்டுப் போகணும்? இதெல்லாம் அவன் சம்சாரம் பார்க்க வேண்டிய வேலை..." என்றான் சக்தி.

"அதானே! இந்தண்ணி ஏன் கண்டுக்காம இருக்காங்க? அண்ணி... அண்ணி..." என்று குரல் கொடுத்த பழனியிடம்,

"டேய்... வாயை மூடிட்டு வேலையைப் பார்க்க மாட்டியா?" என்று பொரிந்தான் ஹரி.

"ஹ்ம்ம்...." என உதட்டை வளைத்த சக்தியும், பழனியும், "ஏதோ உள்நாட்டுப் போர் போல..." என்று முணுமுணுத்தனர்.



இரு கைகளாலும் வாயை மூடிக் கொட்டாவியை வெளியிட்டபடி திரும்பியவன்... செல்வி கீழே குனிந்து மேஜையின் அடியில் கஷ்டப்பட்டுத் துடைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு எழுந்து அவளருகே சென்றான்.

"ஏய்... ஏய்... எழுந்திரு... எழுந்திரு!" என்று அவள் தோளைத் தட்டி எழுப்பியவன், அவள் கையிலிருந்த மாப்-ஐ வாங்கித் தானே துடைத்தான். "எட்டலைன்னா ஆளைக் கூப்பிட வேண்டியதுதானே! ஏன் இப்படிக் கஷ்டப்பட்டுட்டு இருக்க?" என்று அவன் திட்டவும்...

"இ... இல்ல. நானே துடைச்சுடலாம்னுதான் நினைச்சேன்..." என்று தலையைச் சொறிந்தாள் அவள்.

முழுதாகத் துடைத்து முடித்தவனிடம், "போதும் ஓனர், போதும்... போதும். இனி நான் பார்த்துக்கிறேன்..." என்று மாப்-ஐ வாங்கிக் கொண்டவள்,

"ம்ம்...." என்று அவன் திரும்பியதும், "லவ் யூ ஓனர்... ஹிஹிஹி..." என்று சிரித்தாள்.

கையை ஓங்கி அவள் தலையில் குட்ட வந்தவன் லேசாக அடித்துச் சிரித்து விட்டுப் போனான்.

அவன் நகர்ந்ததும் திரும்பிச் சமையலறையைப் பார்த்து, அங்கே நின்றிருந்த ரம்யாவிடம், "எப்படி?" என்று செல்வி புருவம் உயர்த்த... "ம்ம்ம்..." என்று தன் பெருவிரலை உயர்த்திக் காட்டிச் சிரித்தாள், ரம்யா.

இருவரது சம்பாஷணையையும் கண்ட ஹரி திரும்பிச் சமையலறையை நோக்கினான். சிரித்தபடியே

ஹரியிடம் பார்வையைச் செலுத்தியவள்... அவன் அழுத்தமாய்த் தன்னையே நோக்குவதைக் கண்டு பட்டென இமைகளைத் தாழ்த்தி மீண்டும் அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

உணர்ச்சியற்று அவளை வெற்றுப் பார்வை பார்த்து விட்டு அங்கிருந்த மேஜையில் அமர்ந்து கொண்டு, தன் லேப்டாப்பை வெறித்தான் ஹரி. ரம்யாவும் க்ளவுஸை மாட்டிக் கொண்டு பாத்திரங்களைக் கழுவத் தொடங்கினாள்.

தனக்கு நேரெதிரே நின்று கொண்டு வேலையில் ஈடுபட்டிருந்தவளின் பக்கவாட்டுத் தோற்றத்தை அடிக்கடி நிமிர்ந்து பார்த்தபடி அமர்ந்திருந்தான் ஹரி.

கன்னத்தில் கை வைத்தபடி லேப்டாப்பில் ஒரு கண்ணும், ரம்யாவின் மீது ஒரு கண்ணும் வைத்துக் கொண்டிருந்தவனின் முகத்தின் அருகே வந்து, "ஓனர்... அண்ணியைத்தானே சைட் அடிக்கிறீங்க?" என்றான் பழனி.

"நாயே..." என்றபடி, அவன் முகத்தைத் தன் உள்ளங்கையால் தள்ளியவன், "பக்கத்துல வந்து மூஞ்சியைக் காட்டாதேடா... பயம்மா இருக்கு..." என்றான்.

அதன் பின் வேலை முடிந்து ஒவ்வொருவராக விடைபெறத் தொடங்க... லைட்டுகள் அனைத்தையும் அணைத்துக் கொண்டிருந்த செல்வியிடம்...

"செல்வி... கிச்சன்ல ஏதாவது லெஃப்ட்-ஓவர் இருந்தா எனக்கு எடுத்து வைச்சுட்டுப் போயேன்..." என்றான், ஹரி.



"ஏய்... நீ வீட்டுக்குப் போகலை?" - சக்தி.

"இல்லை. நைட் இங்கேயேதான் படுத்துக்கப் போறேன்..." - ஹரி.

"இதெல்லாம் ரொம்ப ஓவர்டா..."

"சிம்பிளா ஏதாவது இருந்தாப் போதும். இரண்டு இட்லி இருந்தாக் கூட எடுத்து வை. நான் அப்புறம் சாப்பிட்டுக்கிறேன்..." - ஹரி.

"ஓனர்... ரம்யாக்கா கூட..." என்று ஆரம்பித்த செல்வியிடம்,

ஹரியின் பின்னே நின்றிருந்த சக்தி, "ஷ்ஷ்... சொல்லாதே... சொல்லாதே..." என இரு கைகளையும் ஆட்டினான்.

"என்ன அவளுக்கு?" என்றான் ஹரி.

"இ... இல்ல. ரம்யாக்கா கூட ஹோட்டல்லதான் சாப்பிட்டாங்கன்னு சொல்ல வந்தேன்..." என்றாள் செல்வி.

"ஹ்ம்ம்..." என்று அவன் மறுபடியும் லேப்டாப்பில் தலையைக் கவிழ்த்துக் கொள்ள...

செல்வியின் பின்னே நடந்த சக்தி, "ஏய்... அவனே அவளை அவாய்ட் பண்ணத்தான் இங்க தூங்குறேன்னு சொல்றான். நீ அவன்கிட்ட போய் ரம்யா இங்கதான் இருக்கப் போறானு சொல்ற? அவ இங்க இருக்கிறது தெரிஞ்சா இந்தப் பக்கி வீட்டுக்குப் போயிடும். இரண்டு பேரும் சண்டை மாறிச் சமாதானம் ஆக வேணாமா?" என்றான்.

அதன் பின்பு சக்தி, செல்வி, பழனியும் விடைபெற்று விடத் தன்னறைக்குச் சென்று படுத்து விட்டான் ஹரி. மணி பன்னிரண்டை நெருங்குகையில் பசிக்கத் தொடங்க... எழுந்து கிச்சனுக்குச் சென்றான்.

கிச்சன் லைட்டை எரிய விட்டுத் திரும்பியவனின் கண்களில் வலது ஓர மூலையில் கேக் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த ரம்யா தெரிந்தாள்.

ஒரு நிமிடம் திடுக்கிட்டவன்... மறுநொடி தன் போக்கில் உள்ளே நடந்து சென்று செல்வி எடுத்து வைத்திருந்த உணவைக் கையில் எடுத்தான்.

அவனைக் கண்டதும் திகைத்த ரம்யா, அவன் அமைதியாய்ச் செல்வதைக் கண்டு, "நா... நாளைக்கு வெட்டிங்-க்கு என்னை... என்னைக் கேக் செய்யச் சொன்னான் சக்தி. அதான் நான் இங்கேயே ஸ்டே பண்ணிட்டேன்..." என்றாள்.

பதில் கூறாமல் விளக்கை அணைத்து விட்டு வெளியேறப் பார்த்தவனிடம், "நீ... நீ இன்னும் சாப்பிட லையா?" என்று வினவினாள் அவள்.

பேச்சின்றிக் கையிலிருந்த இரண்டு இட்லிகளை வெறித்தான் அவன்.

"இரண்டு இட்லி எப்படிப் போதும்?"

"......"

"நா... நான் வேணும்னா வேற ஏதாவது சமைச்சுத் தரட்டுமா?"

"......"



"ஓ... ஒரு ஐந்து நிமிசம் பொறுத்துக்கிறியா? நான் சூடா ஏதாவது சமைச்சு எடுத்துட்டு வர்றேன்."

"....."

"ஐ...ஐந்தே நிமிசம்தான்..." என்றவள், விறுவிறு வென ஃப்ரிட்ஜின் அருகே ஓடினாள்.

இட்லிக் கிண்ணத்தை அங்கேயே வைத்து விட்டு வெளியே வந்து லைட்டை எரிய விட்டு மேஜையில் அமர்ந்து கொண்டான் அவன்.

அடுத்த ஐந்து நிமிடத்தில், தன் முன்னே சுடச்சுடப் பரிமாறப்பட்ட சில்லி பரோட்டாவைக் கண்டு நாக்கில் எச்சி ஊறியது ஹரிக்கு. வேக வேகமாக அள்ளி உண்ணத் தொடங்கினான். அவன் உண்டு முடிக்கும்வரை அவனையே பார்த்தபடி எதிரே அமர்ந்திருந்தாள் ரம்யா.

அவள் பிறந்ததிலிருந்து ஹரியுடன் சண்டை போடாத நாளே இல்லை.

"அவனுக்கு மட்டும் கம்ப்யூட்டர் வாங்கித் தந்திருக் கிறீங்க? நான் ஒரு வீடியோ கேம்தானே கேட்கிறேன்?" என்று கை காலை உதைத்துக் கொண்டு, அவள் அழுகையில் வேண்டுமென்றே நாக்கைத் துருத்திக் காட்டி வம்பு செய்பவன் மீது சின்ன வயதில் அவள் கொலைவெறித் தாக்குதலே நடத்தி யிருக்கிறாள்.

இவள் வளர்ந்த பிறகு வைஜெயந்தியை ஒரு நாள் கூடத் தன் மகனைக் கொஞ்ச விட்டதில்லை. "அவனைக் கொஞ்சாதே வைஜு...த்தை... என்னை மட்டும்தான் கொஞ்சணும்..." என்று வீடே அதிரும் அளவிற்குக்

கத்துபவளைச் செல்லம் கொடுத்தே வளர்த்திருந்தனர், அவளது குடும்பத்தில்.

"எங்கம்மா என்னைக் கொஞ்சுனா உனக்கு என்னடி?" என்று கோபமாய்ப் பாய்பவனிடம்,

"ரம்யா சின்னப் பாப்பா-ல கண்ணு... நீதான் பெரிய பையனாச்சே. அவளுக்கு விட்டுக் கொடுத்திடுப்பா!" என வீட்டுப் பெரியவர்கள் கூறி விட... அப்போதிருந்து சின்னச் சின்ன விஷயங்களுக்குக் கூட அவளுக்கு விட்டுக் கொடுத்து விடுவான், ஹரி.

கோபமும், ஆங்காரமுமாய் அவள்தான் அவனைத் திட்டியிருக்கிறாள். சண்டையிட்டிருக்கிறாள். அவன் ஒரு முறை கூடப் பதிலுக்குத் தன் கோபத்தை வீரியத்துடன் காட்டியதில்லை. இரண்டு வார்த்தை திட்டுவான். குட்டிக் கிள்ளி வைப்பான். அவ்வளவுதான்.

அவள் முகத்தைத் திருப்பினால், பின்னேயே வந்து வம்பு செய்து, சிரிக்க வைத்துச் சமாதானப்படுத்தி விடுவான். மற்றப்படி ஒருமுறை கூட அவன் இப்படிப் பாராமுகம் காட்டியதில்லை. அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு உள்ளே ஏதோ சூடாய்ப் பரவி நெஞ்சைக் கசக்கியது.

உண்டு முடித்துக் கையைக் கழுவியவனிடம், "போ... போதுமா!" என்றபடி எழுந்தவளின் அருகே வந்து அவள் கட்டியிருந்த ஏப்ரனில் கையைத் துடைத்தவன் பதிலற்றுத் தன் அறைக்குச் சென்று விட்டான். பெரு மூச்சுடன் கிச்சனுக்குச் சென்ற ரம்யா கேக் தயாரிப்பில் இறங்கினாள்.



மறுநாள் திருமண ஆர்டருக்கான உணவுத் தயாரிப்பைக் காலை மூன்று மணியிலிருந்து தொடங்கி விட்டனர் ஹோட்டல் மக்கள்.

இரவு ரம்யா உறங்கியதே இரண்டு மணிக்குத்தான். அடுத்த இரண்டு மணி நேரத்தில் எழுந்து மற்றவர்களுடன் இணைந்து கொண்டாள்.

திருமணத்தை அருகில் இருந்த கோவிலில் முடித்து விட்டு வந்த மணமக்களுக்கும், வந்திருந்தோருக்கும் அவர்களது ஹோட்டலில் தான் உணவுப் பந்தி நடந்து கொண்டிருந்தது.

சக்தியும் ஹரியும் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருக்க... வேலையாட்கள் பரிமாறுவதில் மூழ்கியிருந்தனர்.

திடீரென அவர்கள் இருவரின் அருகே வந்த பார்ட்டி தாங்கள் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்த ட்ரூப் ஆட்கள் கடைசி நேரத்தில் காலை வாரி விட்டதாகவும், ஹரியினால் யாரையேனும் ஏற்பாடு செய்ய முடியுமா என்றும் கேட்டான்.

"க...கச்சேரியா! அதுக்கு நாங்க எங்க போறது? நான் வேணா பாடட்டுமா?" என்றான் சக்தி.

"சார், விளையாடாதீங்க. மாப்பிள்ளையும், பொண்ணும் பார்த்துப் பார்த்து ஏற்பாடு செஞ்சது... இப்படி ஆயிடுச்சேனு ஃபீல் பண்ணிட்டு இருக்காங்க. அவங்க சந்தோஷத்தை எப்படிக் கெடுக்கிறது?"

"அதுக்கு நாங்க என்ன பண்ண முடியும்?" - சக்தி.

"டேய்... இருடா. தெரிஞ்சவங்க யாரையாவது கேட்டுப் பார்ப்போம்..." என்ற ஹரி, "நீங்க போங்க சார். நான் ஒரு பத்து நிமிசத்துல சொல்றேன்..." என்று அவரை அனுப்பி வைத்தான்.

"இந்தாளு அவனையும் பார்ல கூப்பிட்டு வைச்சுத்தான் பேசியிருப்பான் போல மச்சி... அதான் சொதப்பிடுச்சு..." என்றான், சக்தி.

"வெட்டிப் பேச்சுப் பேசாம ஏதாவது யோசியேன்டா பரதேசி!" என்றான், ஹரி.

நகத்தைக் கடித்தபடி தீவிரமாக யோசித்த சக்தி, "மச்சி..." என்றபடி நிமிர்ந்தான்.

"கையில வெண்ணெயை வைச்சுக்கிட்டு ஏன்டா நெய்க்கு அலையணும்?" – சக்தி.

"தெளிவாச் சொல்லுடா."

"என் கூட வா..." என்று அவனை இழுத்துச் சென்ற சக்தி, நேராக ரம்யாவிடம் நிறுத்தினான்.

"ரம்யா, இங்க வாயேன். ஒரு முக்கியமான விசயம் பேசணும்..." என்றான், சக்தி.

"அவளை ஏன்டா கூப்பிடுற?" – ஹரி.

"எதுக்குக் கூப்பிட்ட?" என்றாள் ரம்யா.

"உனக்குக் கிட்டார் வாசிக்கத் தெரியும்தானே?" – சக்தி.

"என்ன... நக்கலா?"



"ப்ச்...டேய் மச்சி... நீ சொல்லுடா. நீ பியானோ வாசிப்பதானே?" என்றான் சக்தி.

"ஆமா. அதுக்கு என்ன இப்போ?" – ஹரி.

"இரண்டு பேரும் நல்லாப் பாடுவீங்கள்ல...?" – சக்தி.

"பாட்டா...! நானா?" என்றான் ஹரி.

"நீதான். ஏழு வருசமாப் பாட்டுக் கத்துக்கிட்டேல்லடா வெங்காயம்... கிளாஸ்ல என்ன செஞ்சே?" என்றான், சக்தி.

"அவன் பாட்டு டீச்சரோட பொண்ணு ஸ்ரீலதாவை சின்சியரா சைட் அடிச்சிட்டு இருந்தான்..." – ரம்யா.

"இப்போ அது ரொம்ப முக்கியம்..." என்றான், ஹரி.

"எனக்குத் தெரியும், நீங்க இரண்டு பேரும் நல்லாப் பாடுவீங்கன்னு... இந்த இரண்டு இன்ஸ்ட்ரூமென்ட்டை வச்சு நாம அவங்க கேட்டதைப் பண்ணிக் கொடுத்துடலாம் மச்சி... வாவ்! ஐ காட் இட். ஐ காட் இட்..." – குதித்தான் சக்தி.

"டேய்...டேய்..." – ஹரி.

"கிட்டார் வாசிக்கணுமா? நானா! என்னால முடி யாது..." – என்றாள், ரம்யா.

ஆச்சரியமாய் அவள் புறம் திரும்பிய இருவரும், "ஏன்?" என்றனர்.

"என் லைஃப்ல இனி கிட்டாரைத் தொடக் கூடாதுன்னு நான் எப்பவோ முடிவு பண்ணிட்டேன்..." – இறுகிய குரலில் பதிலளித்தாள், ரம்யா.

சக்தி, "என்னடா?" என்பது போல் ஹரியைப் பார்க்க... அவன் அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"தாத்தாவுக்குப் பயப்படுறியா?" - என்றான் ஹரி.

"நான் போறேன்..."

திரும்பி நடந்தவளை ஓடிச் சென்று நிறுத்தினான், சக்தி.

"ஒரு தடவை... ஒரு தடவை கன்சிடர் பண்ணு, ரம்யா! ப்ளீஸ்..." - சக்தி.

"புரியாமப் பேசாத சக்தி... பொறந்ததுல இருந்து ஒரு தடவைக் கூட யாரும் என் வீட்ல என்னை அடிச்சதில்லை. ஆனா கிட்டார் வாசிச்சதுக்காக எல்லார் முன்னாடியும் பளார்னு அறைஞ்சார் என் தாத்தா. ஏற்கெனவே அவருக்குப் பிடிக்காத அத்தனை காரியத்தையும் செஞ்சு என் குடும்பத்தை விட்டு ஒதுங்கி நின்னுட்டிருக்கேன் நான். இனியும் என்னால அவங்க வெறுப்பைச் சம்பாதிச்சுக்க முடியாது, சக்தி!" - குரல் நடுங்கப் பொரிந்தாள் ரம்யா.

சக்தி பதிலேதும் பேசாமல் அமைதியாகி விட... அவளருகே நடந்து வந்தான், ஹரி.

"இப்போ நீ நம்ம குடும்பம் என்ன சொல்லும்னோ... தாத்தா என்ன நினைப்பார்னு தெரிஞ்சுக்கணும்னோ அவசியமில்ல. இப்போ நீ கன்சிடர் பண்ண வேண்டிய ஒரே விஷயம் உன் புருசனோட விருப்பம் மட்டும்தான். என் பொண்டாட்டிக்குப் பிடிச்சதை அவ பண்றதுக்கு நான் முழு மனசோட சம்மதிக்கிறேன். தாத்தா வந்து கேள்வி கேட்டாலோ... நம்ம குடும்பத்தில் இருக்கிறவங்க கேள்வி கேட்டாலோ பதில் சொல்ல வேண்டியது நான். நீ இல்ல... யாரைப் பத்தியும் நினைக்காம, நீ உன் மனசைக் கேட்டுச் சொல்லு. இப்போ உனக்குக் கிட்டார் வாசிக்க விருப்பமா, இல்லையான்னு...?" என்றான்.



தலை குனிந்து ஒரு நிமிடம் அமைதியானவள்... நிமிர்ந்து, "நான் வாசிக்கிறேன்," என்றாள்.

"வாவ்! பின்னே என்ன? உடனே போய் அந்த பார் பார்ட்டிகிட்ட மேட்டரைச் சொல்லலாம். மாப்ள, இதுக்கெல்லாம் தனி பேமெண்ட் வாங்கிடுடா!" என்று ஓடிச் சென்றான், சக்தி.

அடுத்த பத்து நிமிடத்திற்கு, "இங்கிலீஷ் பாட்டா சொல்லாதேடி. எனக்குத் தெரிஞ்ச இளையராஜா பாட்டும் சொல்லு. வந்திருக்கிறது நம்ம மக்கள்டி. வெள்ளைக் காரனில்ல..."

"டேய், செவன்டீஸ்ல வந்த பாட்டெல்லாம் எனக்கு எப்படிடா தெரியும்? இந்த... இந்த இங்கிலீஷ் சாங் நீ கேட்டிருக்கதானே!" என்று மாறி மாறிச் சண்டையிட்டு தமிழ், ஹிந்தி பாடல்களைக் கலந்து மெட்லி போல் உருவாக்கி அரை மணி நேரத்தில் மேடையேறினர் இருவரும்.

நீண்ட நாளைக்குப் பிறகு கிட்டாரைக் கையில் தொட்ட வுடன் குஷியாகிப் போனது, ரம்யாவிற்கு. விழிகளில் நீர் கோக்க, அதை அணைத்து முத்த

மிட்டவளைக் கண்டு லேசாய்ச் சிரித்த ஹரி, குனிந்து பியானோவை நோக்கினான்.

"ரெடி ஸ்டார்ட்... ஒன் டூ த்ரீ...."

ரம்யாவின் விரல்கள் மென்மையாக கிட்டாரை மீட்டத் தொடங்கின. சபையில் கூடியிருந்தோரும், வேலையாட்களும் நிமிர்ந்து மேடையில் இருந்த இருவரையும் ஆர்வத்துடன் நோக்கினர்.

அவள் முடித்ததும் பியானோவைத் தொடங்கிய ஹரி,

"பெஹலா... பெஹலா... ப்யார் ஹே...

பெஹ்லி பெஹ்லி பார் ஹே...

ஜான்கே பி அஞ்சானா...

கேசா மேரா ப்யார் ஹே...."

என்று பாட,

ரம்யா உட்பட அனைவரும் திரும்பி அவனை நோக்கினர்.

கண்களை மூடித் திறந்தபடி இதழ்களில் சிரிப்புடன் பியானோவை வாசித்தபடி பாடிக் கொண்டிருந்தவனின் குரல், ஸ்டைல் என அனைத்திலும் ரம்யாவை மெல்ல மெல்ல வீழ்த்திக் கொண்டிருந்தான் அவன்.

"நீரோடை போலவே என் பெண்மை...

நீராட வந்ததேன் என் மென்மை..."

இப்போது ரம்யாவின் குரல் அவனைத் தீண்டிச் செல்ல... அவன் அவளை நோக்கினான்.



"புருசன் பியானோ வாசிக்கிறான். சம்சாரம் பாடுது. செம காம்பினேஷன். இல்லடா லோகேஷ்? ஆனா, இவ இம்புட்டு அழகா தமிழ்ப் பாட்டுப் பாடுவாளா?" – சக்தி முணுமுணுத்தான்.

"மேன் ஷாயர் தோ... நஹின்...

மகர் ஹே ஹசீன்...

ஜப் ஸே தேக்கா மேன்-நே துஜ்கோ... முஜ்கோ...

ஷாயரி... ஆகயி..."

மீண்டும் ஹரியின் குரலில் ஒலித்த ஹிந்திப் பாடல் அனைவரையும் கட்டிப் போட்டது.

அவன் முடித்ததும் அவள் தொடங்கினாள்.

"அச்சமா... நாணமா... இன்னும் வேண்டுமா....

அஞ்சினால் நெஞ்சிலே காதல் தோன்றுமா...

மிச்சமா மீதமா... இந்த நாடகம்...

மென்மையே... பெண்மையே... வா... வா... வா..."

இவ்வாறு மாற்றி மாற்றிப் பாடியபடி தங்களுடைய வாசிப்புத் திறமையையும், பாட்டுத் திறமையையும் உலகத்துக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தனர் இருவரும்.

இருவரும் பாடி முடித்து எழுந்ததும், கரகோஷமும், விசில் சத்தமும் பறந்தது.

சக்தி ஓடி வந்து கை குலுக்கி, "சூப்பர்... சூப்பர்டா ஹரி... ரம்யா, கலக்கலா தமிழ்ப் பாட்டுப் பாடுற...!" என்று புன்னகையுடன் பாராட்டினான்.

"பாட்டுப் பாடினவரு ஹோட்டல் ஓனராம். அந்த கிட்டார் பொண்ணு அவரோட வைஃபாம்..." என்று கூட்டத்துக்குள் பேச்சு பரவியது.

பார் பார்ட்டியும், மாப்பிள்ளை - பெண்ணும் அவர்களருகே வந்து நன்றி கூறிப் புகைப்படம் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டனர்.

"இல்ல... இல்ல. பரவாயில்லை. நீங்க உங்க சடங்குகளைப் பாருங்க..." என்று விலகப் பார்த்த ஹரியின் கரம் பற்றிய ரம்யா,

"ஒன்னும் பிரச்சனை யில்ல. ஃபோட்டோ எடுத்துக்க லாம்," என்று கூற,

குனிந்து அவள் கரத்தை நோக்கி விட்டு நிமிர்ந்து அவள் முகத்தைக் கண்டான் ஹரி.

எதிரே நின்றிருந்தவர்களிடம் தீவிரமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

"இவ இப்போ கையைப் பிடிக்கலாம். நான் தொட்டா மட்டும் தள்ளிப் போடான்னு சொல்லுவா!" என்று முணுமுணுத்தவன்... தன் கையை அவளிடமிருந்து உருவ முயல... ஐந்து விரல்களால் இறுகப் பற்றிக் கொண்டு புகைப்படத்திற்கு போஸ் கொடுத்தாள் ரம்யா.

அன்றிரவு இருவரும் சேர்ந்துதான் இல்லம் திரும்பினர்.

உடை மாற்றி வெளியே வந்தவன் நேராக கிச்சனுக்குச் செல்ல... அவனைத் தொடர்ந்து சென்ற ரம்யா, "ஏதாவது சமைக்கட்டுமா?" என்று வினவினாள்.



"வேண்டாம். பசிக்கல..."

"அப்போ பால் மட்டும் சூடு பண்றேன்..."

"......"

"எங்கே போற? அஞ்சு நிமிஷம் நில்லு. குடிச்சிட்டுப் போயிடு."

"ம்ம்..." - கையைக் கட்டிக் கொண்டு நின்றபடி, கிச்சன் சுவரை வெறித்துக் கொண்டிருந்தான் அவன்.

ஓரக் கண்ணால் அவனை நோக்கியபடி மேல் டோரைத் திறந்து சர்க்கரையை எடுத்தவள்... கதவை மூடாமல் விட்டு விட.. மீண்டும் அவள் நிமிர்கையில் நச்சென அவள் நெற்றியைப் பதம் பார்த்தது கதவு.

"ஆஆஆ..." - வலியில் நெற்றியைப் பற்றிக் கொண்டு குனிந்தவளின் அருகே வேகமாய் ஓடி வந்தான், ஹரி.

"பார்த்துத் திறக்க மாட்டியா? ரொம்ப இடிச்சிடுச்சா? வலிக்குதா! கையை எடுடி..." என்றவன் பரபரவென அவள் நெற்றியைத் தேய்த்தான். அவன் அழுத்தித் தேய்ப்பது மேலும் வலியை ஏற்படுத்தத் தலையைக் குனிந்து அவன் கையிலிருந்து தன் நெற்றியை விலக்கினாள் அவள்.

"எ...என்ன? தேய்க்காட்டி நெத்தி வீங்கிடும்டி... நிமிர்ந்து என்னைப் பார்!" என்றவன், அவள் கன்னத்தைப் பற்றி நிமிர்த்தித் தேய்க்க... வலியில் மீண்டும் அவன் கைகளை விலக்கினாள் அவள்.

கோபத்துடன் அவள் தோளைப் பற்றியவன், "என்ன? இதுக்குக் கூட நான் உன்னைத் தொடக் கூடாதுன்னு நினைக்கிறியா?" என்று வினவ...

எரிச்சலுடன், "ப்ச் வலிக்குதுடா எருமை!" என்றாள்.

"வலிக்குதுன்னு விட்டா... வீங்கிடும்டி!" என்றவன், மெல்லத் தேய்த்தபடி அவளை இழுத்துக் கொண்டு ஹாலுக்குச் சென்றான்.

ஆயின்மெண்ட்டை அவள் நெற்றியில் தடவிக் கொண்டே, "ஊஃப்... ஊஃப்..." எனத் தன்னருகே அமர்ந்து ஊதிக் கொண்டிருந்தவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் ரம்யா.

தனக்கு வெகு அருகே அமர்ந்திருந்தவனிடமிருந்து புறப்பட்ட வாசமும், அவனது வெற்றுத் தோள்களும் என்ன உணர்வை ஏற்படுத்தியதோ... குனிந்து அவன் தோளில் தன் கன்னத்தைப் பதித்தாள்.

ஒரு நிமிடம் உறைந்து பேச்சற்றுப் போன ஹரி, பின்... "ரொ... ரொம்ப வலிக்குதா?" என்று தயங்கி வினவினான்.

"ம்ஹும்..." எனத் தலையாட்டியவள்... அவன் தோளிலிருந்து நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

"பா... பால்..." என்றபடி அவன் எழுந்து அடுக்களைக்குச் செல்ல... அவளும் பின்னேயே சென்றாள்.

தன்னையே நோக்கிக் கொண்டிருந்தவளின் முகம் பார்க்காமல் அவளிடம் பாலை நீட்டியவன்... சூடு பாலை



நொடியில் வாயில் ஊற்றிக் கொண்டு விறுவிறுவென அறைக்குச் சென்று விட்டான்.

தன் அறைக்குச் சென்று படுக்கையில் விழுந்தவளுக்கு உறக்கம் வராமல் போனது. திடீரென நினைவு வந்தவளாய்த் தன் லேப்டாப்பைத் திறந்து அவளும், ஹரியும் சின்ன வயதில் செய்த குறும்பு வீடியோக்கள் அனைத்தையும் எடுத்துப் பார்க்கத் தொடங்கினாள்.

இரண்டு வயது ரம்யாவும், ஐந்து வயது ஹரியும் அந்த வீடியோவில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந் தனர். சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தவள் அறைக் கதவை யாரோ தட்டும் ஒலி கேட்டு எழுந்து சென்றாள்.

தலையணையைக் கையில் பிடித்தபடி ஹரி நின்று கொண்டிருந்தான். விழியைப் பெரிதாக விரித்தவள், "எ... என்னாச்சு?" என்று வினவ...

அவன் அவள் முகத்தைத் தவிர, எங்கெங்கோ பார்வையைப் பதித்து, "நா... நான் லோன்லியா ஃபீல் பண்றேன்..." என்றான்.

உதட்டோரம் சிரிப்பில் நெரிய எட்டி ஹாலை நோக் கினாள்.

அன்று அவள் படுக்கை விரித்திருந்ததைப் போல் அவனும் விரித்திருந்தான்.

தலையணையைத் தூக்கிக் கொண்டு அவன் பின்னே சென்றவள் படுக்கையில் சாய்ந்தாள். நான்கு

மீட்டர் இடைவெளியில் தள்ளிப் படுத்திருந்த இருவரும் மல்லாக்கப் படுத்து விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மெல்ல அவன் புறம் திரும்பிப் படுத்த ரம்யா... "நீ லோன்லியா ஃபீல் பண்ற அளவுக்கு என்ன நடந்தது?" என்று வினவினாள்.

"தெரியல, தனியாப் படுத்திருக்கிறது ஒரு மாதிரி இருந்தது."

"அத்தையை மிஸ் பண்றியா?"

"........."

"இல்ல, நம்ம ஃபேமிலியை மிஸ் பண்றியா?"

"............"

"எனக்கும் கூட அப்பப்ப தோணும். நாமளும் ஷ்யாம், சங்கீ மாதிரி அங்கே நம்ம வீட்டிலேயே இருந்தா நல்லாயிருக்கும்னு. தாத்தாதான் சதி பண்ணிட்டாரே!"

".............."

"ஏன், பதில் பேசாம இருக்க?"

".............."

"ஹரி....."

தன் தலையை மட்டும் திருப்பி அவளை நோக்கியவன், "இப்போ நான் மிஸ் பண்றது என் ஃபேமிலியை இல்ல. என் பொண்டாட்டிய!" என்றான்.

திகைப்புடன் அவனையே இரண்டு நிமிடம் இமைக்காமல் நோக்கிக் கொண்டிருந்தவள், தயங்கியபடி,



"மி..மிஸ் பண்றதாயிருந்தா..இ ஏ...ஏன் அவ்ளோ தூரம் தள்ளிப் படுத்திருக்க?" என்று வினவ...

பேச்சின்றி அவளை நோக்கியவன் மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

அவன் முதுகை வெறித்தபடி ஐந்து நிமிடங்களைக் கடத்தியவள் மெல்ல நகர்ந்து அவனருகே சென்று படுத்து அவனை இறுகக் கட்டிக் கொண்டாள். கண்களை இறுக மூடியபடி மூச்சை அடக்கிய ஹரி, தன் மீது பதிந்திருந்த அவளது விரல்களை நோக்கினான்.

அடுத்த நொடி மறுபுறம் திரும்பி அவள் தோளில் முகம் புதைத்து அவள் இடையைக் கட்டிக் கொண்டான்.

ஏனோ... மனதிலிருந்த பாரம் காணாமல் போய் விட்டதைப் போல்... நெஞ்சு முழுக்க அடைத்துக் கொண்டிருந்த ஏதோ ஒன்று மறைந்து போய் விட்டதைப் போல்... லேசாய் உணர்ந்தாள், ரம்யா.

கையைத் தூக்கி அவன் தலை முடியைக் கோதியவளின் ஸ்பரிசம் உணர்ந்து நிம்மதியுடன் சில நிமிடங்களைக் கழித்த ஹரி நிமிர்ந்து அவள் முகம் நோக்கினான்.

"உனக்கு எதுவுமே தோணலையாடி?"

"ஏ... என்ன?"

"எலும்பு உடைஞ்சு போகுற அளவுக்குக் கட்டிக்கணும்னு... மூச்சுக்குத் தவிக்குற அளவுக்கு முத்தம் கொடுக்கணும்னு?"

"........."

"ஆனா எனக்குத் தோணுது. உன்னை இறுகக் கட்டிக்கிட்டு இத்தனை வருஷமா நீ என்னைப் படுத்துனதுக்கெல்லாம் தண்டனை கொடுக்கணும்னு. நீ போதும், போதும்னு சொல்ற வரைக்கும் முத்தம் கொடுத்து ஒவ்வொரு தடவையும் உன் பின்னாடியே திரிஞ்சதுக்குப் பழி வாங்கணும்னு..."

".........."

"அமைதியாகவே இருந்து என்னைக் கொல்லாதடி!"

".........."

"நான் பைத்தியம் பிடிச்சு ரோட்ல அலையணும் ரம்யா, ரம்யான்னு. அதானே உன் நோக்கம்?"

".........."

அமைதியாய் எங்கோ வெறித்தவளைக் கண்டு பொறுமையற்று அவள் முகம் நோக்கிக் குனிந்தவன், பின் மீண்டும் தலை நிமிர்ந்து...

"இப்போ நான் கிஸ் பண்ணா... ஒரு வாரத்துக்கு என்னை அவாய்ட் பண்ணுவ. அப்படித்தானே?" என்று வினவினான்.

பதில் பேசாமல் அவனையே நோக்கியவள் சற்று எம்பி அவனருகே சென்று அவன் கண்களைத் தன் கைகளால் மூடி விட்டு அவன் இதழ்களில் தன் இதழ்களைப் பதித்தாள்.

அவள் கைகளை விலக்கிக் கண்களைப் பெரிதாக விரித்து ஆச்சரியமாகிப் போனவன்... மறுநொடி தனது



ஆழ்ந்த முத்தத்தினால் அவளைத் திண்டாடச் செய் திருந்தான்.

மூச்சு வாங்க விலகியவளின் கன்னத்தில் தன் கன்னம் தேய்த்து, அவள் கழுத்தில் தன் முகத்தை அழுந்தப் புதைத்தான். மேலும் முன்னேறத் தொடங் கியவனைத் தடுத்துத் தன் முகம் காணச் செய்தவள், "இ...இதுக்கெல்லாம் நல்ல நேரம் பார்க்கணும்னு சாவித்ரி அத்தை சொல்வாங்களே..." என்று கூறக் கடுப்பாகிப் போனவன்...

"நமக்கு மூட் வர்ற நேரமெல்லாம் நல்ல நேரம் தான்!" என்றபடி அவளை நோக்கிக் குனிந்தான்.

அவனது ஏக்கம், தவிப்பு, ஆசை, மோகம் அத்தனையும் கண்டு ஆடித்தான் போனாள் ரம்யா. உதட்டோரம் சிரிப்பில் வளையக் கண் மூடி அவன் முத்தமிடுகையில் அவள் மனம் பறி போனதென்னவோ உண்மைதான். அவனது செயல்பாடுகளில் அவள் மூளை யோசிப்பதை நிறுத்திக் கிறங்கி அவனோடு கலந்து போனதையும் அவள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

## 11 *I love you!*

எனக்கும், என் டெட்டி பொம்மைக்கும் இருக்கிற உறவு அம்மா – பையனுக்கு இடையிலிருக்கிற உறவு மாதிரி. "பொம்மை வைச்சுத் தூங்குற வயசா உனக்கு?", "அக்காவைப் பாருடா கண்ணு, டாயோட தூங்குறா," என்னைச் சுத்தி

யிருக்கிற எல்லாரும் ஏதேதோ சொல்வாங்க. சொல்லிட்டுப் போகட்டும்! என் டெட்டிக்கு முன்னாடி அந்தப் பேச்செல்லாம் எனக்குத் தூசுதான். அதுக்கு மட்டும் வாயிருந்தா... என் அணைப்போட அழுத்தத்திலேயே நான் மனசுல என்ன நினைக்கிறேன்னு சொல்லிடும். சிரிப்பும், சந்தோசமுமா இருக்கும் போதும் சரி, அழும்போதும் சரி, என்னோட சந்தோஷக் கறையையும், கண்ணீர்க் கறையையும் தனக்குள்ள வாங்கிக்கிற ஒரே உயிரற்ற ஜீவன் என் டெட்டிதான்...

ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...

மறுநாள் காலை ஹரி குளித்துத் தலை துவட்டியபடி வெளி வருகையில் அவன் மனைவி சமையலறையில் வேலையில் ஈடுபட்டிருந்தாள். முழங்கால் வரையிலான கறுப்பு நிற ஸ்கர்ட்டும், ஆரஞ்சு நிற டி-ஷர்ட்டும் அணிந்திருந்தாள். சின்னதாய் இருந்த டி-ஷர்ட் அவள் கையைத் தூக்கி மேல் டோரைத் திறக்கையில் மேலேறிக் கொண்டு, அவளது வெள்ளை இடையைப் பளிச் பளிச் எனக் காட்டிக் கொண்டிருந்தது.

அருகே சென்று அவள் இடையை வளைத்து அணைத்துக் கொண்டவன், அவள் கூந்தலில் முகம் புதைத்து... "ஹே... பொண்டாட்டி!" என்றழைத்தான்.

"ஹ்மம்..."

"நான் எவ்ளோ சந்தோஷமா இருக்கேன், தெரியுமா?"

"........."



"இத்தனை வருஷம் இதுக்காகத்தான் காத்துட்டு இருந்த மாதிரி, மனசுல அவ்ளோ அமைதி. திடீர்னு பூலோகத்தைத் தாண்டிச் சொர்க்கத்துல தொபுக்கடீர்னு விழுந்துட்ட மாதிரி ஃபீலிங். சந்தோஷமும், சுகமும் மட்டும் தான் உடம்பு முழுக்கப் பரவியிருக்கு. நான் இவ்ளோ உற்சாகமா என் லைஃப்ல இருந்ததே இல்லடி!" என்றவன், அவள் காது மடல்களில் முத்தமிட்டு, "தேங்க்ஸ் பொண டாட்டி!" என்றான்.

அவளைத் தன் புறம் திருப்பித் தன் முகம் காணச் செய்து, "உனக்கும் அப்படித்தான் தோணுதா?" என்று வினவினான்.

பதில் கூறாமல் அவன் கண்களை நோக்கித் தலையை மட்டும் ஆட்டியவளின் நெற்றியில் இதழ் பதித்து அவளை அணைத்துக் கொண்டான்.

"இதுவரைக்கும் என் வாழ்க்கையில நடந்த அத்தனையும் கனவு மாதிரியும், இப்போ இந்த நிமிஷம் நடக்குறதுதான் நிஜம்னும், சரின்னும் தோணுது. இஷ்டமில்லாம, பெரியவங்க கட்டாயத்துக்காக நடந்தது தான் இந்தக் கல்யாணம்னாலும், மனசுல இப்போ இருக்குற திருப்தியும், நிம்மதியும் இதுதான்டா நீ எதிர் பார்த்த வாழ்க்கை, இதுதான்டா நீ தேடுற சந்தோசம்னு எனக்கு உணர்த்துற மாதிரி இருக்குடி. ரம்யா... ஐ நீட் யூ... என் வாழ்க்கை முழுசுக்கும் நீ மட்டும்தான்டி வேணும்."

கண்களை மூடி அவன் மார்பில் தன் முகத்தை அழுந்தப் புதைத்தாள், ரம்யா. அவள் உச்சியில் தலை

சாய்த்து, அவளை அணைத்தபடி நின்றிருந்தவன், "சரி, நேத்து நைட் எனக்கொரு முத்தம் கொடுத்தியே, அது எனக்கு இப்போ மறுபடியும் வேணும்..." என்றான்.

விழி விரித்து அவனை நோக்கியவள் "ம்ஹூம்..." என மறுத்துத் தலையசைத்தபடி திரும்பிக் கொள்ள.. "ப்ளீஸ், ப்ளீஸ்டி பொண்டாட்டி..." என்று மீண்டும் அவளைத் தன் புறம் திருப்பியவனின் முகம் கண்டு லேசாய்ச் சிவந்தபடி, "நீ... நீ கண்ணை மூடிக்கோ!" என்றாள்.

"மாட்டேன்."

"ப்ளீஸ்டா..."

"ஓகே!" என்றவன் தன் கண்களை மூடிக் கொள்ள.. மெல்ல எம்பி அவன் முகத்தைத் திருப்பி அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள். சிரிப்பில் உதடுகள் விரிய... கண் திறந்து அவளை நோக்கியவன்...

"ஏய்...ஏய்... இதெல்லாம் சீட்டிங்... சீட்டிங்.... நான் ஒத்துக்க மாட்டேன். என் லிப்ஸ் இங்க இருக்கு. நீ என்ன அங்கே கொடுக்கிற? நீ முத்தம் கொடுக்கிற வரைக்கும் நான் உன்னை விடுறதா இல்ல!" என்று அடம்பிடிக்க... வேறு வழியின்றி எம்பி அவன் இதழ்களில் லேசாக முத்தமிட்டு நிமிர்ந்தாள்.

அடுத்த நொடி அவளைத் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டவன் தன்னோடு சேர்த்துத் தூக்கி னான். தடுமாறி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்ட வளின் இதழ்களில் மீண்டும் மீண்டும் முத்தமிட்டு நிமிர்ந்



தவன், "கண்டிப்பா இன்னிக்கு ஹோட்டலுக்குப் போய்த் தான் ஆகணுமா?" என்று வினவினான்.

லேசாய்ச் சிரித்தபடி அவன் தோளில் சாய்ந்து முகத்தை மறைத்துக் கொண்டவளிடம், "எனக்கு உன்னை விட்டு நகர மனசே இல்லடி. எப்பவும் உன் பக்கத்துல உன்னை உரசிட்டே இருக்கணும் போல இருக்கு. ஏதோ மாயம் பண்ணிட்ட. ஏன்டி? இந்த சொக்குப் பொடின்னு ஏதோ சொல்றாங்களே, அது எதையும் என் மேல தூவிட்டியா?" என்று வினவ...

அவனை முறைத்துப் பார்த்தவளிடம், "அப்படிப் பார்க்காதடி. அப்புறம் உன்னை நான் இங்கிருந்து நகர விட மாட்டேன்!" என்றவன் அவளை மீண்டும் அணைத்து முத்தமிட்டு விலகிச் சென்றான்.

**அ**ன்று ஹோட்டலுக்குள் சிரிப்பும், துள்ளலுமாய் நுழைந்த ஹரியைக் கண்டு ,"என்ன மச்சி, பழையபடி பல்பு பிராகாசமா எரியுது. சண்டையெல்லாம் மாறிச் சமாதானம் ஆயிட்ட போல!" என்று சக்தி கேலி செய்ய... சிரித்தபடி, "போடா..." என்று அவன் தோளில் அடித்து விட்டுச் சென்றான்.

கல்லாவில் அமர்ந்து கொண்டு பக்கவாட்டில் தெரிந்த சமையலறையையே அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான், ஹரி.

அருகே யிருப்பவர்களிடம் சிரித்தபடி அவ்வப் போது தோன்றும் மனைவியைக் காண்பதற்காக இந்த ஏற்பாடு.

"என்னடா அங்கேயே பார்த்துட்டு இருக்க? ஒன்னு பில் போடு. இல்ல, எந்திரிச்சுப் போ. வேலை நேரத்துல ஏன்டா மந்தமா இருக்க?" - சக்தி.

"அண்ணா... அவர் பார்வை யெல்லாம் கிச்சன் பக்கம்தான் இருக்கு. அவரை எழுப்பி விட்டுட்டு நீங்க உட்காருங்க. கஸ்டமர் பில்லுக்காக வெயிட் பண்றார்!" - பழனி.

"இ...இல்ல மச்சி, இதோ பில் போடுறேன்," என்று தப்புத் தப்பாக விலை அடித்தவனின் தோளைப் பற்றி இறக்கி விட்டுத் தான் சென்று அமர்ந்தான் சக்தி. "சா... சாரி மச்சி!" என்றவன் தலையைக் கோதியபடியே எழுந்து நின்றான்.

திடீரென நினைவு வந்தவனாக, "டேய் சக்தி... நான் இன்னிக்கு டேபிள் மெனு என்னன்னு டேஸ்ட் பண்ணவே யில்லையே?" என்றபடி வேகமாகச் சமையலறையை நோக்கி ஓடப் பார்க்க... அவனை எட்டிப் பிடித்து நிறுத்திய சக்தி, "இன்னிக்கு நீ லேட்டா வந்ததால நானே அதை யெல்லாம் பார்த்துட்டேன்!" என்றான்.

"ஓ... எ...எம்ப்ளாயீஸ்-க்கு நான் குட் மார்னிங் சொல்லவேயில்லை. போய்ச் சொல்லிட்டு வரட்டுமா?"

"டேய்... நீ வேலைக்கு வந்ததே குட் ஆஃப்டர்நூன் சொல்ற நேரத்துக்குத்தான். அதனால நாளைக்கு விடிஞ் சப்புறம் குட் மார்னிங் சொல்லிக்க!" - சக்தி.

"இன்னிக்கு ஏன் எல்லாம் தப்பாவே நடக்குது?" - ஹரி.



"நீங்க எங்க ஜி சுயநினைவோட இருக்கீங்க? கனவுல மிதக்குறவன் மாதிரி இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் போயிட்டு வந்துகிட்டே இருக்க. பேசாம நீயும், உன் சம்சாரமும் லீவ் போட்டு வீட்லயே இருந்துட வேண்டியதுதானே?"

"அதைத்தான் சொன்னேன். அவ எங்க கேட்டா?" என்று முனகியபடியே திரும்பியவன் கையில் தட்டை ஏந்திக் கொண்டு வெளியே நடந்து வந்த ரம்யாவைக் கண்டு முகம் விகசிக்க... அழகாய்ச் சிரித்தபடி அருகே சென்றான்.

நான்காவது டேபிளில் அமர்ந்திருந்த கஸ்டமருக்குப் பரிமாறி விட்டுத் திரும்பியவளின் அருகே சென்று கண்கள் மின்னச் சிரிப்புடன் அவள் முன்பு நின்றான், ஹரி.

அவன் சிரிப்பைக் கண்டு தன் பார்வையைத் திருப்பிய ரம்யா, சுற்று முற்றும் நோக்கியபடி, "எ... என்ன?" என்று வினவ... அவன் பதில் கூறாமல் அவள் முகத்தையே நோக்கினான்.

கையிலிருந்த தட்டை இறுகப் பற்றியபடி தலை குனிந்தவள், அவனைக் கடந்து செல்ல முயற்சிக்க... அவன் வேண்டுமென்றே அவள் வழியை அடைத்துக் கொண்டு நின்றான்.

அவள் வலதுபுறம் திரும்புகையில் அவனும் திரும்பினான். அவள் இடதுபுறம் வருகையில் அவனும் இடதுபுறம் நின்றான். திகைப்பும், சிரிப்புமாய் அவனை நிமிர்ந்து நோக்கியவள் அவன் தோளில் அடித்து அவனை இடித்துக் கொண்டு முன்னே சென்றாள்.

சிரிப்புடன் கழுத்தைத் தேய்த்தபடி திரும்பியவனை ஹோட்டலே வேடிக்கை பார்த்தது.

"டேய் மானத்தை வாங்காதடா. எல்லாரும் வேடிக்கை பார்க்குறாங்க!" என்று அவன் காதைக் கடித்த சக்தி, அப்போதும் ஈயென நின்றிருந்தவனை இழுத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

மதிய இடைவெளியில் அனைவரும் சாப்பிட வெளியே வரத் தொடங்கவும், "ரம்யா எங்கே?" என்று பழனியிடம் ஆர்வமாய் வினவினான், ஹரி.

நக்கலாகச் சிரித்தபடி அவன் புறம் திரும்பிய பழனி, "உங்க சம்சாரம் கிச்சன்ல இருக்காங்க!" என்று கூற... "அதுவும் தனியாஆஆஆ..." என்றாள், செல்வி.

"என்ன?" என்றபடி வேகமாக எழுந்தவன்... பின் நின்று, தொண்டையைச் செருமிக் கொண்டு, "நீ... நீங்க சாப்பிடப் போகலயா?" என்று வினவ...

"டேய் பழனி, ஓனர் நம்மளைத் துரத்தப் பார்க்கிறார்டா. பூஜை வேளைக் கரடியால்லாம் நாங்க இருக்க மாட்டோம் ஓனர்!" என்று சிரித்தபடியே பழனியை அழைத்துக் கொண்டு வெளியேறினாள், செல்வி.

விரைவாகச் சமையலறையை நோக்கி ஓடியவன் இடுப்பில் கை வைத்தபடி தன் ஐ-பேடில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தவளின் அருகே சென்றான். அவசரமாக நுழைபவனைக் கண்டு பதறி, "எ... என்னாச்சு?" என்று வினவியவளை இழுத்துத் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டான்.



"நான் உன்னை எவ்ளோ மிஸ் பண்ணேன் தெரியுமா? என்னால... என்னால அங்க தனியா இருக்கவே முடியலடி!"

"ஹா...ஹா... ஒரே ஹோட்டலுக்குள்ள ஒன்னா தான இருக்கோம்?"

"தெரியலடி. நீ எவ்ளோ பக்கத்துல இருந்தாலும் நான் உன்னை இன்னும் மிஸ் பண்றதாவே நினைக்கிறேன். ஏன் இப்படி ஆயிட்டேன்னு சத்தியமாத் தெரியல!"

"பைத்தியம்."

"ஆமா... உன் மேல பைத்தியம்தான். மேட்லி... பேட்லி... ஐ நீட் யூ..." என்றபடி அவள் இதழ் நோக்கிக் குனிந்தவனின் நெற்றியை ஒற்றை விரலால் பற்றி நிறுத்தியவள், "இது ஹோட்டல். நம்ம வீடு இல்ல!" என்றாள்.

"பரவாயில்லை."

"என்ன பரவாயில்லை. லூசு மாதிரி உளறாம தள்ளிப் போ."

"முடியாதுடி..."

"தள்ளிப் போ..." அவன் தோளைப் பற்றி விலக்கியவளின் இடையை இறுகப் பற்றிக் கொண்டு அருகேயிழுத்தவன்... "ஐ பேட்லி வாண்ட் டு கிஸ் யூ. இவ்ளோ நேரம் நான் பொறுத்ததே பெரிய விசயம். இதுல உன்னைப் பார்த்ததும், அமைதியா விலகிப் போகச் சொல்றியா? சத்தியமா முடியாதுடி!" என்றான்.

அவன் வார்த்தைகளைக் கேட்டு ஜில்லென ஏதோ ஒன்று உள்ளே விறுவிறுவென உடல் முழுக்கப் பரவிப் புதிதாய் ஓர் சுகத்தைக் கற்றுத் தந்தது.

அவனையே பார்த்தபடி மெல்லக் கண் மூடிய வளின் கன்னம் வருடி அவள் இதழ்களில் அழுந்த முத்தமிட்டான் அவன்.

அவன் தலைமுடியைக் கோதியபடி அவளும், அவள் இடையை இறுகப் பற்றியபடி அவனும் தங்களது முத்தத்தில் லயித்துப் போயிருந்த சமயம், "எக்ஸ்க்யூஸ் மீ!" என்று கதவைத் தட்டினர் பழனியும், சக்தியும், இன்ன பிற மக்களும்.

சட்டெனப் பிரிந்த இருவரும் ஆளுக்கொரு புற மாய்த் திரும்பி நிற்க... "என்ன நடக்குது இங்க?" என்று முறைத்தபடி அனைவரும் உள்ளே நுழைந்தனர்.

"முதல்ல கிச்சனுக்குள்ள ஒரு செக்யூரிட்டி கேமரா வைக்கணும் சக்திண்ணா. யார் திருட்டுத்தனம் பண்றாங் கன்னு கண்டுபிடிக்கிறதுக்கு?" என்று கூறிய செல்வி யிடம்...

"குட், வெரி குட் ஐடியா, செல்வி. இந்த மாதிரி நல்ல நல்ல யோசனைகளை அடிக்கடி நீ சொல்லணும், அப்போதான் ஹோட்டலோட தரத்தை இம்ப்ரூவ் பண்ண முடியும்..." என்ற ஹரி... தொடர்ந்து, "வேலையைப் பாருங்க எல்லாரும்..." எனக் கூறி விட்டு வெளியே ஓட... அனைவரும் கோரஸாய் நகைத்தனர்.

அன்றிரவு சமையல் செய்து கொண்டிருந்தவளிடம் வம்பு செய்து கொஞ்சி, மிஞ்சி இரவுச் சாப்பாட்டை முடித் தான் ஹரி. உண்டு முடித்ததும் உறங்கத் தன் அறைக்குள் நுழையப் பார்த்தவளைக் கைப் பற்றி நிறுத் தியவன்... "அங்கே எங்கே போற?" என்று வினவினான்.



"இது என்ன கேள்வி? தூங்கத்தான்!" என்றவளை முறைத்து, "என்னடி, நக்கலா?" என்றவன், ஒரு கையால் அவள் இடையைப் பற்றித் தூக்கிக் கொண்டு தன் அறையை நோக்கி நடந்தான்.

"ஏ... எங்கேடா போற?"

"என் ரூமுக்கு. இனிமே இரண்டு பேருக்கும் ஒரே ரூம்தான்."

"டேய்... கண்டிஷன் நம்பர் 2-ஐ மறந்துட்டியா?"

"அதோட வேலிடிட்டி நேத்து நீ எனக்கு முத்தம் கொடுத்தப்பவே முடிஞ்சிடுச்சுடி."

"நான் போட்ட கண்டிஷனோட வேலிடிட்டி எப்போ முடியணும்னு நான்தான் முடிவு பண்ணணும்."

"அதனால இப்போ என்ன பண்ணணும்ற? நீ உன் ரூம்லயும், நான் என் ரூம்லயும் படுக்கணுமா! சத்தியமா முடியாதுடி என்னால. அப்புறம் உன் ரூம் கதவை உடைச்சு நான் உன்னை ரேப் பண்ணாலும் ஆச்சரியப் படுறதுக்கு இல்ல. அந்த அளவுக்கு நீ என்னைப் பைத்தியம் ஆக்கி வைச்சிருக்க."

"ச்சீ! பேச்சைப் பாரு. ஹால்லயே படுத்துக்கலாம். நான் உன் ரூம்க்குள்ள வர மாட்டேன்."

"ஹால்? எனக்கும் ஹால்தான்டி பிடிச்சிருக்கு. ஏன்னா அங்கதான் கம்ஃபர்டபிளா இருக்கு!" எனக் கூறிக்

கண்ணடித்தவனை அவள் முறைக்க.... அவள் கழுத்தில் முகம் பதித்துத் தன் மீசையால் குறுகுறுப்புக் காட்டிச் சிரிக்க வைத்தான்.

"ஆஆஆ... கூசுது... கூசுதுடா பன்னி!" என்று கிளுகிளுத்துச் சிரித்தவளை மேலும் வம்பு செய்து சிரிக்க வைத்து ஆர்வமாய் அவள் மீது படர்ந்தான் ஹரி.

அன்று மட்டுமல்ல. இது தினமும் தொடர்ந்தது.

அவன் மிகவும் மகிழ்ச்சியாய் இருப்பதாய்த் தோன்றியது ரம்யாவிற்கு. பொதுவாகவே சிரிப்பும், துள்ளலுமாய் அனைவரையும் மகிழ்ச்சிப் படுத்துபவன் இப்போது கூடுதல் உற்சாகத்துடன் வலம் வருவதாக உணர்ந்தாள். முகம் முழுக்கப் பரவியிருந்த சிரிப்பு அவனை மேலும் அழகாகக் காட்டிக் கொண்டிருந்தது.

சக்தி, பழனியிலிருந்து தொடங்கி ஷ்யாம்வரை அனைவரும் இருவரையும் கேலி செய்து மகிழ்ச்சி யடைந்தனர். இருவரும் இணையக் காத்திருந்த அத்தனை ஜீவன்களும் சந்தோஷத்தில் திளைத்திருந்ததாய்த் தோன்றியது.

ஆனால்... ஆனால்.... அவள் மட்டும் ஏன் ஆழ் மனதுக்குள் ஏதோ ஒரு மூலையில் சின்னதாய் ஓர் வெற்றிடத்தை உணர்கிறாள்? அவன் புன்னகைக்கையில் தானும் புன்னகை புரிகிறாள். அவன் முத்தமிடுகையில் மனம் தொலைக்கிறாள். அவனுடன் உறவு கொள்கையில் உலகையே மறந்து விடுகிறாள். அவனுக்கு நிகரான அத்தனை சந்தோசங்களையும் தானும் அடைந்திருக் கிறாள். ஆனாலும் ஏன் இந்த வெறுமை? ஏதோ



ஒன்றை... மனம் அவனிடம் தேடுகிறதே... என்ன அது? யோசனையிலேயே அந்த நாளைக் கடத்தியவள் வீடு திரும்பிய பின்பும்கூட யோசித்தபடியேதான் இருந்தாள்.

அன்று இரவு தாமதமாக வீடு திரும்பிய ஹரி... குறுக்கும், நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தவளின் அருகே சென்று, "ஹாய் பொண்டாட்டி!" என்றபடியே அவளை அணைத்துத் தூக்கிச் சுற்றினான்.

அவன் இறக்கி விட்டதும் தயங்கித் தலை குனிந்த வளின் முகம் பற்றி, "உனக்கு நான் ஒரு குட் நியூஸ் கொண்டு வந்திருக்கேன்..." என்று கூற...

என்ன என்பது போல் ஆர்வமாய் அவன் முகத்தை நோக்கினாள், ரம்யா.

"லாஸ்ட் டைம் நம்ம ஹோட்டல்ல நடந்த வெட்டிங்ல நம்ம பர்ஃபார்மென்ஸைப் பார்த்துச் சில பெரிய தலைகள் கிட்ட யிருந்து நிறைய வெட்டிங் ஆர்டர்ஸ், பார்ட்டி ஆர்டர்ஸ்லாம் வந்திருக்கு நமக்கு. அவங்க எல்லாரும் உன் பர்ஃபார்மென்ஸையும் எதிர்பார்க்கிறாங்க."

"நா... நானா? எல்லா... எல்லா பார்ட்டிஸ், ஃபங்ஷன்ஸ்லயும் நான் எப்படி வாசிக்க முடியும்? தாத்தாவுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா என்ன ஆகுறது?"

"குட். நியூஸே அங்கதான் இருக்கு. நீ நம்ம ஹோட்டலுக்காக கிட்டார் வாசிக்கிறதுல தனக்கு எந்த அப்ஜெக்‌ஷனும் இல்லைன்னு தாத்தாவே சொல்லிட்டார்."

"எ... எப்படி? தாத்தா... தாத்தா சொன்னாரா? உனக்கு எப்படித் தெரியும்? யாருடா சொன்னா?" என்று பரபரத்தவளின் கரம் பற்றி முத்தமிட்டு...

"அந்த வெட்டிங் முடிஞ்ச அடுத்த நாளே தாத்தாவைப் பார்த்தேன் நான். என் பொண்டாட்டி இனி என்ன பண்ணனும், ஏது பண்ணனும்னு டிசைட் பண்ண வேண்டியது நான்தான். அதனால நீங்க இனிமே அவ விசயத்துல தலையிடாதீங்கன்னு சொன்னேன். அவர் அவளுக்கும், ஹோட்டலுக்கும் நல்ல பேர் வாங்கிக் கொடுக்கிற விசயங்களை நான் தடுக்க மாட்டேன். அதனால அவ நம்ம ஹோட்டல்ல கிட்டார் வாசிக்கிறது உனக்கு ஓகேன்னா, எனக்கும் ஓ.கேதான்னு சொல்லிட்டார்!" என்றான் அவன்.

"நிஜமா? நிஜமாவா!" என்று துள்ளிக் குதித்த ரம்யா, "இனிமே நான் தாத்தாவுக்குப் பயப்படாம கிட்டார் வாசிக்கலாமா?" என்று வினவ...

கடகடவெனச் சிரித்தவன், "தாத்தா முன்னாடி நீ ஸ்பெஷல் பர்ஃபார்மன்ஸே கொடுக்கலாம்," என்றான்.

மகிழ்ச்சியில் தாவி அவனை அணைத்துக் கொண்டு, "தேங்க்ஸ்... தேங்க்ஸ்டா ஹரி... ரொம்ப, ரொம்ப தேங்க்ஸ்!" என்றவளின் தலையைத் தன் தோளில் அழுத்தித் தன்னோடு தூக்கிக் கொண்டவன், "உன்னோட ஆசைகளை நிறைவேத்தி வைக்கிறது மட்டும் தான் என்னோட இப்போதைய ஆசையே. சரியா?" என்றான்.

நிமிர்ந்து அவன் கன்னத்தில் தன் இதழ்களைப் பதித்தவளைக் கண்டு முகம் மாற... ஆர்வத்துடன் அவளை நோக்கிக் குனிந்தான், ஹரி.



அவளை முத்தமிட்டு நிமிர்ந்தவன், "ச்சே, சோஃபா கம்ஃபர்டபிளாவே இல்லடி!" எனக் கூறிச் சிரிக்க... தயங்கித் தன் விரல்களைப் பார்த்தபடி குனிந்தவள், "ஹரி...." என்றழைத்தாள்.

"ம்ம்?" – ஹரி.

"நான்... நான் ஒன்னு கேட்டாத் தப்பா எடுத்துக்க மாட்டியே?" – ரம்யா.

"என்ன கேட்கப் போற?"

"இ... இல்ல... இ... இது மட்டும் வாழ்க்கைக்குப் போதும்னு நினைக்கிறியா?"

"எது....?"

"வ...வந்து..."

"சொல்லுடி!"

அவன் கைகளை விலக்கிச் சற்றுத் தள்ளி அமர்ந்தவள், அவன் முகம் பார்க்காமல், "செ... செக்ஸ் மட்டும் இருந்தாப் போதுமா? இ... இதை வைச்சு எப்படி மீதமிருக்கிற வாழ்க்கையை ஓட்டுறது? நீ என்னைக் காதலிக்கிறியா இல்லையான்னு எதுவுமே தெரியாம... நான்... நான் எப்படி உன் கூட இதை மட்டும்... இ... இப்படி வாழ முடியும்? இதுவரைக்கும் ஒரு தடவை கூட... நீ... நீ என்னைக் காதலிக்கிறதா சொன்னது இல்ல... இது... இது வெறும் பூட்டுன அறைக்குள்ள இருக்குற ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலிருக்கிற இனக் கவர்ச்சின்னா... அது... அது ரொம்ப நாளைக்கு

நிலைக்காது. நான் நிறைய யோசிச்சு....” என்று அவள் முடிப்பதற்குள்...

“ஷட் த ஹெல் அப்!” என்று கர்ஜித்தபடி எழுந்து நின்றான் ஹரி.

மூச்சு வாங்கக் காலர் பட்டனைக் கழற்றியவனின் முகம் முழுதும் கோபத்திலும், ஏமாற்றத்திலும் சிவந்து போயிருந்தது. தலையை அழுந்தக் கோதியபடி மறுபுறம் திரும்பி நின்றவன்...

“எ... என்ன பேசுறோம்னு யோசிச்சே பேச மாட்டியாடி?” என்றான்.

“ஹரி... நான்...”

“உன்... உன் வார்த்தை ஒவ்வொன்னும் என்னை எவ்ளோ கஷ்டப்படுத்தும்னு நினைச்சுப் பார்க்காமதான் பேசுவியா எப்பவும்? ரம்யா... இன்னும்... இன்னும் எவ்ளோதான்டி என்னைக் காயப்படுத்தப் போற?”

“ஹரி... நான் சொல்ல வர்றதைப் புரிஞ்சுக்காம...”

“நீ பேசாதடி. தயவு செஞ்சு பேசாத. எதிர்ல இருக்கிறவனைச் சுக்கு நூறா உடைச்சுப் போட்டுடுற வலுவான வார்த்தைகள்... எவ்ளோ அசால்ட்டா உச்சரிக்கிற நீ? எல்லாமே நீதான்னு கேனத்தனமா இத்தனை வருஷமா உன் பின்னாடியே திரிஞ்சவனுக்கு... நீ கொடுக்கிற பட்டமாடி இது?”

“பைத்தியமா நான் காதலிக்கிற என் அத்தை பொண்ணு... என் பொண்டாட்டி, என்னை நீ வெறும் செக்ஸ்க்காக மட்டும்தான் யூஸ் பண்றன்னு என் கண்ணு



முன்னாடி சொல்றதைக் கேட்கவாடி நான் இத்தனை நாளா இவ்ளோ சந்தோஷத்தை அனுபவிச்சேன். ம்?”

“ஹரி... நான்... நான் அப்படிச் சொல்லவே இல்லடா!” - ரம்யா.

“எந்த நொடி, எந்த நிமிஷம் நான் உன்னைக் காதலிக்கலன்னு தோணுச்சுடி உனக்கு? அப்போ நான் ஒவ்வொரு தடவை உன்னைக் கிஸ் பண்ணும் போதும், உனக்கு நான் வெறும் பொறுக்கியாத்தான் தெரிஞ் சுருக்கேன் இல்ல? காதலனா... கணவனா... நீ என்னை ஒரு தடவை கூடப் பார்த்ததில்லையாடி? அவ்ளோ மட்ட மானவனாடி நான்? இத்தனை வருஷமா என் கூடவே வளர்ந்த உனக்கு என்னைப் பத்தி தெரியாதா? எதை வைச்சு நான் உன்னைக் காதலிக்கலன்னு சொல்ற?”

“ஹரி... இல்லடா...”

“என்னிக்குடி நீயும், நானும் மனசுல இருக்கிறதை ஒருத்தருக்கொருத்தர் வெளிய சொல்லியிருக்கோம்? நான் சொல்லாட்டி உனக்குத் தெரியாது, நான் உன்னைக் காதலிக்கிறேன்னு? சரி. இப்போ சொல்றேன். நான் உன்னைக் காதலிக்கிறேன்டி. இன்னைக்கு, நேத்து இல்ல. இருபது வருஷமா... உன்னை மட்டும்தான் காதலிக்கிறேன். அது... நீ என்னை விட்டு இன்னொ ருத்தன் பின்னாடி போகும் போதுதான் புரிஞ்சது.”

“ ‘இவன்தான் என் லவ்வர்!’னு நீ ஒருத்தனை எனக்கு அறிமுகப்படுத்தி வைக்கும்போது... எனக்கு ஏன் அப்படிக் கோபம் வந்தது, என்னால ஏன் நீ அவன் கூடச்

சுத்துறதை ஏத்துக்க முடியலன்னு அப்போ தெரியல. நாமதான் வேற ஒரு பொண்ணைக் காதலிக்கிறோமே, அந்த மாதிரி இவளும் ஒருத்தனைக் காதலிக்கிறானு என் மனசுக்கு நான் சொன்ன எதுவும் என்னைச் சமா தானப்படுத்தல. அவ எப்படி என்னை விட்டுட்டு வேற ஒருத்தனைத் தேடலாம்னு மனசு உன்னைச் சுத்தி மட்டுமே யோசிச்சது. நீ அவனை லவர்னு கை காட்டினப்போ அவன் மேல கொலைவெறியே வந்தது.

"நீ அரைப் பாவாடை போட்ட காலத்துல இருந்து ஒன்னாவே சுத்தி, ஒன்னாவே தூங்கி ஒரே வீட்டுக்குள்ள வளர்ந்த உன்னை நான் என்னிக்குமே வேற மாதிரி பார்த்ததேயில்ல. ஆனா? நான் போடுற சட்டை, கட்டுற வாட்ச் மாதிரி... எனக்கான... என்னோட பொருளா இருந்த நீ... உன்னை... எப்படிடி வேற ஒருத்தனுக்கு என்னால விட்டுக் கொடுக்க முடியும்?

"யோசிச்சுப் பார்த்தா... என்னோட இத்தனை வருஷ வாழ்க்கையும் உன்னைச் சுத்தி மட்டுமே தான் இருந் திருக்குன்னு தோணுது. ரம்யா ஸ்கூலுக்குப் போயிட் டாளா... ரம்யா காலேஜ்ல இருந்து வந்துட்டாளா... ரம்யா சாப்பிட்டாளா... தூங்கிட்டாளான்னு உன்னைப் பத்தின எல்லாப் பொறுப்பையும் நம்ம குடும்பம் என் தலைல கட்டுனப்போ தெரியல எனக்கு... நீ இப்படி என் நினைப்பு முழுக்க உட்கார்ந்துகிட்டு என்னை ஆட்டி வைப்பன்னு...

"நான் உன்னைக் காதலிக்கிறேன்டி. உன்னை மட்டும்தான் காதலிச்சுட்டு இருந்திருக்கேன். அப்பவும்... இப்பவும்...! வேற ஒரு பொண்ணு மேல எனக்குக் காதல்



இருக்கிறதா நினைச்சு நான் சுத்துன நாட்களை நினைச்சா இப்போ எனக்கு முட்டாள்தனமா தெரியுது. இந்த வார்த்தை அந்தப் பொண்ணை எவ்ளோ வெறுப் பேத்தும்னு எனக்குத் தெரியும். ஆனா... என் மனநிலை இதுதான்டி... என் கூடவே என்னோடவளா... வளர்ந்த உன்னைத் தவிர... என்னால வேற யாரோடயும் வாழ்ந் திருக்க முடியாதுன்றதுதான் சத்தியமான உண்மை.

"பூட்டுன அறைக்குள்ள இருக்கிறதால இனக் கவர்ச்சியா? ஏன்டி இதுக்கு முன்னாடி நானும் நீயும் ஒரே ரூம்க்குள்ள இருந்ததேயில்லையா? நீ வயசுக்கு வந்த காலத்துல கூட உன் அப்பா அடிச்சா நீ நேரா... என் ரூம்க்கு வந்து... என் கூட ஒரே படுக்கைலதான் படுப்ப... ஏன்? காலேஜ் சேர்ந்தப்புறம் நீயும், நானும் பாதி நாட்கள் அவுட்-ஹவுஸ்ல தான் கழிச்சோம். அங்க உன்னையும், என்னையும் தவிர யாரு இருந்தா...? அப்போல்லாம் எனக்கு உன் மேல தோணாத விசயம், இப்போ ஏன் தோணனும்னு யோசிச்சுப் பார்க்க மாட்டியா? எப்படிடி மனச்சாட்சியில்லாம என் மேல பழி போட முடியுது உன்னால?

"உனக்கும் எனக்கும் கல்யாணம்னு தாத்தா முடிவு பண்ணினப்போ... நான்... ஸ்ட்ராங்கா மறுத்திருந்தா... தாத்தாவால எதுவுமே பண்ணியிருக்க முடியாது. என் கை, காலைக் கட்டி எல்லார் முன்னாடியும் மணமேடை யில ஏத்தியிருப்பார்னு நினைக்கிறியா? இல்ல. எனக்கு... எனக்கு எதிர்க்கத் தோணல. இந்தக் கல்யாணம் முடிஞ்சா... நீ கடைசிவரை என் கூடவே இருப்பேங்கிற

எண்ணம் மட்டும்தான் மனசுல இருந்தது. ஏகப்பட்ட குழப்பத்துக்கிடையில இந்தக் கல்யாணம் நடந்திருந் தாலும்... ஏனோ... மனசுல ஒரு ஓரத்துல, அத்தனை குழப்பமும் மறைஞ்சு ஒரு சந்தோசம் வந்ததை நான் ஒத்துக்கிட்டுத்தான் ஆகணும்.

"ஆனா... இது எல்லாமே... நான் உணர்ந்த... எனக்குத் தோன்றின உணர்வுகள் மட்டும்தான். இதுல ஒரு சதவீதம் கூட உனக்குத் தோணலங்கிறதை இப்போ உன் வாய் வழியாவே கேட்டுடேன். உன் நல்லதுக்கும், கெட்டதுக்கும் கூட இருந்து... நீ தப்புப் பண்ணினா கூட உன்னை சப்போர்ட் பண்ணி... உனக்கும் சேர்த்து நான் தண்டனை அனுபவிச்சு... உன்னை மட்டுமே சுத்தி இயங் கிட்டிருந்த என் உலகத்தை நிமிஷத்துல அழிச்சுட்ட.... ரம்யா... நான் கேட்ட ஒரு வருஷத்துக்கு, இன்னும் நிறைய காலமிருந்தாலும் பரவாயில்லை. இந்த நிமிஷம் நான் உன்னை டிவர்ஸ் பண்ண ஒத்துக்கிறேன்..." என்றவன் விறுவிறுவெனத் தன் அறைக்குள் நுழைந்து கதவை அறைந்து சாத்தினான்.

அவன் சென்றதும் தலையைப் பற்றியபடி தரையில் அமர்ந்த ரம்யா மனதை மறைத்திருந்த திரை விலகி... மூளையைச் சூழ்ந்திருந்த குழப்பம் மறைந்து.... அனைத்தும் தெளிவாகி விட்டது போல் திருப்தியாய் உணர்ந்தாள்.

"நான் உன்னைக் காதலிக்கிறேன்டி!" என்று அவன் கூறிய வார்த்தைகள் அவள் காதுகளில் ரீங்காரமிட்டு அவளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக் கொண்டிருந்தன.



"இடியட்!" என்று அவன் சட்டையைப் பிடித்துச் சண்டை போட வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

அவன் கூறிய வார்த்தைகள் அத்தனையும் உண்மைதான்! அவனது உலகம் எப்போதும் அவளைச் சுற்றித்தான். சிறு வயதில்... ஏன்? வளர்ந்து குமரியாகி விட்ட பின்பு கூடத் தந்தையோ, தாயோ திட்டி விட்டால் ஹரியின் அறையில் அவனுடன்தான் உறங்குவாள்.

"என்ன மார்க் வாங்கிட்டு வந்திருக்கா பாரு..." என்று ஜெகன் அவளை அடிக்கக் கை ஓங்குகையில், "மாமா...." என்று குறுக்கே புகுந்து அவன் அடியை வாங்கிக் கொள் வான்.

"புது கிட்டார் வேணும்னு கேட்டு அடம் பிடிச்சு அவ காலைல இருந்து சாப்பிட மாட்டேங்குறா கண்ணு... நீ அவளுக்கு இந்த இட்லியை எப்படியாவது ஊட்டி விட்டுடேன்!" என்று லட்சுமி ஹரியிடம் தான் சென்று நிற்பார்.

"என் ரூம்க்குள்ள வந்த, உன் காலை உடைச் சிடுவேன், வெளியே போடா!" என்று அவனிடம் சண்டைக்கு நிற்பவள் தலையணையைத் தூக்கி அவன் மீது எறிவாள். அவளிடமிருந்து அத்தனை அடிகளையும் வாங்கிக் கொண்டு அவளைச் சமாதானப்படுத்திச் சாப்பிட வைப்பான் ஹரி.

"ஐ, கார்ல வெயிட் பண்ணுறியா? மழை பெய்யுதே, எப்படி வீட்டுக்குப் போறதுன்னு நினைச்சுட்டிருந்தேன். நல்ல வேளை, வந்துட்ட... என்பட்டூ..." ஒவ்வொரு மழை

நாளும் காத்திருந்து அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தான்.

அவளது சின்னச் சின்னத் தேவைகளிலிருந்து, அவள் எந்த விசயத்திற்கு எப்படி நடந்து கொள்வாள் என்கிற விவரம்வரை அத்தனையும் அறிந்து வைத்திருப்பவன் அந்த வீட்டில் அவன் மட்டும்தான்.

ஒவ்வொரு முறையும் அவள் மியூசிக் ஷோவிற்குச் செல்கையில் தாத்தாவுடன் சேர்ந்து திட்டு வாங்கி... அவளோடு சேர்த்துத் தானும் தண்டனையை அனுபவிப்பான். அவன் கூறுவது போல்... அவள் அணியும் சட்டை போல், கட்டும் வாட்சைப் போல்... அவன் அவளுடையவன்... அவனை எப்படி எவளோ ஒருத்தியின் கணவனாக... யாரோ குழந்தைகளின் தந்தையாகக் காண முடியும் அவளால்? யோசிக்கையிலேயே ஏதோ ஒன்று மனதில் தோன்றி, "சான்ஸே இல்ல!" என்றது.

அவளுக்கு அவன்தான் எல்லாம். தந்தை, தோழன், உடன்பிறந்தவன்... இன்று காதலன், கணவன்... அனைத்தும்! அவளைப் பொறுத்தவரை அனைத்துமே அவன்தான்! உன் தாத்தாகிட்டயிருந்து தப்பிச்சு எப்படிடி எக்ஸ்கர்ஷன் வருவ எங்களோட?

"அதான் ஹரி இருக்கானே, அவன் பார்த்துப்பான்!"

"என்ன ப்ராண்ட் ஷூ வாங்குறது, என் சைஸ் என்னன்னு ஹரி கிட்ட தான் கேட்கணும்,", "ஹரி, ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிடலடா", "ஹரி, ரொம்பக் குளிருது!" ஹரி, ஹரி, ஹரி... என வாழ்க்கையில் அவள் உச்சரித்த



அதிகமான பெயர்களில் அவனது பெயர் தான் முதலிடத்தில் இருக்கும்.

ஹரியின் காதலியாக ப்ரியாவை எத்தனையோ முறை கேலி செய்திருக்கிறாள், சிரித்திருக்கிறாள்! ஆனால்... அதைத் தவிர்த்து எப்போதேனும் அவளை ஹரியின் மனைவியாக நினைத்துப் பார்த்திருக்கிறாளா? இல்லை. அது ஏன்? ஏன் எண்ணிப் பார்க்கத் தோன்றவில்லை? அவன் எவளோ ஒருத்தியைக் காதலிப்பது தெரிந்தும் கூட... ஏன் "என் ஹரி" என்று சொல்லிக் கொண்டு திரிந்தாள்?

அவன் லேப்டாப்பும், செல்ஃபோனும் ரம்யாவின் முகம் மட்டும்தான். "ஏன்டா என் ஃபோட்டோ வைச்சிருக்க?" என்று வினவுபவளிடம், "இல்லடி, நல்ல நாய்க் குட்டி படமாத் தேடிட்டு இருந்தேன். உன் படம்தான் கிடைச்சது!" என்று அவன் கலாய்த்தாலும், அவளது புகைப்படங்களை மட்டும்தான் மாற்றி மாற்றி வைப்பான்.

அவன் அறையிலும் கூட அப்படித்தான். பெட் லாம்பை சுற்றிலும் இருவரது புகைப்படங்கள்தான். ஃப்ராக் அணிந்திருக்கும் ரம்யாவிற்கு சைக்கிள் கற்றுக் கொடுப்பது போலிருக்கும் ஐந்து வயது ஹரி, தோட்டத்து ஊஞ்சலில் அவள் அமர்ந்தபடியும், அவன் நின்றிருந்தபடியும் பதினெட்டு வயது ஹரியும் பதினைந்து வயது ரம்யாவும்! அதன் பின் 20-களிலிருந்த இருவரும் கறுப்பு சோபாவின் மீது வெள்ளை உடைகளில் அமர்ந்திருந்த தோற்றம்... அனைத்துப் புகைப்படங்களும் அவர்கள் இருவரும் சேர்ந்திருப்பவைதான்.

முதன் முதலில் பைக் வாங்கிய போதும், கார் வாங்கிய போதும், அவன் முதலில் அழைத்துச் சென்றது அவளைத்தான். ஏன்? இன்றுவரை புதுப் பேனா வாங்கினால் கூட, "ரம்யா..." என்றுதான் எழுதிப் பார்ப்பான். அவனை எதிர்பார்த்து அவளும், அவளை எதிர்பார்த்து அவனும் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் கடத்தியிருக்கையில் எப்படி வேறொருவருடன் வாழப் போவதாய் முட்டாள்தனமாக முடிவெடுத்தனர்? அவர்களது வீட்டார் முடிவு செய்தது போல்... தாத்தா முடிவு செய்தது போல்... எப்போதும்... ஹரிக்கு ரம்யா தான்! ரம்யாவுக்கு ஹரிதான்!

ஏதேதோ யோசனையில் அப்படியே தரையிலேயே உறங்கி விட்டிருந்த ரம்யா காலை கண் திறக்கையில் ஹரி சோபாவில் அமர்ந்து ஷூ மாட்டிக் கொண்டிருந்தான்.

நேரமாயிற்றா என்றபடி அவசரமாய் எழுந்தவள்... "ப்ரேக்ஃபாஸ்ட்..." என்று தொடங்குவதற்குள் அவன் விறுவிறுவென வெளியேறி விட்டான்.

"பெருசா சொன்னானே! நான் உன்னைக் காதலிக்கிறேன்டின்னு! காதலிக்கிற பொண்ணுகிட்ட இப்படித்தான் நடந்துப்பாங்களா?" என்று முணுமுணுத்த ரம்யா தானும் வேலைக்குப் புறப்பட்டாள்.

அவள் ஹோட்டலுக்குள் நுழைகையில் பார்ட்டி ஹாலின் முன்னே நின்று சக்தியிடம் உரையாடிக் கொண்டிருந்தான் ஹரி. நேராக அவனருகே சென்று நின்றவள்... "ஏன்டா ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிடாம போயிட்ட?" என்று வினவினாள்.



"ஹலோ மிஸஸ் ஹரிகிருஷ்ணன்!" - சிரித்தபடி சக்தி.

"டேய்... வேற என்ன சேஞ்சஸ் இருக்குன்னு சீக்கிரம் சொல்லு!" - ஹரி.

"கூப்பிடக் கூப்பிட நீ பாட்டுக்குப் போயிட்ட, என்னடா நினைச்சுட்டிருக்க?" - ரம்யா.

"சக்தி, அந்த ஜான் பீட்டர் குரூப் இன்னிக்கு நம்மை வரச் சொல்லியிருந்தாங்களே, நீ போறியா? இல்ல... நான் போகட்டுமா?" - ஹரி.

"நான் உன்கிட்டதான்டா பேசிட்டிருக்கேன்..." - ரம்யா.

"இல்ல, இல்ல. நானே போறதுதான் சரின்னு படுது எனக்கு. இங்க இருந்தா தேவையில்லாதவங்க முகத்தில எல்லாம் முழிக்க வேண்டியிருக்கும்." - ஹரி.

"யாருடா தேவையில்லாதவங்க?" - ரம்யா.

"நான் கிளம்புறேன்டா, நண்பா!" - ஹரி சென்று விட்டிருந்தான்.

கோபத்துடன் அவனை முறைத்தபடியே நின்றிருந்த ரம்யாவிடம், "ஆமா, ஒரு வாரத்துக்கு நீங்க இரண்டு பேரும் குறைஞ்சது எத்தனை தடவை சண்டை போடுவீங்க?" என்று வினவினான், சக்தி.

"என்ன சர்வே எடுக்கிறியா? பேசாம போடா!" என்று திட்டி விட்டு உள்ளே சென்று விட்டாள், ரம்யா.

அவன் சென்று இரண்டு மணி நேரம் கழித்து ரம்யாவின் செல்ஃபோனிற்கு அவனிடமிருந்து அழைப்பு வந்தது. செல்ஃபோனைப் பார்த்தபடி கைகட்டி நின்றிருந் தவளின் அருகே வந்த செல்வி, "என்ன மொபைலை முறைச்சுப் பார்த்துட்டு இருக்கீங்க? பட்டூ காலிங்? யாருக்கா பட்டு?" என்று வினவினாள்.

"ம், எல்லாம் உங்க ஓனர்தான்." - ரம்யா.

"ஹா ஹா ஹா.... அவரைப் பட்டு-ன்னா கூப்பிடு வீங்க?" - செல்வி.

"அது அவன் செல்லப் பெயர். ஒரு காலத்துல என் குடும்பம் அவனை அந்தப் பெயரை மட்டும் சொல்லித் தான் கூப்பிடும். இரண்டு வயசுவரைக்கும் அவன் பேரு ஹரின்னு எனக்குத் தெரியாது. பட்டுன்னுதான் கூப்பிட் டுட்டு இருந்தேன்."

"ஹா... ஹா... ஓனர்க்கு பட்டு மாதிரி ஷாஃப்டான மனசு. நீங்க வைச்ச பட்டப் பெயர் ரொம்ப பொருத்தம் தான். ஆனா ரொம்ப நேரமா அடிக்குது. என்னன்னு எடுத்துக் கேளுங்கக்கா. ஏதாவது எமர்ஜென்சியா இருக்கப் போகுது!" என்று அவள் கூறியதும் வேகமாக ஃபோனை எடுத்து, "ஹலோ!" என்றாள்.

"என் நம்பரைப் பார்த்துட்டு வேணும்னே ஃபோனை எடுக்காம இருக்கியாடி, திமிர் பிடிச்சவளே!" - ஹரி.

"இ... இல்லடா... நான் வே... வேலையா... ப்ச், உனக்கு என்ன வேணும் இப்போ?" - ரம்யா.

"ஏய்... தாத்தாக்கு ஹார்ட்-அட்டாக்டி. மலர் ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணியிருக்காங்க. சீக்கிரம்



கிளம்பி வா!" என்றவன் ஃபோனைக் கட் செய்து விட்டான்.

ஒரு நிமிடம் எதுவும் புரியாமல் விழித்த ரம்யா அடுத்த நொடி யூனிஃபார்ம் கூட மாற்றாமல் தன் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு மருத்துவமனை நோக்கிப் பறந்தாள்.

**கா**ரை நிறுத்தி விட்டு மருத்துவமனைக்குள் ஓடிய ஹரி, காரிடாரில் தன் மொத்தக் குடும்பமும் நிற்பதைக் கண்டு, "எ... என்னாச்சு? தாத்தா எப்படியிருக்கார்?" என்று பதறினான்.

"தெரியலடா ஹரி. காலைல கணக்கு வழக்கெல் லாம் சரி பார்த்துட்டு இருக்கும்போது, திடீர்னு நெஞ்சு வலிக்குதுன்னார். என்ன, ஏதுன்னு கேட்குறதுக்குள்ள அப்டியே சாய்ஞ்சுட்டார். இங்கே வந்தப்புறம் தான் தெரிஞ்சது ஹார்ட்-அட்டாக்னு..." என்றார், கிருஷ்ணமூர்த்தி.

"இது செகண்ட் டைம்டா ஹரி!" - ஷ்யாம்.

அழுது கொண்டிருந்த பெண்களின் அருகே சென்றமர்ந்த ஹரி, "பயப்படாதீங்க அத்தை! தாத்தாவுக்கு எதுவும் ஆகாது. அவர் அயர்ன் மேன். சீக்கிரம் எழுந்து வந்துவிடுவார். என்... என் பையனையும் அவர்தான் வளர்க்கணும் அத்தை! அதுக்காகவாவது அவர் எழுந்து வரணும்," என்றான். மொத்தக் குடும்பமும் அவனை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தது.

அதற்குள் உள்ளே ஓடி வந்த ரம்யா... "தாத்தா... தாத்தாவுக்கு என்னாச்சு மாமா...? இப்போ... இப்போ

எப்படி இருக்கார்? நாம பார்க்கலாமா? பதில் சொல்லுங்க மாமா!" என்று பொறுமையின்றிப் பதறினாள்.

"தாத்தாவுக்கு ஒன்னுமில்லை கண்ணு. மைல்ட் அட்டாக்தான்!" என்ற ராமமூர்த்தியிடம், "அப்புறம் எதுக்கு ஐசியூ-ல வைச்சிருக்காங்க? அப்பா... உள்ளே போய்ப் பார்க்கலாம்ப்பா..." என்றவளின் விழிகளில் நீர்கோத்து விட... எட்டி ஐசியூவை நோக்கினாள் அவள்.

இருவரையும் பிடிக்காத திருமணத்தில் தள்ளி, வீட்டை விட்டும் விலக்கி வைத்த கிழவனுக்காகப் பதறிய இருவரையும் கண்டு குடும்பமே விழி விரித்தது.

தாத்தாவின் மொத்த டார்ச்சரையும் முழுதாக அனுபவித்த இரண்டு ஜீவன்கள் அந்த வீட்டில் ரம்யாவும், ஹரியும்தான். அவர்களிருவருக்கும் தாத்தாவின் மீதிருக்கும் அன்பை எண்ணி வியந்தனர்.

அடுத்த ஐந்து மணி நேரத்துக்கு அனைவரையும் கலக்கத்தில் ஆழ்த்தி விட்டு ஐசியூவிலிருந்து வெளியே வந்தார் அமாத்யர்.

அவரைக் கண்ணால் கண்ட பின்புதான் திருப்தி யடைந்தனர் குடும்பத்தினர். அன்றிரவு ஹரி அங்கேயே தங்கி விட... ரம்யாவை வீட்டிற்கு அனுப்பி வைத்தான் ஷ்யாம்.

மறுநாள் காலை தாத்தா கண் விழிக்கையில் ஹரி அவரருகே தூங்கி விழுந்தவாறு நாற்காலியில் அமர்ந் திருந்தான். அருகிலிருந்த மேஜையின் மீதிருந்த ஸ்பூனை எடுத்து அவன் கையில் நச்சென அவர் அடித்ததும்



உலுக்கி விழுந்து எழுந்த ஹரி, "ப்ச்... எதுக்கு இப்ப என்னை அடிச்சீங்க?" என்று எரிச்சலுடன் வினவினான்.

"தூக்கம் வந்தா வீட்டுக்குப் போடா. இங்க ஏன் உட்கார்ந்திருக்க?" - தாத்தா.

"மாமா, பெரியப்பா எல்லாரும் வீட்டுக்குப் போயிட் டாங்க. நானும் ஷ்யாமும் மட்டும் இங்க இருக்கோம்." - ஹரி.

"ஷ்யாம் எங்கே?"

"அண்ணன் டீ குடிக்கப் போயிருக்கான் தாத்தா."

"ம்ம், ரம்யா வந்தாளா?"

"வந்தா... வந்தா... நைட் அவளை வீட்டுக்கு அனுப்பி வைச்சுட்டான் ஷ்யாம்."

"ஏன் முகத்தை அப்படி வைச்சிக்கிற, அவளைப் பத்திப் பேசும்போது! என்ன அவ கூடச் சண்டை போட்டியா?"

"நான் ஒன்னும் சண்டை போடல!" எனக் கோபத் துடன் தொடங்கியவன் விரல்களை நோக்கியவாறு, "சொன்னா ஆச்சரியப்படாதீங்க. இன்னும் நாலு மாசத்துல நானும் அவளும் டிவர்ஸ் அப்ளை பண்ணப் போறோம்," என்றான்.

"....." - சலனமின்றி அவனை நோக்கினார் தாத்தா.

"எ... என்ன அப்படிப் பார்க்குறீங்க? இந்தத் தடவை நான் எந்தத் தப்பும் பண்ணல. அவதான் பிரச்சனை பண்ணுறா."

"என்ன பிரச்சனை பண்ணுறா?"

"............"

"நீ பதில் பேசாட்டி, தப்பெல்லாம் உன் மேல இருக்கிறதா நான் எடுத்துப்பேன்."

"நான் ஒன்னும் பண்ணல, தாத்தா... என்... என் மேல காதலே இல்லன்னு சொல்றவ கூட எப்படிக் குடும்பம் நடத்தச் சொல்றீங்க? நான் அவளை.... அ...அ... அதுக்காக மட்டும் யூஸ் பண்ணிக்கிறேன்னு மனச்சாட்சி இல்லாம சொல்றா, தாத்தா... எனக்கு அவ கூட வாழ இஷ்டமில்ல. அதனால நீங்களே டிவர்ஸ் வாங்கிக் கொடுத்துடுங்க."

"ஹ்ம்ம், டிவர்ஸ் வாங்கிக் கொடுத்துட்டு அவளை நான் சதீஷ்க்குக் கல்யாணம் பண்ணி வைச்சிடட்டுமா?"

"தாத்தா...." என்று கோபத்துடன் எழுந்தவன், மீண்டும் அமர்ந்து, "ஏன் தாத்தா எப்பவும் வில்லத்தனம் பண்றதுலயே இருக்கீங்க? உங்க பேரப் பசங்க இரண்டு பேரும் சண்டை போட்டுட்டு வந்து நிற்கிறோம். பேசிச் சமாதானம் பண்ணி வைக்கிறதை விட்டுட்டு டிவர்ஸ் வாங்கித் தரேன்னு சொல்றீங்க!" என்றான்.

"அது சரி..." உதட்டைப் பிதுக்கினார், தாத்தா.

"எனக்குக் கோபமா வருது தாத்தா. நான்... நான் அவளை எப்போவாவது ஒரு விசயத்துக்காவது விட்டுக் கொடுத்திருக்கேனா? நான் பிறந்ததே அவளுக்காகத் தான்கிற மாதிரி அவளோட சின்னச் சின்னத் தேவை களைக் கூடக் கவனிச்சுகிட்டு அவ பின்னாடியேதானே



திரிஞ்சேன்? ஏன் போன வாரம் கூட அவ கிட்டார் வாசிக் கணும்னு கேட்டு உங்களோட சண்டை போட்டேன்ல? என்னைப் போய் எப்படித் தாத்தா அவளால அப்படிச் சொல்ல முடிஞ்சது?"

"நீ அவளைக் காதலிக்கிறதா... அவ கிட்ட எப்போ சொன்ன?" - தாத்தா.

சற்று யோசித்த ஹரி, "இ...இதுவரைக்கும் ஒரு தடவை கூடச் சொன்னதே இல்லை!" என்றபடி தலை குனிந்தான்.

"ஹ்ம்ம்... பின்ன... நீ அவளை யூஸ் பண்ணிக் கிறதா அவ சொல்றதுல எந்தத் தப்புமில்லடா. பசிக்கு துன்னு நீ வாய் திறந்து சொன்னாத்தான்டா உன் அம்மாவுக்கே உனக்குப் பசிக்கிறது தெரியும். இப்படி யிருக்கும்போது நீ நேசிக்கிற விசயத்தை அவகிட்ட நீ சொல்லாம இருந்தா எப்படிடா அவளுக்குப் புரியும்?

"சின்ன வயசுல இருந்து நீ எத்தனை விசயம் அவளுக்குப் பண்ணியிருக்கியோ, அதே விசயங் களை அவளும் உனக்குத் திருப்பிப் பண்ணியிருக்கா. ஷாப்பிங்னு வெளியே போயிட்டு வீட்டுக்கு வர்றவ... பை நிறைய வாங்கிட்டு வர்றதெல்லாம் உன் ஆடை களைத்தான். உன் வார்ட் ரோபை ஓபன் பண்ணிப் பார். எல்லாம் அவ வாங்கிட்டு வந்ததாகத்தான் இருக்கும். நீ போட்டிருக்கிற ஷூ-ல இருந்து, கட்டியிருக்கிற வாட்ச் வரைக்கும் சூஸ் பண்ணினதெல்லாம் அவதான்டா.

"போய், உங்கப்பனைக் கேளு. அழும் போதும், சிரிக்கும் போதும் அவ முதல்ல தேடுறது உன்னைத்

தான்டா. அவ அப்பா, அம்மாவை இல்ல. எல்லாத் துக்கும் உன்னைச் சார்ந்திருக்கிற ஒருத்தியைத் தேவை யில்லாம காயப்படுத்தாத."

தாத்தா கூறி முடித்ததும், "நான் சொல்லாம விட்டது தப்புதான், தாத்தா. அதுக்காக... அதுக்காக... அவ அப்படிச் சொல்லலாமா என்னை?" என்று வரிந்து கட்டிக்கொண்டு வந்தவனிடம்,

"நீ அவ சொன்னது எதையோ தப்பாப் புரிஞ்சு கிட்டு வந்து இங்க கத்திட்டுருக்கன்னு மட்டும் எனக்குத் தெரியுதுடா!" என்றார், தாத்தா.

"நீங்க எப்போ யிருந்து தாத்தா அவளுக்கு சப்போர்ட் பண்ண ஆரம்பிச்சீங்க?" - ஹரி.

"என்னோட ஒரே செல்லப் பேத்திடா அவ."

சிரிப்பும், மகிழ்ச்சியும் ஒரு சேர... "அது சரி!" என அவன் தலையாட்டிக் கொண்டிருக்கையில்... ஷ்யாம் உள்ளே நுழைந்தான்.

"சரி, நான் வீட்டுக்குப் போய்க் குளிச்சுட்டு வரேன், தாத்தா!" என எழுந்த ஹரி, நின்று... "உங்களுக்கு சதீஷ் மேட்டர் கூடத் தெரியுமா?" என்று வினவினான்.

"நீ அவன் சட்டையைப் பிடிச்சுச் சண்டை போட்டது வரை எல்லாம் தெரியும். அனைத்தும் நானறிவேன்!" என்றார், தாத்தா.

"ஆமா, பெரிய லார்ட் கிருஷ்ணன் இவரு..." என்று முணுமுணுத்த ஹரி, "நான் கிளம்புறேன்டா, அண்ணா..." என்று அவன் தோளில் தட்டி விட்டு வெளியே வந்தான்.



அவன் வெளி வருகையில், "உட்காருடா இங்க. உனக்கும் சங்கீதாவுக்கும் முந்தா நாள் நைட் பெரிய வாக்குவாதம் போல, என்ன சண்டை அவளோட உனக்கு?"

தாத்தாவின் கணீர்க் குரல் ஷ்யாமை விசாரித்துக் கொண்டிருந்ததைக் கேட்டான் ஹரி.

தாத்தா ஒரு பர்ஃபெக்ட் குடும்பத் தலைவன்! அந்தக் குடும்பமும், குடும்ப நபர்களின் நலனும் மட்டுமே அவரது உலகம்! ஒவ்வொருவரின் விருப்பு, வெறுப்பைத் தெரிந்து கொண்டு, அது சரியா, தவறா என்று ஆராய்ந்து... சில சமயம் சிரித்து... பல சமயம் வில்லனைப் போல் நடந்து கொண்டு, அவர் செய்த அத்தனையும் அவர்களனைவரின் நன்மைக்காக மட்டும் தான்!

தாத்தா சொன்னா சரியா இருக்கும்டா என்று அந்த வீட்டின் ஆண்கள் அனைவரும் கூறுகையில், ரம்யா வும், ஹரியும் காதில் வாங்கியதேயில்லை. ஆனால்... இப்போது புரிந்தது... தாத்தா செய்வது அனைத்தும் சரியே! அவர்களது நன்மைக்காக மட்டுமே! தாத்தா...... வி லவ் யூ.... என்று எண்ணிக் கொண்டு, சிரித்தபடி வீட்டிற்குப் புறப்பட்டான் ஹரி.

**தா**த்தாவிற்காகச் சமைத்ததை எடுத்துக் கொண்டு மருத்துவ மனையில்... அவரது அறைக்குள் நுழைந்த ரம்யா, படுக்கையில் எழுந்து அமர்ந்திருந்தவரைக் கண்டு, "தாத்தா..." என்றழைத்தபடி ஓடிச் சென்று அவரருகே அமர்ந்தாள்.

"என்ன தாத்தா... எல்லாரையும் இப்படிப் பயமுறுத் திட்டீங்க? நான்.... நான் எவ்ளோ பயந்துட்டேன் தெரியுமா? அழுகையே வந்துடுச்சு எனக்கு. இப்போ நல்லாயிருக்குதானே, தாத்தா?" என அவரை மேலும் கீழும் பார்த்தவளைக் கண்டு சிரித்த அமாத்யர்,

"பொய் சொல்லாத. ஹப்பாடா! இனி, இந்தக் கிழவனோட தொல்லை யில்லாம இருக்கலாம்னு நீ சந்தோசம்தானே பட்ட?" என்றார்.

"ச்சே! விளையாடாதீங்க தாத்தா. நான் நிஜமாவே பயந்துட்டேன்."

"எனக்கு ஒன்னுமில்ல. நான் நல்லாயிருக்கேன்," என்றவர், அவள் தலையை வருடி, "நீ சாப்பிட்டியா?" என்று வினவினார்.

அவரையே பார்த்த ரம்யாவிற்கு அவளது பால்யம் நினைவிற்கு வந்தது. அவரைக் கடந்து ஓடிச் செல்ப வளை மடியில் தூக்கி அமர வைத்துத் தலை வருடியபடி இப்படித்தான், "சாப்பிட்டியா?" என்று கேட்பார். பழைய நினைவில் முறுவலித்த ரம்யா... "நான் சாப்பிட்டேன். உங்களுக்குக் கூடக் கொண்டு வந்திருக்கேன்," என்றாள்.

அவரிடம் ஒரு கிண்ணத்தில் உணவை இட்டு ஸ்பூனிட்டுக் கையில் கொடுத்து அவரருகே அமர்ந்தாள். உண்டபடியே, "ஹரி உன்னை நல்லாப் பார்த்துக் கிறானா?" என்று வினவியவரிடம், "ம்க்கும், கிழிக்கிறான்!" என்று முணுமுணுத்த ரம்யா, "எப்போ பார்த்தாலும் திட்டிட்டே இருக்கான், தாத்தா..." எனக் குற்றப் பத்திரிகை வாசித்தாள்.



வந்த சிரிப்பை அடக்கிய தாத்தா, "ஏன் திட்டுறான்?" என மேலும் துருவினார்.

"எல்லாத்துக்கும்... எல்லாத்துக்கும் திட்டுறான், தாத்தா. அது மட்டுமில்லாம, இப்பவே டிவர்ஸ் தர்றேன். வாங்கிட்டு வீட்டை விட்டுப் போயிடுன்னு மிரட்டுறான்."

"நீ திருப்பித் திட்டாமலா இருந்த?"

"நான் திட்ட வர்றதுக்குள்ள கோபமா ரூமுக்குள்ள போய்க் கதவைச் சாத்திக்கிறான். தாத்தா, அது மட்டுமில்ல. முன்னாடியெல்லாம் அவன் என்னை விட வீக்கா இருப் பான், நான் ஒரு அடி அடிச்சாலே கீழே விழுந்துடுவான். இப்போ... இப்போல்லாம்... இவ்ளோ... இவ்ளோ பெருசா... ஆர்ம்ஸ் வைச்சிருக்கான் தாத்தா... இப்படியே... என் கையைப் பிடிச்சு முறுக்கி விட்டுடுறான்!" என அவர் முன்னே ஆக்ஷன் காட்டிக் கொண்டிருந்தவளைக் கண்டு கடகடவெனச் சிரித்தார் தாத்தா.

"சிரிக்காதீங்க, தாத்தா. அவன் இப்போ ரொம்ப ஸ்ட்ராங் ஆயிட்டான். நான் ரொம்ப வீக் ஆயிட்டேன்."

"இப்போ அதுதான் பிரச்சனையா?"

"இல்ல, தாத்தா... அ...அது வந்து... அவன்... அவன் ஒரு தடவை கூட என்னைக் காதலிக்கிறேன்னு வாயைத் திறந்து சொல்லவே இல்லை, தாத்தா. அவன் சொல்லாம எனக்கு எப்படித் தெரியும்? அவன் என்னைக் காதலிக்கிறது தெரியாம, நான் பாட்டுக்கு, அப்படி இப்படின்னு கொஞ்சம்... பேசிட்டேன். அவ்ளோ ஒன்னும் ஹார்ஷா பேசல, தாத்தா. ஆனா... அவன் இதான்

சாக்குன்னு என்னை ரொம்பத் திட்டிட்டான். டிவர்ஸ் வாங்கிட்டுப் போயிடுன்னு சொல்லிட்டு என் கூடப் பேசு றதை அவாய்ட் பண்ணிட்டான், தாத்தா!"

"ரம்யா... ஹரி உன்னைக் காதலிக்கிறதா சொன்னா நீ என்ன செய்வ?" – தாத்தா.

".........." – பதிலின்றித் தலை குனிந்தாள் ரம்யா.

"ம். பதில் சொல்லு."

"வாழ்நாள் முழுமைக்கும் அவனை விட்டு ஒரு நிமிஷம் கூடப் பிரிய மாட்டேன், தாத்தா!" – மெல்லப் பதிலளித்தாள் ரம்யா.

"ஆனா... ஆனா... அவன் சொல்ல மாட்டான், தாத்தா. திமிர் பிடிச்சவன்... என்னைத் திட்டும்போது மட்டும், ஆமா உன்னைக் காதலிக்கிறேன்டி. ஆனா நீ இப்படி பிஹேவ் பண்றதால டிவர்ஸ் பண்றேன்... அப்படின்னு சொல்லுவான். ராஸ்கல்... அவன் அந்த ப்ரியாவோட... ஹோட்டல்ல தனியே பேசும் போதே நினைச்சேன். அவனை இப்டியே சும்மா விட்டா சரி வராது, தாத்தா..." – தன் போக்கில் புலம்பியபடி நகம் கடித்தவளிடம்...

"ஹரி உன்னைத்தான்ம்மா காதலிக்கிறான்!" என்றார், தாத்தா.

மெல்ல நிமிர்ந்து அவர் முகம் பார்த்தவளிடம், "அரை டவுசர் போட்ட காலத்துல இருந்து அவன் உனக்காக... என்கிட்ட எதிர்த்துச் சண்டை போட்டிருக்கான். அவளுக்குப் பிடிச்சிருக்கு. அவ பண்றா. நீங்க ஏன்



அவளுக்குத் தடை போடுறீங்கன்னு என் கிட்ட கேள்வி கேட்பான். போன வாரம்வரையும் கூட உனக்காக வந்து என் கிட்ட சண்டை போட்டான். அவனால மட்டும் தான்ம்மா, உன் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து, நீ வெறுக்குற விசயங்களை ஒதுக்கி வைச்சு உனக்கொரு பர்ஃபக்ட் ஹஸ்பண்டா நடந்துக்க முடியும்.

"ஒரு நிமிஷம் நீ யோசிச்சுப் பாரு, ஹரி கிட்ட நீ எதிர்பார்க்கிறத... ஹரி கிட்ட நீ ஃபீல் பண்ண கம்ஃபார்ட்... நீ காதலிக்கிறதா சொன்னவன்கிட்ட நீ உணர்ந்திருப் பியா? தங்களோட உணர்வுகளை ஆராய்ஞ்சு பார்த்துத் தனக்கு எது சரி, தப்பு... எது செட் ஆகும், யார் சூட் ஆவாங்கன்னு நினைச்சுப் பார்க்காம படபடன்னு ஒருத்தனைத் தேர்ந்தெடுத்துக் காதலிச்சு லைஃப்ல அடியெடுத்து வைச்சிட முடியுமாம்மா?" என்றார், தாத்தா.

அவர் சொல்லச் சொல்ல... அத்தனையும் உள் வாங்கிக் கொண்டாள் ரம்யா. எத்தகைய உண்மையிது!

"என் ஹரி!" என்று உச்சரிக்கும் வார்த்தைக்குள் எத்தனை விசயங்கள் அடங்கியிருக்கிறது? தாத்தா சொல்வது போல் அவன் அவளுக்கு அளித்த, அளித்துக் கொண்டிருப்பவற்றை வேறு எவரிடமிருந்தேனும் பெற முடியுமா அவளால்? மனம் மறுபடி, "என் ஹரி மாதிரி வருமா?" என்று உச்சரிக்க... தாத்தாவை நிமிர்ந்து நோக்கினாள்.

"நிறைய... நிறைய சிச்சுவேஷன்ல உங்களை நான் கெட்டவரா உருவகப்படுத்தித் திட்டித் தீர்த்திருக்கேன், தாத்தா. எங்க கல்யாணம் நடந்தப்போ கூட நீங்க எங்க

இரண்டு பேருக்கு மட்டும் துரோகம் செய்றதாக் கூட நினைச்சேன். உங்களோட ஒவ்வொரு முடிவுக்குப் பின்னாடியும் எதிர்காலத்தைப் பத்தின எத்தனை யோசனைகள் இருக்குன்னு இப்போதான் புரியுது, தாத்தா... முட்டாள்தனமா ஏதோ ஒரு வழியில போக வேண்டியிருந்த வாழ்க்கை உங்களால தான் நேரா யிடுச்சுன்னு தோணுது. தேங்க்ஸ்... தேங்க்ஸ் தாத்தா..." உணர்ச்சிப் பெருக்கில் அவள் விழிகளிலிருந்து பெருகிய நீரைத் துடைத்தெறிந்தவர், "போய் ஹரியை உடனே பாரு..." என்றார்.

"ம்ம்..." எனத் தலையாட்டி விட்டு ஓடியவள், மீண்டும் திரும்பி வந்து அவரை அணைத்து, "லவ் யூ தாத்தா..." என்று கூறி விட்டு ஓட... அப்போது வாசலில் நுழைந்து கொண்டிருந்த ஜெகனும், சங்கீதாவும் இந்தக் காட்சியைக் கண்டு வாயைப் பிளந்தனர்.

தாத்தா கூறிய வார்த்தைகளை எண்ணமிட்டபடியே தன் ஸ்கூட்டியில் ஹோட்டலை நோக்கிப் பறந்தவளுக்கு மனம் முழுதும் ஹரி மட்டுமே நிறைந்திருந்தான்.

அவனைப் பார்க்கணும்! நீ சொல்லாட்டி என்ன... நான் சொல்றேன், லவ் யூ டா இடியட்ன்னு சொல்லணும். ஏதேதோ நினைத்தபடி ஹோட்டல் வாசலில் வண்டியை நிறுத்தியவள் உள்ளே ஓடினாள்.

பரபரவெனத் தேடியவளின் விழிகளில் எவருடனோ பேசியபடி நின்றிருந்த ஹரி தெரிந்தான். நின்ற இடத்திலிருந்து, "ஹரி...." எனக் கத்தி அழைத்தவளை ஹோட்டலே திரும்பிப் பார்த்தது.



திகைத்துத் திரும்பியவன் தன்னை நோக்கி ஓடி வருபவளைப் பார்த்தபடி நிற்க... வேகமாய் அவனருகே வந்தவள் ஒரு நொடி நின்று அவன் முகம் கண்டு சிரித்துத் தாவி அவனைக் கட்டிக் கொண்டாள்.

தடுமாறி அவள் இடையைப் பற்றிய ஹரி, "எ... என்னடி...? என்னாச்சு? தாத்தாவுக்கு ஒன்னுமில்லையே? என்னடி ஆச்சு?" என்று பதறியவனிடம்,

"ம்ஹூம்," என அவன் தோளில் முகம் பதித்த படியே, தலையாட்டினாள் அவள்.

"பி...பின்னே? இறங்கி என் முகத்தைப் பார்த்துப் பதில் சொல்லுடி. லூசு!" என்று திட்டியவனிடம் மறுத்துத் தலையசைத்தவள், "நா...நான் உன்னை ரொம்ப மிஸ் பண்றேன்!" என்றாள்.

என்னவோ, ஏதோ என்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் நகைக்கத் தொடங்க... அசடு வழிந்த ஹரி, "எல்லாரும் வேடிக்கை பார்க்குறாங்க. இப்போ நீ என்னை விட்டு இறங்கப் போறியா, இல்லையாடி?" என்று பல்லைக் கடித்தான்.

"மாட்டேன்..."

"லூசாடி நீ? நடு ஹோட்டல்ல நிற்கிறோம் இரண்டு பேரும். இருக்குற இடத்தை யோசிச்சுப் பாரு, கொஞ்சமாவது!"

"எனக்கு அதைப் பத்தியெல்லாம் கவலையில்ல..." என்றவளை அணைத்தபடியே விறுவிறுவென வாசலை நோக்கிச் சென்றான், ஹரி.

"இப்போ நீ இறங்குறியா, இல்லையா?" என்று அவளைத் தன்னிடமிருந்து பிரித்தவனை மீண்டும் கட்டிக் கொண்டு, "ப்ளீஸ்... ப்ளீஸ்டா!" என்று முகத்தைப் பாவமாய் வைத்துக் கொண்டு கெஞ்சினாள் அவள்.

"ராட்சசி... என்னைப் படுத்துறதுக்குன்னே பிறவி எடுத்திருக்கா!" என்று முணுமுணுத்தவன், "என்னடி வேணும் உனக்கு இப்போ?" என்று வினவினான்.

"நீதான் வேணும்."

"ம்?" புரியாமல் புருவத்தைத் தூக்கினான் அவன்.

"நான் உன்னை மிஸ் பண்றேன்னு சொல்றேன். நீ ரியாக்ட் பண்ணாம இருக்க? அன்னிக்குப் பெருசா சொன்ன... நான் உன்னைக் காதலிக்கிறேன்டின்னு? அதெல்லாம் பொய்யா? ஏன்டா?" என்று அவன் நெற்றியில் முட்டியவளிடம்,

"ஷ்ஷ..." என்றவன்... "என்னடி உன் பிரச்சனை?" என்றான்.

"நான் உன்கிட்ட ஒன்னு சொல்லணும்."

"என்ன? சொல்லித் தொலை சீக்கிரம்."

"ஆனா... நான் சொல்லி முடிச்சப்புறம் நீ திருப்பிச் சொல்லணும். சொல்வியா?"

"நீ என்னன்னு முதல்ல சொல்லு. அப்புறம் திருப்பிச் சொல்றதா வேணாமான்னு நான் டிசைட் பண்றேன்."

"அப்போ நான் சொல்ல மாட்டேன்."



"ரம்யா... உள்ளே கஸ்டமர்ஸ் எல்லாம் வெயிட் பண்றாங்க எனக்காக. நீ வேலை நேரத்துல விளையாடிட்டு இருக்க!" - பல்லைக் கடித்தான் அவன்.

"சரி சரி சரி. சொல்லிடுறேன். சொல்லிடுறேன்," என்றவள் நிமிர்ந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு சிரிப்புடன் அவன் முகம் நோக்கி அவன் நெற்றியில் அழுந்த முத்தமிட்டாள்.

விழிகளை மெல்ல விரித்தவனின் இரு கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டு நிமிர்ந்தவள்... "நான்... நான் உன்னைக் காதலிக்கிறேன்!" என்றாள்.

திகைத்துச் சிலையாகி விட்டவனின் கன்னத்தில் தன் கன்னத்தை அழுத்தி, "ஐ லவ் யூ... ஐ லவ் யூ டா இடியட் ஹரி...." என்றாள்.

உள்ளம் முழுக்க ஜில்லென ஏதோ ஒன்று வேகமாய்ப் பரவ... அவள் தோளில் நாடியைப் பதித்திருந்த ஹரி... அவள் கூறிய வார்த்தைகளை நினைத்துப் பார்த்து... நன்றாகச் சிரித்தான்.

"எ... என்ன சொன்ன இப்போ?"

"ஐ லவ் யூ...."

"ம்ம்? சரியாக் கேட்கலை."

"ஐ லவ் யூ டா...."

"சரியாக் கேட்கலைடி!" என்றவனின் காதில், "ஐ லவ் யூ டா ஹரி கிருஷ்ணா ஆஆஆ..." என்று கத்த...

சத்தமாகச் சிரித்தபடி "ஏ...ஏன்?" என்றான்.

"என்னடா கேள்வி இது?"

"ஏன் திடீர்னு இப்போ வந்து இதைச் சொல்ற?"

"ஹ்ம்ம், என்ன பண்றது? நீ பாட்டுக்கு நாலு மாசத்துல டிவர்ஸ்ன்னு கிளம்பிட்டா என்னை யார் கல்யாணம் பண்ணிக்கிறது? சதீஷ் வேற அல்ரெடி யு.எஸ். போயிட்டாரு. வேற சாய்ஸ் எதுவும் இல்லையா... அதான்!" என்று கண்ணடித்தவளை உலுக்கி அவள் கன்னத்தில் பற்கள் பதியக் கடித்து வைத்தான்.

கலகலத்துச் சிரித்தவள் அவன் முகம் பற்றி, கன்னம் வருடி... அவன் இதழ்களில் தன் இதழ்களை அழுந்தப் பதித்தாள். விழிகளைப் பெரிதாக விரித்த ஹரிக்குச் சிரிப்பாக வந்தது. காதலைக் கூட ஆர்ப்பாட்ட மாய்த்தான் சொல்கிறாள்.

"யாராவது பார்க்கப் போறாங்க. ஏன்டி இப்படி அநியாயம் பண்ற?" என்றவன், "ரம்யா... ரொம்ப வெயிட்டா இருக்க. கை வலிக்குது. இறங்குறியா, ப்ளீஸ்!" எனக் கூற,

குதித்து இறங்கியவள் "ச்சே, பொண்டாட்டியை ஒரு அரை மணி நேரம் தூக்கி வைக்க முடியல... நீ யெல்லாம் சிக்ஸ் பேக் வைச்சு என்ன பிரயோஜனம்?" என்றாள்.

"சரி சரி. நீ இப்போ திருப்பி ஐ லவ் யூ சொல்லு!" - ரம்யா.



கையைக் கட்டிக் கொண்டு மரத்தில் சாய்ந்து நின்றவன், எங்கோ நோக்கினான்.

"ஏ... என்னடா? சொல்ல மாட்டியா?"

"ஆக்சுவலி எனக்காக நிறைய கஸ்டமர்ஸ் வெயிட் பண்றாங்க. நான் இப்போ ரொம்ப பிஸி. எதுவா யிருந்தாலும் ஆஃப்டர் சிக்ஸ் பார்த்துக்கலாம்!" எனக் கூறி விட்டு, "டேய்... டேய்... ஹரி... நாயே..." என்று அவள் அவனைப் பிடிப்பதற்குள் ஓடியே விட்டான் ஹரி.

அவன் நிஜமாகவே வேலையில் பிஸியாகி விட... அவனுக்காகக் காத்திருந்து பார்த்தவள் மாலையானதும் வீட்டிற்குச் சென்று விட்டாள். இரவு உணவை முடித்து அவள் தன்னறையில் உறங்கி விட்ட பிறகும் கூட அவன் வரவில்லை.

திடீரெனத் தூக்கத்தில் பியானோ இசையை உணர்ந்து கண்களைக் கசக்கியபடியே எழுந்தமர்ந்தாள், ரம்யா.

"ஹாப்பி பர்த் டே டூ யூ...." என்ற இசை பியானோ வின் வழியாகக் கசிந்து கொண்டிருந்தது. தன் வீட்டு ஹாலிலிருந்து சத்தம் வருவதை உணர்ந்து விரைவாக எழுந்து வெளியே வந்தாள், ரம்யா.

கறுப்பு நிற டி-ஷர்ட், ட்ராக் சூட்டில் பியானோவின் முன்பு அமர்ந்திருந்த ஹரி சிரிப்புடன் அவளைக் கண்டு, "வெல்கம்..." என்பது போல் தலையைத் தாழ்த்தி நிமிர்த்தி அவளையே பார்த்தபடி வாசித்துக் கொண்டிருந்தான்.

சிரிப்புடன் நிலைப்படியில் ஒரு காலைப் பின் புறத்தில் வைத்து நின்ற ரம்யா... கையைக் கட்டிக் கொண்டு அவனை வேடிக்கை பார்த்தாள். ஹாப்பி பர்த் டே-விலிருந்து மாறி... இப்போது ஏதோ பாட்டை வாசித் தான். புருவம் சுருக்கியபடி அவனைப் பார்த்தவளின் முகத்தை நோக்கி....

"என் கனவினில் வந்த காதலியே....

கண் விழிப்பதற்குள்ளே வந்தாயே....

நான் தேடித் தேடித்தான் அலைஞ்சுட்டேன்...

என் தேவதையைக் கண்டுபுடிச்சிட்டேன்...

நான் முழுசா என்னைத்தான் கொடுத்துட்டேன்...

அட உன்னை வாங்கிட்டேன்..."

கலகலவெனச் சிரித்தபடி அருகே வந்தவளைக் கண்டு...

"நீ தினம் சிரிச்சாப் போதுமே....

வேற எதுவும் வேணாமே... நான் வாழவே...

நான் உன்னை ரசிச்சாப் போதுமே....

வேற எதுவும் வேணாமே... நான் வாழவே....."

என்று பாட... பியானோவின் மீது சாய்ந்து நின்றபடி கேட்டுக் கொண்டிருந்தவள், அவன் முடித்ததும், கைதட்டி, "சூப்பர்... சூப்பர்!" என்றாள்.

பின் பியானோவின் மீதிருந்த கேக், டெட்டி பியர், பாட்டில் மூன்றையும் கண்டு, "வாவ்... கேக் அண்ட் டெட்டி... ஆனா... டேய்... நான் பியரெல்லாம் குடிக்க மாட்டேன்டா!" என்றவளிடம் "ஏய்... ச்சீ, அது எனக்கு..." என்றான் அவன்.



"ஆனா நீ பொதுவா ஒரு மூடி குடிச்சாலே ஃப்ளாட் ஆயிடுவன்னு சொன்னானே சக்தி?"

"ம்க்கும்..." எனத் தொண்டையைச் செருமியவன், "அந்தப் பன்னாடை என்னைப் பத்தி ராங்கா பரப்பி விடுது. நான் பாட்டம்ஸ்-அப் அடிக்கிற மொடாக் குடிகாரன்!" என்று கூற, "பார்த்தேன், பார்த்தேன்!" என மோவாயைத் தோளில் இடித்துக் கொண்டாள், ரம்யா.

"சரி சரி. வா... வா. கேக் கட் பண்ணு!" என்றவன் ஒற்றை மெழுகுவத்தியை கேக்கின் மீது அமர வைத்து அதை ஒளியூட்டினான். "ஹாப்பி பர்த் டே டு யூ...." எனப் பாடியவன், அவள் கேக் கட் செய்து, தன் வாயில் ஊட்டவும், அவள் நெற்றியில் இதழ் பதித்து அவளுக்கும் கேக் ஊட்டினான்.

டெட்டியைக் கட்டிக் கொண்டவள், "வைட் கலர் டெட்டி அழகா இருக்கு. ரொம்ப தேங்க்ஸ்டா புருஷா!" என்ற கூற... "ஹ்ம், வாங்கிட்டு வந்தது நான். நீ அதைக் கட்டிப் பிடிச்சுக்கிற?" என உதட்டைப் பிதுக்கினான் அவன்.

"நான் உன் மேல கோபமா இருக்கேன். அதனால கட்டிக்க மாட்டேன். போடா!" என அவன் தலையில் அடித்தவளின் கையைப் பற்றிக் கொண்டவன்... சிரிப் புடன் அவள் கையைப் பிரித்து உள்ளங்கையில் முத்த மிட்டான்.

"கையை விடுடா ராஸ்கல்..." என உருவப் பார்த்தவளைச் சட்டென இழுத்துத் தன் மடியில் அமர வைத்தவன் இரு கைகளால் அவள் வயிற்றைக் கட்டிக் கொண்டு, அவள் கழுத்தில் கன்னம் சாய்த்து, "ஐ லவ் யூ டூ டி பொண்டாட்டி!" என்றான்.

இதழ்கள் சிரிப்பில் விரியக் கலகலவெனப் புன்னகைத்தவள், "நீ லேட்டா சொல்ற. அதனால அக்செப்ட் பண்ணிக்க மாட்டேன்...." என்றாள்.

"ஐ லவ் யூ...." அவள் கழுத்திலிருந்து நிமிர்ந்து காது மடல்களில் இதழ் பதித்தான் அவன்.

"நான்தான் அக்செப்ட் பண்ணிக்க மாட்டேன்னு சொல்றேன்ல?"

"ஐ லவ் யூ டி!" அவன் இதழ்கள் அப்போது அவள் கன்னத்தில் இறங்கியிருந்தன.

"போடா.... இடியட்..." என்றவளின் கண்கள் தானாக மூடிக் கொள்ள... மீண்டும், "ஐ லவ் யூ!" என்றவன் அவள் இடையைப் பற்றித் திருப்பி அவள் இதழ்களில் மென்மையாக முத்தமிட்டான். அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவன் முத்தத்தில் கரைந்து போனாள் ரம்யா.

"இதெல்லாம் சீட்டிங்... சீட்டிங்... நான் எவ்ளோ அழகா ஐ லவ் யூ சொன்னேன்... நீ சும்மா ஒரு கேக், டெட்டியை வாங்கிட்டு வந்து ஐ லவ் யூ சொல்ற. போடா..." என நிமிர்ந்து அவன் மடியில் அமர்ந்தவளின் கன்னம் வருடியவன்...



"நேத்து நைட்ல இருந்து உன் மேல எனக்கு எவ்ளோ கோபம் தெரியுமா? தாத்தா கிட்ட பேசினப்புறம் தான் எல்லாம் சரியாச்சு!" - ஹரி.

"என்ன? நீயும் தாத்தாகிட்ட பேசுனியா? என் கிட்ட கூடப் பேசினார் தாத்தா!" - ரம்யா.

"ஹ்ம்ம், முட்டாள்தனமா நீயே புலம்பிட்டு இருக்காம, போய் அவ கிட்ட ஐ லவ் யூ சொல்லுன்னு சொன்னார்."

"பின்ன? நான் என்ன சொல்ல வர்றேன்னு புரிஞ்சுக்காம ஏன்டா அப்படிக் கத்துற? முட்டாள்... உன் வாயால நீ என்னைக் காதலிக்கிறன்கிற விசயத்தைச் சொல்ல வைக்கிறதுக்காக நான் ஆரம்பிச்சா... இந்த எருமை... டிவர்ஸ் பண்ணிக்கலாம்னு முடிச்சுட்டுப் போறான். இடியட்!"

"ஏய்... நீதானடி வெறும் செக்ஸ் மட்டும் போதுமா வாழ்க்கைக்குன்னு கேட்ட? காதல் இல்லாம ஒரு பொண்ணை முத்தம் கொடுக்கிற அளவுக்கு நான் பொறுக்கி இல்லடி!"

"நான் அந்த அர்த்தத்துல சொல்லவே இல்லடா. உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதாடா?"

"என்ன? என்ன?"

"என் ஹரியைப் பத்தி எனக்குத் தெரியாதா?" என்று அவன் கன்னத்தில் இதழ் பதித்தவளைக் கட்டிக் கொண்டு சிரித்தான் அவன்.

"பின்ன நான் எப்படித்தான்டா உன் மனசுல இருக்குறதைத் தெரிஞ்சுக்கிறது? நீ என்னைக் கட்டிக்கும் போதும், முத்தம் கொடுக்கும் போதும் ஐ லவ் யூ சொல்லணும்னு நான் எதிர்பார்க்க மாட்டேனா? லூசு..."

"ஏய்... நான் என்ன நாலஞ்சு பேரோடயா ரொமான்ஸ் பண்ணிட்டு சுத்திட்டிருக்கேன்? இதெல்லாம் பொண்ணுங்க எதிர்பார்பாங்கன்னு கூட எனக்குத் தெரியாது?"

"பொய் சொல்லாதடா. அலைபாயுதே படத்தை எத்தனை தடவை பார்த்துருக்க?"

"அது... அது படம்டி. இது ரியல் லைஃப்."

"ரியல் லைஃப்ல கூட அடிக்கடி ஐ லவ் யூ சொல்லலாம். ஒன்னும் தப்பில்ல."

"சரி, அதை விடு. தாத்தா எவ்ளோ மாறிட்டார் பாரேன். நம்ம கிட்ட சிரிச்செல்லாம் பேசுறார். இன்னிக்கு எனக்கு நிறைய அட்வைஸ் கொடுத்தார். இப்போ யோசிச்சுப் பார்த்தா... அவர் நமக்குப் பண்ணின எல்லாமே நம்ம நல்லதுக்கு மட்டும்தான்னு தோணுதுடி."

"நானும் அதையேதான்டா ஃபீல் பண்ணேன். எதிர்காலத்தை யோசிச்சுப் பார்த்து எவ்ளோ அழகா கணக்குப் போட்டு வாழ்றார் பாரேன்... அவர் என்ன சொன்னாலும் இனிமே நான் சரின்னு கண்ணை மூடிட்டுத் தலையாட்டிடுவேன்டா!"

"உனக்கும், எனக்கும் மட்டுமில்ல. நம்ம அப்பா, அம்மாவுக்கு, ஷ்யாம், அண்ணிக்கு... எல்லோரோட



பிரச்சனைகளையும் தீர்த்து வைச்சு எல்லாரையும் சந்தோசமா வாழ வைக்க நினைக்கிறார்டி. அவரைப் போய் எப்படி யெல்லாம் திட்டி... எதிர்த்துப் பேசி... கோபப் பட்டிருக்கோம்?"

"ஆனா தாத்தா அதை யெல்லாம் மனசுல வைச்சுகிறதாவே தெரியல. அவருக்கு முக்கியம் நம்ம சிரிப்பும், சந்தோசமும் மட்டும்தான். இன்னிக்குப் பழைய மாதிரி என் தலையை வருடிச் சாப்பிட்டியான்னு கேட்டார் தெரியுமா?"

"ம்ம்... நீ அவரோட செல்லப் பேத்தியாம். அவரே சொன்னார்."

காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு சிரித்தவளின் கன்னம் பற்றி மூக்கு நுனியில் இதழ் பதித்தவன்... "ரம்யா....", என்றான்.

"ம்ம்?" - ரம்யா

"இல்ல. நேத்து ஹாஸ்பிட்டல நான் நம்ம ஃபேமிலி முன்னாடி ஒரு வார்த்தை சொன்னேன். அப்போ எல்லோரும் ஸ்டன்னாகி என்னையே பார்த்தாங்க."

"அப்படி என்ன சொன்ன?"

"இ...இல்ல... நமக்குப் பொறக்கப் போற குழந்தையைக் கூடத் தாத்தாதான் வளர்க்கணும். அதுக்காக வாவது அவர் எழுந்து வரணும்னு சொன்னேன். நா... நாம எப்போ குழந்தை பெத்துக்கலாம்?"

திரும்பி அமர்ந்து அவன் தோளில் கையிட்டபடி, "பேபி?" என்று தலையை மேலும் கீழும் ஆட்டி வினவியவளிடம், "ம்ம்" என்று தலையாட்டினான் அவன். "ம்ம்ம்..." என யோசித்தபடி கை விரல்களைப் பிரித்து எண்ணியவள் வலது கையை விரித்து, "ஆஃப்டர் ஃபைவ் இயர்ஸ்!" என்று கூற...

"என்ன?" என்று திகைத்துப் போனான், ஹரி.

"5...? அஞ்சு வருஷத்துக்கு பாப்பா இல்லாம இருக்கணுமா? ஏய்... எடுடி, அந்த டிவர்ஸ் பேப்பரை. நீ கிளம்பு, நான் வேற பொண்ணைப் பார்த்துக்கிறேன்."

"பார்த்துக்கோ, நான் யு.எஸ். போய் சதீஷ் கூட செட்டில் ஆயிக்கிறேன்."

"ஏய்...ஏய்... அவன் பேரைச் சொல்லிச் சொல்லி என்னைக் கடுப்பேத்தாதடி ப்ளீஸ். ஹேய்... சீரியஸா கேட்குறேன்டி. எப்போ பாப்பா பெத்துக்கலாம்?"

"இப்போ தான் லவ் பண்ணவே ஆரம்பிச்சுருக் கோம். அதுக்குள்ள பாப்பாவா? எனக்குக் கடவுளாப் பார்த்து எப்போ கொடுத்தாலும் சரிதான்டா. பெருசா ப்ளானிங்கெல்லாம் எதுவுமில்ல..."

"ம்ம்... குட் கேர்ள்!" அவள் நாடியைப் பற்றிக் கொஞ்சினான் அவன்.

"உனக்கு ஒழுங்கா ப்ரபோஸ் பண்ணக் கூடத் தெரியல. ஒன்னு திட்டுற... இல்ல, ஓடிப் போற. உனக் கெல்லாம் ஒரு அழகான் வைஃப், குழந்தை வேற... ஹ்ம்..." என முகம் திருப்பியவளிடம்,



"ஏய்... ஆக்சுவலா நான் எப்படி ப்ரபோஸ் பண்றதுன்னு நிறைய யோசிச்சு வைச்சேன்டி. இங்கே உன்னைப் பார்த்ததும் எல்லாத்தையும் மறந்துட்டேன்!" என்றான்.

"என்ன யோசிச்ச?" என்று ஆர்வத்துடன் வினவிய வளிடம் "இல்ல, இது என்னோட லைஃப்ல ஃபர்ஸ்ட் ப்ரபோசல். அதான் கொஞ்சம் க்ராண்டா இருக்கட்டு மேன்னு... ஏய்... என்னடி அப்படிப் பார்க்குற? நான் கடைசிவரை ப்ரியா கிட்ட ஐ லவ் யூன்னு சொல்லவேயில்லை. தெரியும்ல!" என்றான்.

"சரி ராஜா... நீ என்ன ப்ளான் பண்ணின?" என்றவளிடம், பியானோவின் அடியிலிருந்து பெரிய ரோஸ் பொக்கேவையும், பாக்கெட்டிலிருந்து ஒரு மோதிர டப்பாவையும், சாக்லேட்டையும் கையில் எடுத்தான்.

ஆச்சரியத்துடன் விழி விரித்தவளிடம், "பசங்க இப்படித்தானடி இப்போல்லாம் ப்ரபோஸ் பண்றாங்க?" என்று வினவ... "ஹா ஹா ஹா..." எனச் சிரித்தவள்... "சரி சரி. ஆரம்பி..." என முன்புறம் வந்து நின்றாள்.

"எ... என்ன ஆரம்பிக்க?" - ஹரி.

"ப்ரபோஸ் பண்ணுடா. நான் ஓகேவா, ஓகே இல்லையான்னு சொல்றேன்! கம் ஆன், கம் ஆன்..."

"ம்ம்..." என்றபடி எழுந்து நின்றவன், தொண்டையைச் செருமிக் கொண்டு, தனக்கு நான்கடி தள்ளிக் கைகட்டி நின்றிருந்தவளிடம் சென்று, பொக்கேவை நீட்டி, "ஐ லவ் யூ டார்லிங்!" என்றான்.

"ச்ச, இது ரொம்ப டைரக்ட் ப்ரபோசலா இருக்குடா. கொஞ்சம் லென்த்தியா டயலாக்ஸோட ட்ரை பண்ணுடா."

"ஓகே, ஓகே!" என்றபடி, நான்கடி தள்ளிச் சென்றவன், மீண்டும் அவளருகே வந்து, "இதுவரைக்கும் நான் எந்தப் பொண்ணுகிட்டேயும் ப்ரபோஸ் பண்ணின தில்லை. அதனாலதான் கொஞ்சம் நெர்வஸ்-ஆ இருக்கு. டின்னர் வேற அரைகுறையாத்தான் சாப்பிட்டேனா... அதனால குரல் கூடச் சத்தமா வர மாட்டேங்குது. வ...வந்து... இப்போ கொஞ்ச நாளாவே ராத்திரியில சரியா தூக்கம் வர மாட்டேங்குது. நெஞ்சு முழுக்க ஏதோ அடைச்சு நிக்கிற மாதிரி..." - ஹரி.

"இதுக்குத்தான் நைட் தேங்காய்ச் சட்னி சாப்பிடா தேன்னு சொல்றேன். எங்க கேக்குற?" - ரம்யா.

நின்று அவளை நன்றாக முறைத்தவனிடம், கலகலவெனச் சிரித்தவள், "டேய்... ப்ரபோஸ் பண்ணச் சொன்னா... உன் பாடி கன்டிஷனையெல்லாம் எக்ஸ்ப்ளெய்ன் பண்ணிட்டிருக்க? ட்ரை சம்திங் ரொமாண்ட்டிக் டார்லிங்!" என்றாள்.

மீண்டும் நான்கடி தள்ளிச் சென்றவன், கண் மூடிப் பெருமூச்சை வெளியிட்டு மீண்டும் அவளருகே வந்தான்.

தலை சாய்த்தபடி சிரிப்புடன் நின்றிருந்தவளின் கைகளைப் பற்றிக் கொண்டவன், மெல்ல நிமிர்ந்து, "சின்ன வயசுல உன் கைப்பிடிச்சு ஸ்கூலுக்குக் கூப்பிட்டுப் போனப்போ தெரியல... வாழ்நாள் முழுசுக்கும் உன் கையை மட்டுமே பிடிக்க நான் ஆசைப்படுவேன்னு..."



கேலிப் புன்னகை மாறி அவனையே நோக்கினாள், ரம்யா.

"உனக்கும் எனக்கும் இடையில் இருக்கிற காதலை என்ன வார்த்தை சொல்லி விவரிக்கிறது? அத்தை பொண்ணுன்னு கூடவே வளர்ந்த உன் மேல இருக்கிற பாசம், அக்கறை, உன்னைப் பத்தின பொறுப்பு, உன் மேலான என் உரிமை இது அத்தனையும் காதல்ங்கிற ஒரு வார்த்தைக்குள்ள அடங்கிடும்னா... யெஸ்... நான் உன்னைக் காதலிக்கிறேன் ரம்யா... ஐ லவ் யூ...." என்று பொக்கேவை நீட்டினான்.

விழிகளைப் பெரிதாய் விரித்துப் புருவம் உயர்த்திப் பூக்களைக் கையில் வாங்கிக் கொண்டவளின் இடையைப் பற்றி அருகே யிழுத்தவன்... அவள் நெற்றியில் அழுந்த இதழ் பதித்தான். பின் பாக்கெட்டிலிருந்த மோதிரத்தைக் கையில் எடுத்து... அவள் முன்பு மண்டியிட்டு அமர்ந்தவன்... "தினம் எழுந்ததும் உன் முகம் பார்த்து, உன் சமையலைச் சாப்பிட்டு, உன் கூடச் சிரிச்சு, சண்டை போட்டு, அழுது, காதலிச்சு... உன் கூடவே தூங்கி எழுந்து, உன் கூடவே ஒரு நாள் செத்தும் போயிடணும்னு மனசு சொல்லுது... என் வாழ்நாள் முழுசுக்கும் என்னைச் சகிச்சுகிட்டு என்னோட வாழ விருப்பமா, மிஸஸ் ரம்யா ஹரிகிருஷ்ணன்?" என்று வினவினான்.

சிரிப்பும், அழுகையுமாய்க் குனிந்து அவன் நெற்றியில் இதழ் பதித்தவள், "ம்ம்ம்..." எனத் தலை யாட்ட... சிரித்தபடி அவள் விரல்களில் மோதிரத்தை

மாட்டியவன், எழுந்து நின்று, "எப்படி ஐயாவோட ப்ரபோசல்?" என்று கேட்க....

"ஃப்ளாட் ஆயிட்டேன்டா!" என்றாள் ரம்யா.

மணி நள்ளிரவு இரண்டு என்பதற்குச் சாட்சியாகக் கடிகாரம் இரண்டு முறை ஓசை யெழுப்ப... "மணி ரெண்டா? ச்சே, பேசியே பாதி ராத்திரியை வீணாக்கி யிருக்கோம்டி. மிச்ச பர்த்டே செலிப்ரேஷனை நம்ம பெட்ரூம்க்குள்ள கொண்டாடலாம்..." என்று கண் ணடித்தவன் குனிந்து அவளைத் தன்னோடு தூக்கிக் கொள்ள... கலகலவெனச் சிரித்தபடி, அவன் கன்னத்தில் தன் இதழ்களை அழுந்தப் பொருத்தித் தன் விருப்பத்தை... தேவையை.... காதலை... உணர்த்தினாள், ரம்யா.

நிவேதா ஜெயாநந்தனின்

# ஸ்ட்ராபெர்ரி ஆசைகள்...

